# கற்பகதரு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

40வது ஆண்டு விழா சிறப்பு மலர் - 2012



1972-2012

40

வெளியீடு:

சமாசம் - 2013

# மக்கள் வங்கி வழங்கும்
# புலமைப்பரிசிலுக்கு புலமைப்பரிசில்

இவ் புலமைப்பரிசில்களைப் பெற்றிட 'சிசு உதான' கணக்கில்

## ரூ. 5000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சேமியுங்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவச் செல்வங்களுக்கு மக்கள் வங்கியின் சிசு உதானவிடமிருந்து பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மக்கள் வங்கி

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்

**விசேட புலமைப்பரிசில்கள் (தேசிய மட்டம்)**

தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றிடும் சிறார்களுக்கு முறையே ரூ. 100,000/-, ரூ. 75,000/- மற்றும் ரூ. 50,000/- பெறுமதியான புலமைப்பரிசில்கள்.

**விசேட புலமைப்பரிசில்கள் (மாவட்டரீதியில்)**

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ. 25,000/-, ரூ. 20,000/- மற்றும் ரூ. 15,000/- பெறுமதியான புலமைப்பரிசில்கள்.

**சாதாரண புலமைப்பரிசில்கள் 1000**

2013 ஆகஸ்ட் 25 ஆம் திகதிக்கு முன்னர் ரூ. 5000/- அல்லது அதற்கு மேற்பட்ட கணக்கு மீதியை பராமரித்துவரும் மக்கள் வங்கி சிசு உதான கணக்கினை உடைய, புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாவட்டங்களினதும் அடிப்படையில் சிறப்புத்தேர்வுறும் 1000 மாணவர்களுக்கும் இப் புலமைப்பரிசில் கிட்டும்.

உங்களுக்கு "சிசு உதான" கணக்கொன்று இல்லாவிடில் இன்றே அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் "சிசு உதான" கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.



மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

www.peoplesbank.lk

# கற்பகதரு

பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின்

## 40வது ஆண்டுவிழா சிறப்புமலர்

1972 - 2012



வெளியீடு:

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# மலர் விபரம்


**மலர்ப் பெயர்** : கற்பகதரு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு சிறப்பு மலர்

**தொகுப்பு** : மலர்க்குழு

**பதிப்புரிமை** : வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

**பதிப்பாண்டு** : 2012

**தொகுப்பாசிரியர்** : திரு கிருஷ்ணன் - வரதராசன்
[உற்பத்தி முகாமையாளர், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்]

**அட்டைப்படம்** : ஓவியர் திரு ஆ.இராசையா

**அச்சுப்பதிப்பு** : சமாசப் பதிப்பகம்

# மலர் இதழ்கள்


☞ ஆசிச்செய்திகள்

☞ வாழ்த்துச் செய்திகள்

☞ சமர்ப்பணம்

☞ மலர் அறிமுகம்

☞ கவிதைகள்

- ✦ ஏட்டினைப் புரட்டிப் பார் - வடவரணி சி.சபா
- ✦ நேர்மை - கரவை பிரேம்
- ✦ கண்ணியமானதே கூட்டுறவு - வல்லைவாசன்
- ✦ கூட்டுறவும் வாழ்க்கையும் - திரு சி.ஜெயசீலன்


## ☞ சிறப்புக் கட்டுரைகள்


1. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார முக்கியத்துவம் — 01-04
   பேராசிரியர் திரு க.தேவராசா- முகாமைத்துவ கற்கைகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

2. பிராந்திய அபிவிருத்தியை நோக்கி கூட்டுறவுத்துறையை வலுவூட்டல் — 05-11
   பேராசிரியர் கலாநிதி திரு தி.வேல்நம்பி- பீடாதிபதி, முகாமைத்துவ கற்.வணிகபீடம், யாழ்.பல்கலை.

3. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் — 12-29
   திரு இ.இரட்ணம் B.Com (Hons)H.N.Dip Acc,MAAT,N.C.B.S,M.Phil.

4. ஒரு சமூக மாற்றத்தின் விசையாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வகிபாகம் — 30-33
   திரு இ.இராஜேஸ்கண்ணன் - விரிவுரையாளர், சமூகவியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

5. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை எதிர்வரும் நூற்றாண்டில் மேலும் பன்மடங்காக அபிவிருத்தி செய்வதற்குகந்த நவீன ரீதியிலான முகாமைத்துவ தந்திரோபாயங்கள் — 34-42
   திரு இ.சுப்பிரமணியம் B.A (Ceylon) - இளைப்பாறிய அதிபர், இலங்கை கூட். அபி. நிறுவனம்.

6. இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் பனை அபிவிருத்தி அவசியமா? — 43-46
   திரு சோ.கோகுலதாசன் B.Sc, M.Sc.-முன்னாள் பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை

7. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டில் மகளிர் குழுக்களின் பங்கு — 47-48
   திருமதி வே.செல்வரத்தினம் - செயலாளர், மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்.

8. நோய் தீர்க்கும் அரும் வளம் பனைவளம் — 49-52
   பனைவள ஆலோசகர் திரு வீ.ஜீ.தங்கவேல்

9. பனை வள ஆராய்ச்சி நிலையமும் பனைசார் உற்பத்தி வல்லுநர்களுக்கான பயன்பாடும் — 53-55
   திரு எம்.பி.லோகநாதன் - பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை.

10. தமிழ் இலக்கியங்களில் பனை — 56-57
    புலவர் திரு கதிர் சீனித்தம்பி

11. மறுமலர்ச்சிக்கு வழியமைத்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அமைப்பு முறைமை — 58-62
    திரு கண.கிருஸ்ணராஜன் - முன்னாள் பொதுமுகாமையாளர், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

## ☞ யாழ். மாவட்ட பனை தென்னை வள கூட். நிறுவனங்களின் வரலாறுகள்


**12.** யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வரலாறுகள் **63-113**

**13.** பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளின் வரலாறுகள் **114-124**

**14.** யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்.விற்.வைத்திய சேவைக் கூட். சங்க வரலாறு **125-127**

**15.** வடமாகாண பனை தென்னை வள அபி.கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வரலாறு **128-142**

**16.** யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபி.கூட்.நிறு.பணி. நலன்புரி கூட்.சங்க வரலாறு **143-145**

**16.** சிறுகதை – "பகட்டுறவு" - மடத்துக் கடலையான் **146-149**

**17.** விளம்பரங்கள்

**18.** நன்றி நவிலல்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின்

# அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகைகளுக்கு!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களானது ஆரம்பிக்கப்பட்டு, 40வது ஆண்டினை நிறைவு செய் வதையிட்டு, வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமானது 40வது ஆண்டு நிறைவு மலர் வெளியிடுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மக்களின் தேவைகளினை பூர்த்திசெய்கின்ற அபிவி ருத்திக் கூட்டுத்தாபனம் 40 ஆண்டுகளாக நிறைவான பணியை ஆற்றியமையையிட்டு மகிழ்வடைகின்றோம். இறைவனால் இயற்கையாக அருளப்பட்ட பனை, தென்னை மரங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மேலெடுத்துச் செல்லும் வகையில் விளங்கு கின்றன. இவ் வளங்களை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பு வதற்கென சங்கம் அமைத்துத் தொழிற்படும் இம் மக்களின் பிரதிநிதிகளை வாழ்த்து கின்றோம். இன்று பாரச்சுமைகளால் தவிக்கும் பல குடும்பங்களினை வாழவைக்கின்ற வகையில் இவற்றின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதனூடாக மக்கள் நற்பயன் அடையவேண்டுமென்பதே எல்லோரின் விருப்பமுமாகும். 40ஆண்டுகள் பணியாற்றிய சங்கம், இன்னும் பல்லாண்டு காலம் நற்பணியாற்ற வேண்டுமென இறைவனைப் பிரார் த்திக்கின்றோ ம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார்,**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்

பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின்

# ஆசிச் செய்தி



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தினரல், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவினையிட்டு வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடந்த 40 ஆண்டுகளாக இத்துறைசார் சங்கங்கள், கொத்தணிகள் மற்றும் சமாசம் என்பன ஆற்றிய பணிகள் மகத்தானவை; எந்நேரமும் நினைவுகூரப்பட வேண்டியவை.

பனை, தென்னை என்பன இயற்கையின் கொடையே; இறைவனின் படைப்பே. இந்த இரண்டு விருட்சங்களையும் கடந்த யுத்த காலத்தில் இயற்கை, செயற்கை அழி வுகள் மத்தியிலும், முற்றாக அழிந்துபோகவிடாமல் பாதுகாத்து வந்த இத்துறைசார் நிறுவனங்களையும் அவற்றின் ஊழியர்களையும் மனதார வாழ்த்தி, தொடர்ந்தும் இவர்கள் பணி சிறப்புடன் உயர்ந்தோங்க ஆசிகூறி, எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**அன்புடன்,**
**பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ்.ஆயர்,**
**ஆயர் இல்லம்,**
**யாழ்ப்பாணம்.**

**பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்**
**திரு டக்ளஸ் தேவானந்தா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவையிட்டு, அவற்றின் சமாசம் வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1972ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கங்களானது, தமது பணிகளை செவ்வனே தொடர்ந்து மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பனை சார்ந்த தொழில்களை நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கென எனது அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்திச் சபையினூடாக பல்வேறு திட்டங்களை வகுத்து, அவற்றைப் படிப்படியாக செயற்படுத்தி வருகின்றேன். அதே நேரம், கைதடி பனை வள ஆராய்சசி நிலையமும் தற்போது மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில், இதனூடாக பனை சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை அதிகரிக்கவும், அவற்றை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களாக மாற்றவும் இயலும் என்பது எனது நம்பிக்கையாகும்.

அந்த வகையில், இப் பொருட்களுக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை வழங்கி, அது சார்ந்த உற்பத்தி முயற்சியாளர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதும், நிலைப்படுத்துவதும் எனது நோக்கமாகும்.

இந்நிலையில், இத்துறை சார்ந்து, என்னால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் தனது பங்களிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இன்று தனது 40 வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் இச்சங்கங்களானது, தொடர்ந்தும் தமது பணியை வெற்றிகரமாக மேற்கொண்டு, அது சார்ந்த மக்களின் மேம்பாட்டுக்காக உழைக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், இச்சங்கங்களின் வளர்ச்சியில் பங்குகொண்டு உழைத்துள்ள, உழைத்துவரும் அனைவருக்கும் எனது பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா,**
செயலாளர் நாயகம்-ஈ.பி.டி.பி,
பாரம்பரிய கைத்தொழில் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்,
இணைத் தலைவர்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக்குழு.

### வடக்கு மாகாண ஆளுநர் திரு ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



கூட்டுறவு அமைப்பு ஒரு புனிதமான அமைப்பு. இவ் அமைப்பு உலக நாடுகளில் வெகு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமைக்கு அதன் செயற்றிறன்தான் காரணம். அதுபோல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் 1972ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று வரையான 40 ஆண்டுகாலத்தில் பாரிய சாதனைகளை படைத்துள்ளமை பாராட்டுக்குரியது. அதில் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்நிறுத்தி அதாவது, கல்வி அபிவிருத்தி, முன்பள்ளி மாணவர் கல்விச் சேவை, கிராமிய வங்கிச் சேவை, விபத்து நிதி வழங்கல், மாதாந்த ஓய்வூதியம் வழங்கல் போன்ற சேவைகளை செய்து தமது அங்கத்தவர்களையும் அவர்கள் சார்ந்த சமூகத்தையும் பொருளாதார வளம் மிக்கவர்களாக மாற்றுவதில் இச்சங்கங்கள் பெரிதும் உதவுகின்றமை பாராட்டுக்குரியதே.


மேலும் இவ் அமைப்புக்கள் அரச நிதிகளை எதிர்பார்க்காது தமது உழைப்பின் மூலமே தமது அபிவிருத்திப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. இப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்மூலம், பனை வளத்தை பயன்படுத்தி உப உணவு உற்பத்தி தொடர்பான நிலத்திட்டங்களை மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநர் என்ற வகையில் என்னாலான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி உதவுவதற்கு தயாராக உள்ளேன் என்பதனை தெரிவிப்பதோடு, இச்சங்கங்கள் தமது 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

**ஜீ.ஏ.சந்திரசிறி,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

**பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்**

**திரு பசுபதி சீவரத்தினம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



1972ம் ஆண்டுஆரம்பிக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இன்று வளர்ச்சியடைந்து, தனது நடுத்தர வயதை பூர்த்தியடைந்துள்ளது. இச்சங்கங்கள் இன்று கள் உற்பத்தியுடன், பனையிலிருந்து பெறப்படுகின்ற சகல உற்பத்திகளிலும் ஈடுபட்டு வருவது மிகவும் சிறப்பானதாகும்.

இத்துடன், கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியமான சமூக மேம்பாட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, அங்கத்தவர் ஓய்வூதியம், பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில், வீட்டுத்திட்டம், முன்பள்ளிகள், விபத்துநிதி எனப் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரம்ப காலம் முதல் பனையுடன் என் வாழ்வு ஒன்றுபட்டது. என்னால் பனை சார் தொழிலாளர்களின் வாழ்வியல் சிறக்க, அவர்களை ஒன்றுதிரட்டி சீவல் தொழிலாளர் நலன்புரிச் சங்கம் நிறுவப்பட்டது. அன்றுதொட்டு என் சிந்தனையில் இத்தொழிலாளர்களின் மேம்பாடு தொடர்பாக பங்களித்து வருகின்றேன்.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பதவியேற்றபின், என் சிந்தனைக்கான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கியுள்ளது.

ஒரு சமூக, பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்கள் அனைத்தும் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இச்செயற்பாட்டின் வளர்ச்சியில் என்மனம் புளகாங்கிதம் அடைகின்றது.

நாற்பதில் மலரும் நம்மவர் உழைப்புமலர் மலர்ந்து நறுமணம் வீச என் நல்லாசிகள்.

**"பனை வளம் எம் வாழ்வையும் எம் தேசத்தையும் வளப்படுத்தும்"**

நன்றி.

**பசுபதி சீவரத்தினம்,**
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

**வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



**"வடபுலத்தின் வாழ்வாதார மேம்பாட்டில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வருட சாதனைகளை மெச்சி....!"**

வடமாகாணத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு உரிய பணிகளை ஆற்றிவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், தமது 40வது ஆண்டுகால சேவைகளை இவ்வாண்டில் பூர்த்திசெய்வதனையிட்டு இத்துறைசார் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பவற்றை வாழ்த்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிராமிய அபிவிருத்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனங்களின் பணிகள் பல்லாயிரக்கணக்கான அங்கத்தவர்களின் சமூக,பொருளாதார அபிவிருத்திக்கு ஊன்றுகோலாக இருந்து, சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அங்கத்தவர்களை பொருளாதார ரீதியில் வளப்படுத்துவதுடன், அவர்களின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள், ஊழியர்களின் தொழில்சார் அபிவிருத்தி என்பவற்றிலும் கண்ணும் கருத்துமாக இருந்து, சமூக ஒழுக்காற்றுக்கும் வழிகாட்டி வருகின்றமை எம்மவர்களின் சமுதாய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது.

கால மாற்றத்திற்கு ஏற்ப, நவீன தொழில்நுட்பங்களை உட்புகுத்தி, வருங்காலத்தில் இத்துறையினை மேலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல கூட்டுறவுத் திணைக்கள ரீதியாக அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க நாம் யாவரும் தயாராக உள்ளோம்.

இந்த 40 ஆண்டு நிறைவில் தங்களுடன் சேர்ந்து, இந்நிறுவனங்களின் பணிகளை சீர் தூக்கிப் பார்க்கவும், கூட்டுறவுடன் செயற்படவும் எனக்கு கிடைத்த இவ் அரிய சந்தர்ப்பத்திற்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து, இந்நிறுவனங்கள் தமது செயற்திறனால் மேலும் வளர்ச்சிகள் பல காண மனதார வாழ்த்துகின்றேன்.

**மதுமதி வசந்தகுமார்,**
கூட்டுறவு ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் (வ.மா)

**வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர்**
**செல்வி பிரபா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



கூட்டுறவுத் துறையில் 40வது அகவையில் காலடி பதிக்கும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், மேலும் பல தசாப்தங்கள் நிலை பேறான வளர்ச்சியை அடைய வேண்டியதொன்று எனலாம். இதற்கு திட்டமிட்ட முறையில் பனை தென்னைப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதோடு, அதன் பயன் விளைவுகளை பன்முகப்படுத்துவதற்கான சிந்தனைகளும் மேலோங்க வேண்டும் எனலாம். இன்று வடமாகாணத்தைப் பொறுத்தவரை, உண்மையான கூட்டுறவுக்கு உதாரணமாக அங்கத்தவரின் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்காக பல்துறையிலும் தன் கவனத்தை செலுத்தும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

*"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை*
*சான்றோன் எனக் கேட்ட தாய்"*

என்பதற்கேற்ப, சர்வதேச கூட்டுறவுச் சமூகத்திலும், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கென தனி முத்திரை பதித்து, முன்னுதாரணமாகத் திகழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி, வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சார்பில் வாழ்த்துகிறோம்.

வாழ்க! வளர்க! பல்லாண்டு.

**செல்வி பிரபா,**
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடமாகாணம்.

## சமாசத்தின் ஆரம்பகால செயலாளரும், பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவருமான திரு க.நடராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நாற்பது வருடங்களாக, அனைவரும் வியக்கும்படி மகத்தான சேவைகளை ஆற்றியுள்ளன என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது. "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாய்" போல என் மனம் புளகாங்கிதம் அடைகிறது. ஆரம்ப காலத்திலிருந்து "நித்திய கண்டமும் பூரண ஆயுசும்" ஆக 40 வருடங்களுக்கு மேலாக சொல்லமுடியாத அளவுக்கு வேதனைகளையும் சேதனைகளையும், துப்பா க்கிக் கலாச்சா ரத்தின் கொடுமைகளையும் தாங்கி வந்துள்ளீர்கள். உங்கள் திறமைகளையும், தியா கங்களையும் வாழ்த்த வார்த்தைகள் இல்லை. வணங்கி நிற்கிறேன். எந்த சூறாவளியையும் தாங்கி நிற்கும் பனை மரம் போல, பல்வேறு அரசியல் சூறாவளிகளையும் தாங்கி நீங்கள் நிமிர்ந்து, உயர்ந்து நிற்கிறீர்கள்.

ஒரு நோக்கோடு ஆரம்பத்தில் இச்சங்கங்களை ஆரம்பித்தோம். ஆதை நீங்கள் இப்போது பல நோக்கோடு கொண்டு செல்கிறீர்கள். இந்த 40வது ஆண்டு நிச்சயமாக ஒரு விசேடமான ஆண்டு என்பதை மனதிற்கொள்ளவும். நீங்கள் இதைக்கொண்டாடும் காலத்தில், தமிழினத்துக்கு ஒரு விடிவு தெரிகிறது. சர்வதேசமும் எம்மைக் கவனிக்கிறது. விடியும் அந்த வெளிச்சத்தில் விரிந்து பரந்து நிற்கும் எங்கள் சங்கங்களை, எந்தவிதமான ஆதிக்கத் தலையீடுகளும் இன்றி, புனிதமான கூட்டுறவுக் கோட்பாடுகளுக்குள் செயற்பட வைக்கக்கூடிய காலம் வந்துள்ளது.

இந்த 40வது ஆண்டு விழாக்காலத்தில், ஒவ்வொரு சங்கமும், சமாசமும் பல்வேறு புதிய அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடத் திடசங்கற்பம் பூண்டுகொள்ள வேண்டும்.

எங்கள் சங்கங்களின் 40 ஆண்டு கால வரலாற்றைச் சுருக்கமாக **"பனைத்தொழில் வல்லுநர்"** என்ற நூல் மூலமாக சமர்ப்பித்துள்ளேன். இது எதிர்காலத்துக்கு ஒரு வழிகாட்டியாய் அமையும்.

ஒரு காலகட்டத்தில் எங்கள் சங்கங்கள், இலங்கையிலேயே மிகச் சிறந்த கூட்டுறவுக் கூடமாகக் கருதப்பட்டது. இப்போது ஆசியாவிலேயே சிறந்த ஸ்தாபனமாகக் கருதப்படும் நிலைக்கு நீங்கள் வளர்ந்துள்ளீர்கள். உண்மையான கூட்டுறவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களுக்கு முன்மாதிரியாக நடந்துள்ளீர்கள். நிர்வாக சபையில் அல்லது பதவிகளில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும்போதெல்லாம் கூட்டுறவு ஜனநாயகத் தத்துவத்துக்கு அமைவாக செயற்பட்டுக்கொண்டு வருகிறீர்கள். வேற்றுமைகளை மறந்து, ஒன்றாக நிற்கிறீர்கள். உங்கள் சங்கங்களினதும் சமாசத்தினதும் இந்த முன்மாதிரியை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சகல ஸ்தாபனங்களும் பின்பற்றினால், எமது இனத்தின் எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உடன் பிறப்புக்களே!

"தன் கையே தனக்குதவி", "நாம் யார்க்கும் குடியல்லோம்" என்ற கோட்பாடுகளுக்கு அமைய, நீங்கள் இந்த நல்ல "நாற்பதிலிருந்து" செயற்பட வேண்டும். உங்கள் கூட்டுறவு அதிகாரிகள் கறை படியாத கரங்களையுடையவர்கள். போதனைகளோடு நின்றுவிடாமல், பட்டுவிட்ட வேதனைகளை மறந்து, சாதனைகளைப் படைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன். உலகம் உள்ளவரை உங்கள் சங்கங்கள் பல்வேறு பணிகளில் வெற்றிகண்டு மென்மேலும் உயர, வளர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

நன்றி.

**க.நடராசா,**
**சமாசத்தின் ஆரம்பகால செயலாளரும்,**
**பனை அபி.சபையின் முன்னாள் தலைவரும்.**

**யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்**

**திரு சு.அருமைநாயகம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



எமது நாட்டில் பல வளங்கள் இயற்கையாக கிடைக்கின்ற போதிலும் வடமாகாணத்தில் மிகவும் கூடுதலாக பனை வளம் காணப் படுகின்றமை இறைவன் எமக்களித்த ஒரு கொடையாகும்.

மக்கள் தமது பொருளாதார தேவைகளை தமது நாட்டிலேயே பெறக் கூடியதாகவிருப்பதும், அவ்வாறு கிடைத்த வளங்களை அவர்கள் எவ்வளவுக்கு உச்சமாகப் பயன்படுத்திகின்றார்களோ அதிலேயே அவர்களின் உயர்ச்சி தங்கியுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் அனைத்து நலன்களையும் கவனத்தில்கொண்டு செயற்பட்டமையால் இவ் வளத்தினை நம்பி வாழுகின்ற தொழிலாளர்களின் பொருளாதார வளம் ஓரளவு சிறப்பாக அமையக் காரணமாக அமைந்ததென்பது இந்த 40 ஆண்டுகளில் இச்சங்கங்களுக்கு கிடைத்த பாரிய வெற்றி என்றே சொல்லலாம். அந்த வகையில் இத்துறைசார்ந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மேலும் இவ்வளம் சார்ந்த கூட்டுறவு அமைப்புக்கள் நவீன தொழில்நுட்பங்களை தமது செயற்பாடுகளில் புகுத்தி தற்போதைய காலத்துக்கேற்ற வகையில் தமது நிறுவனங்களை நவீனப் படுத்தி வெற்றிபெறவேண்டும் என வாழ்த்துவதோடு, இம்மலரினை வெளியீடு செய்கின்ற வட மாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் முயற்சியினையும் பாராட்டுகின்றேன்.

நன்றி.

**திரு சு.அருமைநாயகம்,**
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்,
யாழ்.மாவட்டம்.

**யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர்**

**திருமதி இமெல்டா சுகுமார் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



பல்வேறு வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள யாழ். மண்ணின் மணத்தை அடையாளப்படுத்தி, அணிசேர்க்கும் கற்பக தருவாம் பனையை வளர்த்து, பயன்பல பெற்றுவந்த எம் முன்னோரை அடியொற்றி, பனை, தென்னை வளங்களின் பயன்பாடு இன்று நிறுவனப்படுத்தலின் மூலம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நிறுவனங்கள் தமது செயற்றிறனினால் பனை, தென்னை வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெற்று, அது சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழி காட்டியாய் நின்று, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன. இவ்வாறு மகத்தான பணிகளை ஆற்றிய இச்சங்கங்கள், இவ்வாண்டு 40 ஆண்டுகளை நிறைவுசெய்வதனையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கொள்கைகளுக்கு அமைவாகச் செயற்படும்போது, எமது மண்ணில் எல்லா மக்களுக்கும், குறிப்பாக பனை, தென்னை வளத் தொழில் சார்ந்து வாழும் அங்கத்தவர்களுக்கும், அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருளாதார ரீதியில் பேருதவியாய் அமைகின்றன. பனை தென்னை வளங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதால் கிடைக்கப்பெறும் வருவாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுடைய நலன் கருதி மகளிருக்குச் சுயதொழில் பயிற்சிகள், சங்க அங்கத்தவர், பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள் நடாத்துதல், கிராமங்கள்தோறும் பாலர் பாடசாலைகளை உருவாக்கி, மாணவர்களுக்கு இலவச சீருடையும் சத்துணவும் வழங்கல், ஆசிரியர்களுக்கு இலவச சீருடையும் வேதனமும் வழங்கல், சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கல், ஓய்வூதியத் திட்டம், விபத்துப் பாதிப்புக் கொடை, புலமைப்பரிசில் திட்டம் போன்ற இச்சமாசத்தின் செயற்பாடுகள் இதன் அங்கத்தவரிடையே தன்னம்பிக்கையை வளர்த்துச் சமூக பாதுகாப்பை உறுதி செய்து, துரித வளர்ச்சி கண்டு வருகின்றன.

இவ்வாறு காலத்தின் தேவை கருதித் தம்மையும், தாம் சார்ந்த அங்கத்தவர்களையும் நேரடியாயுயர்த்திவரும் இச்சங்கங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மறைமுகமாய்ப் பங்குகொள்வதன்மூலம், "கூட்டுறவே நாட்டுறவு" என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. "பனை வளம் பெருக்கிப் பயன்பல பெற்று, மனைவளம் சிறந்து, மகிழ்வுடன் வாழ வைக்கும்" பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளின் துணையோடு சிறந்து வளர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**<br>
(முன்னாள்) அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்,<br>
யாழ்.மாவட்டம்.

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர்**

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 40வது ஆண்டினை நிறைவுசெய்துள்ள நிலையில், அதனை நினைவுகூரும் வகையில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் 19 சங்கங்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. இவற்றின் செயற்பாடுகள், பனை தென்னை வளங்களை நம்பி வாழும் அங்கத்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். இந் நிறுவனங்கள் தமது உறுப்பினர்களுக்காக பலவகையான மேம்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்தி, அதன்மூலம் அங்கத்தவர்கள் பல நன்மைகளைப் பெற்றுவருகின்றனர். இப் பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் மேலும் மேலும் சிறப்புற வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.**

**யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமானது, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து நாற்பதாவது ஆண்டு உதயமாகியுள்ளதையொட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1972ம் ஆண்டு வைகாசி மாதம் 01ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கங்கள், பனந்தொழில் வல்லுனர்களினது சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக பெரும்பங்காற்றி வருகின்றன. குறிப்பாக சிறுவர் முன்பள்ளிக்கூடம், அங்கத்தவர் ஓய்வூதியத் திட்டம், பணியாளர் ஓய்வூதியத் திட்டம், அங்கத்தவர், பணியாளர் விபத்து நலத்திட்டம், சித்தவைத்திய சேவை, நவீன அச்சுக்கூடம் போன்றவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். மனித விழுமியங்களையும், பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கி இச்சங்கங்கள் இயங்கி வருவது பெருமை தரும் விடயமாகும். அந்த வகையிலே எமது திணைக்களம் பெருமை அடைகிறது.

எதிர்காலத்தில் மேலும் சிறந்த முறையில் இவ் அமைப்பு இயங்கி, கூட்டுறவுத் தத்துவத்துக்கு அமைய பனந்தொழில் வல்லுனர்களதும், பணியாளர்களினதும் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாடுகளுக்காக தொடர்ந்தும் பாடுபட்டு இன்னும் பல ஆண்டுகள் நிலைத்து நின்று, சிறப்புறச் சேவையாற்ற வேண்டுமென என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க கூட்டுறவு! வளர்க கூட்டுறவு!
நன்றி.

**வீ.கே. அருந்தவநாதன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

**யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர்**
**திருமதி யோ.பற்குணராசா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்கள் ஆரம்பமாகி 40 ஆண்டுகளை நிறைவு செய்தமையை முன்னிட்டு சமாசத்தால் வெளியிடப்படுகின்ற இம் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனளிக்கும் கற்பகதருக்கள் எனப் போற்றப்படும் பனையும் தென்னையும் எமக்கு இயற்கை அன்னை அளித்த வரப்பிரசாதங்களாகும்.

ஒரு வீட்டுக்கு இரு பனை மரங்களும், இரு தென்னை மரங்களும் இருந்தால் ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக வாழலாம் என்பது எமது முன்னோர் கண்டறிந்த உண்மை.

பனை வளத்தையும் தென்னை வளத்தையும் பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பமான இச்சங்கம், இன்று "ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி" நான்கு தசாப்த காலத்தைப் பூர்த்திசெய்துள்ளது பெருமைக்குரிய விடயம். இச்சங்கத்தின் இடையறா முயற்சியின் பயனாக இன்று பனை, தென்னை தயாரிப்புக்கள் இலங்கையில் மாத்திரமல்ல, கடல் கடந்த நாடுகளிலும் இணையற்ற மதிப்பைப் பெற்றுள்ளன என்பது உண்மை.

இத்தகு அரும்பணியை மேற்கொண்டு, பனை, தென்னையின் பெருமையை புவனமெங்கும் பரப்பி வரும் தங்கள் சங்கங்கள் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி யோ.பற்குணராசா,**
**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

**மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர்**
**திரு சி.பத்மநாதன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், தமது 40 ஆண்டுகால சேவையைப் பூர்த்திசெய்யும் இச்சந்தர்ப்பத்தில், அவர்களது மலர் வெளியீட்டுக்கு இச் செய்தியினை வழங்கக் கிடைத்த பொன்னான வாய்ப்பையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு, அவற்றுடன் நீண்டகால உறவினைப் பேணிவரும் மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் என்ற வகையில், இச்சங்கங்களை வாழ்த்துவது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

இச்சங்கங்கள் கடந்த 40 ஆண்டுகளில் கடந்துவந்த பாதைகள் மிகவும் கடினமானவை என்பதை நாம் அறிவோம். உண்மையான உற்பத்தியையும் பாரம்பரிய தொழில்நுட்பத்தையும் மூலதனமாகக் கொண்டு, இச்சங்கங்கள் செயற்பட்டு வந்தமையால், எத்தகைய சவாலுக்கும் ஈடுகொடுத்து, அவை தம்மை நிலை நிறுத்திக் கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

இன்று தென்னிலங்கைக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்குமே போக்குவரத்து கதவுகள் திறக்கப்பட்ட நிலையில், இச்சங்கங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு மிகவும் கிராக்கி நிலவுவதையும் நாமறிவோம். போலித் தயாரிப்புக்களால் நிரம்பி வழிகின்ற இவ்வுலகில், உண்மையான, தரமான பாரம்பரிய உற்பத்திகளை ஊக்குவித்து, சங்கங்களுக்கும், சங்கம் சார்ந்த அங்கத்தவர்களுக்கும் சுபீட்சமான, வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்க என்றென்றும் மக்கள் வங்கியின் நல்லாசிகளும் ஆதரவும் கிடைக்குமென உறுதிகூறி, இச்சந்தர்ப்பத்தில் இவர்களின் சேவை மேலும் விரிவடைந்து வளம்பெற வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி.

**சி.பத்மநாதன்,**
**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**யாழ்ப்பாணம்.**

**தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைச் செயலகத்தின்**
**வலய முகாமையாளர் (வடக்கு) திரு வி.அருளானந்தம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது அகவை நிறைவையொட்டிய மலருக்கு வாழ்த்துச் செய்தி வெளியிடுவதில் ஆக்கபூர்வமாக மகிழ்வடைகிறேன்.

மண்ணை நம்பி மரமிருக்க, அந்த மரங்களை நம்பி மனிதன் வாழ்கிறான். அதிலும் பனை, தென்னை மரங்களின் பயன்கள் பற்றி யாரும் கூறவேண்டியதில்லை. மக்கள் அனைவருமறிந்த அப்பழுக் கற்ற உண்மையாகும்.

"மனித முன்னேற்றம் பொருளாதார அபிவிருத்தி" என மிகச்சுருக்கமாக கூறுவதுண்டு. அத்தகைய மனித முன்னேற்றத்துக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடு பாரம்பரியமாகவே முதன்மை வாய்ந்ததாகும். அதுவும் நான்கு தசாப்த நிறைவு என்பது பிரமிக்க வைப்பதாகும். ஏனெனில், வரையறுக்கப்பட்ட அங்கத்தவர்களை அதுவும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களாக மட்டுமன்றி, மிகவும் வரையறுக்கப்பட்ட சந்தைப்படுத்தல் சந்தர்ப்பங்களும் போட்டியுமுள்ள நிலையில், இவ் அகவைப் பூர்த்தி என்பது வரவேற்கத்தக்கது.

நான்கு தசாப்தத்தை நிறைவு செய்யும்போது, எதிர்காலத்தில் எத்தனை தசாப்தங்கள் ஆரோக்கியத்துடன் எதிர்கொள்ளப்போகின்றோம் என்பதுவே முக்கியமானதாகும். சமாசம் உள்ளிட்ட இத்துறைசார் நிறுவனங்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் அங்கத்தவர்களின் சமூக, பொது முன்னேற்றத்தை ஆதாரமாகக்கொண்டு அமைந்திருத்தல் மிகச் சிறப்பானது. குறிப்பாக வருமான மட்டத்தை உயர்த்துவதும், அதன்வழி நுகர்வு மட்டத்தினை உயர்த்துவதும் அவசியமாகும். இதற்கு அமைவாக தனிமனித முன்னேற்றத்தினூடாக, சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் தேசத்தின் முன்னேற்றத்துக்கு தொடர்ந்து ஆக்கபூர்வமான உற்பத்திகளையும், மூலவளங்களின் உச்ச பயன்பாட்டையும் மேற்கொள்ளமுடியும் என்னும் நம்பிக்கை மிளிரட்டும் என ஆக்கபூர்வமான வாழ்த்துக்களை சமாசத்துக்கும் சங்கங்களுக்கும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். நடைமுறையில் உள்ள ஊழியர்களை வாழ்த்துவதுடன், ஆணிவேராக உழைத்த வாழ்நாள் ஊழியர்களையும் வாழ்த்துவதில் நம் சமூகம் பெருமிதம் அடைகிறது.

நன்றி.


**விசாகசுந்தரம் அருளானந்தம்,**
வலய முகாமையாளர்(வடக்கு),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமைச்செயலகம்,
கொழும்பு 03.

## யாழ். கூட்டுறவு அபிவிருத்தி முன்னாள் உதவி ஆணையாளர் (ப.தெ)

## திரு சு.கணேசமூர்த்தி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து செயற்பட்டு, 40 ஆண்டுகள் நிறைவுறுகின்ற இவ்வேளையில், கடந்து வந்துள்ள வரலாற்று தடங்களின் சாதக, பாதக பக்கங்களை ஆவணப்படுத்தி, எதிர்கால உலக பொருளாதார ஒழுங்கமைவுக்கு ஏற்ற வகையில் தன்னை தயார்படுத்துவதற்கு ஏதுவாக, மலர் ஒன்றை வெளியீடு செய்யும்வேளை, இத்துறையுடன் நான்கு ஆண்டுகள் உத்தியோக ரீதியான கடமையில் தொடர்பு பட்டவன் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சமூக, பொருளாதார ஈடேற்றத்துக்காக காலத்தின் தேவை கருதி, 1972ல் அமைக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அமைப்புக்கள், பல்வேறு வகைப்பட்ட அரசியல், பொருளாதார சூழலிலும் வடபகுதியில் உள்ளூர் வளப்பயன்பாட்டு பொருளாதார அலகு ஒன்றாக வலுப்பெற்று வளர்ந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பாரம்பரிய செயல்முறைகளின் அடிப்படையில் தொழிற்பட்டுவரும் பனை தென்னை வள உற்பத்திகள் உலகமயமாதல், திறந்த பொருளாதாரக் கோட்பாட்டுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தன்னை தயார்படுத்திக் கொள்ளுதல் காலத்தின் கட்டாயம் ஆகும். பனை தென்னை வள உற்பத்திகளுக்கான உள்ளூர் சந்தை வாய்ப்புக்களை மட்டும் நம்பி இருக்காமல், வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை நோக்கி தனது உற்பத்தி நடவடிக்கைகளை நகர்த்துவதற்கு இத்துடன் தொடர்புடைய சகல நிறுவனங்களும் ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும்.

உள்ளூர் பனை, தென்னை வளத்தையும், உறுப்பினர் உழைப்பையும், சொந்த நிதி வளத்தையும் கொண்டு கூட்டுறவு விழுமியங்களுக்கு உட்பட்டு, நாற்பதாண்டுகள் சிறப்புற இயங்கி வந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்புக்கள், தொடர்ந்தும் பல்லாண்டு காலம் பலத்துடன் வளர்ச்சிபெற்று தனது பணிகளை மக்களுக்கு ஆற்றவேண்டுமென வாழ்த்துவதுடன், இத்துறையின் வளர்ச்சிக்காக உழைத்த சகலரையும் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி.

**சு.கணேசமூர்த்தி,**
**யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி**
**முன்னாள் உதவி ஆணையாளர் (ப.தெ)**

## யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி முன்னாள் உதவி ஆணையாளர்(ப.தெ)
## திரு சி.ஐயாத்துரை அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

1972ம் ஆண்டு காலப் பகுதியில் சமூக முற்போக்கு எண்ணங் கொண்ட பெரியோர்களின் சிந்தனையின் வடிவமாக உருவாக்கப்பட்டவையே, இக் கூட்டுறவு நிறுவனங்களாகும். ஆரம்ப காலத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட இச்சங்கங்கள், இன்று கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிப் பாதையில் முன்னோடியாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

கூட்டுறவுச் சங்கங்களாக பரிணமிப்பதற்கு முன்னர், இச்சங்க உறுப்பினர்கள் அவர்களின் தொழில்சார் தன்மையினால் பல்வேறு சுரண்டல்களுக்கும், சமூகச் சீர்கேடுகளுக்கும் முகங்கொடுத்து வந்துள்ளனர். கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அதன் உறுப்பினர்களாக தொழிலாளர்கள் உள்வாங்கப்பட்ட பின்னர், சங்கங்கள்மூலம் பல்வேறு நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையோர் ஆக்கப்பட்டுள்ளனர்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற ஆன்றோரின் வாக்குக்கமைய, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், அதன் வளர்ச்சிப் பாதையில் கொத்தணிகள், சமாசம் என்பவற்றினை உருவாக்கி, மேலும் தமது உறுப்பினர்களின் நலனுக்கு வலுச்சேர்த்துள்ளன.

சங்கங்களின் வளர்ச்சிக்கு ஆணிவேராக இருக்கும் உறுப்பினர்களின் நலன்களை பேணுவதற்கும், அவர்களை சார்ந்த குடும்ப உறுப்பினர்களை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நலத்திட்டங்களை சங்கங்கள் செயற்படுத்தி வருகின்றமை அவற்றின் சமூக அக்கறையினை வெளிக்காட்டுவதாகும்.

மேலும் இச்சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உழைத்து வரும் அனைவரும் பாராட்டுக்குரியவராவர். தொடர்ந்தும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்புடன் செயலாற்றி, பல ஆண்டு விழாக்களை கொண்டாட வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**சி.ஐயாத்துரை,**
யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி
முன்னாள் உ.ஆணையாளர்(ப.தெ),

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட**
**பனை தென்னை வளப் பிரிவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**திரு இ.பாலச்சந்திரன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் அங்கத்துவ சங்கங்களின் அனுசரணையுடன், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நாற்பதாவது ஆண்டு நிறைவினை கொண்டாடும் முகமாக 40வது ஆண்டு நிறைவு மலரான "கற்பகதரு" எனும் மலரினை வெளியிடுவதையிட்டும், அதற்கான எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதையிட்டும் பெருமகிழ்வடைகின்றேன்.

மனித விழுமியங்களையும், அபிவிருத்திக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கிய கூட்டுறவு இயக்கம் அதன் தன்மைகளிலிருந்து கூட்டுறவுக்கான சேவையினை வழங்கும் பொழுது, தற்போதைய நிலையைவிட மேலும் பல பலாபலன்களை பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய போட்டிப் பொருளாதார சூழலிலும், தகவல் தொழில்நுட்ப யுகத்திலும் அவற்றுக்கு முகம்கொடுத்து வளர வேண்டிய நிலையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று நாற்பதாவது ஆண்டினை அடைந்துள்ளன.

1972ம் அண்டு ஆரம்பிக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பத்தில் கள் கொள்வனவு விற்பனையில் மட்டும் ஈடுபட்டிருந்த பொழுதிலும், நாற்பதாவது ஆண்டினை அடைந்த இவ்வேளையில், சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம், சமாசம் என்பவற்றின் ஊடாக பல்வேறு வகைப்பட்ட உற்பத்தி, விற்பனை தொழிற்பாட்டுடன் சமூகம் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், அங்கத்தவர்கள், பணியாளர்களின் நலத்திட்டங்களுக்கும் உதவுவதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்மாதிரியாக அங்கத்தவர்கள், பணியாளர்களின் ஓய்வூதியத் திட்டங்களின் ஊடாக அவர்களுக்கு தற்பொழுது ஓய்வூதியம் வழங்கி வருவதும் பாராட்டத்தக்கதாகும்.

நாற்பதாவது ஆண்டில் அடைந்துள்ள பலாபலன்களுக்கு மேலாக பல அபிவிருத்தித் திட்டங்களை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அங்கத்தவர்கள், பணியாளர்கள் இணைந்த சமூகத்தவர்களுக்கு முன்னெடுத்து மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வளர்ச்சியடைந்து அதன் சேவைகளை வழங்குவதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இச்சங்கங்கள் தொடர்ந்து எதிர்காலத்தில் சிறப்புற எனது உளம்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆர்.பாலச்சந்திரன்,**
**மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர்
## திரு இ.இராஜாராம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



### மேலும் வெற்றிப்பாதை நோக்கி நகர வாழ்த்துகின்றேன்

கூட்டுறவுக் கொள்கையின் "சமூக மேம்பாடு" என்ற அம்சத்துக்கு அர்த்தம் கொடுத்த அமைப்புக்களில் ஒன்றாகவே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ளன. எமது பிரதேசத்தின் இயற்கை வளமான பனை மரத்தை தனது தொழிற்பாட்டின் முக்கிய மூலவளமாகக் கொண்டும், கடின உழைப்பாளிகளான சீவல் தொழில்வல்லுநர்களை பெறுமதிமிக்க மனித வளமாகவும் கொண்டும் "சமூக மேம்பாடு" என்ற பயணத்தின் நாற்பது ஆண்டு கால நிறைவை "சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2012" இல் கொண்டாடும் வாய்ப்பானது மிகச்சிறப்பானதே.

கூட்டுறவின் தோற்றம் மட்டுமன்றி, நோக்கமும் வலுக்குன்றிய மக்களின் வாழ்வுக்கு வலுச்சேர்ப்பதாகும். அந்த வகையில், சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார அம்சங்களில் மிகவும் பின்னடைவான நிலையில் இருந்த ஒரு சமூகத்தையே மேம்பாடு அடையச் செய்வதில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி கண்டுள்ளது என்பது நிறைவான செய்தியாகும்.

இக்காலப்பகுதியில் மதிப்பிடக்கூடிய அளவுக்கு பௌதீக வளங்களை தன்னகத்தே பெற்றுக்கொண்ட இவ் அமைப்பானது, கூட்டுறவின்மீது தீவிர பற்றும், செயற்திறனும் உள்ள கூட்டுறவாளர்களையும் உருவாக்கியுள்ளது.

இப்பிரதேசத்தில் இயங்கும் அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும் இணைத்து செயற்படுத்துவதில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பெரும்பணியாற்றி வருகின்றது. இச்சமாசம் நாற்பது ஆண்டுகால நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் மனநிறைவு அடைகின்றேன். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் மற்றும் சமாசம் என்பவற்றின் எதிர்காலம் மேலும் வெற்றிப்பாதை நோக்கி நகர்ந்து, எல்லாச் சிறப்பும் பெற, மனதார வாழ்த்துகின்றோம்.

நன்றி

**இ.இராஜாராம்,**
**தலைவர்,**
**மாவட்ட கூட்டுறவுச் சபை,**
**யாழ்ப்பாணம்.**

**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின்**
**சமாசத் தலைவர் திரு மு.ஜெ.சுஜீந்திரன்(ஜே.பி) அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



## வாழ்க வளம் பல கண்டு!

யாழ்.மாவட்டத்தின் பொருளாதார, கைத்தொழில் அபிவிருத்திக்கு பனை தென்னை வளம் பெரிதும் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும். இவ் வகையில், பனை, தென்னைசார் வளங்களை முழுமையாக நல்ல முறையில் பயனுடையதாக்கி, இம் மாவட்டத்தின் தேவையில் தன்னிறைவு காணவும், பிற மாவட்டங்களுக்கு வழங்கியும் அளப்பரிய சேவையைப் புரிந்துவருகின்ற இத்துறைசார் நிறுவனங்கள் தமது 40வது ஆண்டு நிறைவினை எட்டியுள்ளமை பேருவகை அளிக்கின்றது.

தொழில்சார் வல்லுநர்களின் உழைப்பால் உயர்ந்து நிற்கும் இச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பவற்றின் தலைவர்கள், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், இவற்றுக்கெல்லாம் நல்ல ஆலோசகராகச் செயற்பட்டுவரும் கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் இச்செய்தி பெருமை சேர்ப்பதாகும்.

இந்நன்நாளில் வெளிவரவுள்ள 40வது ஆண்டு நிறைவு மலர் சிறப்புற வேண்டுமெனவும், இதற்கு உரித்தான சங்கங்கள், கொத்தணிகள் மற்றும் சமாசம் என்பன மென்மேலும் வளம் பல கண்டு, இம் மாகாணத்தின் சிறு கைத்தொழில், பொருளாதார, வேலைவாய்ப்பு, அபிவிருத்திப் பணிகளில் சிறப்புற மிளிர வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி, வாழ்த்தி நிற்கின்றோம்.

நன்றி

**மு.ஜெ.சுஜீந்திரன் (ஜே.பி),**
**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக்**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,**
**இல.111, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்**
**சமாசத் தலைவர் திரு செ.இலகுநாதன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால், இத்துறைசார் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமையை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற இம் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த காலத்தில் நாட்டின் அசாதாரண சூழலில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து, பனை தென்னை வள நிறுவனங்கள் தலை நிமிர்ந்து நிற்பதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். யாழ.மாவட்டத்தின் கூட்டுறவு வரலாற்றில் பல சாதனைகளை புரிந்து, அடிமட்ட மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சமாசம் உள்ளிட்ட இந்நிறுவனங்கள் மேற்கொண்டுவருகின்ற நடவடிக்கைகள் யாழ்.மக்களின் கூட்டுறவின் முன்னோடிகள் என்பதனை வலியுறுத்துகின்றது.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் அங்கத்தவர் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இலக்கு எனத் திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டுவரும் இந்நிறுவனங்கள், கூட்டுறவின் அவசியத்தினைச் சிந்திக்கத் தூண்டி, வேலையற்று வீண்பொழுது போக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கி, அத்தொழிற்பாட்டின்மூலம் அவர்களைப் புத்துணர்வு பெறச்செய்து, எமது பிரதேச வளங்களை பயன்படுத்த வழிகாட்டி, ஒரு புதிய பலம்மிக்க கூட்டுறவு அமைப்பாக உயர்ந்து வந்துள்ளமை கண்டு பெருமகிழ்ச்சி அடைவது மட்டுமல்ல, எதிர்காலத்திலும் தரமிகு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி, நல்லதோர் கூட்டுறவு சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

நன்றி.

**செ.இலகுநாதன்,**
**தலைவர்,**
**யாழ்.மாவட்ட சி.க.வ.கூ.**
**சங்கங்களின் சமாசம்,**
**யாழ்ப்பாணம்.**

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க
சமாசங்களின் சம்மேளனத்தின்



# வாழ்த்துச் செய்தி

கற்பகமாம் பனை, தென்னை – தன்
கவின் வளத்தில் நிறைவு கண்டு
சிற்பமாய் உயர்வு கொண்டு – அகவை
நாற்பதை நிறைவு கண்டு
பொற்புடன் திகழ்வதையிட்டு – நாம்
பூரிப்படைகின்றோம்
இப் பெருஞ் சாதனைக்காய்...
முப்பொழுதும் உழைத்த – அதன்
சிற்றூழியர் முதல் தலைவர் வரையான
சகல சாதனையாளருக்கும் – எமது
வளமான வாழ்த்துக்கள் வழங்குகின்றோம்
மென்மேலும் சிறப்படைய வேண்டுமென்று.

**தலைவர், பணிப்பாளர்கள்,**
யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூ.சங்க
சமாசங்களின் சம்மேளனம்.
யாழ்ப்பாணம்.

**யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின்
பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு கா.சிவஞானம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் வாழ்வளித்து, வளம்பெருக்கி, வையகத்தில் தலைநிமிர்ந்து வாழ வழியமைத்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 40வது ஆண்டு நிறைவை சிறப்புறக் கொண்டாடும் நன்னாளில், சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இச் சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு முதல், இக்கூட்டுறவாளர்கள் பல சமூக ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இச்சங்கங்கள் உதயமாகிய பின்னர் பெரும் சக்தியுடன் திரண்டெழுந்து, பலம்மிக்க அமைப்பாகவும், இச்சமூக மக்களின் குரலாகவும் இவை விளங்குவதில் ஐயமில்லை. இச்சங்கங்கள் தன்சார்ந்த மக்களின் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தி, தனது அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு ஓய்வுக் காலத்தில் ஓய்வூதியம் வழங்கும் அளப்பரிய சாதனையைச் செய்து வருகின்றது.


தொழில் திட்டங்களை பொறுத்தவரையில், பல நவீன செயற்திட்டங்களுடன் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. இச் சங்கங்களின் வளர்ச்சி வரலாற்றுப் பாதையில் பல நெருக்கடிகளை சந்தித்து வந்துள்ளது. இருந்தபொழுதிலும், தளராது கூட்டுறவுக் கொள்கையில் பற்றுறுதியுடன் நிலைத்து நிமிர்ந்து நின்று, தனது மக்களுக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்றது. இந்நிறுவனத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக, கொத்தணிகள், சமாசம் என வளர்ந்து, மிகப் பலம் மிக்க நிறுவனமயப்படுத்தப்பட்டு, வடபகுதி கூட்டுறவில் நினைத்ததை சாதிக்கும் ஆற்றல் படைத்த நிர்வாக நிதி வல்லமையுடன், பணித்தொகுதியுடைய அமைப்பாகவும் வளர்ச்சியடைந்துள்ளமை பெரும் பாராட்டுக்குரியது.

40வது அகவையில் சிறப்பு மலர் வெளியீடு செய்யும் சமாசத்தினையும், சங்கங்களையும் வாழ்த்துவதுடன், மேலும் வளர்ச்சியடைந்து நூற்றாண்டு விழாவையும் சிறப்புறக் கொண்டாட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**கா.சிவஞானம்,**
**தலைவர்,**
**யா.மா.ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின்**
**பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

# சமர்ப்பணம்



ஈழமணித் திருநாட்டின் வடபால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் காலத்தின் தேவையால் உருவாக்கப்பட்ட வையே ஆகும். அந்த வகையில் நாற்ப தாவது ஆண்டு நிறைவில் இச் சங்கங்கள் வீறுநடைபோடுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்து, உடலை வருத்தி, உதிரத்தை வியர்வை யாக்கி பனை, தென்னை தருக்களில் இருந்து சாற்று உற்பத்திகளைப் பெற்ற பனந்தொழில் வல்லுனர்களின் ஓயாத உழைப்பினாலும் கொள்கைகள் வழிவகுத்திட்ட திட்டங்களினாலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கங்கள் இன்று விழுதுவிட்டு நிழல்தரும் ஆலமரமாகிவிட்டன எனும் தித்திக்கும் செய்தியுடன்..............

இந்நிறுவனங்களின் தோற்றத்துக்கு அடித்தளமிட்டு அதன் உயர்வுக்காக அரும்பாடுபட்ட கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் இந்த **கற்பகதரு** எனும் மாணிக்க மலரினை நன்றி உணர்வுடன் சமர்ப்பணம் செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

**மலர்க்குழு**

# மலர்நுகரும் உங்களுக்கோர் அறிமுகம்

1972ம் ஆண்டு காலப் பகுதியில் வடமாகாணத்தில் நிலவிய சமூக கட்டமைப்பு முறைகளால் பனந்தொழில் வல்லுனர் சமூகம் சுரண்டப்பட்டமையை கருத்தில்கொண்டு சமூக பிறழ்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இல்லாது ஒழிக்கும் நோக்கில் அன்றைய சமூக சிந்தனையாளர்களின் முற்போக்கு எண்ணப்படி உருவாக்கப்பட்டதே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

அன்று அங்கத்தவர் சமூக, பொருளாதார மேம்பாடு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டபோதிலும் தொடர்ந்து வந்த காலங்களில் நாட்டில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு அமைவாக இசைவாக்கம் அடைந்து நான்கு தசாப்தங்களில் நாநிலத்தில் உயர்ந்து அங்கத்தவர் சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார மேம்பாடு என்னும் பல்நோக்கம் கொண்ட பாரிய சமூக, நிதி நிறுவனங்களாக திகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சியும் வரலாறும் அழியாப் பதிவாக ஆவணப்படுத்தப்படவேண்டும் என்கின்ற எண்ணம்கொண்டு வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டும் எனச் சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியன ஒன்றிணைந்து பரிந்துரை செய்தன.

அத்துடன், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி இச்சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியவற்றின் வரலாற்று ஆவணங்கள் அடங்கிய மலர் ஒன்று வெளியிடப்பட வேண்டும் என தீர்மானித்தனர். இதன் விளைவாக,

| | | |
|---|---|---|
| 01. | திரு நா.கணேசன் | - சமாசத் தலைவர் |
| 02. | திரு செ.செல்வராசா | - வலிகாமம் கொத்தணித் தலைவர். |
| 03. | திரு கி.பூபாலசிங்கம் | - தென்மராட்சி கொத்தணித் தலைவர். |
| 04. | திரு க.மெய்யழகன் | - சுன்னாகம் சங்கத் தலைவர். |
| 05. | திரு வ.இராசலிங்கம் | - பருத்தித்துறை சங்கப் பொதுமுகாமையாளர். |
| 06. | திரு கி.குணரத்தினம் | - பண்டத்தரிப்பு சங்க பொதுமுகாமையாளர். |
| 07. | திரு கா.சிவஞானம் | - தெல்லிப்பளை சங்கப் பொதுமுகாமையாளர். |
| 08. | திரு பொ.செல்வராசா | - அச்சுவேலி சங்கப் பொதுமுகாமையாளர். |
| 09. | திரு ம.யோசராசன் | - வேலணை சங்கப் பொதுகமாமையாளர். |
| 10. | திரு ஜே.பி.குணரத்தினம் | - சமாசப் பொதுமுகாமையாளர். |
| 11. | திரு வ.சிவகுமார் | - சமாச கல்வி அலுவலர். |
| 12. | திரு இ.பாலச்சந்திரன் | - மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர். |
| 13. | திரு இ.விஜயமோகனராஜா | - தலைமைக்காரியாலய கூ.பரிசோதகர். |

ஆகியோர்கொண்ட மலர்க்குழு ஒன்று உருவாக்கம்பெற்றது. அதன்வழி குறித்த அமைப்புக்களின் வரலாறுகள், ஆவணப்படங்கள் அடங்கிய தொகுப்பாக இம்மலர் வெளிவருகின்றது.

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், சித்த வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் வரலாற்று ஆவணமாக திகழக்கூடிய வகையில் மலரும் இம்மலரானது, இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களினது நல்லாசியுடனும், பேரறிஞர்களின் நல்வாழ்த்துக்களுடனும் பேராசிரியர்களின் திறனாய்வுக் கட்டுரைகள், துறைசார்ந்தோரது ஆக்கங்கள், கூட்டுறவாளர்களது கவிதைகள், சிறுகதைகள் என்பன உள்ளடங்கி வெளியாகும் இம்மலரானது என்றும் நறுமணம் வீசும் என்பதில் ஐயமில்லை.

துறைசார் கூட்டுறவாளர்களின் பெருமுயற்சியில் வெளியாகும் ஆவணப் பெட்டகமான இச்சிறப்பு மலர், நாளைய எமது சந்ததியினருக்கு வழிகாட்டியாக எம் நிறுவனங்களினால் போற்றிப் பாதுகாக்ககூடிய வகையில் அவரவர் தந்த வரலாறுகளையும், ஏனைய ஆக்கங்களையும் ஒவ்வொரு இதழ்களிலும் அவற்றின் கனதிகுன்றாது தொகுக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது பெரும்பேறாக கொண்டு என் பணி தொடர்ந்தேன்.

இதழ்கள் ஒவ்வொன்றும் தனித்தனி சுவையாய் இணைந்த இம்மலர்தம் நறுமணத்தை முகரும் நீங்கள் ஒவ்வொருவரும் நல்லதை ஏற்று, குறைகளை பொறுத்தருளவும் வேண்டி நிறைவுசெய்கிறேன்.

**கி.வரதராசன்,**
*தொகுப்பாசிரியர்.*

# ஏட்டினைப் புரட்டிப் பார்!



வடவரணி சி.சபா
முன்னாள் பொதுமுகாமையாளர்,
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

**தம்பி!**

உன்னை நான் நன்கறிவேன் - உன்
அப்பனையும் பாட்டனையும்
பூட்டனையும் நானறிவேன் - நீயென்
வயதைக்கூட அறியமாட்டாய்!

**உங்களுக்கு**

எப்படிநான் உதவிநின்றேன்
என்பதைநீ அறியமாட்டாய்
என்னுதவி பெற்றுவாழ்ந்த
எத்தனையோ குடும்பமுண்டு!

**அவர்கள்**

உண்ணும் உணவுக்கும்
உழைப்புக்கும் துணைநின்றேன்
படுத்துறங்கும் வீடெல்லாம்
பலதிலுமே நானிருந்தேன்

**தம்பி**

என்னைநம்பி பிழைக்கிறது
இப்போதும் பல குடும்பம் - நான்
இருந்தாலும் ஆயிரம்பொன்
இறந்தாலும் ஆயிரம்பொன்

**நான்**

இதற்குமேலும் சொல்லவந்தால்
தற்பெருமை ஆகிவிடும் - இதை
இத்துடன் நிறுத்திவிட்டு
இன்னுமொன்று சொல்லுகிறேன்

**நீ**

ஏடுகளைப் புரட்டிப்பார்
என்பெருமை அறிந்துகொள்வாய்
சந்தர்ப்பம் கிடைக்கும்வேளை - உன்
சந்ததியைக் கேட்டுப்பார்

**நான்**

தனிமரமாய் நின்றாலும்
தலைகுனிந்து நின்றிடாத
யாருக்கும் அசைந்திடாத
"வடபுலத்து பனைமரம்"




# மலர்க்குழு



இருப்பவர்கள் (இடமிருந்து) : திரு கி.பூபாலசிங்கம், திரு க.மெய்யழகன், திரு இ.விஜயமோகனராஜா, திரு நா.கணேசன், திரு இ.பாலச்சந்திரன், திரு செ.செல்வராசா

நிற்பவர்கள் (இடமிருந்து) : திரு கி.வரதராசன், திரு பொ.செல்வராசா, திரு கா.சிவஞானம், திரு ஜே.பி.குணரத்தினம், திரு கி.குணரத்தினம், திரு இ.இராசலிங்கம், திரு வ.சிவகுமார், திரு ந.துளசிதாஸ், திரு சி.சுகிர்தன்

# 40வது ஆண்டு நிறைவில்
# சமாசத்தின் தலைவர்



**திரு நா. கணேசன்**

அவர்கள்

40வது ஆண்டு நிறைவில்

சமாசத்தின் செயலாளர்



திரு த. சிவலிங்கம்

அவர்கள்

40வது ஆண்டு நிறைவில்

சமாசத்தின் பொதுமுகாமையாளர்



திரு ஜே. பி. குணரத்தினம்

அவர்கள்

# எமது ஆளுனையாளர்



**திருமதி மதுமதி வசந்தகுமார்**

அவர்கள்

# எமது உதவி ஆணையாளர்




திரு வீ.கே. அருந்தவநாதன்

அவர்கள்

# கண்ணியமானதே கூட்டுறவு!

வல்லைவாசன், அச்சுவேலி



அன்பது காத்து அரவணைத்து என்றும்
அவனியில் நிலைத்திங்கு சேவைகள் செய்து
ஆண்டு நாற்பது அகவையில் இன்று
ஆலம் விருட்சமாய் ஆகிய நிறுவனம்

விடிவின்றி இருள் சூழ்ந்து வாழ்ந்தோர்க்கு
விடிவெள்ளியாய் பூத்த கூட்டுறவு
வளமின்றி வறுமை நோயால் வாழ்ந்தவர்க்கு
வளமான வாழ்வுதந்த கூட்டுறவு

பனையுடன் தென்னை வளமதும் சேர்த்து
பக்குவமாகவே கட்டிய கூடிது - பாரில்
பாமர மக்களை பாவலராக்கிட கல்விக்
கொடை தந்திட்ட கூட்டுறவு

ஏழைத் தொழிலாளர் ஏற்றங் காணவும்
ஏந்திழையாள் பெருமைதனை எடுத்தியம்பவும்
காவியத்தில் கற்பகத்தின் கருத்தியம்பவும்
காத்திரமாய் சேவைசெய்யும் கூட்டுறவு

பாலரவர் பருவத்தில் கல்வி கற்க
பாங்குடனே முன்பள்ளி தானமைத்து
சீருடையும் சிறப்பும் பரிசும்தான் வழங்கி
சிறப்பாக கல்விதரும் கூட்டுறவு

சிக்கனமும் சேமிப்பும் இருகண்கள்
சீராக வாழ்வதற்கு பல வழிகள் என
செப்பிவைத்த செம்மல்கள் வழிநடந்து
செம்மைமிகு நிறுவனமாய் நிற்கும் கூட்டுறவு

வங்கியென்றும் பணப்பரிமாற்ற சேவையென்றும்
விபத்துநலத்திட்டமென்றும் ஓய்வூதியத்திட்டமென்றும்
பலவகை நலத்திட்டம் பாங்காய் உருவாக்கி
கொள்கை வழிதான் நடக்கும் கூட்டுறவு

உதயத்துச் சூரியன்போல் உருவான தலைவர்களும்
உன்னத வழிநடக்கும் வினைத்திறன் முகாமைகளும்
விண்ணவர் மெச்சுகின்ற பணித்தொகுதிகளும்
விரைவாக வழிநடத்தும் திணைக்கள அலுவலர்களும்
சேர்ந்துருவான கூட்டுறவு

கரும்பனை ஏறி தலைப்பாளை நுங்கெடுத்தும்
வியர்க்குரு நீங்க பூசிய நாட்களும்
பனம்பழம் பிசைந்து கழியது காய்ச்சி
பலகாரம் சுட்டு பகிர்ந்துண்ட நாட்களும்
நினைவினில் நிற்க உருவான கூட்டுறவு

குலைதொங்கும் காய்பிரித்து சாறெடுத்து
குவளைதனில் மென்பானமாய் சேர்த்து
பருக நல்ல பானமாக நித்தம்தந்து
பனைவெல்லம் பனஞ்சீனி கற்கண்டு
நோய்தீர்க்கும் மருந்தாக தரும் கூட்டுறவு

நாட்டுயர்வு நிலைபெறவே நல்லுறவை வளர்த்திங்கு
நாற்திசையும் வீசுபுகழ் கூட்டுறவினில்
நாட்டமுடன் இணைந்திங்கு சேவைசெய்யும்
தேட்டமிகு கற்பகத்தொழில் வல்லுனர்கள்
கூட்டமாக இணைத்துவைத்த கூட்டுறவு

அகவை நாற்பது ஆனபின்பாலும்
காலத்தால் அழியாத கற்பகதருபோல்
காத்திரமாகவே சேவைகள் செய்திடும்
கண்ணியமானதே கூட்டுறவு

# 40வது ஆண்டு நிறைவுதனில் எமது சங்கங்கள், கொத்தணிகளின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள்

## கோண்டாவில் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு செ.செல்வராசா

பொதுமுகாமையாளர்



திரு நி.பொ.யேசுராசா

## கோப்பாய் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு இ.உதயசூரியன்

பொதுமுகாமையாளர்



திருமதி லி.அமலராணி

## அச்சுவேலி பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு செ.காந்தராசா

பொதுமுகாமையாளர்



திரு பொ.செல்வராசா

## அரியாலை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு தி.யோகரட்ணம்

பொதுமுகாமையாளர்



திருமதி பி.சாந்தினி

## சங்கானை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு பெ.தேவராசா

பொதுமுகாமையாளர்



திரு சி.தயாபரன்

## சுன்னாகம் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு க.மெய்யழகன்

பொதுமுகாமையாளர்



திரு கா.இளங்கோ

## தெல்லிப்பளை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு க.அருணகிரிநாதர்

பொதுமுகாமையாளர்



திரு கா.சிவஞானம்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு கி.பூபாலசிங்கம்

பொதுமுகாமையாளர்



திரு சி.நவரத்தினம்

## கொழகாமம் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு ஆ.சாந்தகுமார்

பொதுமுகாமையாளர்



திரு சி.சிவானந்தன்

## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு இ.ஜெராட்ஜெயசீலன்

பொதுமுகாமையாளர்



திரு ச.ஜெயபாலன்

## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு செ.நடராசா

பொதுமுகாமையாளர்



திரு க.தெய்வேந்திரம்

## பருத்தித்துறை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு சி.சிவகுமார்

பொதுமுகாமையாளர்



திரு வ.இராசலிங்கம்

## கரவெட்டி பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு கா.குணராசா

பொதுமுகாமையாளர்



திரு தா.இராசரத்தினம்

## மானிப்பாய் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு கி.உமாசுதன்

பொதுமுகாமையாளர்



திரு க.சந்குணலிங்கம்

## வேலணை பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு மா.குணரத்தினம்

பொதுமுகாமையாளர்



திரு பா.சித்திரவடிவேல்

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு தி.இந்திரசித்து

பொதுமுகாமையாளர்



திரு கி.குணரத்தினம்

## காரைநகர் பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு மு.பரமேஸ்வரன்

பொதுமுகாமையாளர்



திரு த.கமலநாதன்

## அனலைதீவு பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு வே.சிறீகாந்தன்

பொதுமுகாமையாளர்



திரு அ.ஐங்கரன்

## வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபி.கூட்.சங்கம்

தலைவர்



திரு க.அன்பழகன்

பொதுமுகாமையாளர்



திரு வே.ரவிச்சந்திரன்

## வடமராட்சி பனை தென்னை வள அபி.கூட்.ச.கொத்தணி

தலைவர்



திரு சி.சிவகுமார்

பொதுமுகாமையாளர்



திரு மு.நவநேசன்

## வலிகாமம் பனை தென்னை வள அபி.கூட்.ச.கொத்தணி

தலைவர்



திரு செ.செல்வராசா

பொதுமுகாமையாளர்



திரு க.சுதாகரன்

## தென்மராட்சி பனை தென்னை வள அபி.கூட்.ச.கொத்தணி

தலைவர்



திரு கி.பூபாலசிங்கம்

பொதுமுகாமையாளர்



திரு அ.அருட்செல்வம்

## யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உ.வி.வை.சே.கூட்.சங்கம்

தலைவர்



திரு அ.சின்னராசா

முகாமைப் பணிப்பாளர்



திரு கு.ஸ்ரீகணநாதன்

# யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கான ஆலோசனைகளையும் மேற்பார்வை கடமைகளையும் ஆற்றும் அலுவலர்கள்



திரு இ.பாலச்சந்திரன்

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு இ.விஜயமோகனராஜா

தலைமைக் காரியாலய கூட்.அபி.அலுவலர்



திரு தி.வித்தககஜாநிதி

தலைமைக் காரியாலய கூட்.அபி.அலுவலர்



திரு பொ.மகேஸ்வரன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு தா.தவமன்னன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு நா.ஜெயவதனன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு ஐ.மயூரன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு சி.அருணோதயன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு து.சிவஃரூபன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு த.பிறேமிலன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு ப.சஞ்ஜீவன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு க.பரநிரூபன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்



திரு இ.கஜேந்திரன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்




திரு வி.கு.வின்சன் ஞானதயாளன்

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின்

# முன்னோடிகள்



கலாநிதி
திரு என்.எம்.பெரேரா
அவர்கள்
(நிதியமைச்சர் – 1972)



திரு சு.நடேசு
அவர்கள்
(ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்)




திரு ஜீ.நல்லையா
அவர்கள்
(ஆரம்பகால தலைவர், சமாசம்)



திரு க.நடராசா
அவர்கள்
(ஆரம்பகால செயலாளர், சமாசம்)



திரு கி.சிவநேசன்
அவர்கள்
(முன்னாள் பொதுமுகாமையாளர், சமாசம்)



திரு தி.சபாரத்தினம்
அவர்கள்
(முன்னாள் கூ.அ.உ.ஆணையாளர்,யாழ்.)

# கூட்டுறவும் வாழ்க்கையும்!



சி.ஜெயசீலன்

ஓர் தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல்
எம்மை ஒருங்கிணைத்திடும் கூட்டுறவு
ஒற்றுமையாய் பாரினிலே நாமுயர
ஓரச்சாணியாய் அமைந்திடும் கூட்டுறவு
சாதி மத பேதமற்ற சனநாயகத்தின்
ஒளிவிளக்காய் கூட்டுறவு!

வானவில்லின் நிறமதனை இலட்சணமாய்
கொண்டது நம் கூட்டுறவு
வையகத்தின் ஒற்றுமையின் சிகரமாய்
ஒளிவீசிடும் நம் கூட்டுறவு
சகோதரத்துவத்துடனும் சமத்துவத்துடனும்
எம்மை வாழவைக்கும் கூட்டுறவு

ஓய்வூதியம் காப்புறுதி கல்வித்திட்டம்
என்னும் பல்வகைத் திட்டங்களை
தன்னகத்தேகொண்டு தரணியிலே
நாமுயர வழியமைத்திடும்
நம் கூட்டுறவு

மக்களின் வாழ்க்கை ஏற்றம் என்னும் பாதையில்
வழிநடத்திடும் கூட்டுறவு பரணியிலே பல்வகை
கிளைகளாக பரிணமித்து
வெற்றிநடைபோடுகிறது நம் கூட்டுறவு!

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார முக்கியத்துவம்



**பேராசிரியர் க. தேவராஜா,**
முகாமைத்துவ கற்கைகள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை முறையானது பனையோடு இணைந்திருக்கின்றமையை எம்மால் அவதானிக்கமுடிகின்றது. பனையுடன் இணைந்ததாகவே அவனது தேவைகளின் உருவாக்கமும் காணப்பட்டதெனக் குறிப்பிடலாம். பனை பற்றிய ஆராய்ச்சிக் கருத்தை வெளியிட்ட 'வில்லியம் பேர்குசன்' என்பார், பனையிலிருந்து எண்ணூறுக்கும் மேற்பட்ட பொருட்களைப் பெற்று மக்கள் பயன்படுத்துகின்றனர் என்ற கருத்தை வெளியிட்டமை பனை என்பது ஒரு "கற்பகதரு" என்ற பொன்மொழியை நிலைநிறுத்தியது. பனையை மையமாகக் கொண்டு உணவும்,உறையுளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. நுங்கு, பனம்பழம், கிழங்கு, பனாட்டு, பனங்கட்டி, குடிபானம் போன்ற உணவு வகைகளும், வீடு கட்டுவதற்கான மரம், ஓலை போன்றனவும் மக்களால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாகவே மக்களின் வாழ்வை பொருளாதார ரீதியில் முன்னெடுக்க பனம் உற்பத்தி சார்ந்த பல வகையான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஏழு மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது.

## 2.0 கூட்டுறவாக உருவாகிய சங்கங்கள்

1972ம் ஆண்டில் நிதியமைச்சராகவிருந்த கலாநிதி என்.எம் பெரேரா அவர்களினால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தினால் பனை அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கூட்டுறவு அமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு முன்னர் நிலவுடமைச் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்காத ஆனால் முதலாளிக்கு நன்மை பயக்கும் மரவரி முறையின்கீழ் பனம் தொழிலில் ஈடுபட்டோர் சுரண்டப்பட்டு வந்தனர். இவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நடைமுறையாக இலங்கைக் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச்சங்கங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பது மட்டுமன்றி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் வழிகாட்டலில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபையால் சிறப்பாக நிர்வகிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். யாழ்.மாவட்டத்தில் 19 சங்கங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு சங்கங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு சங்கங்களும், வவுனியாவில் மூன்று சங்கங்களும், மன்னாரில் ஐந்து சங்கங்களும், திருகோணமலையில் இரண்டு சங்கங்களும், மட்டக்களப்பில் எட்டுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டு வடக்கு, கிழக்கில் இயங்கிவருவதைக் காணமுடிகிறது.

யாழ்.மாவட்டத்திலேயே பெருமளவான பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுடன், அவற்றின் வளர்ச்சி பெருமைப்படும் அளவில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவை நிர்வகிக்கப்படுவதற்கு வசதியாக மூன்று கொத்தணிகளை உருவாக்கியிருக்கின்றன. அக் கொத்தணிகளையும் அவற்றில் இணைந்துள்ள சங்கங்களின் எண்ணிக்கையையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| கொத்தணி | சங்.எண்ணிக்கை |
|---|---|
| வலிகாமம் | 13 |
| வடமராட்சி | 03 |
| தென்மராட்சி | 03 |
| மொத்தம் | 19 |

இம்மூன்று கொத்தணிகளும் மூன்று வடிசாலைகளை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வலிகாமம் கொத்தணி

வலிகாமம் வடிசாலை என்ற பெயரிலும், வடம ராட்சி கொத்தணி திக்கம் வடிசாலை என்ற பெயரிலும், தென்மராட்சிக் கொத்தணி வரணி வடிசாலை என்ற பெயரிலும் வடிசாலைகளை உருவாக்கி இயக்கப்பட்டு வருகின்றன. இக் கொத்தணிகளையும், சங்கங்களையும் அங்கத் தவராகக்கொண்ட 'வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட் டுள்ளமையைக் காணமுடிகின்றது.

### 3.0 யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார முக்கியத்துவம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏனைய கூட்டுறவு அமைப்புக்களான பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைப்போல "யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை" என்பதில் உறுப் பினராகத் தொழிற்பட்டு வருகின்றது. இவர்க ளுக்கு அதன் நிர்வாக சபையில் இரு இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது இதன் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. 1980ம் ஆண்டில் 12,000 பனம் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்திருந்தார்கள். இதன் காரணமாகவே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடுத்து பெருமளவான உறுப்பினர்களைக் கொண்டதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் திகழ்வதுடன், பெருமளவான மக்க ளின் வாழ்வியல் முன்னேற்றத்துடன் இணைந் திருப்பதையும் காணமுடிகின்றது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பல்வகைப்பட்ட பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வருவது மட்டுமன்றி, உறு ப்பினர்களினதும் அவர்களது குடும்பத்தவர்களி னதும் வாழ்வு முன்னேற்றமடைய பல அபிவிருத் திச் செயற்பாடுகளிலும் ஈடுபாட்டைக்காட்டி வரு கின்றது. சமூகநல அபிவிருத்திக்கு சங்கங்கள் பங்களிப்புச்செய்ய வசதியாக அவற்றின் பெரு மளவான இலாப உழைப்பு வழிகாட்டியுள்ளது. யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 2011ம் ஆண்டில் மேற்கொண்ட விற்பனைகளினது அள வைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| சங்கங்கள் | மொத்த விற்பனை (மில்லியன்) |
|---|---|
| அனலைதீவு | 4.75 |
| அரியாலை | 9.61 |
| அச்சுவேலி | 41.91 |
| சங்கானை | 32.11 |
| சாவகச்சேரி | 36.01 |
| சுன்னாகம் | 50.86 |
| யாழ்ப்பாணம் | 15.97 |
| கரவெட்டி | 21.78 |
| காரைநகர் | 2.69 |
| ஊர்காவற்றுறை | 16.15 |
| கொடிகாமம் | 40.9 |
| கோண்டாவில் | 27.18 |
| கோப்பாய் | 27.31 |
| மானிப்பாய் | 31.49 |
| பண்டத்தரிப்பு | 48.78 |
| பருத்தித்துறை | 28.29 |
| தெல்லிப்பளை | 19.15 |
| வடமராட்சி கிழக்கு | 4.51 |
| வேலணை | 15.53 |

(ஆதாரம்: சமாசப் பதிவேடுகள்)

மேற்காட்டிய அட்டவணை யாழ்.மாவட் டத்தில் தொழிற்பட்டுவரும் 19 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் உழைத்துக்கொண்ட மொத்த விற்பனைகளின் அளவைக் காட்டுகின்றது. இதில் சுன்னாகம், பண்டத்தரிப்பு, அச்சுவேலி, கொடிகாமம் ஆகிய நான்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் மிகக்கூடிய விற்பனை யைக் கொண்ட சங்கங்களாகக் காணப்படுகின் றன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் உழை த்துக்கொண்ட வருமானத்தில் ஒரு பகுதியை கட்டாய சேமிப்பாக மேற்கொண்டு வருவதனைக் காணமுடியும். இவை சங்கங்களதும் உறுப்பினர் களதும் நிதி வலிமையை அதிகரிக்கும் செயற் பாடாக காணப்படுகின்றமை மகிழ்ச்சியை ஏற்ப டுத்துவதாகும். பின்வரும் அட்டவணை யாழ்.மாவ ட்டத்தில் தொழிற்படும் 19 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 2011ம் ஆண்டில் கொண்டிருந்த கட்டாய சேமிப்பைக் காட்டுகின்றது.

| சங்கங்கள் | கட்டாய சேமிப்பு (பில்லியன்) |
|---|---|
| அனலைதீவு | 2.2 |

| | |
|---|---|
| அரியாலை | 4.8 |
| அச்சுவேலி | 19.5 |
| சங்கானை | 16.5 |
| சாவகச்சேரி | 25.9 |
| சுன்னாகம் | 6.6 |
| யாழ்ப்பாணம் | 8.9 |
| கரவெட்டி | 6.2 |
| காரைநகர் | 7.8 |
| ஊர்காவற்றுறை | 10.4 |
| கொடிகாமம் | 20.3 |
| கோண்டாவில் | 16.8 |
| கோப்பாய் | 18.5 |
| மானிப்பாய் | 21.6 |
| பண்டத்தரிப்பு | 18.0 |
| பருத்தித்துறை | 20.7 |
| தெல்லிப்பளை | 10.1 |
| வடமராட்சி கிழக்கு | 1.7 |
| வேலணை | 6.8 |

(ஆதாரம்: சமாசப் பதிவேடுகள்)

மேற்காட்டிய அட்டவணைப்படி சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக அளவான கட்டாய சேமிப்பைக் கொண்டிருக்கின்றமையை காணமுடிகின்றது. இது சங்கங்களின் நிதி வலிமையை உயர்த்திக் காட்டுவதுடன், அங்கத்தவர்களின் நலன்கள் அதிகரிக்கப்படவும், சங்கத்தின் இலாப உழைப்பு உயர்த்தப்படவும் உதவியுள்ளதெனக் கூறமுடியும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக பண வலிமை கொண்டிருக்கும் காரணத்தினால் உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு நிதிக் கஷ்டம் ஏற்படும்போது கடன்களை வழங்கும் நடைமுறையை கொண்டுள்ளது. காலதாமதமின்றி குறைந்தளவு வட்டியில் இக்கடன் பெறப்பட முடிவதனால் உறுப்பினர்களோ அன்றிப் பணியாளர்களோ நிதிக் கஷ்டம் ஏற்படும்பொழுது தமது சங்கத்திலிருந்து இக்கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். பின்வரும் அட்டவணை உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களைக் காட்டுகின்றது.

| **சங்கங்கள்** | **மொத்தக் கடன்கள்** (மில்லியன் ரூபாவில்) |
|---|---|
| அனலைதீவு | 6.6 |
| அரியாலை | 1.2 |
| அச்சுவேலி | 5.5 |
| சங்கானை | 2.1 |
| சாவகச்சேரி | 3.3 |
| சுன்னாகம் | 6.1 |
| யாழ்ப்பாணம் | 3.2 |
| கரவெட்டி | 0.01 |
| காரைநகர் | 0.9 |
| ஊர்காவற்றுறை | 1.2 |
| கொடிகாமம் | 0.1 |
| கோண்டாவில் | 4.5 |
| கோப்பாய் | 3.5 |
| மானிப்பாய் | 5.2 |
| பண்டத்தரிப்பு | 3.8 |
| பருத்தித்துறை | 2.4 |
| தெல்லிப்பளை | 0.9 |
| வடமராட்சி கிழக்கு | - |
| வேலணை | 1.4 |

(ஆதாரம்: சமாசப் பதிவேடுகள்)

மேற்காட்டிய அட்டவணைப்படி வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினைத்தவிர, ஏனைய எல்லாச் சங்கங்களும் தமது அங்கத்தவர் நலன் கருதியும், பணியாளர் நிதிநெருக்கடி கருதியும் கடன்களை வழங்கி வருகின்றன. இதில் அச்சுவேலி, மானிப்பாய், கோண்டாவில் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவான கடன்களை உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கி வருவதனைக் காணமுடியும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவான இலாபத்தை உழைத்துக் கொள்வதன் ஊடாக கூட்டுறவுச் சங்கங்களிலேயே முன்னணி வகிக்கும் அமைப்பாக மாறிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இது கொண்டிருக்கும் சாராய வடிசாலைகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வெளிநாட்டுக் குடிவகைகளால் போட்டி இருந்து வந்தாலும், ஏனைய வர்த்தக நடவடிக்கைகள் இச்சங்கங்கள் பெருமளவான இலாபத்தை உழைத்துக்கொள்ள வழிவகுத்துள்ளன. எதிர்காலத்தில் வடிசாலை உற்பத்திகளுக்கு உற்பத்தி வரிச் சலுகையை அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பதன்மூலமும், வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதன்மூலமும் சாராய வடிசாலைகள் மிகச் சிறப்பாகவும் இலாபகரமாகவும் இயங்க முடியும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் நலன் கருதிய பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இலவச ஆயுள் காப்புறுதித் திட்டம், குழந்தைகளுக்கான முன் பள்ளி நடவடிக்கைகள், உறுப்பினர்களின் பிள் ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டம் என்பன உறுப்பினர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை யையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதாக அமை ந்துள்ளன. பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியதன் ஊடாக பொரு ளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கிய வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்க உத வியுள்ளது. அத்துடன் கல்வி மேம்பாட்டுக்கென பல அறிஞர்கள் எழுதிய நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணியிலும் இந்நிறுவனங்கள் ஈடுபட்டுவருவது சமுதாய மறுமலர்ச்சிக்கு வித் திட்டுள்ளது எனலாம்.

## 4.0 முடிவுரை

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் போல் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் கட்டுப்படுத்தப்பட்டாலும், இதன் அபிவிருத்தி அப ரிதமாக அமைந்திருப்பதனை அவதானிக்க முடி கின்றது. இச்சங்கங்களை மேற்பார்வை செய் வதற்கென கூட்டுறவு உதவி ஆணையாளர் ஒரு வர் கூட்டுறவுத் திணைக்களத்தால் நியமிக்கப் பட்டிருப்பதும் மகிழ்ச்சி தருவதாகும். பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம், சிக்கன கடனுதவு கூட் டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகி யன கொண்டிருக்கும் அபிவிருத்தியைவிட, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டிருக்கும் வளர்ச்சி எல்லோ ரையும் வியக்கவைத்துள்ளது. இதன் காரணமாக வர்த்தக நடவடிக்கைகளில் முன்னணி வகிக்கும் கூட்டுறவு அமைப்பாக இது மாறிவருவதுடன், 'பனை அபிவிருத்திச் சபை' என்பதற்கு போட்டி நிறுவனமாகவும் மாறி வருகின்றது. இதன் கார ணமாகவே பனம் பொருள் உற்பத்தியுடன் சம்பந் தப்பட்டிருக்கும் நிறுவனங்களில் தலையாயது எனக்கொள்ளப்படுவதுடன், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தேசிய ரீதி யிலும், சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்ற நிறுவ னமாக எதிர்காலத்தில் மிளிரும் என்பதில் ஐய மில்லை.

**"கூட்டுறவு என்பது, பொதுப் பொருளாதாரத் தேவையுள்ள மக்கள் தமது தேவைகளைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைய ஒன்றுபட்டுச் செயற் படுத்துவதன்மூலம் அவற்றை இலகுவில் நிறைவுசெய்து, சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் சமூக அநீதிகளையும் முதலாளித்துவத்தின் சுரண்டல் களையும் முற்றாக நீக்கி, தர்ம வழியிலான பொதுநல சமுதாயம் ஒன்றை இலகுவில் உருவாக்குவதே ஆகும்"**

**-றொபேட் ஓவன்-**

# பிராந்திய அபிவிருத்தியை நோக்கி கூட்டுறவுத்துறையை வலுவூட்டல்

# EMPOWERING CO-OPERATIVE SECTORS TOWARDS REGIONAL DEVELOPMENT



பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி,
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இலங்கையில் செயற்படுகின்ற வணிக அமைப்புக்களை தனியார் துறை, அரச துறை/ பொதுத்துறை, கூட்டுறவுத்துறை என மூன்று பிரதான வகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் அரச ஆதரவுடனும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் உருவாக்கப்பட்ட அமைப்பே கூட்டுறவாகும். அதாவது சமத்துவம், ஒத்துழைப்பு, ஜனநாயகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பே கூட்டுறவு எனப்படுகின்றது.

அரசியல், மத, இன பேதங்களுக்கு அப்பால் வளர்ந்து வந்த கூட்டுறவு இயக்கம் ஐரோப்பாவில் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தது. பின்னர் பொருளாதார ரீதியில் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற அடிமட்ட ரீதியில் ஒரு அமைப்பாக கூட்டுறவு இயக்கம் பல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்படுகிறது. இலங்கையிலும் அரசின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி பெற்றது. இவ்வகையில் கூட்டுறவுத் தத்துவம் உருவாகி வளர்ந்த வரலாறு நாட்டின் அபிவிருத்திக்கு கூட்டுறவு இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன. மூலதனம் இல்லாத வறிய மக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு அமைப்பினை உருவாக்கி அதனூடாகத் தமது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றி வருவதற்குக் கூட்டுறவு அடிப்படையில் உதவியது.

## இலங்கையில் கூட்டுறவு இயக்கம்

இந்தியாவில் 1904இல் இயற்றப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தை ஒட்டியதாக 1911ம் ஆண்டு இலங்கைக் கூட்டுறவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்கீழ் விவசாயிகளின் கடன் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஐக்கிய நாணய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிக்கனம், சுயஉதவி ஆகிய இயல்புகளை வளர்த்துக்கொள்ளவும், அங்கத்தவர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அதற்கான நிதியினை வெளியாட்களிடம் இருந்து திரட்டவும் இக்கடன் சங்கங்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டன. 1942ல் 1,622 சங்கங்களாகவும், 1962ல் 3,439 கடன் சங்கங்களாகவும் விருத்தியடைந்து வந்தன. மேலும் இச்சங்கங்கள் பிரதேச ரீதியில் இணைந்து ஒத்துழைத்து ஐக்கிய சமாசம் நிறுவப்பட்டது. இவற்றின் தொழிற்பாட்டை இலகுவாக்கும் பொருட்டுக் கூட்டுறவுக் கல்வி வளர்த்து எடுக்கப்பட்டது. எனவே பிரதேச அபிவிருத்தியினூடாக நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு 1911ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்று 18 இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு பொருளாதார, சமூக விடுதலை இயக்கமாகப் பரிணாமம் பெற்றுள்ளது. இவ்விதமாக வளர்ச்சியடைந்து இருக்கும் கூட்டுறவுத் துறையானது. நவீன கோட்பாடுகளுடன் அரசின் பாரிய பொருளாதார, சமூகத் திட்டங்களுக்குப் பங்களிப்புச் செய்வதாக மாற்றம் பெற்றுள்ளது. இவ்வகையில் நவீன கூட்டுறவுக் கோட்பாட்டில் பின்வரும் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுவதன் மூலம் கூட்டுறவின் அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு நோக்கினை உணர்ந்துகொள்ளலாம்.

01. சுயேட்சையான தடையற்ற அங்கத்துவம்.
02. குடியாட்சி நிர்வாகம்.

03. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு.
04. சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படல்.
05. கூட்டுறவுக் கல்வித் தகவல் பயிற்சி.
06. கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு.
07. சமூக மேம்பாடு.

இவ்விதமாக நகர, கிராமிய கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட ரீதியிலும், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் தேசிய ரீதியிலும் ஒன்றுபட்டு தேசிய கூட்டுறவுப் பேரவையை அமைக்க நாடுகள் ஒன்றிணைந்து சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தை அமைத்தன. இதன்மூலம் பின்வரும் நன்மைகள் அடையப்படக்கூடியதாக இருந்தன.

01. கிராம, நகர கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பரந்தளவில் ஆராய்ந்து தீர்க்க முடிந்தன.
02. எல்லாவற்றையும் இணைத்து பொதுத் திட்டமிடல் மேற்கொள்ள வழிவகுத்தமை.
03. வியாபாரம் செய்யும் பிரதேச எல்லையை விஸ்தரிக்க முடிந்தமை.
04. செலவினங்கள் குறைக்கப்பட்டமை.
05. பேரளவு உற்பத்தியில் ஈடுபடல்.
06. பேரளவு மூலதனத்தைப் பெறல்.
07. ஆராய்ச்சி, சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களைச் சிறப்பாக செய்ய முடிந்தமை.
08. போட்டி நிறுவனங்களின் சவால்களை எதிர்கொள்ள முடிந்தமை.
09. கூட்டுறவுக் கோட்பாடுகளைப் பரப்ப முடிந்தமை.

சமூக மேம்பாடு என்ற வகையில் சமூகத்தில் வளர்ந்துவரும் வறுமைப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, வீடு இல்லாப் பிரச்சினை, ஊனமுற்றோர் தொகை அதிகரிப்பு, நீர்ப்பற்றாக் குறை, நீர் மாசடைதல் மற்றும் அபிவிருத்தி, மூட நம்பிக்கை போன்றவற்றுக்கு தீர்வு காண்பதற்கும் கூட்டுறவு ஓர் சிறந்த ஊடகமாகக் காணப்படுகிறது. எனவே பிராந்திய அபிவிருத்தி என்பது கூட்டுறவினூடாகச் சாத்தியப்படும் ஒன்றாகவே காணப்படுகிறது. இவ்வகையில் கூட்டுறவு பற்றிய அடிப்படைக் கோட்பாடு அம்சங்களை மேலும் விபரிப்பதை விடுத்து, யாழ்ப்பாணத்தில் கூட்டுறவின் தற்போதைய நிலைப்பாடு யாது, அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை, அவற்றுக்குரிய தீர்வுகளை முன்வைப்பதன்மூலம் கூட்டுறவுத் துறையை எவ்வாறு வலுப்படுத்திக் கொள்ளலாம்? என ஆராய்வது சாலப் பொருத்தமுடையதாகும்.

## யாழ்ப்பாணத்து கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவுத்துறையின்கீழ் சங்கங்களும் செயற்பாடுகளும் காணப்பட்டபொழுதிலும் அவற்றுள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை ஏறத்தாழ 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உண்மையில் இக்கட்டான பல சூழ்நிலைகளில் இப்பிரதேச மக்களுக்குத் தேவையான பல சேவைகளை இச்சங்கங்கள் வழங்கியிருந்ததுடன், அரச அதிகாரிகளும் இத்தகைய சங்கங்களையே மக்கள் சேவைக்காகத் தெரிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும் இவற்றில் பல சங்கங்கள் நட்டத்தினை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை இலாபகரமாக மாற்றுவதற்கு என விசேட பயிற்சித் திட்டமொன்றை வடமாகாண ஆளுநர் அவர்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கையில் ஆறு சங்கங்கள் மட்டும் இலாபகரத் தன்மையில் இயங்கிக் கொண்டு இருக்க, மீதி 18 சங்கங்களும் நட்டத்திலேயே செயற்பட்டிருந்தன. ஆனால் தற்போது இவற்றுள் 18 சங்கங்கள் இலாபகரமானதாகவும் மீதி 6 சங்கங்களும் நட்டத்திலும் செயற்பட்டு வருவதை அறிய முடிகின்றது. எனவே கூட்டுறவுச் சங்கங்களின் பல்பரிமாணச் செயற்பாடுகளை விரிவாக்குவதன்மூலம் அவற்றை இலாபகரமானதாகவும் அபிவிருத்திக்கு ஏற்ற வகையிலும் செயற்படவைக்க முடியும்.

## கூட்டுறவுத்துறையை வலுப்படுத்தல்

மேற்படி கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த வேண்டுமாயின் முதலில் அவற்றின் தற்போதைய நிலையினைத் தெளிவாக மதிப்பீடு செய்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்கென "Swot Analysis" ஒன்றினை நிறுவன முகாமை செய்துகொள்ளுதல் வேண்டும். இவ்வகையில் சங்கங்களின் பலம் (Strength), பலவீனம்(Weakness), வாய்ப்புகள்(Opportunities), அச்சுறுத்தல்கள் (Threats) என்பவற்றை தனித்தனியாக மதிப்பீடு செய்து

அட்டவணைப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

பலத்தைத் தக்கவைக்கவும், பலவீனத்தைப் பலமாக மாற்றுவதற்கும் ஏதுவான நிலையில் கூட்டுறவு முகாமை இருப்பதுடன், வாய்ப்புக்களைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாகவும், அச்சுறுத்தலை எதிர்கொள்ளக்கூடியதாகவும் ஏற்ற தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பாக பலவீனங்களில் அதிக கவனம் செலுத்துவதன்மூலம் நிறுவனம் எதிர்கொள்ள இருக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைக் கண்டுகொள்ள முடியும். இவ்வகையில் யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடையே நிலவுகின்ற பலவீனமாக அல்லது பிரச்சினையாக பின்வருவன அடையாளங் காணப்பட்டுள்ளன.

01. மக்கள் மத்தியில் கூட்டுறவு தொடர்பான சாதகமான கருத்து இல்லாமை.

02. இளைஞர், யுவதிகளின் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வு போதாமை.

03. புதிய அங்கத்தவர்களை இணைப்பதில் சங்கங்கள் போதிய ஆர்வம் காட்டாமை.

04. கூட்டுறவுத் துறையில் ஆற்றல மிக்க தலைமைத்துவம் போதாமை.

05. செயற்றிறன்மிக்க பணியாளர் தொகுதியின்மை.

06. கூட்டுறவாளர்கள் கூட்டுறவுக் கல்விக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்காமை.

07. நீண்டதொரு போர்ச்சூழலும் இழக்கப்பட்ட வளங்கள் ஈடுசெய்யப்படாமையும்.

08. பிரதேச, சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பொருத்தமாகப் புதிய முயற்சிகளைக் கூட்டுறவு முன்னெடுக்காமை.

09. போட்டி வர்த்தகத்துக்குத் தன்னைத் தயார்படுத்தாமை.

10. அரசியல் தலையீடுகள்.

11. கூட்டுறவு வளர்ச்சிக்குச் சார்பான கொள்கைகள் இல்லாமை.

12. நிதிப்பிரச்சினை.

ஆரம்ப காலங்களில் கூட்டுறவுத் துறையானது தரமான சேவையினை வழங்கி வந்தது என்ற உணர்வு பெருமளவு மக்களிடம் இழையோடியிருந்தது. மக்கள் தமது தேவைகளுக்கென கூட்டுறவுத் துறையினையே நம்பியிருந்தனர். ஆனால் இன்று கூட்டுறவென்றால் அதனை ஓர் இரண்டாம்பட்சமாகப் பார்க்கும் நிலையே பெருமளவு மக்களிடம் உள்ளது. எனவே கூட்டுறவுத் துறையினர் மக்களைக் கவரக்கூடிய வகையிலும், மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறும் வகையிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும். எனவே கூட்டுறவுத் துறையினர் தமது தொழில் புரியும் அலுவலகங்களை அந்தஸ்து நிலைப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே கூட்டுறவு வியாபார நிலையங்கள் வாடிக்கையாளரைக் கவர்ந்து ஈர்க்கக்கூடிய வகையில் நவீனமயப்படுத்தப்படுவதுடன், தூய்மையானதாகவும், காட்சிப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

முன்னைய காலங்கள் போலன்றி தற்கால இளைஞர், யுவதிகளிடையே கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. முன்னர் உள்ளது போன்று பிரதேச ரீதியாக இளைஞர், யுவதிகளை கூட்டுறவுத் துறையில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை இல்லை. அவர்களைச் சேர்ப்பதில் கூட்டுறவுச் சங்கங்களும் ஆர்வம் காட்டுவதில்லை. கூட்டுறவு என்றால் "ஏதோ இழக்கமானது" என்ற மனோ நிலையே இன்றைய இளைஞர்களிடம் உள்ளது. இந்நிலைமாறி இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவை ஆரம்பித்து செயற்படுத்தும் நிலை வருதல் வேண்டும். இவ்வடிப்படையில் பிரேரிக்கப்பட்ட கூட்டுறவுத் தொழில்களாக உணவு உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி, பால் உற்பத்தி, தோல் உற்பத்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம். கூட்டுறவும் ஒரு தொழிற்துறையே. இதில் இணைந்துகொள்வதன்மூலம் தொழில்வாய்ப்பினையும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். சமூக அங்கீகாரத்தை அடைந்து கொள்ள முடியும் என்ற உணர்வும், மனமாற்றமும் இளைஞர், யுவதிகளிடையே ஏற்படுதல் வேண்டும்.

"கூட்டுறவு என்றால் அனுபவம் மிக்க முதியவர்கள்தான் அங்கத்துவம் பெறலாம்" என்ற எண்ணம் மாறி கூட்டுறவு அமைப்பில் யாரும் அங்கத்தவர்கள் ஆகலாம் என்ற உண்மை இளைஞர்களிடத்தே உருவாக்கப்படுதல் வேண்டும். அதேவேளை கூட்டுறவுச் சங்கங்கள் புதியவர்களை அங்கத்தவர்களாக இணைக்கும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். ஆரம்ப காலங்களில் கூட்டுறவு அமைப்புக்கள் பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் பல போட்டி நிகழ்வுகளையும் கலை நிகழ்வுகளையும்

ஒழுங்கமைத்துச் செயற்படுத்தி வந்தன. ஆனால் இன்று அத்தகைய நிகழ்வுகளைக் காணமுடிவதில்லை. இத்தகைய செயற்பாடுகளை மீண்டும் ஒழுங்மைப்பதன்மூலம் சமூகத்திடையே கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வையும், சமூக மக்களுடனான உறவுகளையும் வலுப்படுத்திக்கொள்ளமுடியும்.

அடுத்து கூட்டுறவுத் துறையில் ஆற்றல் மிக்க தலைமைத்துவம் இல்லை என்ற குறைகளையப்படுதல் வேண்டும். சிறந்த மனித விழுமியங்களையும், பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனையை உள்ளடக்கியதும், தூர நோக்கும், உருவாக்கும் இயல்பும் கொண்ட தலைவர்கள் நமக்குத் தேவை. மனிதர்களை ஒன்றிணைப்பதன் மூலம் ஆக்க சக்தியை வலுப்படுத்தல், நம்புதல், சமூக நலனுக்கு முக்கியத்துவம் அளித்தல், தந்திரோபாயங்களைக் கையாளுதல், நிதி வழங்கலை ஒன்றுதிரட்டுதல், சிறந்த தீர்மானங்களை எடுத்தல், வினைத்திறனான தொடர்பாடலைக் கொண்டிருத்தல் முதலான ஆற்றல்மிக்க தலைவர்களை நாம் உருவாக்குதல் வேண்டும். இதற்கெனப் பொருத்தமான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து கொள்ளலாம். சுயநலம் மற்றும் அரசியல் நோக்கு என்பவற்றை விடுத்துப் பொது நல நோக்கோடு இலக்கினை அடையும் விதத்தில் கூட்டுறவுத் தலைவர்கள் செயற்படுதல் வேண்டும்.

மற்றைய நிறுவன அமைப்புக்களுடன் ஒப்பிடும்பொழுது கூட்டுறவுத் துறையின் பணியாளர்களது செயற்றிறன் போதியளவு இல்லை என்ற ஒரு கணிப்பு பொதுவாக இருப்பதை நாம் அறியமுடிந்துள்ளது. எனவே கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் போதிய கல்வி ஊட்டப்படுதல் வேண்டும். இவ்விடத்தில் கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் முயற்சியும், கல்விப் பணியும் குறிப்பிடப்பட வேண்டும். கூட்டுறவுத் துறையின் முன்னோடி என்ற வகையில் வீரசிங்கம் போன்றவர்களின் வரலாறுகளையும் செயற்பாடுகள், சாதனைகள் போன்றவற்றையும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு எடுத்துரைத்தல் சிறந்தது. செயற்றின் நிர்ணயிக்கப்பட்டு அவ்விலக்கு அடையப்படும்பொழுது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும். ஊழியர் பயிற்சித் திட்டம், கூட்டுறவு விழாக்கள், கூட்டுறவு வெளியீடுகள் என்பவற்றின் மூலமும் ஊழியர்களது செயற்றிறனை வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் எத்தகைய கல்வியறிவுடையவர்களாக இருப்பினும் அவர்கள் கூட்டுறவுக் கல்வியினைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுக் கல்லூரிகள் ஊடாக இத்தகைய கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் நமது பிரதேசத்தில் இடம்பெற்ற நீண்டதொரு போர்ச்சூழலும் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் காரணமாக கூட்டுறவுத்துறை (குறிப்பாக வடகிழக்குப் பிரதேசங்களில்) பல வளங்களை இழந்திருக்கிறது. குறித்த இடத்திலன்றி இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் செயற்படவேண்டி இருந்தமையாலும் கூட்டுறவுத் துறையினர் தமது முயற்சிகளை உத்தமமான முறையில் வழங்க முடியவில்லை. எவ்வாறாயினும் இக்காலங்களில் அல்லலப்பட்ட மக்களுக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக தம்மால் இயன்ற சேவையினை கூட்டுறவுத்துறை வழங்கியிருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எனவே தொடர்ந்தும் கடந்த காலங்களைக் கூறிக்கொண்டிருக்காமல் தொடர்ந்து நாம் என்ன செய்ய வேண்டும்? இழந்த வளங்களை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்ப முடியும்? என்பதற்கான உபாயங்களைக் கண்டறிந்து கூட்டுறவுத்துறையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டியது நமது பிரதான கடமையாகும்.

மேலும் கூட்டுறவுத் துறை மரபுரீதியான முறையில் தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. மாறாக புதிய தொழில் முயற்சிகளையும், புதிய தந்திரோபாயங்களையும் நடைமுறைப்படுத்துவது பற்றிப் பெருமளவு சிந்திக்கவில்லை என்றே கூறலாம். குறிப்பாக பிரதேச, சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பொருத்தமாகப் புதிய முயற்சிகளை முன்னெடுக்கலாம். இத்தகைய புதிய தொழில் முயற்சிகளுக்கென நிதிப்பங்களிப்புச் செயற்வதற்குப் பல அமைப்புக்கள் தயாராக இருக்கின்றன. உதாரணமாக USAID போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே பொருத்தமான வியாபார முன்மொழிவுத் திட்டங்களை (Business Proposals) தயார் செய்து சமர்ப்பிப்பதன் மூலம் இத்தகைய நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதன்மூலம் பெருமளவு இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்க முடிவதுடன், உள்ளூர் வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்விடத்தில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்

சங்கம் ஜாம் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினையும், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றினையும் ஓரளவு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முயற்சிகளின் மூலம் கூட்டுறவுத்துறை இலாபகரத் தன்மையினை பேணிக்கொண்டு நிதிப் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இவ்வாறு வர்த்தக, தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றபொழுது, போட்டி வர்த்தகத்துக்கு ஏற்ப தம்மைத் தயார்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். எனவே போட்டி நிறுவனங்களிலிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்வதுடன், மற்றைய நிறுவனங்களின் போட்டிகளையும் எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதற்கான வழிவகைகளையும் வகுத்துக்கொள்ளுதல் அவசியம். அரசியல் அழுத்தங்களுக்கு பெரிதும் இடம்கொடுக்காமலும், அங்கத்தவர்கள் தமது அரசியல் விருப்புக்களை நிறுவனத்தில் பிரயோகிக்காமலும் கருமங்களை முன்னெடுத்துச் செல்வது விரும்பத்தக்கது. எவ்வாறாயினும் கூட்டுறவுச் செயற்பாட்டின் வளர்ச்சிக்குக் கிடைக்கக் கூடிய சாதகமான சந்தர்ப்பங்களை நிலைமை அறிந்து பயன்படுத்திக்கொள்வது பொருத்தமானது.

நிறைவாகக் கூட்டுறவுத்துறைகளில் நிலவும் மிக முக்கியமான பிரச்சினை நிதிப் பிரச்சினையாகும். நிதிப் பற்றாக்குறையும் சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதும் கூட்டுறவுச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாமைக்கான காரணங்களாகக் கூட்டுறவு அங்கத்தவர்களால் கூறப்படுகிறது. இதன் பொருட்டு கூட்டுறவு ஆணையாளர் நட்டத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை வலுவூட்டும்பொருட்டு இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்றையும், அதனோடு இணைந்த கலந்துரையாடல் ஒன்றினையும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்செயலமர்வில் வளவாளராகக் கலந்துகொண்ட யான் Swot பகுப்பாய்வினூடாக நட்டத்திலியங்கும் 18 கூட்டுறவுச் சங்கங்களும் எதிர்நோக்கியிருந்த பிரச்சினைகளைத் தெளிவாக அறிய முடிந்தது. இவ் வகையில் அடையாளங் காணப்பட்ட பின்வரும் அம்சங்கள் முன்வைக்கப்படுகின்றன.

01. அநேகமான சங்கங்கள் நிலையான வைப்பில் போதியளவு பணத்தை வைத்திருந்தபோதிலும், வங்கியில் கடன் அலது மேலதிகப் பற்றினைக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் அக்கடனுக்கான வட்டியையும், கடன் தவணைப் பணத்தையும் செலுத்தமுடியாது இடர்ப்பட்டன.
02. மேற்படி கடன் பிரச்சினை காரணமாக ஊழியர்களுக்கு ஒழுங்கான முறையில் வேதனத்தை வழங்க முடியாதிருந்தமை. இதனால் ஊக்குவிப்புத் திட்டங்கள் எதனையும் முன்வைக்க முடியவில்லை.
03. நிதிப்பிரச்சினை காரணமாகப் பெரும்பாலான சங்கங்கள் உள்ளூரிலேயே அதாவது யாழ்ப்பாணத்திலேயே தமது கொள்வனவுகளைச் செய்திருந்தனர். லொறி மூலம் கொழும்பிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது.
04. சங்கங்கள் போதியளவு அசையாச் சொத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும் அவற்றால் இலாபகரமாக செயற்பட முடியவில்லை. சங்கங்களிடமிருந்த சொத்துக்களில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாத நிலையில் இருந்தமை அறியமுடிந்தது.
05. சங்கங்கள் தமது வியாபார முயற்சிகளைப் பன்முகப்படுத்தாது குறித்த சில வியாபாரத்திலேயே தங்கியிருந்தன. இடப்பெயர்வுகளின் காரணமாகத் தற்காலிக இடங்களில் வியாபாரத்தை மேற்கொள்வதில் சிக்கலை எதிர்கொண்டிருந்தன.

மேற்படி நிலைமைகள் காரணமாக நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த நிறுவனங்களுக்கு அந் நட்டத்திலிருந்து மீண்டு இலாபகரமாகச் செயற்படுவதற்கென பல சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. அவ் வகையில் பின்வரும் அம்சங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

01. பெரும்பாலான சங்கங்கள் வங்கிக் கடனை முழுமையாக அடைக்கமுடியாது திண்டாடிக்கொண்டிருந்தன. இந்நிலையில் பெருமளவு பணத்தினை நிலையான வைப்பில் வைத்திருக்க வேண்டியது தேவைதானா? என்ற கேள்வி எழுந்தது. எனவே நிலையான வைப்பிலிருந்து கணிசமான தொகையினை மீளப்பெற்று அதன்மூலம் வங்கிக் கடனைத் தீர்ப்பனவு செய்வது பற்றி முன்

மொழியப்பட்டது. வங்கிக் கடன் குறிப்பிட்டளவு தொகையாக இருப்பின் நிலையான வைப்பை மீளப்பெறாது அதற்கெதிராக நிலையான பற்றினை (POD) பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் பெருமளவு வட்டிக் கொடுப்பனவைத் தவிர்த்து, இலாபத்தை உழைக்க முடியும். இவ்வாறு உழைக்கப்படும் இலாபத்தில் குறித்த பகுதியை வங்கி வைப்பாக மாற்றிக்கொள்ளலாம்.

02. மேற்படி நிலைமையினூடாக நட்டம் தவிர்க்கப்படுவதனால் ஊழியர்களுக்கான வேதனத்தை ஒழுங்காக மாதாந்தம் வழங்க முடியும். தேவைப்பட்டால் ஊக்குவிப்புத் திட்டங்களையும் முன்வைக்கலாம். இங்கு எவ்வளவு வேதனம் என்பதைவிட வழங்கப்படும் வேதனம் அந்தந்தக் காலத்தில் ஒழுங்காக வழங்கப்படவேண்டும் என்பதே முக்கியமானதாகும். இது ஊழியர்களை உள்ளார்ந்த ரீதியாகத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

03. பெருமளவு அசையாச் சொத்துக்களை (காணி, கட்டடம்) பயன்படுத்தாமல் வைத்துக்கொண்டு, நட்டத்தன்மை பற்றிப் பேசுவதில் எவ்வித பயனுமில்லை. வருமான உருவாக்கத்தில் அசையாச் சொத்துக்களின் முழுமையான உத்தம பயன்பாடு மிகமிக முக்கியமானதாகும். எனவே மிகையாக இருக்கின்ற அல்லது பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற சொத்துக்களின் பகுதியினை வாடகைக்கு வழங்குவது அல்லது விற்பனை செய்து கடனைத் தீர்த்துக்கொள்வது மிகச் சிறந்தது. இலாபகரத் தன்மையை அனுபவிக்கும் சந்தர்ப்பங்களில் மீண்டும் புதிய சொத்துக்களை வாங்குவது பற்றிச் சிந்திக்கலாம். வாடகைக்கு விடப்பட்ட கடைகளின் அல்லது கட்டடங்களின் வாடகைக் கட்டணம் நடைமுறைச் சந்தை நிலைக்கு அண்மித்ததா என்பதும் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.

04. நிதிப் பிரச்சினை காரணமாகப் பல சங்கங்கள் கொழும்பிலிருந்து மொத்தக் கொள்வனவைச் செய்யமுடியாதிருந்தன. குறித்த லொறி ஒன்றினைப் பயன் படுத்திக் கொள்வனவைச் செய்வதற்குப் போதிய பணம் இல்லை என்பது அவர்களது கருத்தாக இருந்தது. இதனால் யாழ்ப்பாணத்திலேயே தமது கொள்வனவுகளைச் செய்தன. இதன் காரணமாகப் பொருட்களின் விலை ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தமையால் பெருமளவு இலாபத்தினை அனுபவிக்க முடியாது இருந்தது. அத்துடன் மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளமுடியாது சில்லறை வர்த்தகத்திலேயே அதிகம் தங்கியிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. தனியொரு சங்கம் மேற்படி கொள்வனவைச் செய்வதற்கு முடியாதிருந்த நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் ஒன்றிணைந்து லொறி ஒன்றினைப் பயன்படுத்தி கொழும்பிலிருந்து குறைந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்வது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் சங்கங்கள் பல ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் கிளை ரீதியான கணக்கு வைப்பு முறையும், செயற்றிறன் அடைவு மதிப்பீடும் விரும்பத்தக்கது.

05. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் புதிய வியாபார முயற்சிகளை மேற்கொள்ளாது தமது பழைய வியாபார முயற்சிகளிலேயே தங்கியிருந்தன. எனவே வாடிக்கையாளர் விருப்பு, சந்தை நிலை என்பவற்றைக் கருத்தில்கொண்டு புதிய தொழில் முயற்சிகள் சங்கங்களினால் முன்னெடுக்கப்படுவது அவற்றின் நிலைத்திருப்புக்கும், இலாப உருவாக்கத்துக்கும் வழிவகுக்கும். அத்துடன் சமூகப் பங்களிப்பு என்ற வகையில் வேலை வாய்ப்பக்களையும், வளப்பயன்பாட்டினையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும். இதனால் போட்டி நிறுவனங்களிலிருந்து வேறுபட்டுச் செயற்படவும் ஏனைய நிறுவனங்களுக்கு தகுந்த போட்டியை அளிக்கவும் முடியும்.

மேற்படி சிபார்சுகளை செயற்படுத்தியதன்மூலம் பல சங்கங்கள் நட்ட நிலையிலிருந்து விலகி இலாபகரத் தன்மையை அனுபவிக்கத் தொடங்கின. நட்டத்தை எதிர்நோக்கிய 18 சங்கங்களில் 12 சங்கங்கள் இலாபகரத் தன்மையை அனுபவிக்கும் சங்கங்களாக மாற்

றம் பெற்றன. தொடர்ந்து 6 சங்கங்களே நட்ட நிலையில் செயற்பட்டு வந்தன. அவற்றின் நட்ட அளவு மட்டம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து இலாபகரத் தன்மையை நோக்கி நகரத் தொட ங்கின. எனவே அனைத்துச் சங்கங்களும் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு இலாபகர மான நிலையில் இயங்க முடியும். இதன்மூலம் நிலைத்திருந்து சமூக அபிவிருத்திக்கு பங்களிப் புச்செய்ய முடியும்.

**முடிவுரை**

கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கூட்டுற வுத்துறை எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச் சினைகள் விரிவாக ஆராயப்பட்டு, அவற்றுக்குரிய சிபாரிசுகள் பல நடைமுறை ரீதியாக இக்கட்டு ரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மத்தியில் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வையும் கூட்டுறவுக் கல்வியினையும் ஏற்படுத்துவதன்மூல மும் அவர்களைக் கூட்டுறவு அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதன்மூலமும் கூட்டுறவை ஆளணி ரீதியாகப் பலப்படுத்திக்கொள்ள முடி யும். அத்துடன் கூட்டுறவுச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதும் புதிய வியாபார முறைகள், முயற்சிகள், உத்திகளைக் கண்டறிந்து பிர யோகிப்பதன்மூலமும் கூட்டுறவை நன்கு வலு வூட்டிக்கொள்ள முடியும். கூட்டுறவுக்கும் சமூ கத்துக்கும் இடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தேவைப்படு கின்றபொழுது துறைசார் வல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்படுவதும் சிறந்ததாகும். எனவே இக்கட்டுரையில் பிரேரிக் கப்பட்டுள்ள முன்மொழிவுகள் கூட்டுறவுத் துறை யை வலுவடையச் செய்வதற்கு பெரிதும் உத வும் எனலாம்.

**கூட்டுறவுக் கொள்கைகள்**

- தன்விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்.
- ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும்.
- அங்கத்தவரின் பொருளாதாரப் பங்களிப்பு.
- சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படுதல்.
- கல்வி பயிற்சி, தகவல் திரட்டல்.
- கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு.
- சமூக மேம்பாடு.

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசம் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும்



**இ.இரட்ணம்,**
**B.Com (Hons)**, H.N.Dip Acc, MAAT, N.C.B.S., M Phil,
Reading PHd University of Thanjayoor

### 1.கூட்டுறவு

மக்கள் தமது பொருளாதார கலை கலாச்சார அபிவிருத்தி கருதி சம உரிமையும் கடமையும் என்ற அடிப்படையில் தாமாகவே முன்வந்து ஒன்று சேருதல் கூட்டுறவு என வரையறுக்கப்படுகின்றது. கூட்டுறவு சேவை நோக்கம் கொண்ட தனியார் துறை சார்ந்த நிறுவன அமைப்பாக காணப்படுகின்றது. கூட்டுறவுத் தத்துவத்துக்கு அமைவாக உருவாக்கப்படுவதே கூட்டுறவுத் துறைசார்ந்த நிறுவனங்களாகும். இத்தகைய நிறுவனங்களுள் ஒன்றாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன.

### 2.இலங்கையின் கூட்டுறவின் தோற்றம்

1844 இல் இங்கிலாந்தில் றோச்டேல் முன்னோடிகளால் நட்புறவுச் சட்டத்தின் கீழ் சட்ட ரீதியாக முதல் முதல் கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டது. 1904ஆம் ஆண்டு சமூக ரீதியாக இலங்கையில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பினால் மக்களுடைய ஈடுபாடு கூட்டுறவில் அதிகரிக்கவே 1911ஆம் ஆண்டு 7ஆம் இலக்க ஐக்கிய நாணய சங்கச் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியாக கூட்டுறவு அமைப்பு இலங்கையில் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் காலத்தின் தேவைக்கு ஏற்ப ஐக்கிய நாணய சங்கங்கள் (1911க்குப் பின்) பண்டகசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் (1936) உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் (1947) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (1957) தெங்கு பனை உற்பத்திப் பொருள் கூட்டுறவுச் சங்கம் (1972) என பலவகையான கூட்டுறவு அமைப்புக்கள் இலங்கையில் உருவாக்கப்பட்டன.

### 3. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றமும் நோக்கமும்

பனை தென்னை தொடர்பான தொழிலில் ஈடுபட்டிருந்தோர் அவர்களைச் சார்ந்த குடும்பங்கள் எதிர்நோக்கிய சவால்கள் பாதகவிளைவுகளை எதிர்கொள்வதற்கும் இத்தொழில் சார்ந்தோரின் சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, அரசியல் அபிலாசைகள் ஆகியவற்றை பூர்த்தி செய்யும் நோக்கோடும் 1972 இல் இது உருவாக்கப்பட்டு பல பெயர் மாற்றங்களுடன் வளர்ந்து வந்து, தற்போது பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் என செயற்பட்டு வருகிறது.

**இதன் பிரதான நோக்கங்கள்:-**

1. சீவல் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பான தொழில்வாய்ப்பை வழங்குதல்.

2. இவர்களது தொழில் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்ற காரணிகளை இனங்கண்டு நீக்குதல்.

3. இதன் அங்கத்தவர்களின் வருமானத்தினை உயர்த்துவதும் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும்.

4. பனை தென்னை வள உற்பத்திகளை வீட்டில் வைத்து விற்பதால் நீண்ட காலத்தில ஏற்படக்கூடிய சமூக சீர்கேட்டு நடவடிக்கைகளை குறைத்தலும் கட்டுப்படுத்தலும்.

5. அங்கத்தவர்களுக்கு விபத்தினால் ஏற்படக்கூடிய இழப்பீடுகளை பண அடிப்படையில கூட்டாக ஈடுசெய்தல்.

6. அங்கத்தவர்களுக்கிடையே பிரதேச ரீதியாக பரந்த ரீதியில் ஒரு உறவுகளை ஏற்படுத்துதல். இதன்மூலம் அரசியல் தலைமைத்துவங்களை ஏற்படுத்துதல். இதனூடாக அரசினால்

வழங்கப்படுகின்ற சமூக நன்மையும் தேவை யுள்ள மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை யை உருவாக்குதல். இதற்குத் தொழில்சார் கூட்டும் அதன்படி எழுகின்ற தலைமைத்துவமும் அடிப்படையானதாக உணரப்பட்டது.

7. சீவல் தொழிலாளர்களுடைய பிள்ளை களுக்கு வேலைவாய்ப்பு வசதியினை இச் சங் கங்களிலும் ஏனைய அமைப்புக்களிலும் பெறக் கூடிய சூழ்நிலையினை உருவாக்குதல்.

8. சமூக அபிவிருத்திக்கு கல்வி அடிப் படையானது. இதனால் பொருளாதார ரீதியில் பலவீனமடைந்துள்ள ஒரு சமுதாயத்தின் அபிவி ருத்திக்கு கல்வி அடிப்படையானது. இதனால் அங்கத்தவருடைய பிள்ளைக்ளுக்கு கல்விவாய்ப் புக்களை அடிப்படையிலிருந்து தேடிக்கொடுத் தலும் கல்விக்கான ஊக்குவிப்புக்களை வழங் குவதும் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

9. பனை தொன்னை வள உற்பத்திக ளில் விஞ்ஞான தொழில்நுட்பங்களை பயன் படுத்தி சந்தைக்கு ஏற்ப உற்பத்திகளை மேற் கொள்ளக்கூடிய சூழ்நிலையினை உருவாக்கு தல். இதன்மூலம் இத்தொழிலில் சமூக அந்தஸ் த்து உள்ள ஒரு தொழிலாக மாற்றுகின்ற நிலை யினை ஏற்படுத்துதல்.

## 4. ப.தெ.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அமைப்பு

சர்வதேசக் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய கூட்டுறவு அமைப்புக்கள் அதன் அங்கத் தவர்கள் மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபையினாலே நிர்வகிக்கப்பட வேண்டும் எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் ஒருவ ருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் அளிக் கப்பட்டு அங்கத்தவர்கள் மத்தியில் இருந்து நிர்வாகசபை தெரிவு செய்யப்படுகின்றது சங்கங் களின் உபவிதிக்கு அமைவாக நிர்வாக சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப் பட்டிருக்கும். சங்கங்களின் செயற்பாட்டிற்கு ஏற்ப நிர்வாக படிமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக் கும்.

பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங் கங்களுடன் தொடர்பாக மேலும் சமாசம், கொத் தணி ஆகியவற்றின் நிர்வாக அமைப்பு படிமுறை களையும் கருத்தில் கொள்ள வேண்டும் அத்து டன் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை, வழிப்படுத்தல் ஆகியன தொடர் பாகவும் அறிய வேண்டும். நிர்வாகக்கட்டமைப் பானது அதன் பிரதான நோக்கமான கூட்டுறவுக் கொள்கைக்கமைய உறுப்பினர்களின் பொரு ளாதார, சமூக முன்னேற்றமும் சிக்கனம், சேமிப்பு பண்பு, ஒருவருக்கொருவர் சுய உதவி, பரஸ்பர உதவி ஆகிய எண்ணங்களையும் நடைமுறை களையும் வளர்த்தலும் அவற்றை அடையக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இச் சங்கங்களின் நிர்வாக அமைப்பில் கீழ்வரும் படிமுறைகளை அவதானிக்கலாம்.

1) கிளைகள் கிளைக்குழு
2) பொதுச் சபை
3) நெறியாளர் குழு
4) பொது முகாமையாளர்

### 4.1 கிளை அமைப்பு முறைகள்

பொதுச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட சிலரைக் கொண்டு இச் சங்கங்கள் இயங்கும் பொதுச்சபையினால் பிரதேச எல்லை நிர்ணயிக் கப்படும் தொழில்புரிபவர் குறிப்பிட்ட பிரதேசக் கிளையுடன் இணைக்கப்படுவார். கிளை அலுவல கத்தில் உறுப்பினர் பதிவேடு பாதுகாக்க வேண் டும். பொதுச்சபையின் அனுசரணையுடன் கிளை யின் வளர்ச்சி கருதி பல்வேறு குழுக்களை உருவாக்கலாம். வருடாந்தம் கிளைப்பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டும். இக்கூட்டத் தில் பின்வரும் விடயங்கள் பரீசீலனைக்கு உட் படுத்தப்படும்.

* சங்கத்தின் கிளையினதும் செயற்பாடுகள் பரீசீலித்தல்.
* கிளை அங்கத்தவர்களின் கடன் எல்லை யைப் பரிசீலித்தல்.
* மகளிர் செயற்பாட்டு கிளைக்குழு தெரிதல்.
* தேவையான குழுக்களை நியமித்தல்.

### 4.2 கிளைக் குழுக்கள்

9 பேரை கிளைக்குழு கொண்டிருக்கும். இதில் 7பேர் கிளை அங்கத்தவர் மத்தியில் இருந்தும் ஒருவர் கிளை தொடர்பான கூட்டுறவின் குழுவாலும் ஒருவர் மகளிர் குழுவில் இருந்தும் தெரிவு செய்யப்படுவர். கிளைக்குழு 3 வருடம் செயற்பாட்டுக் காலத்தைக் கொண்டது. கிளைக் குழுவானது தலைவர், துணைத் தலை

வர், செயலாளர் ஆகிய பதவிகளைக் கொண்டிருக்கும். கிளைக்குழு பின்வரும் அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

- ✱ கிளை அங்கத்தவர்களின் நலன்பேணல்.
- ✱ உறுப்பினர் முறைப்பாடு தொடர்பான நடவடிக்கை எடுத்தல்.
- ✱ கிளை தொடர்பான நிர்வாகம் நடவடிக்கைகளைக் கவனித்தல்.
- ✱ நெறியாளர்குழு பொதுச்சபைக்கு விதப்புரை செய்தல்.
- ✱ கிளை எல்லையை நிர்ணயித்தல்.
- ✱ கூட்டுறவுக்கல்வி புகட்டல்.
- ✱ கடன் வசூலிப்பு நடவடிக்கையில் ஈடுபடல்
- ✱ உறுப்பினர் அனுமதி தொடர்பான விதந்துரை செய்தல்.

### 4.3 பொதுச்சபை

சங்கத்துக்கு பொதுச்சபை இருக்கும். கிளைகளால் தெரிவு செய்யப்பட பிரதிநிதிகளை இது கொண்டிருக்கும். பொதுச்சபை மூன்று செயற்பாட்டுக் காலத்தைக் கொண்டிருக்கும். கிளைகளில் இருந்து மூன்றுக்கு குறையாமலும் 8 பேருக்கு மேற்படாமலும் பிரதிநிதிகள் பொதுச் சபையில் இடம்பெறுவர். கிளைக்குழுவில் இருந்து பிரதிநிதிகள் பின்வரும் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

$$\frac{\text{கிளை உறுப்பினர் எண்ணிக்கை} \times 100}{\text{சங்கத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை}}$$

சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்துக்கு 25பேர் அல்லது உறுப்பினர்களின் 1/4 பகுதியினர் சமூகம் அளித்து இருக்க வேண்டும். அங்கத்தவருக்கு மட்டுமே வாக்குரிமையுண்டு.

### 4.4 பொதுச்சபை பின்வரும் அதிகாரம் உடையதாக காணப்படும்.

- ✱ இயக்குனர்களை தெரிவு செய்தல்.
- ✱ உறுப்புரிமையை நீக்கல் இடைநிறுத்தல் மறுபரிசீலனை செய்தல்
- ✱ கடன் எல்லையை நிர்ணயித்தல்.
- ✱ சங்கத்துக்கு தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், அகற்றுதல் தொடர்பாக பொதுச்சபைக்கு அதிகாரம் வழங்குதல்.
- ✱ வைப்பு அங்கத்தவர்களை அல்லாதவர் தொடர்பான நடவடிக்கைகளை நிர்ணயித்தல்.
- ✱ சங்க துணைவிதிகளை திருத்துதல்.
- ✱ கணக்காய்வு அறிக்கையை செய்யும் நெறியாளர்குழு அறிக்கையையும் ஆய்வு செய்தல்.
- ✱ சங்கத்தின் மேலதிகத்தைப் பங்கீடு செய்தல்
- ✱ விசேட குழுக்களை நியமித்தல்.
- ✱ அதிகாரங்களை கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு பகிர்ந்து அளித்தல்.
- ✱ சங்கத்தின் நோக்கத்தை அடையச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

### 4.5 நெறியாளர்குழு

சங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு நெறியாளர்குழு ஒன்று இருக்கும். இதில் 9 உறுப்பினர்கள் காணப்படுவர். 7 பேர் பொதுச் சபையாலும் ஒருவர் மகளிர் குழுவில் இருந்தும் இன்னொருவர் சங்கம்சார் நலன் குழுவில் இருந்தும் தெரிவு செய்யப்படுவர். தலைவர், உபதலைவர் ஆகியோர் இவ் உறுப்பினர்களில் இருந்து தெரிவுசெய்யப்படுவர். குறைந்தது மாதம் ஒரு தடவை கூட்டம் கூட்டுதல் வேண்டும்

**நெறியாளர் குழு பின்வரும் அதிகாரம் கொண்டதாகக் காணப்படும்.**

1. தலைவர், உபதலைவரைத் தெரிவு செய்தலும் செயலாளர் ஒருவரை நியமித்தலும்.
2. உறுப்பினர் அனுமதித்தல்.
3. பொதுக் கூட்டங்கள் கூட்டுதல்.
4. முறைப்பாடுகள் ஆய்வு செய்தல்.
5. பணியாளர்களை நியமித்தல்.
6. உறுப்பினர்களுக்கு வழங்கும் கடன் எல்லை நிர்ணயித்தல்.
7. கிளைகளின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
8. சங்கத்தின் வளர்ச்சி தொடர்பான திட்டங்களைச் சமர்ப்பித்தல்.
9. சங்கத்தின் செயற்பாட்டு அறிக்கையை மாதாந்தம் மதீப்பிடு செய்தல்.
10. கடன் எல்லைகளை நடைமுறைப்படுத்தல்.
11. கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்து மதிப்பீட்டு அறிக்கைகளை பரிசீலனை செய்தல்.
12. சங்கம் தொடர்பான ஆவணங்களைப் பெறுத

லும் பாதுக்காத்தலும்.

13. உறுப்பினர் ஈடுபாட்டை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
14. சொத்துக்கள் கொள்வனவு செய்தல் கட்டிடங்களைக் கட்டுதல்.
15. பங்குகள் ஒதுக்குதல், மாற்றுதல்.
16. கடன் மீளப்பெறும் கால எல்லையை நிர்ணயித்தல்.
17. சங்கம் சார்பாக ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.
18. வைப்புப் பெறுதல், மீளளிப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
19. குழுக்கள் அமைத்து அவற்றின் செயற்ப்பாட்டுக்கு அதிகாரம் வழங்குதல்.
20. வருமானங்களுக்கு ஏற்ப பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.
21. சங்கத்தினது நோக்கத்தை அடையத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

#### 4.6 பொது முகாமையாளர்

நெறியாளர் குழுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி முறையாக நிர்வகிப்பதற்காக பொதுமுகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவர். சட்டம், உபவிதி, இயக்குனர் சபைத் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு அமைவாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவருக்கு உதவியாக சங்கத்தின் பருமன் செயற்பாடு ஆகியவைகளையும் அடிப்படையாகக் கொண்டு பகுதி முகாமையாளர்கள், பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

**பொது முகாமையாளரின் பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்**


1. சங்கம் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்காக மேற்கொள்ளல்.
2. சங்கம் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் பதிவு செய்தலும் ஆவணங்களைப் பாதுகாத்து அறிக்கையினை கணக்காய்வாளருக்கும் நெறியாளர் குழுவுக்கும் சமர்ப்பித்தல்.
3. ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக பொறுப்பு ஏற்றவர்களிடம் உறுதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
4 நெறியாளர் குழுவுக்கு ஆலோசனை அளித்தல்.
5. திட்டங்கள் நடைமுறைபடுத்துவதனை உறுதிப்படுத்தல்
6. நிதி பெறுதல், பயன்படுத்தல் தொடர்பாக அனுகுமுறைகளைக் கையாளுதல்.
7. நிறுவன இலக்கை அடைவதில் செயற்பாட்டுப் பெறுபேற்றை நெறியாளர் குழுவுக்கு சிபார்சு செய்தல்.
8. முதலீடுகள் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கையை நெறியாளர் குழுவுக்கு சமர்ப்பித்தல்.
9. சங்கத்தின் செயற்பாடு தொடர்பாக சகல முகாமைக் கருமங்களையும் கவனித்தல்.
10. கீழ்மட்ட பணியாளர்களுக்கு அதிகாரக் கையளிப்பு மேற்கொள்வதுடன் பணியாளர் தொடர்பான செயற்பாடுகளை நெறியாளர் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
11. சொத்துக்களைப் பாதுகாத்தல்.
12. பணியாளர் நலத் திட்டங்களைப் பேணுதல் / நடைமுறைப்படுத்துதல்.
13. சங்கத்தின் உள்ளும் வெளியும் சுமுக உறவைப் பேணுதல்.
14. இயக்குனர் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்.

#### 4.7 பொதுச் செயலாளர்

நெறியாளர் குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவரே பொர்துச் செயலாளராகப் பணிபுரிவார். சங்கக் கடமைகளை நிறைவேற்ற சங்கப் பணியாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் செயளாளரின் பணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பொதுச் சபை நெறியாளர் சபையின் கூட்டங்களை கூட்டுதல்
2. கூட்ட அறிக்கை எழுதுதல் இவற்றை நடைமுறைப்படுத்தல்
3. நெறியாளர் குழு அறிக்கையை தயாரித்தல்.
4. கிளைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தொடர்பாக ஏடு பாதுகாத்தல்
5. சங்க இலச்சினையைப் பாதுகாத்தல்.
6. சங்கம் தொடர்பாக அறிக்கைகளைச் சமர்ப்பித்து உரியவர்களுக்கு உரிய காலத்தில் அனுப்புதல்.

**4.8 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் கட்டமைப்பு**




## 5. வடமாகாண பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசமும் அதன் நோக்கங்களும்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கொத்தணி அமைப்புக்களினதும் பணியாளர்களினதும் நோக்கங்களை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்கு ஆவன செய்யும் நோக்கோடு இது உருவாக்கப்பட்டது. வடமாகாணத்தைப் பரப்பெல்லையாகக் கொண்டு இயங்கும் இவ் அமைப்பு பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான கூட்டுறவு அமைப்புக்களை அங்கத்துவமாகக் கொண்டுள்ளது. இதில் 19 ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் 4 கொத்தணிகளும் அங்கம் வகிக்கின்றது. பொதுச்சபையால் தலைவர், உபதலைவர் தெரிவு செய்யப்படுவர். செயலாளரை சபை தெரிவு செய்யலாம் அல்லது நியமனம் செய்யலாம்.

**சமாசத்தின் நோக்கங்கள்**

* அங்கத்துவ அமைப்புக்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவது.
* உற்பத்தி தொடர்பாக பொருத்தமான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல்.
* அங்கத்துவ சங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல். (உம்) காகிதாதிகளின் விநியோகம்.
* உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
* ஊழியர்களுக்கு கூட்டுறவுக் கல்வி பயிற்சி ஆகியன அளித்தல்.
* விபத்து உதவித் திட்டத்தை அமுல்ப் படுத்துதல்.

- அங்கத்துவ சங்கங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- சுய கட்டுப்பாடுகளை மேற்கொள்ள அங்கத்துவ சங்கங்களுக்கு வசதி அளித்தல்.
- தேவையான இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்து செயற்படுத்தல். (உம்) அச்சகம்.
- பணியாளர்களினதும் அங்கத்தவர்களினதும் சேமிப்பு ஆற்றலை உயர்த்துதல்.
- அங்கத்தவர்களினதும், அங்கத்தவர் அல்லாதவர்களினதும் சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி மேம்பாட்டுக்காக காலத்திற்கேற்ப திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

## 6. பனை அபிவிருத்திச் சபை

1970ம் ஆண்டு ஆய்வு மேற்கொண்ட பனை சார்பான ஆய்வுக்குழு வழங்கிய ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும் அங்கத்தவர்களான பனம் தொழில் வல்லுனர் வாழ்வு மேம்பாட்டுக்குமான வழிகாட்டியாக உற்பத்தி நிபுணத்துவம், ஆராய்ச்சி, அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், பனை வள அபிவிருத்தி போன்றவற்றை முனைப்புடன் செயல்படுத்த வேண்டிய அவசியமும் பனம் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கும் ஊக்கமளிக்கும் நோக்கமாகவும் 1977 இல் நிதியமைச்சர் திரு.ரொனிடிமெலுக்கு திரு.க.நடராசா அவர்களால் உணர்த்தப்பட்டதன் விளைவாக 1978 இல் பெருந்தோட்டத்துறை அமைச்சர் எம்.டி. எச் ஜெயவர்த்தனா யாழ் விஜயம் மேற்கொண்டபோது அங்குரார்ப்பணம் செய்து இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

## 7. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் சமாசத்தினதும் முக்கிய செயற்பாடுகள்

### 7.1 அங்கத்தவர் கட்டாய சேமிப்பு

1981ம் ஆண்டு நிதி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிக் கிடைத்த பலாபலனாக 15% விற்பனை வரி 10% மாக மாற்றியதால் மீதமான 5% அங்கத்தவரின் சேமிப்பாக உருவாக்குவதற்கு வழிகாட்டியாக அப்போதைய கூ.ஆ.உதவி ஆணையாளர் திரு.வேலாயுதப்பிள்ளையின கருத்துக்கமைய அங்கத்தவர்களுக்கான கட்டாய சேமிப்புத் திட்டம் உருப்பெற்றது இன்றுவரை இச் சேமிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 7.2 வடிசாலை

1982ன் பிற்பகுதியில் சங்கங்களால் உற்பத்தி செய்து விற்பனை போக மீதிக் கள் ஊற்றப்பட்டு வீண் விரயம் செய்யும் நிலையைப் போக்கி ஓர் பாரிய வடிசாலையை அமைப்பதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்த் துப் பாரிய வருமானத்தை ஈட்டலாம் என்னும் சிந்தனை சமாச மட்டத்தில் தோன்றியது. இச் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்க பாராளு மன்ற உறுப்பினர்கள் திரு.த.இராசலிங்கம் திரு.க.துரைரத்தினம் போன்றோரின் முயற்சியினால் யாழ் மாவட்ட கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டது. அவர்களது ஒத்துளைப்பும் அரச ஆதரவும் பெறுவதற்கு வசதி கிட்டியது. இச் சிந்தனை எதிர்கால மேம்பாட்டுக்கு வித்திட்டது ஏற்கனவே தீர்மானித்துக் கொண்டதற்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி உதவியுடன் வடமராட்சியின் திக்கம் பிரதேசத்தில் வடிசாலை அமைத்து திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் 1983ல் செய்யப்பட்டது. இவ் வடிசாலை 01 மணித்தியாலத்தில் 300 கலன் கள்ளை வடிக்கக் கூடியதும் ஆசியாக் கண்டத்தின் பெரிய பனம் சாராய வடிசாலையும் ஆகும்.

திக்கம் வடிசாலை யாழ் மாவட்டச் சங்கங்களின் விற்பனைக்குப் போக மீதியான கள்ளை வடிக்க முடியும் என்ற சிந்தனையில் இருந்த சங்கங்கள் திக்கம் வடிசாலையின் செயற்திறன் குன்றியதைத் தொடர்ந்தும் யாழ் மாவட்டத்தின் பிரதான பாதைகளை எந்நேரமும் பயன்படுத்தி கள்ளினை எடுத்துச் செல்ல முடியாத போர்ச் சூழலையும் கருத்தில் கொண்டு பிரதேச ரீதியில் வடிசாலைகளை அமைக்கும் சிந்தனை சமாச தலைவரான திரு.சு.நடேசு அவர்களின் உறுதியான செயற்பாட்டுடன் தோற்றம் கண்டதுடன் அப் பிரதேச சங்கங்களே மூலதன செலவுகளையும் பகிர்ந்து கொண்டு 3000 போத்தலை 4 மணி நேரத்தில் வடிக்கக் கூடிய பொறி பானை வடிவமைப்புக்களை மேற்கொண்டு கட்டிட நிர்மாணமும் செய்யத் தீர்மானித்தனர். இதன் பயனாக 1986 இல் தென்மராட்சியிலும் 1987 இல் சங்கானையிலும் இரு வடிசாலைகள் நிர்மாணிக்கப்பட்டு இவ்

வடிசாலைகளை நிர்வகிக்க அப் பிரதேச பிராந்திய சங்கங்களின் நெறியாளர்கள் இணைந்து ஓர் பணிப்பாளர் சபைகளையும் தெரிவு செய்து அப் பணிப்பாளர் சபையின் மேற்ப்பார்வையில் இயங்கி வந்தன. சங்கானையில் சங்கானை வடிசாலைக் கூட்டுறவுச் சமாசம் எனும் பெயருடன் 1988 முதல் இயங்க ஆரம்பித்தது.

### 7.3 கற்பகம் பத்திரிகையின் செயற்பாடு

சமாசத்தால் 1980முதல் மாதாந்தப் பத்திரிகையாகவும் பின்னர் சிறிய சஞ்சிகையாக வெளிவந்த கற்பகம் பத்திரிகை தனது சேவையை 1995ஆம் ஆண்டு வரைக்கும் சராசரி 3500 பிரதிகள் வெளியிட்டு இத்தொழில் சார்ந்த விடயங்களையும் நடைமுறைப் பிரச்சினைகளையம் அவற்றுக்கான தீர்வுகளையும் கணக்கியல் சம்பந்தமான அறிவூட்டல்களையும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றை வெளிக்கொணர்ந்து வந்த இது, தறங்போது மீண்டும் வெளிவருகின்றது.

### 7.4 மரநடுகைத்திட்டம்

"இன்று பயிர்நடுவோம் நாளை பயன் பெறுவோம்" என்னும் செயற்திட்டத்தின் கீழ் யாழ். கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் முன்னெடுத்த மரநடுகை நிகழ்வில் பனை, தென்னை வள அபிவித்திக்கூட்டுறவுச் சங்கங்கள் அதிக பங்களிப்புச் செய்துள்ளன. புதுவருட தினத்தை முன்னிட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. ஏற்கனவே பத்து லட்சம் பனை விதை நடுகைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது மேலும் இத்திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் கமுகு மரங்கள், வாழை, மாமரம், பலா போன்ற பல வகையான பயன் தரு மரங்கள் ஒவ்வொரு சங்கங்களின் வளாகத்திலும் நடப்பட்டன. இந் நடவடிக்கை மக்களின் நீண்ட காலத்தில் வருமான உயர்வுக்கும் இயற்கையாக சூழலை பாதுகாப்பதற்கும் பெரும் உதவியாக இருக்கிறது. இன்று பனை அபிருத்தி சபை பனைகள் நடுகைத்திட்டத்தை பல வழிகளில் மேற்கொள்கிறது. இத் திட்டத்துக்கு பனை அபிருத்தி சபை தலைவா் திரு.சீவரட்ணம் அவா்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவது வரவேற்கத்தக்கது.

### 7.5 கொத்தணி அமைப்பு

பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டில் 1992 இல் உருவாக்கப்பட்ட கொத்தணி அமைப்பு முறை முக்கியம் பெறுகிறது. இதன் மூலம் பிராந்திய ரீதியாக சங்கங்கள் இணைந்து செயற்பட ஆரம்பித்தன. இதன்மூலம் இன்று கொத்தணி அமைப்புகள் செயற்படுகின்றன. இவ்வமைப்புகள் மேலும் அங்கத்துவ சங்கங்களின் நோக்கங்களை அடைய அங்கத்தவா் நலன் திட்டங்கள் சங்கப்பணியாளா் நலன் திட்டங்கள் அங்கத்தவா் அல்லாதவா்களினதும் அவா்களது பிள்ளைகளினதும் வளா்ச்சியிலும் அதிக சேவை அளித்துவருகிறது இதனால் இப்பிராந்திய அங்கத்தவா்கள் சமாசம் வழங்கும் நலன்திட்டங்கள் கொத்தணி வழங்குகின்ற நலன்திட்டங்கள் சங்கங்கள் வழங்குகின்ற நலன்திட்டங்கள் ஆகியவற்றின் நன்மைகளை பெறக்கூடியதாக இருக்கிறது. இக்கொத்தணிகள் அங்கத்தவா்களின் பொருளாதார வளா்ச்சிக்கு வலிகாமம், கொத்தணியின் பங்களிப்பு அளப்பெரிய பாராட்டுப்பலராலும் பெற்றுள்ளது.

### 7.6 சித்த மருத்துவக் கூட்டுறவுச் சங்கம்

பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முற்போக்கு நடவடிக்கையாக சித்த மருத்துவ கூட்டுறவு சங்கம் 15.06.1992 இல் உருவாக்கப்பட்டது. சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனை வைத்திய சேவை, நடமாடும் வைத்திய சேவை ஆகியவற்றை வழங்கி வருகின்றது. இதன் மூலம் நெருக்கடியான காலங்களில் கிராமிய மட்டத்தில் அதிக வைத்திய சேவையினை கிராமிய மக்கள் பெறக்கூடியதாக இருக்கின்றது. இலவச நடமாடும் சேவையினை சங்க மட்டத்தில் வழங்கப்படும் போது சமாசம் ஐயாயிரம் ரூபாவினை வழங்குகின்றது மிகுதிச் செலவினை சங்கங்களே பொறுப்பேற்கின்றது. 19 பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களும் 4 கொத்தணிகளும் சமாசமும் இணைந்து இவற்றின் சொந்த நிதியில் உருவாக்கியமை ஏனைய கூட்டுறவு அமைப்புகளுக்கு ஒரு முன்மாதிரியான உதாரணமாகும். உள்ளுராட்சி மன்றங்களுக்கும் இவ்வுற்பத்திகளை வழங்கி வருகிறது.

### 7.7 கல்வித்திட்டம்

சமாசம், கொத்தணிகள் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் பிள்ளைகளினதும் அங்கத்தவா்களினதும் பணியாளா்களினதும் வளா்ச்சிக்கு கல்வி வளா்ச்சித் திட்டங்களை

நடைமுறைப்படுத்திவருகிறது. இதற்கு மேலாக கூட்டுறவுக் கல்வியையும் வழங்கும் நோக்கோடு 2000 ஆம் ஆண்டிலிருந்து நடைவடிக்கைகள மேற்கொள்கிறது. கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கு மாவட்டக் கூட்டுறவுச் சபை கூட்டுறவு அபிவி ருத்தி திணைக்களம் அதிக பங்களிப்புச் செய் கிறது.

### 7.8 கிராமிய வங்கிகள்

அங்கத்தவர்களின் சிக்கனச் சேமிப்பு பண்புகளை வளர்க்கவும் அங்கத்தவர்களுக்கு வங்கிப்பழக்கத்தை உருவாக்கவும் 2000 ஆம் ஆண்டில் கிராமிய வங்கிகள் இச்சங்கங்கள் மூலம் உருவாக்கப்பட்டது. இக்கிராமிய வங்கி கள் தமது நோக்கத்தை அடையும் நோக்கோடு நடைமுறை சேமிப்பு, அங்கத்தவர்களின் நிலை யான வைப்பு, அங்கத்தவர்களின் கட்டாய சேமி ப்பு அங்கத்தவர் பண்டிகை சேமிப்பு, சிறுவர் சேமிப்பு அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்பு போன்ற சேமிப்புகளை நடைமுறைப்படுத்தி வரு கின்றது அங்கத்தவர்களுக்கு கட்டாய சேமிப்பில் 7.5 % வரை 50000-150000 இடைப்பட்ட கடனை வழங்கி வருகிறது. ஒவ்வூதியத்திட்டம் நடை முறைப்படுத்த உதவுகிறது. மேலும் அங்கத்தவர் களின் நலன் கருதி உருவாக்கப்படுகின்ற நலன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த உதவி வரு கிறது மகளீர் சுயதொழில் முயற்சித் திட்டத்தின் கீழ் அங்கத்தவர்களை பிணையாகக் கொண்டு கடன்களை வழங்கிவருகிறது.

### 7.9 கல்வி வளர்ச்சித் திட்டங்கள்

சமூக அபிவிருத்தி என்பது ஒரு சில நாட்களில் ஏற்படும் ஒன்று அல்ல அது நீண்ட காலத்தில் தான் தாக்கம் அதன் மாற்றம் தெரி யும். இச்சங்கங்கள் சமாசம் அங்கத்தவர் நலன் கருதி கூட்டுறவுக் கல்வியையும் முதியோர் கல் வியையும் அங்கத்தவர்களுக்கு வழங்கி வரு கின்றது. இதற்கு மேலாக அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை வரைந்து நடைமுறைப்படுத்தி வரு கின்றது. கல்வி வளர்ச்சி மூலம் தான் நிலையான தொடர்ச்சியான ஒரு சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இதனை நடைமுறையீல் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய கல்வி அபிவிருத்தித்திட்டங்கள் செல விடப்படும் நிதி நிறுவனத்தினதும் அங்கத் தவர்களின் வளர்ச்சிக்குமான ஒரு நீண்ட கால முதலீடாகும். சமாசம், கொத்தணி, சங்கங்கள் ஆகியன தனித்தும் இணைந்தும் இத் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுகின்றன. இத்தகைய் கல்வி வளர்ச்சித் திட்டங்களில் பின்வருவன முக்கியமானதாக காணப்படுகிறன.

#### 7.9.1 பாலர் கல்வி

ஒரு மனிதனதும் சமூகத்தினதும் வளர் ச்சிக்கு கல்வியின் முக்கியம் உணரப்பட்டு 1992 ஆம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவர்கள் பணி யாளர்கள் மகளீர் குழுக்கள் சுயதொழில் முயற்ச் சியாளர் ஆகியோருக்கு கூட்டுறவுக் கல்வி இச் சங்கங்களால் வழங்கப்பட்டுவருகின்றது. மேலும் கல்வியானது அடிப்படையிலிருந்து உரிய கால த்தில் உரிய பருவத்தில் வழங்கப்பட வேண்டும் என்பதனை உணர்ந்து பாலர் பாடசாலைகள் மூலம் சிறார்களுக்கு கல்வி வழங்கப்படுகின்றது. இதற்கான ஆசிரியர்கள் மகளீர் குழுக்களால் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள் அப்பிரதேச சன சமூக நிலையங்கள் ஊடாக இக்கல்வி வழங்கப்படு கின்றது. இதன் மூலம் சிறார்களுக்கு பல்துறை ஆளுமைவாய்ந்த கல்வியானது அடிப்படையி லேயே வழங்கப்படுகின்றது என்பதனை அவர்கள் பாடசாலைகளில் வெளிக்காட்டுகின்ற திறனில் இருந்து உணர்ந்து கொள்ளலாம். இக் கல்வி நிலையங்களில் 150 பாலர் கல்வி ஆசிரியர்களும் 120 பாலர் பாடசாலைகளும் இயங்கி வருடாந்தம் சுமார் 2000க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி வசதியினை வழங்குகின்றது. இவ் எண்ணிக்கை காலத்துக்கு காலம் வேறுபடலாம். பாலர் பாடசாலைகளின் வளர்ச்சி கருதி இது தொடர்பான கூட்டுறவு அமைப்புகள் ஆசிரியர் களுக்கான சீருடை மாணவர்களுக்கான சீருடை வழங்குவதுடன் சத்துணவுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் வரு டாந்த விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி வருகின்றது.

#### 7.9.2 புலமைப்பரிசில்கள்

மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு புலமைப்பரிசில்கள் சங்கங்களினாலும் கொத்தணிகளாலும் சமாசத்தினாலும் வழங் கப் படுகிறது. இதன் பிரகாரம் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

அடைந்தோரும் பல்கலைக்கழக அனுமதி பெற்றோரும் அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளும் பாராட்டப்படுவதுடன் பணமும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. இதன்மூலம் கல்வி ஊடாக நிலையானதொரு சமூக அபிவிருத்திக்கு வித்திடப்படுகிறது. பிள்ளைகளுக்கான சத்துணவுத் திட்டத்தையும் சில கொத்தணிகள் நடைமுறைப்படுத்துகின்றன.

### 7.9.3 கூட்டுறவுக் கல்வி

மேலும் கல்வி அபிவிருத்தி மட்டுமல்ல 2000 ஆம் ஆண்டிலிருந்து அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவரின் பிள்ளைகளுக்கும் பணியாளர்களுக்கும் கூட்டுறவுக் கல்வியை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க சமாசத்துடன் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவுத் திணைக்களம் ஆகியன இணைந்து வழங்கி வருகிறது. இதன் மூலம் கூட்டுறவின் சரியான நோக்கத்தை இனங்கண்டு கூட்டுறவுமூலம் சமூக அபிவிருத்தி ஏற்படக் கூடியதாக இருக்கிறது.

### 7.9.4. கல்வி உபகரணங்கள்

பிள்ளைகள் கல்வி தொடர்பான உபகரணங்கள் வருடாந்தம் சமாசத்தால் வழங்கப்படுகிறது. வருடாந்தம் சுமார் 15 லட்சம் ரூபா சராசரியாக வழங்கப்படுகிறது ஒவ்வொருவருக்கும் சுமார் 300 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகிறது. இக்கல்வி சார் நலத்திட்டம் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கு அடிப்படையாகிறது.

### 7.9.5 ஏனைய கல்வி ஊக்குவிப்புக்கள்

பொது நிறுவனங்களால் நடாத்தப்படும் பின்னூட்டல் வகுப்புகளுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. மேலும் பாடசாலைகள் முன்பள்ளிகள் சன சமூக நிலையங்கள் என்பன வற்றில் இடம் பெறும் போட்டிகள் விழாக்கள் பரிசுத்தினம் என்பவற்றிற்கு பரிசுப்பொருட்கள் வழங்கி ஊக்குவிக்கின்றது. மேலும் சமூக நலன் கருதி பயிற்சி வகுப்புகள் கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் நடாத்தப்படும்போது அச் செலவீனங்களை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ வழங்குகின்றது. இத்தகைய நடவடிக்கைகள்யாவும் கல்வி மேம்பாட்டிற்கு அடிப்படையானது விபத்தில் அங்கத்தவர்கள் இறக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கு நிதிப் பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

### 7.10 சமூக மேம்பாட்டுத் திட்டம்

அங்கத்தவர்களினதும், பணியாளர்களினதும் சமூக மேம்பாடு கருதி சமூகமேம்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கு அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்கும் நிதிப்பங்களிப்பு செய்து வருகின்றது. இதன் மூலம் அங்கத்தவர்கள் பணியாளர்கள் அதிக நன்மை அடைகின்றனர்.

### 7.11 மாதாந்த ஒய்வூதியம்

2006 ஆம் ஆண்டிலிருந்து அங்கத்தவர் நலன்கருதி 60 வயது நிறைவடைந்த அங்கத்தவர்களுக்கு சமாசத்தினால் ஒய்வூதியத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தொழிலில் இருந்து ஒய்வு பெறுவோர் தொழிற்படுகாலங்களில் விபத்தில் சிக்குதல் அல்லது வேறு விதங்களில் பாதிக்கப்படும்போது ஒய்வூதியம் வழங்கப்படுகின்றது. தொழிலாளி மரணம் அடையும் சந்தர்ப்பத்தில் மனைவி அல்லது சட்டவழி பிரதிநிதி ஒய்வூதியத்தைப் பெற தகுதி உடையவர். மாதாந்தம் 500 இருந்து 8,000 வரை இவ் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பின் 2%மும் மொத்த மீதியின் 12% ஒய்வுக் கொடையாக வழங்கப்படும். 60 வயதுக்கு மேல் தொழிலில் ஈடுபடும் அங்கத்தவர்களிடம் இருந்து எதுவித கொடுப்பனவும் கழிக்கப்படமாட்டாது.

### 7.12 விபத்து நலத்திட்டம்

அங்கத்தவர் தொழிலில் ஈடுபடும்போது இழப்பு ஏற்படுகிற சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் ஈடு செய்யும் நோக்கத்தோடு 1.1.1980 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. விபத்து ஏற்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் அங்கத்துவ சங்கத்துக்கு தெரிவிக்க வேண்டும். அங்கத்தவர் மொத்த வருமானத்தில் 2% நிதிக்கு செலுத்த வேண்டும். சங்கமும் இதற்கு 1% தொகையை செலுத்த வேண்டும். விபத்து கிளைக்குழுத் தலைவராலும் செயலாளராலும் உறுதிப்படுத்தி விபத்து உபசபைக்கு அனுப்பப்படும். விபத்தின் தன்மைக்கேற்ப சங்க நிர்வாக சபை தொகையை தீர்மானிக்கும். பின்னர் சமாச நிர்வாக சபை இறுதித்தீர்மானத்தை மேற்கொள்

ளும். இயற்கை மரணத்துக்கு 10,000 ரூபாவும் விபத்து மரணத்துக்கு 30,000 ரூபாவும் வழங்கப் படும். மத்தியகாலப் பாதிப்புக்கான கொடையாக 1,000-5,000 ரூபா வரையும் நீண்டகாலப் பாதிப்புக் கொடையாக 5,000-10,000 ரூபாவரைக்கும் மர ணக் கொடையாக 50,000-100,000 ரூபா வரையும் நிதி உதவி வழங்கப்படும் இத்திட்டத்தினால் அங்கத்தவர்களுக்கு ஏற்படும் இழப்புகள் நிதி அடிப்படையில் ஈடுசெய்யப்படுகிறது. அத்துடன் நீண்டகாலப் பாதிப்புக்கு மாதாந்த ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது.

#### 7.13 நிறுவன மேம்பாட்டு உதவிகள்

தனிமனிதனாக தொழில் செய்தவர்கள் நிறுவன ரீதியாக ஒன்று சேர்ந்து பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி செயற் படுவதனால் நிறுவன வளர்ச்சியால் சங்கங்கள் ஊடாக அதிக நன்மை அடைகிறார்கள். இதே போல பனை தென்னை வள கூட்டுறவுச் சங் கங்களும் அரசிடம் அரசசார்பற்ற நிறுவனங் களிடமும் இருந்து பல்வேறு சலுகைகளையும் நிதி உதவிகளையும் பெறக்கூடியதாக இருக் கிறது. இத்தகைய நிதி உதவிக்கு பின்வரு வனவற்றைக் குறிப்படலாம்.

- 2005 ஆம் ஆண்டு நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் 5 மில்லியன் ரூபாவினை உற்பத்தி நிலையங்களின் கட்டிடத்திருத்தத்திற்காக வழ ங்கி இருந்தது.
- 2006 ஆம் ஆண்டு கெயார் (Care) சர் வதேச நிறுவனத்தின் மூலம் அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு 84000 ரூபாவும் சங்கக்கட்டமைப்பை மேம்படுத்த 2 லட்சம் ரூபா வும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கம் (பண்டத்தரிப்பு) வழங்கி இருப்பதை அவதானிக் கலாம்.

ஐக்கி நாடுகள் அபிவிருத்தி நிறுவனம் அங்கத்தவர்களின் வருமான அதிகரிப்பை ஏற்ப டுத்தும் முகமாக பனை வெல்ல உற்பத்தி திட்டத்துக்கு உதவி வழங்கமுயன்றது. தேச நிர்மான மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமை ச்சு, துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கி இருந்தது.

#### 7.14 பணியாளர் ஓய்வூதியத்திட்டம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் ஒரு ஓய்வூதியத் திட்டத்தை 2010 இல் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு பணியாளர் நலன் புரிக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை மேற்கொண் டுள்ளது. இதன் பிரகாரம் 2008 வரையிலான சேவைக்காலம் வரை வருடம் 600 ரூபா தொழி லாளர்கள் செலுத்த வேண்டும். 2009 இல் இரு ந்து 250 ரூபா வீதம் செலுத்த வேண்டும் இதன் பிரகாரம் ஓய்வு பெறும் பணியாளர்கள் ஓய்வூயத் தைப்பெறும் தகுதியுடையவர் ஆகின்றனர். பங்களிப்புத் தொகையில் 5% மாதாந்த ஓய் வூதியமாக வழங்கப்படுகின்றது.

#### 7.15 நலன்புரிச்சங்கம்

யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணி யாளர்கள் ஒன்று சேர்ந்து 2005 ஆம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டு றவுச் சங்கத்தை உருவாக்கி இருக்கின்றனர். இதற்குப் பணியாளர் சம்பளத்திலிருந்து மாதா ந்தம் 100 ரூபா பங்களிப்புச் செய்ய வேண்டும். இதில் 75 % மான தொகை பணியாளர் பெயரி லான சேமிப்பாகவும் 25% இச்சங்கச் செயற்பாடு பணியாளர் நலன்தொடர்பான திட்டங்களுக்கும் நிதி வழங்கி வருகின்றது. இந் நடவடிக்கையா னது இத்துறைசார்ந்த பணியாளர்களுக்கு சிறந்த ஒரு ஊக்குவிப்பாகவும் பணியாளர்கள் தாமாக முன்வந்து முழு வினைத்திறனையும் வெளியிடக் கூடிய சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இச்சங்கங்கள் ஓய்வுபெறும் தனது உறுப்பினர் களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை நடை முறைப்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

**8. இந்நிலையில் 11-12-2009 பிரகடனம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கொத்தணிகள், சங்கங்கள் இணை ந்து கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்ட பத்தில் சமாசத்தலைவர் த.சிவ லிங்கம் தலைமையில் 11-12-2009 இல் நடத்திய கூட்டுறவு பனம் தொழில் வல்லுனர்**

**மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள். இக்கோரிக்கைகளையும் இச் சங்கங்களுடன் தொடர்புடையோர் அறிந்து கொள்ள வேண்டும்.**

1) தற்போது சங்கங்களால் நடாத்தப்படும் கிளை விற்பனை நிலையங்கள் வர்த்த மானிப் பத்திரிகையில் பிரகடனப்படுத்தப் பட்டமைக்கு அமைய அவ்விடங்களிலேயே தொடந்தும் இயங்குவதற்கு அனுமதியளிக் கப்படல் வேண்டும்.

2) ஏனைய உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களை விற் பனை செய்வதுபோல பனம் கள்ளில் இரு ந்து எமது வடிசாலைகளில் உற்பத்தி செய் யப்படும் பனம் சாராயத்தினை சட்ட ரீதியாக விற்பனை செய்வதற்கு சங்கங்களுக்கு அனுமதி அளிக்கப்படல் வேண்டும்.

3) பனம் தொழில் வல்லுனர்களால் மேற்கொள் ளப்படும் உற்பத்திகள் மதுபானம் என்ற கண்ணோட்டத்துடன் நோக்கப்படுவதால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எது விதமான உதவிகளும் வழங்குவதில்லை. ஆனால் எமது நிறுவனங்கள் சொந்த நிதி யைப் பயன்படுத்தியே பல இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்பாடடையச் செய்கின்றன. எனவே எமது நிறுவனங்களுக்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பட வேண்டும்.

4) பனம் பொருள் உற்பத்திகள் தேசிய பிரா ந்திய ரீதியிலும் வருமானத்தைக் ஈட்டிக் கொடுப்பதாலும் மக்கள் வாழ்வாதாரத்துடன் இணைந்திருப்பதாலும் சந்தை வாய்ப்பு போக்குவரத்து என்பவற்றை மேம்படுத்து வதற்கு வசதியாக சங்கங்கள் சமாசம் என்ப வற்றிற்கு வாகன வசதியும் செய்துதரப் படல் வேண்டும்.

5) ஏனைய வளங்களுக்கு தொழில்நுட்ப வச திகள் செறிவாக இருப்பதுபோல பனை தென்னை வளத்துக்கும் நவீன தொழில் நுட்பம் மற்றும் ஆலோசனைகள் கிடைக்கப் பெறல் என்பதுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெற வேண்டும்.

6) பனந்தொழில் அபிவிருத்தியை நோக்க மாகவும், வடபகுதியை தலைமை அலு வலகமாகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபை அதன் நோக்கங் களை திருப்திகரமான முறையில் எய்தாமை யின் காரணமாகவும், இத்துறையை சார்ந்த வர்கள் அதிக நன்மையைப் பெறும் பொரு ட்டு சபையின் கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தினை செயற்பட வைப்பதோடு சபையின் தலைமை அலுவலகத்தினை பனை வளம் நிறைந்த பகுதியில் செயற்பட வைப்பதோடு பனை அபிவிருத்திச் சபையில் எமது துறை சார்ந்தோரும் உறுப் பினர்க ளாக நியமனம் செய்யப்பட வேண்டும்.

7) பனந்தொழில் வல்லுனர்களுக்கும், பணியா ளர்களுக்கும், அவர்கள் சார்ந்தோருக்கும் தற்போது மாகாண மட்டத்தில் உள்ள அமைப்பாகவுள்ள சமாசத்தினால் அவர் களது பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமானது அவர்களுக்குப் போதியதாக இல்லாமையினால் இவ் ஓய் வூதியத்திட்டத்தற்கு அரச மானியமும், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுத வியும் கோருகின்றோம்.

8) அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கு அரச சார்பற்ற நிறுவனங்க ளால் பயிற்சியளிக்கப்படுவதுபோல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் பயிற்சி வழங்க ஏற் பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

9) பனந்தொழில் சார்ந்த கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளில் குறைந்த வேதனத்தில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் ஆசிரியர் களுக்கு கடமைக்கேற்ற ஊதியம் கிடைக் கத்தக்க வகையில் நிதியம் ஒன்றை ஏற் படுத்துவதற்கு வசதியாக அரச அரச சார் பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதி கோரப் படுகிறது.

10) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்கலால் சமகாலத்தில் மேற் கொள்ளப்படும் பனை வெல்ல உற்பத்திக் கான செலவு அதிகம் ஏற்படுவதால் இவ்வுற் பத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட முடி யாதுள் ளது. இத்தொழிலை நட்டமின்றி நடாத்து வதற்கு அரச மானியம் வழங்கக் கோரு கின்றோம்.

## 9. பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக் குத் தடையாக இருக்கின்ற கார ணங்கள்

01. பல்வேறு தொழில்சார், சமூகம் சார் அபி விருத்தி தொடர்பான தூரநோக்கு திட்ட மிட்ட நோக்கங்களை கொண்டதாக இச் சங்கங்கள் காணப்பட்டாலும் சம காலத்தின் இவற்றின் வளர்ச்சிக்குப் பின்வரும் விட யங்கள் மிகப் பெரும் தடையாக அமைந் திருக்கின்றது. இதனால் சங்கங்கள் மீது அங்கத்தவர்களும் தொடர்புடையவர்களும் நம்பிக்கை இழந்தவர்களாகவும் காணப் படுகின்றனர். இத்தகைய பின்னடைவுக்கு பின்வரும் காரணிகள் அடிப்படையாக அமை கின்றன.

02. பனை தென்னை வள அபிவிருத்தி கூட் டுறவு சங்கங்கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களாகக் காணப்படுகின் றது. உற்பத்திச் சங்கங்கள் சந்தைவாய்ப்புக் கிடைக்கின்ற அளவுக்கு அங்கத்தவர்களு க்கு உற்பத்தியை பகிர்ந்து அளிக்கவேண்டி இருக்கின்றது. இதனால் அங்கத்தவர்களுக்கு கிடைக்கின்ற வருமானம் குறைகின்றது இத னால் அங்கத்தவர்கள் அக்கறையற்றவர்க ளாகக் காணப்படுகின்றனர். இதனால் அங்கத் தவர்களுடைய வருமானம், வாழ்க்கைத்தரம், சேமிப்பு என்பன குறைவடைந்து செல்கிறது.

03. கடந்த முப்பது வருடங்களால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், சங்கங்களின் நிதிநிலை மையை பாதிப்படையச் செய்துள்ளது. அங் கத்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சென்றதுடன் புதிய அங்கத்தவர்களின் சேர் வனவும் குறைந்து காணப்படுகின்றது.

04. பாதுகாப்பு அரண்கள் அமைப்பதற்காக அதி களவு பனை, தென்னை மரங்கள் அழிக் கப்படுகின்றன. இதனால் காலத்தின் தேவை க்கு ஏற்ப அதிகளவு உற்பத்திகளை மேற் கொள்ள முடியவில்லை.

05. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டு றவுச் சங்கங்களின் நிர்வாகம் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாக இருத்தல் வேண் டும். இதனால் பல சங்கங்களில் குழுமனப் பான்மை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் நிர்வாக சபையில் திறமையானவர்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. இதனால் நிர்வாகம் சரியானதாக செயற்பட வில்லை. சுருக்கமாக் கூறின் சங்கங்களின் வளர்ச்சிக்கான தந்திரோபாயத்திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த வேண்டுமே தவிர தனிமனித அல்லது ஒரு குழுவின் செல்வாக் குக்கு பெறும் நோக்குடன் சங்கங்களின் நிர்வாகம் செயற்படக்கூடாது.

06. பணியாளர்கள் தொழில்சார் நோக்குடன் செயற்படுவது போலத் தோன்றுகின்றது. சங் கங்களின் வளர்ச்சி, சமூகவளர்ச்சி போன்ற வற்றில் அக்கறையற்று இருப்பதை அவதா னிக்கலாம்.

07. தொழிலாளர்களது வாழ்க்கை செலவு அதி கரிப்பதற்கு ஏற்ப பணரீதியான தூண்டுதல் கள் பணரீதியற்ற தூண்டுதல்கள் வழங்கப் படுவதில்லை. இதனால் பணியாளர்களின் வினைத்திறன் குறைந்து காணப்படுகின்றது தொழிலில் இருந்து விலகிச் செல்கின்ற மனோ ரீதியில் பலர் காணப்படுகின்றனர். இதனால் சங்கங்களின் வளர்ச்சி பாதிப் படைகிறது. நுகர்வோர் தேவைகள் விருப் பங்களினை கருத்தில் கொண்டு உற்பத்தி கள் அமைவதில்லை. மரபு ரீதியான உற்பத் திகள் விற்பனைகள் இடம்பெறுகின்றது. அத் துடன் பனை தென்னை சார்பாக மேற்கொள் ளக்கூடியதான பல்வகை உணவு உற்பத் திகள், குடிபானங்கள் மக்கள் அன்றாட பாவனை பொருள்கள் உற்பத்திகள் மேற் கொள்ளப்படுவதில்லை. இதனால் உற்பத்தி விற்பனை வருமானங்கள் குறைவதுடன் இத னில் தங்கி வாழுகின்ற மக்களின் பொருளா தார சமூக அபிவிருத்தி எதிர்பார்த்த அளவு ஏற்படுவதில்லை. இதனால் சங்கங்களின் மீதுள்ள நம்பிக்கை அங்கத்தவர்களுக்கும் மக்களுக்கும் குறைந்து காணப்படுகின்றது.

08. இச் சங்கங்கங்களின் கிளைகள் மூடவேண் டிய சூழ்நிலைகள் திட்டமிட்டு உருவாக்கப் படுகின்றது. கோழி முன்னுக்கு வந்ததா முட்டை முன்னுக்கு வந்ததா என்ற வாதம் வைக்கப்படுகின்றது. ஏற்கனவே இயங்கி வரு கின்ற கிளைகளுக்கு அருகில் வீட்டை அல் லது ஆலயத்தை அல்லது கல்வி நிலை யத்தை உருவாக்கிவிட்டபின்னர் கிளைகள் வீடுகள், ஆலயங்கள், கல்வி

நிலையங்களுக்கு அருகில் அமைகிறது. ஆகவே கிளைகள் அகற்றப்பட வேண்டும் என முறையிடுகின்றனர். இந்நிலையில் அரச அதிகாரிகளுக்கும் இம் முறையீட்டாளர்களுக்கு சார்பாகவே செயற்படுகின்றனர். இதனால் கிளைகள் மூடப்படுகின்றன.

09. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாகச் செயற்படுகின்ற கூட்டுறவு அமைப்பு அரச சார்பாக செயற்படுகின்ற பனை அபிவிருத்திச் சபை ஏனைய திணைக்கள உதவிகள் இக் கூட்டுறவு அமைப்புக்களுக்கு உள்வாங்கப்பட வேண்டும். ஏனைய தனியார்துறை சார்ந்த கம்பனி அமைப்புகளுடன் சேர்ந்து செயற்படும் போது நீண்ட காலத்தில் கூட்டுறவு அமைப்பு பலவீனம் அடைந்துவிடும். ஆகவே இதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இயக்குனர் சபையின் நிர்வாகமானது எல்லோரும் ஒன்றிணைந்து மேற்கொள்வதாக அமைய வேண்டும். அத்துடன் பல்துறை சார்ந்த திறமையுள்ளவர்களும் இடம் பெற வேண்டும். ஆனால் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய அங்கத்தவர்கள் மட்டுமே நிர்வாக சபையில் இடம் பெறுகிறார்கள் குழுக்களாக சில சங்கங்களின் இயக்குனர் சபையில் பிரிந்து செயற்படுகின்றனர். பிரதேச அடிப்படையில் தனிப்பட்ட முரண்பாடு பழைய நிர்வாகம் புதிய நிர்வாகம் அரசியல் கட்சி வேறுபாடு என்ற அடிப்படையில் குழுக்களாகப் பிரிந்து செயற்படுகின்றார்கள் இதனால் சங்கங்களின் திறனான நிர்வாகத்துக்கு இது பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

10. குழுக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தால் சரியான முறையில் மேற்பார்வை செய்யப்பட்டு சரியான முறையில் கட்டுப்படுத்தி சரியான முறையில் வழிநடத்தப்பட வேண்டும். ஏனெனில் ஏனைய கூட்டுறவு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது அதிக நிர்வாக ஆலோசனைகள் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கே தேவைப்படுகிறது.

11. கூட்டுறவுத் திணைக்களத்தால் இவ்வமைப்புகளின் கணக்காய்வு அறிக்கை காலம் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படுகிறது. இதனால் பிழைகள், மோசடிகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணமுடியாது இருக்கின்றது. நிர்வாக திறன் இன்மையை உடனுக்கு உடன் நீக்க முடியாது இருக்கிறது.

12. காலத்துக்கு ஏற்ப உற்பத்தி விநியோகம் விற்பனை களஞ்சியப்படுத்தல், பொதியமைத்தல் தொடர்பாக நவீன தொழில் நுட்பங்கள் கையாளப்படுவதில்லை. இதனால் உற்பத்தி விற்பனை அளவு குறைவதுடன் தொழில் சார் அந்தஸ்தும் சமூகத்தில் குறைவாக காணப்படுவதுடன் சங்கங்களின் வளர்ச்சியும் மந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

13. பனை தென்னை உற்பத்தி தொடர்பான வாடிக்கையாளர்களின் மனோநிலை கொள்வனவு நடத்தை வாழ்க்கைத்தரம் மாறிவருகிறது அதற்கு ஏற்ப சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனால் விற்பனை வருமானம் குறைவடைகிறது.

14. ஒரு நாட்டின் நிறுவனங்களின் வளர்ச்சியானது அரசு கடப்பிடிக்கின்ற கொள்கையும் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் உள்ள சமூக உறவிலேயே அதன் வளர்ச்சி தங்கியுள்ளது. ஆகவே சங்கங்களின் நிர்வாகம் அரசுகளுடன் சுமூக உறவைப்பேணி அரச நன்மைகளை சங்கங்கள் உள்வாங்க வேண்டும். அதுவும் பொருளாதார பலவீனம் உள்ள அங்கத்தவர்களைக் கொண்ட சங்கங்களுக்கு இத்தகைய சுமூக உறவு அரசுடன் மிக முக்கியமானது. இக்கூட்டுறவு அமைப்புக்களின் உற்பத்திகள் சில தென்னிலங்கை உற்பத்திகளுடன் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சாராயங்களுடன் போட்டியிட்டு சந்தைப்படுத்த முடியாமல் காணப்படுகின்றது.

15. அங்கத்தவர்கள் சங்கங்களுக்கு உற்பத்திகளை வழங்காமல் கள்ளமாக விற்பனை செய்து தற்காலிக மிகைவருமானத்தை குறுக்கு வழியில் சம்பாதிக்க முனைகின்றனர். இந்நிலையில் நேர்மையாக நடந்து கொள்ளும் அங்கத்தவர்களும் இவ்வாறு கள் விற்பனைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதனால் சங்கங்கள் நிர்வகிப்பது கஸ்டமானதாக இருக்கிறது. அத்துடன் அங்கத்தவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. குழு மனப்பான்மை தோற்றுவிக்கப்படுகின்றது. இது சங்கங்களின் சுமுக செயற்பாட்டுக்கு தடையாகிறது.

16. தற்போது சமூகத்தில் அதிகளவு கூட்டுற

வாளர்கள் உருவாக்கப்படுவதில்லை. இதனால் சேவை நோக்குள்ள சமூகக் குழுக்கள் உருவாக்கப்படுவதில்லை. மேலும் கூட்டுறவு பற்றிய ஒரு தவறான எண்ணம் சமூகத்தில் காணப்படுகிறது. இது கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது.

## 10. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கான தீர்வுகள்

1) பனை தென்னை ஆகியன தொடர்பான உற்பத்திகள் பிரதான உற்பத்திகள் மட்டும் அன்றி உப உற்பத்திகளும் சங்கங்களால் மேற்கொள்ள வேண்டும். நுகர்வோர் தேவை விருப்பங்களைக் கருதில் கொண்டு தரமான உற்பத்திகளாக அமைய வேண்டும். பொதி அமைத்தல் கவர்ச்சிகரமானதாக இருத்தல் வேண்டும். இவ் உற்பத்திகள் சார்பாக நுகர்வோர் மனதைக் கவரக்கூடிய கருத்துக்களைப் பரப்ப வேண்டும். கிளைகள் நவீன முறையில் அமைக்கப்பட்டு துப்பரவான சந்தைப்படுத்தல் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

2) கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாக நிர்வாக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசியல், மதவிடயங்களில் நடுநிலைமை கடைப்பிடிக்க வேண்டும். இதனால் நிர்வாகம் சுமுகமாக செயற்படக் கூடிய நிலைமை உருவாகும்.

3) குழுமனப்பான்மை பணியாளர்கள் மத்தியில் இயக்குனர்சபை உறுப்பினர்கள் மத்தியில் தோற்றாத வண்ணம் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பணியாளர்களும், இயக்குனர் சபை உறுப்பினர்களும் கடவுள் நீதிக்கும் மனட்சாட்சிக்கும் ஏற்ப சரியான முறையில் தமது பொறுப்புகளை நிறைவேற்றினோமா? நிறைவேற்றுகின்றோமா? என்ற சுய மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வினைத்திறன், விளைதிறன் உயர்வானதாக இருக்கும்.

4) இயக்குனர் சபையிலும், பணியாளர்கள் மத்தியிலும் நிர்வாக அனுபவம், அறிவு, ஆளுமை உள்ளவர்கள் உயர் பொறுப்புக்கள் உள்ள பதவிகளில் இடம்பெறுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தூர நோக்குடன் சங்கங்களைத் திட்டமிட்டு வழிப்படுத்தக்கூடியவர்கள் இடம்பெற ஆவன செய்யவேண்டும். தேவை ஏற்படின் கூட்டுறவுக் கொள்கைக்கு அப்பால் ஆளுமையுள்ளவர்களைக்கூட ஆணையாளர் நியமித்து ஆலோசனை வழங்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கலாம்.

5) பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புடையவர்களுக்கு கூட்டுறவுக் கல்வி வழங்குவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு மேலாக இச்சங்கங்கள், பாலர் பாடசாலைகள் கிராமிய மட்டத்தில் உருவாக்கி நிர்வகிக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் ஆரம்பக் கல்வி இடைநிலைக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றிலும் அதிக கவம் செலுத்த வேண்டும். இதற்கு மேலாக கல்வி வாய்ப்புக்கள் தொழில் வாய்ப்புக்கள் பற்றி தகவல்கள் திரட்டி வழங்க வேண்டும்.

6) கூட்டுறவுத் திணைக்களத்தால் கணக்காய்வு அறிக்கை உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மோசடிகள்,பிழைகள் உடனுக்கு உடன் தீர்வு காண்பதுடன் எதிர்காலத்தில் இவை ஏற்படாமல் தடுக்கலாம். அத்துடன் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நட்டத்தினையும் குறைக்கலாம். மேலும் கூட்டுறவுத் திணைக்களத்தின் மேற்பார்வையும், வழிப்படுத்தலும், கட்டுப்படுத்தலும் இச்சங்கங்களுக்கு அதிகம் தேவைப்படுகிறது. இதனை உணர்ந்து கூட்டுறவுத் திணைக்களம் அதிக பங்களிப்பை இச்சங்கங்களுக்கு பல துறைகளிலும் வழங்கப்பட வேண்டும்.

7) “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற அடிப்படையில் அங்கத்தவர்களுக்கிடையில், சங்கங்களுக்கிடையில் சுமூக உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களினதும் சமாசத்தினதும் செயற்பாடு போற்றுதற்கு உரியது. மேலும் தூரநோக்குடன் புதிய திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

8) பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பல மட்டங்களில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். பாதிக்கப்படுகின்ற

பிள்ளைகளை இனம்கண்டு அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான வழிகாட்டல்களைக் மேற்கொள்ள வேண்டும். தொடர்ச்சியான சமூக அபிவிருத்திக்கு கல்வியே அடிப்படை இதனை உணர்ந்து சங்கமட்டத்திலும், சமாச மட்டத்திலும் கல்வி அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

9) பணியாளர் விசுவாசமான முறையில் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே நிறுவனங்கள் வளர்ச்சி காண முடியும். ஆகவே பண ரீதியான கொடுப்பனவுகள், பணரீதியற்ற கொடுப்பனவுகள் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும். பராபட்சமற்ற முறையில் பதவி உயர்வு இடமாற்றம், சலுகைகள் வழங்கல் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் பணியாளர்கள் தாமாகவே முன்வந்து முழு வினைத்திறனையும் வெளியிடுவர். மேலும் நிர்வாகத்துக்கும் ஒத்துழைப்பை வழங்க முன்வருவர்.

10) கள்ள விற்பனையைக் கட்டுப்படுத்தல் வேண்டும். இதற்கு அங்கத்தவர்கள் தாமாக உணர்ந்து கைவிடக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். காலால் பகுதியின உதவியுடன் சட்டரீதியாக கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேவை ஏற்படின் பொலிஸ் உதவியையும் நாடலாம்.

11) சமூக நலன் கருதி செயற்படக் கூடிய கூட்டுறவாளர்கள் சமூகத்தில் தோற்றுவிக்க வேண்டும். அரசியல் தலைமைத்துவம் பிரதேச ரீதியாக மாவட்ட ரீதியாக உருவாக்கப்பட வேண்டும். அரசு வழங்குகின்ற உதவிகள் இச்சங்கங்கள் ஊடாக அங்கத்தவர்களுக்கு சங்கத்துடன் சேர்ந்தவர்களுக்கு கிடைக்க வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சங்கங்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். மேலும் பொதுப் பிரச்சனையை வெளிக்கொணர்ந்து தீர்வுக்கு வழிவகுக்கவேண்டும்.

12) பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் போதியளவு மூலதன வசதியைக் கொண்டிருக்கவில்லை. அதேவேளை தமிழ் மக்களுக்கென உள்ள ஒரே கூட்டுத்தாபன அமைப்பு பனை அபிவிருத்தி சபையாகும். ஆகவே பனை அபிவிருத்திச் சபை பனை தென்னை தொடர்பான உற்பத்திகளுக்கான உட்கட்டமைப்புக்களை செய்து கொடுக்க வேண்டும். சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புக்களை பிரதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சந்தைகளின் திருப்திகரமான சேவை அங்கத்தவர்களுக்கும் சார்ந்து இருக்கின்ற மக்களுக்கும் கிடைக்கும்.

13) கூட்டுறவு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது இச்சங்கங்கள் நிதிச்சிக்கனங்கள் குறைவாகவே கடைப்பிடிக்கப்படுகிறது. சங்கம் தொடர்பான செலவுகளை மேற்கொள்ளலாம். ஆனால் தனிப்பட்ட பிரபல்யங்களுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டும்.

14) சங்கங்களால் சமாசங்களால் வகுக்கப்படுகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். குறுங்கால நலன்கள் மட்டுமல்ல நீண்டகால சமூக நன்மைகளைக் கருத்திற் கொண்ட திட்டங்களே வரவேற்கத்தக்கது. இத்தகைய சமூக முக்கியம் வாய்ந்த இச்சங்கங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற காரணிகளைக் களைவதில் அரசியல் வாதிகள் அங்கத்தவர்கள் நிர்வாக சபை உறுப்பினர்கள் கூட்டுறவுத் திணைக்களம் பனை அபிவிருத்திச் சபை கூட்டுறவாளர்கள் சமூகத்தலைவர்கள் போன்றோர் தனித்தும் கூட்டாகவும் நடுநிலைமையுடன் தங்களால் இயங்குகின்ற பங்களிப்பை விசுவாசமாக வழங்க முன் வரவேண்டும். இந்நிலையில் கூட்டுறவு அமைப்பு நோக்கத்தை இலக்காகவும் விரைவாகவும் அடைந்து கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

15) பனை தென்னை வள அபிவிருத்தி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திகள் பருவகால உற்பத்திகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சில காலங்களில் குறைந்தளவு உற்பத்தியும், சில காலங்களில் மிகை உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகிறது. மிகை உற்பத்திக் காலங்களில் அதிகளவு உற்பத்திகள் ஊற்றப்படுகின்றது. இந்த வருமான இழப்பு அங்கத்தவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும். இது அங்கத்தவர்களுக்கும் சங்கத்துக்கும் அதிக நட்

டத்தை ஏற்படுத்துகின்றது. இந்நிலைமையில் இருந்து விடுபட சந்தைத் தேவைக்கேற்ப உற்பத்தியை திட்டமிட வேண்டும். பனை தென்னை தொடர்பாக உப உணவு உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். தரமான சாரயம் வடிப்பதற்கான கட்டமைப்பை பனை அபிவிருத்திச் சபையும், அரசின் நன் கொடையையும் பெற்று பிரதேச அரசியல் தலைமையின் உதவியுடன் இக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

16) பொருளாதார பலவீனம் உள்ள அங்கத்தவர்களைக் கொண்ட ஒரே கூட்டுறவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகும். இச் சங்கத்தின் சகல சொத்துகளும் பாதுகாக்கப்பட வேண்டும் இதனை இயக்குனர் சபை பாதுகாக்க வேண்டும் இதற்கு பிரதேச ரீதியாக இருக்கின்ற அரசியல் தலைமை மூலமே இதனை மேற்கொள்ளலாம். சிறப்பாக நீண்டகாலப் பாவனை உள்ள பெறுமதி உள்ள காணி, கட்டிடம், இயந்திரம் ஆகியவற்றை பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். மேற்கூறிய இத்தகைய நடவடிக்கைள் சங்கத்தின் வளர்ச்சிக்கு முக்கியமானது.

## 11. சுருக்கம்

இவ்வாறான சவால்கள் மத்தியிலும் இவற்றின் பின்வரும் செயற்பாடுகள் இவ்வமைப்புக்களின் இலக்குகளை ஓரளவு அடைய வழியமைத்துள்ளது.

**அங்கத்தவர்கள் எதிர்பார்ப்பும் சங்கங்களின் செயற்பாடும்.**

* தமது உற்பத்திக்கு நியாயமான விலைகள் கிடைக்க வேண்டும் இதன் மூலம் தமது வருமானம் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்.
* மேலதிக உற்பத்திகளுக்கு மாற்றுப்பயன்பாட்டு உற்பத்திகள் மேற்கொள்ள வேண்டும்.
* தொழிலில் காணப்படுகிற தடைகள் நீக்கப்பட வேண்டும்.
* தொழிற்பாதுகாப்பு உறுத்திப்படுத்திக் கொள்ள வேண்டும்.
* தொழில் அந்தஸ்து அங்கீகரிக்கப்பட வேண்டும்.
* தொழில் மேற்கொள்ள முடியாத இயலாமை ஏற்படும்போது தானும் தங்கியிருப்போர் தொடர் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
* பிள்ளைகள் உயர் கல்வியைப்பெற்று சமூக அந்தஸ்துடன் வாழவேண்டும்.
* அரசியல் பொருளாதார, கலாச்சார, சமூக மேம்பாடு அடையும் வகையில் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், முன்னுணர் திட்டங்களை தயாரித்து செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

இத்தகைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொருட்டு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கமும், சமாசமும், கொத்தணிகளும் செயற்பட்டு வருகின்றன. சங்கமட்டத்தில் கிளைகள் நிறுவி நேரடியாக கள் விற்பனையில் ஈடுபடுகின்றது மேலும் போத்தல் உற்பத்திப பனை வெல்ல உற்பத்தி பனாட்டு உற்பத்தி புழுக் கொடியல் உற்பத்தி சுவை உணவு உற்பத்தி போன்ற முயற்சிகளிலும் ஈடுபடுகிறது. கிராமிய வங்கிகள் செயற்படுத்துவதன் மூலம் சிக்கனச் சேமிப்பு வங்கிப் பழக்கம் ஆகியன உருவாக்கப் படுகிறது. கடன்திட்டங்களையும் நடைமுறைப் படுத்தி வருகிறது சமூக மேம்பாட்டுத்திட்டங்கள் கல்விசார் திட்டங்கள் ஆகியவற்றையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் சமூகம் வேண்டி நிற்கும் பல்வேறு சேவைகளை பிரதேச தேவைக்கு ஏற்ப வழங்கிவருகிறது. இதற்கு உதாரணமாக இரு சக்கர உளவு இயந்திர சேவை, கதிரை வாடகைக்கு விடுதல், போட்டோக்கொப்பி சேவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் காணப்படுகிற பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தமது இலக்கை இலகுவாக அடைவதற்கு உருவாக்கப்பட்ட 2ம் படிச் சங்கமே கொத்தணிச் சங்கங்களாகும். யாழ்மாவட்டத்தில் 19 பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து 4 கொத்தணிகளை உருவாக்கி இருக்கின்றது. கொத்தணி அமைப்புகள் பின்வரும் நலத்திட்டங்களை குறிப்பிடலாம்.

* அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான இலவச ஓய்வு மரணக் கொடுப்பனவு
* அங்கத்தவர் பணியாளர் இலவச மருத்துவப் பரிசோதனைத்திட்டம்.
* பணியாளர் நலன்புரித்திட்டம்.
* முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்.

* முன்பள்ளி மாணவர் ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.
* மாணவர்களுக்கான புலமைப்பரிசில்.
* அங்கத்தவர் பணியாளர்களின் பிள்ளைகளின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்.
* அங்கத்தவர் பணியாளர் பிள்ளைகளின் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ/.த). கற்பவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்.
* அங்கத்தவர் பணியாளர் பிள்ளைகளில் க.பொ.த.(உ/.த).சித்தியடைந்து உயர்கல்வி கற்பவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்.
* அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்ச்சி நெறிகள்.
* அங்கத்துவச் சங்கங்களின் ஆதரவுடன் நடைபெறும் முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகளுக்கு 2,000 ரூபா வீதம் அன்பளிப்புச் செய்தது.

**பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்**

* விபத்து ஒய்வூதியத்திட்ட்ம்
* பணியாளர் ஒய்வூதியத்திட்டம்
* அங்கத்தவர் ஒய்வூதியத்திட்டம்.
* பிள்ளைகளுக்கான கல்லி புலமைப்பரிசில் திட்டம்.
* பாடசாலை உபகரணங்கள் வழங்கல் திட்டம்.
* சமூக நலத்திட்டம் (மூக்குக் கண்ணாடி பெறவழி செய்தல்)
* சிறந்த அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கம் வழங்கல்.
* பனையியல் கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 10000 ரூபா நன்கொடை வழங்கல்.
* பனை வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்க சங்கத்துக்கு மானியம் வழங்கல்
* சங்கத்துக்குத் தேவையான காகிதாகிகளை உற்பத்தி உபகரணங்களை வழங்கல்.
* காலத்துக்கு காலம் அங்கத்தவர்களுக்கு இயற்கையால், செயற்கையால் ஏற்படும் இழப்புகளில் இருந்து பாதுகாக்க நிவாரணப் பொருட்களை வழங்கல்.
* காகிதாகிகளை உற்பத்தி செய்து வழங்குகின்றது.
* கற்பகம் சஞ்சிகையினை வெளியீடு செய்து சங்கம் தொடர்பான சகல தகவல்களையும் வழங்குகின்றது.
* கூட்டுறவுக் கல்வியை வளர்த்தல்.
* மேலும் சங்கங்கள் அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காணல்.

**முடிவுரை**

கொத்தணிகள், சமாசங்கள் செயற்படுவதன் மூலம் மேற்கூறிய சங்கங்களின் எதிர் பார்த்த இலக்குகளை முழுமையாக அடையாவிட்டாலும் அங்கத்தவர்களுடைய பொருளாதார கலை, கலாச்சார அரசியல் ரீதியாக அதிக வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில் இவற்றின் செயற்பாடு அமைந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களின் கூற்று கருத்தில் கொள்ளவேண்டும் அவரது “கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய அங்கத்தவர்களினதும், அங்கத்தவர்களின் குடும்பங்களின் சமூக மேம்பாட்டிற்காகவும் செயலாற்றுவது பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் என்றால் மிகையாகாது” என்பது இச் சங்கங்களின் வெற்றிகரமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஆகவே மேலும் இச்சங்கங்களில் இலக்குகளை அடைவதற்கு சமகாலத்தில் சங்கங்கள் எதிர் நோக்குகின்ற சவால்களில் இருந்து வெற்றி கொள்ள வேண்டுமாயின் அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்வது வெற்றி அளிக்கும் என எதிர்பார்க்க முடியாது.இதற்கு அரச கொள்கைகள் சார்பாக மாற வேண்டும். இச் சங்கங்களின் அங்கத்தவர்கள் பொருளாதார பலவீனம் உள்ளவர்கள். ஆகவே ஆளும் அரசியல் கட்சிகளுடன் சுமூக தொடர்புகளை எப்போதும் தனிப்பட்ட அரசியல் கொள்கைகளை விடுத்து இயக்குனர் சபை உறுப்பினர்கள் என்ற ரீதியில் செயற்படவேண்டும். அப்போதுதான் சங்கங்களின் நிர்வாகம் சுமூகமாக செயற்படவும் அரசினால் வழங்குகின்ற நன்மைகளை சங்கங்கள் பெறக்கூடியதாகவும் சங்கங்கள் எதிர் நோக்குகின்ற சவால்களையும் வெற்றி கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இச் சங்கங்கள் 1972 இல் உருவாக்கப் பட்டபோது நிதி அமைச்சராக இருந்த கௌரவ அமைச்சர் N.M.பெரேரா அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்ததால் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் மூலம் இச்சங்கங்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தேவையான நட வடிக்கைகளை மேற்கொண்டார். இச்சங்கங்களின் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்புச் செய்தவர்களில் கூட்டுறவு சங்க உதவி ஆணையாளர்களாக இருந்த திரு சண்முகலிங்கம் திரு.வேலாயுதம் பிள்ளை, திரு. சபாரட்ணம், திரு.V.K. அருந்த வநாதன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் சமுகத்தவர்களின் பங்களிப்பு இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. இந்த வகையில் நல்லையா முன்னாள் ப.அ.சபைத் தலைவர் நடராசா, முன்னாள் பாராளுமன்ற உறு ப்பினர் இராசலிங்கம் மாவட்டசபை உறுப்பினர் திரு.சு.நடேசு திரு.விசுவாதன் போன்றோரின் பங்க ளிப்பு குறிப்பிடத்தக்கது.

**சமகாலத்தில் எதிர் நோக்குகின்ற முக்கிய பிரச்சனைகளான,**

- ✷ உற்பத்திகளை ஊற்றாமல் வடிசாலை அமைத்தல் உப உணவு உற்பத்தி மேற் கொள்ள வேண்டும்.
- ✷ கள்ள விற்பனையைத் தடுக்க கலால் பகுதியினதும், பொலிசினதும் ஒத்துழைப்புப் பெறவேண்டும்.
- ✷ கூட்டுறவுத் திணைக்களத்தின் அதிக மேற் பார்வையையும் கட்டுப்பாட்டையும் வழிப் படுத்தல்களையும் பெறவேண்டும்.
- ✷ அரசிடம் இருந்து வரிச் சலுகையையும் பெறவேண்டும்.
- ✷ வினைத்திறன் உள்ள நிர்வாகத்தை ஏற் படுத்த வேண்டும்.
- ✷ மாறிவரும் சந்தைக்கு ஏற்ப சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை கையாள வேண்டும்
- ✷ எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதார பலவீனம் உள்ள மக்களை அங்கத்தவர்க ளாகக் கொண்டுள்ள இச் சங்கங்களின் காணி கட்டிடம் இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை சங்கத்துக்கே உரித்தானதாக பாதுகாக்க வேண்டும்.
- ✷ அரச நிறுவனங்கள், அல்லது சமூகத்தில் செல்வாக்கு உள்ளோர் இச் சொத்துக்களை உடைமையாக்க முனையலாம். கடந்த காலத்தில் இச்சங்கங்களின் கட்டாய சேமிப் புக்கள் மீளப்பெறப்பட்டது. ஒட்டோக்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இத்தகைய நிலைகள் எதிர்காலத்தில் ஏற் படாமல் பாதுகாக்க வேண்டும்.

## கூட்டுறவுச் சிந்தனைகள்

- கூட்டுறவே நாட்டுயர்வு
- கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
- ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு
- ஒன்றுகூடி உழைத்தல்
- ஒன்றுகூடி வாழ்தல்
- விடாமுயற்சி, சுறுசுறுப்பு
- சுயஉதவி, பரஸ்பர உதவி
- சிக்கனம், சேமிப்பு



# ஒரு சமூக மாற்றத்தின் விசையாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வகிபாகம்

**இ.இராஜேஸ்கண்ணன்,**
**விரிவுரையாளர், சமூகவியற்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

ஒரு குறித்த மக்கள் தொகுதியின் சமூக மாற்றம் என்பது பல்வேறு அம்சங்களால் சாத்திய மாகின்றது. குறித்த சமூகத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகள், அங்கு உருவாகும் புரட்சிகர சிந்தனைகள், பண்பாட்டுக் கூறுகளிலான மாற் றங்கள், புறநிலைச் சக்திகளின் தலையீடுகள் என்று மாற்றத்துக்கான காரணிகளைப் பட்டியல் படுத்திச் செல்லமுடியும். இந்த வகையில் ஒரு சமூகத்தில் முன்னர் நிலவிவந்த அந்தச் சமூகம் எதிர்கொண்ட பிணக்குகளுக்கான தீர்வுகளாக எழுந்துள்ள "நிறுவன அமைப்பாண்மைகள்" கூட சமூக மாற்றத்தின் ஒரு நேரடி விளைவாகவும், மாறாக சமூக மாற்றத்தைத் தூண்டும் பிரதான விசைகளாகவும் தொழிற்படுவதைக் காணலாம்.

இந்த வகையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின தோற்றம் என்பது ஒரு குறித்த சமூகப் பிரிவினரின் சமூ கத் தேவைகள், சமூகம்சார் பிரச்சினைகள், சமூக அடையாளம் என்ற அடிப்படைகளில் உரு வான ஒரு அமைப்பாண்மையாகும். இந்த அமை ப்பாண்மையின் உருவாக்கத்துக்கு முன்னர் அதன் தேவை தொடர்பான ஒரு "சமூகத் தாகம்" ஏற்பட்டமையும், தோற்றத்தின் பின்னர் அத்தாகம் எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பது பற்றியும் சிந்திக் கும்போதுதான் இவ் அபிவிருத்தி நிறுவனங்கள் சமூக மாற்றத்திலே பெறும் இடத்தினை விளங் கிக்கொள்ள முடியும்.

இருந்துவந்த யாழ்ப்பாண சமூகத்தின் சாதிய இறுக்கம் கொண்ட சமூகக் கட்டமைப் பிலே சாதி அடையாளத்துடன் பார்க்கப்பட்ட பனந்தொழில் வல்லுநர்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைகளை உயர்த்துதல் என்ற மாற்றுச் சிந்தனையின் விளைபொருளே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவன ங்கள் என்பது ஒன்று. இந்த நிறுவனங்கள் தோன்றிய பின்னர் அதன் இலக்குக ளை ஓரளவேனும் பூரண மாக எய்தியதா? அதனால் விளைந்த அடிப்படை மாற்றங்கள்தான் என்ன? குறித்த சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவமும் பங்குபற்றலும், சிந் தனை முறையிலான மாற்றம், தொழில்நுட்ப புதுமைகளின் உள்வாங்கல் போன்ற மாற்றங் களைக் குறிகாட்டும் அம்சங்கள் எந்தளவில் உள்ளன? என்று நோக்குவது இன்னொன்று. இந்த இரு அடிப்படை மாற்றங்களையும் ஆரா ய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவு நிறுவனங்களின் தோற்றம்

இலங்கையின் தவிர்க்கமுடியாத வளங் களாக விளங்கும் பனை, தென்னை வளங்களை யும், அவற்றைச் சார்ந்த தொழில் வல்லுனர்க ளையும் தேசிய உற்பத்தியினுள் உள்வாங்கும் ஒரு செயற்பாடாக இந்த நிறுவனங்கள் தோன் றின. இது இரு பிரதானமான நிறுவனத் தளங் களைக் கொண்டுள்ளது.

01. சட்டபூர்வமாக அரசாங்கத்தினால் வழங் கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட நியதிச் சபையான "பனை அபிவிருத்திச் சபை".
02. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன் னார், வவுனியா, திருகோணமலை, மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் திணைக்களத்தின்கீழ் அரசாங்கப் பிரதிநிதி யான கூட்டுறவு ஆணையாளரின் வழிகாட்ட லில் அங்கத்தவர்களிலிருந்து நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டு உருவான "பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்கள்".

இந்த ஆய்வு இரண்டாவது அமைப்பினை

குவிமையப்படுத்தியதாகவே அமைகின்றது. இரண்டாவது அமைப்பினுள் அடங்கும் சங்கங்கள் ஒன்றுசேர்ந்த 'கொத்தணி', 'இணையம்' போன்ற கூட்டுறவு அமைப்புக்கள், வடிசாலைகளை அமைத்துப் பணியாற்றுகின்றன. யாழ். மாவட்டத்தின் சங்கங்கள் இணைந்து 'வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்' உருவாகியுள்ளது. (வடக்கு, கிழக்கு சங்கங்களை ஒன்றிணைக்கும் 'வடக்கு கிழக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையம் தொழிற்படுத்தப்பட்டது).

இவை யாவற்றுக்குமான தொடக்கமாக 1972ம் ஆண்டில் நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா விளங்கியிருந்தார். அப்போதைய வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக இவர் இவ் அமைப்பினை உருவாக்கினார். நில உரிமையற்ற பனந்தொழில் வல்லுனர்கள் பனைவளம் உள்ள நில உடமையாளர்களால் சுரண்டப்படுவதை தவிர்த்தல் என்ற பிரதான இலக்குடனும், மரவரி செலுத்தல், தவறணை முதலாளிகளின் சுரண்டலை தவிர்த்தல் ஆகிய நோக்கங்களுக்காகவுமே இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களை அண்மித்துவிட்ட நிலையில், இச்சங்கங்களின் படிமலர்ச்சியுடன் அவற்றின் சாதனைகளை ஒருங்கே வைத்து மதிப்பிடுவது அவசியமானதாகும். ஏனெனில் ஒருபுறத்தில் பனந்தொழில் வல்லுனர் சமூகத்தின் மாற்றத்தில் இந்நிறுவனங்களின் பங்கினைப் பார்ப்பதும், மறுபுறம் இயல்பான புறநிலைச் சமூக மாற்றத்தினுள் இச்சங்கங்களின் செயலாற்றுகையும் அதுசார்ந்த மக்கள் தொகுதியின் வாழ்நிலை மேம்பாடும் ஒருங்கே வைத்து நோக்கப்பட வேண்டிய முதன்மையான தேவையும் உள்ளது. இவ் இரு அணுகுமுறைகளின் வழியேதான் இந்த மக்கள் தொகுதியின் சமூக மாற்றத்தினை வெளிக்கொணரமுடியும்.

## பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் பணிகளும் சமூக மாற்றமும்

இந்த நிறுவனங்களின் தோற்றத்தினாலும், அதன் பணிகளினாலும் அதுசார்ந்த சமூகத்தில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டதனை மறுக்கமுடியாது. இருப்பினும் நாற்பது ஆண்டுகளைக் கொண்ட இச்சங்கங்களின் வரலாற்றுச் சாதனைதான் என்ன? அது இன்றைய சமூக வாழ்க்கை முறைகளுக்கும், சமூக இயங்கியலுக்கும் பொருத்தப்பாடு கொண்டதாக நகர்கிறதா என்ற சிந்தனைகளும், ஆய்வுகளும் அவசியமாகின்றன. இந்த வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சிந்திக்கமுடியும்.

01. உலகின் பல்வேறு சமூகங்களைப் போலவே இலங்கைத் தமிழர் சமூகத்திலும் மிக இறுக்கமான சமூக அடுக்கமைப்பு நிலவி வருகின்றது. சாதியப் பிடிமானங்கள் அதிகமுள்ள சமூகத்தில் குறிப்பிட்ட சில சமூகப்பிரிவினர் அவர்களின் தொழில்சார்பாக வலுவாக அடையாளப்படுத்தப்பட்டே வருகின்றனர். சமூகப் பிரிவினரிடையே தொழில் குறித்த ஏற்றத் தாழ்வுகள், ஏளனப் பார்வைகள் என்பனவும் தவிர்க்கமுடியாதது. இது 'மரபுரிமை' என்ற நிலை ஆரம்ப காலங்களில் மட்டுமன்றி இன்றுவரை கருத்தாக்கங்களாக நிலைபெற்றுள்ளதுடன், கருத்தியலுக்கு அப்பால் செயன்முறை ரீதியான சுரண்டல்கள் இருந்துவந்த தருணத்திலேதான் இச்சங்கங்கள் தோன்றின. சுரண்டல்களை எதிர்கொள்ள வேண்டிய தேவை அந்த சாதிப் பரிவினருக்கு ஏற்பட்டது. நிலவுடமை அமைப்பு சாதியப் பிடிமானங்களுடன் கட்டமைக்கப்பட்டதால், இத்தகைய சுரண்டலை வெற்றிகொள்ள சாதியக் கட்டமைப்பில் அடி நிலையிலிருந்த பனந்தொழில் வல்லுனர்கள் தம்மை ஒரு ஒருங்கிணைந்த தொழிலாளர் வர்க்கமாக வெளிக்கொணரும் வகையில் இந்தச் சங்கங்களை உருவாக்கினர். அதனை ஒரு சுரண்டல் எதிர்ப்பு போராட்டத்துக்கான சக்தியாக முன்னெடுத்தனர். இச் சங்கம் அமைந்தவுடன் 8,500 சீவல் தொழிலாளர்களின் அங்கத்துவமும் முப்பது நிறுவனங்களும், 450 பதவி அலுவலர்களும் இருந்ததாக நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன. கார்ல்மாக்ஸ் கூறுவதுபோல் சுரண்டலை எதிர்த்துப் போரிடும் ஒரு தொழிலாளர் சக்தியாக இந்த நிறுவனங்கள் சமூக மாற்றத்துக்கு வழிவகுத்தன.

02. மர உரிமை, நில உரிமை தொடர்பிலான சுரண்டலை இச்சங்க உருவாக்கம் தவிர்த்ததால் ஒரு சமூக மாற்றம் சாத்தியமானது என்பது உண்மை. ஆனால் இச்சங்கத்துக்கான சாதிய அடையாளம் இன்றுவரை நிலைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கான அடிப்படைகளில் ஒன்று பாரிய தொழில்நுட்பவியல் மாற்றங்களின் அறிமுகம் ஏற்படவில்லை. சமூக மாற்றம் தொழில்நுட்ப ரீதியாக விஞ்ஞானத் தன்மை பெறும்போது மரபுவழி இழிநிலை

அடையாளத்தை இழப்பதன் மூலமான மாற்ற மாகின்றது. இந்த மாற்றம் முக்கியமானது. ஏனெனில், எதிர்காலத்தில் தொழில்செய்ய வல்லுனர்கள் முன்வராதுபோகும் நிலை எற்படும். புலப்பெயர்வுகளின் வழியான செல்வத் தேட்டமும், அதன் வழியான புதிய தொழில் முதலீடுகளும், மற்றும் கல்விசார் விருத்தி நிலையும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்தவண்ணமே உள்ளதால் சங்கங்கள் தாம் சார்ந்த செயற்பாடுகளை தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்களுடன் முன்னெடுக்கவேண்டியுள்ளது. 'கள் சீவுதல்' என்ற நிலைக்கு அப்பால் சென்று பனைவள ஆராய்ச்சிப் பயிற்சிகளிலும், பனம்பொருள் உற்பத்திப் பரவலாக்கலும் சந்தைப் படுத்தலும் என்ற அடிப்படைகளிலும் விரிவான மாற்றங்கள் அறிமுகமாகவேண்டிய தேவை நெருங்கியுள்ளது. 1975ல் ஏற்பட்ட சீனி விலை உயர்வின்போது வடபகுதியில் 71 வெல்ல தொழிற்சாலைகளும், 03 பனஞ்சீனித் தொழிற்சாலைகளும் 117 இலட்சம் ரூபா செலவில் இச்சங்கங்களால் நிறுவப்பட்டமை பாரிய பாய்ச்சல் ஆகும். இன்று அவற்றில் தொழிற்படாத நிலையில் பல உள்ளன என்பதும் மறுக்கமுடியாது. ஆனால் வெல்ல உற்பத்தித் தொழிலின் நவீனமாக்கம் இச்சங்கங்களின் வாயிலான வேலை வாய்ப்பு, சாதி அடையாள இழப்பு என்பவற்றை நிச்சியம் தரவல்லது.

03. பெண்களை வலுவூட்டல், பெண்களை மேம்பாட்டில் பங்காளியாக்குதல் என்பன இன்றைய சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் முக்கிய கருப்பொருளாகும். இதனை இச்சங்கங்களும் கருத்திலெடுத்துள்ளமை சமூதாய ரீதியில் பெண்களின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. இச்சங்கங்களின் உபவிதிகளின்படி இரண்டு பெண்களின் பிரதிநிதித்துவம் கிளைக்குழுக்கள் வழியாக அமையமுடியும். அத்துடன் 'உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்கள்' என்ற பெண்கள் அமைப்பாக்கச் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. இதன்மூலம் பனங்கற்காரம் செய்தலில் ஈடுபடுத்தல், மகளிர் அடிப்படைக் கல்வி வழங்கல், சுயதொழில் அபிவிருத்திக் கடன் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் பெண்களை மையப்படுத்தி செய்யப்பட்டு வந்தாலும் அந்தச் சமூகங்களின் பெண்களின் அணிதிரட்டல் போதுமானதாக இல்லை. குறித்த சாதிப் பெண்கள் மாத்திரமன்றி சமூகத்தின் ஏனைய பெண்களும் ஈடுபடக்கூடிய பனம்பொருள் உற்பத்தி நடவடிக்கைகளை தொழில் நிறுவனமாக்கும் சக்தியை இச்சங்கங்கள் விருத்தி செய்யும் போது அது 'பெண்கள் சமுதாய வலுவூட்டலுக்கும், மேலெழுகைக்கும்' வழிவகுக்கும். இதற்காக இன்று புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் பயிற்சிகள், நிதியுதவிகள் பெறப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

04. ஒரு சங்கத்தின் அடிக்கட்டுமானத்தில் ஏற்படும் மேம்பாடு நிச்சயம் சமூக மேம்பாட்டுடன் இணைந்ததாக அமைதல் வேண்டும். இல்லையெனில் சங்கத்துக்கும் பயனாளிச் சமூகத்துக்குமான இடைவெளி அதிகரித்து மோசமான நிலைமைகள் உருவாகிவிடும். 1982ல் சங்கங்கள் தமது காணி, கட்டட வசதிகளின் அதிகரிப்புக்கான தீவிர முன்னெடுப்புக்கசை் செய்து இன்று வரை அது விருத்திப் பாதையிலே சென்றுள்ளது. சங்கங்களுக்கான உத்தியோகத்தர் நியமனங்கள் அதிகரிக்கப்பட்டன. இவை குறித்த சமூகத்தவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள், வாழ்க்கைத் தர உயர்வுகளுக்கு வழிவகுத்தமை பொருளாதார மற்றும் உள ரீதியிலான மாற்றங்களைத் தூண்டின என்பது மறுக்கமுடியாதது. ஆயினும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் விபத்து நிதி வழங்கும் திட்டம், அங்கத்தவர்களின் சேமிப்புக்கான இலங்கை வங்கி அறக்கொடைத் திட்டம் போன்ற செயற்பாடுகளுக்கு அப்பாலான மிகப் பாரிய சமூக அடிக் கட்டமைப்பு மாற்றங்களை உருவாக்கும் வலுவை இச்சங்கங்கள் பெறுதல் வேண்டும். தொழிலாளர்கள் குடியிருப்புக்களை மீளமைத்தல், பனை வளமுள்ள பகுதிகளில் குடியிருப்புக்களை அமைத்தல், அவர்களின் சமூகமட்ட நிறுவனங்களை வலுவூட்டல் போன்ற நடவடிக்கைகளை அதிகரிக்கும்போது தான் சமூகமாற்றம் மேலும் சாத்தியமாக்கப்படும்.

05. சங்கங்கள் உள்ளார்ந்த நிலையில் ஏற்படுத்தும் சமூக மாற்ற வேகத்திலும் உலகளாவிய பண்பாடு மற்றும் சமூக மாற்றங்களின் பரவல் (Diffusion) அதிகமானது. பன்னம் செய்தல் தொழிலை இன்று அந்தச் சமூகம் பாரிய அளவில் பின்னடைய விட்டுள்ளது. இதற்கு இலகு எனக் கருதப்படும் பிளாஸ்ரிக் போன்ற பாவனை முக்கியமானது. எனினும், பொதுமக்களிடம் எமது பண்பாட்டின் பேறுகளாக பன்னம் தொழில்சார் உற்பத்திகளை பாவிக்கும் நாட்டங்களை அதிகரிக்கவைக்கும் மாற்றங்கள் அவசிய

மாகின்றன. யாழ்ப்பாணத்து பண்பாட்டின் ஆணி வேரைப் பாதுகாக்கவேண்டிய ஒரு தொழில் முறைசார் சமூகத்தின் பின்னடைவாக இதனைக் கருதலாம்.

06. ஒரு சமூகத்தின் மேலெழுகை என்பது வெறுமனே பொருளாதார பலம், கூட்டுறவு நிலை, வறுமை தணிப்புப் பணிகள் என்பவற்றால் கைகூடுவதில்லை. இவை யாவும் சமூக மாற்றத்துக்கான முன்தேவைப்பாடுகளாக அமைந்தாலும், இவற்றுக்கும் மேலாக ஒரு சமூகத் தொகுதியின் அரசியல் பங்கேற்பும், அரசியல் பிரதிநிதித்துவமும் மாற்றத்துக்கான சமூக சக்தியை அதிகரிக்கும். இதில் சங்கம் சிரத்தை காட்டியுள்ளது. சங்கானைச் சங்கத் தலைவராக இருந்த சீவல் தொழிலாளி திரு சு.நடேசு என்பவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்டசபை உறுப்பினராக இருந்ததனை சங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே திரு வி.ஜி.தங்கவேல் பனை அபிவிருத்திச் சபை சார்ந்து தேர்தல் போட்டியில் ஈடுபட்டார். திரு கி.சிவநேசன் அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தப் பிரதிநிதித்துவங்கள் யாவும் அந்த சமூகங்களின் அடித்தளத்திலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முடுக்கிவிடும் வல்லமைகளை போதுமானளவு கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. எனினும், வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் தகுந்த ஒரு அரசில் பங்கேற்கும் பிரதிநிதித்துவமும் சமூக மாற்றத்துக்கான வழி என்பது முக்கிய சிந்தனைக்குரியது. இது குறித்த சமூகத்து வலுவுடன் சம்பந்தப்பட்டதாகும்.

07. இன்றைய உலகளாவிய சமூக மாற்றப் போக்குகளில் உலகமயமாக்கம் மனிதர்கள் மீதிலே திணித்துள்ள முக்கிய அம்சம் அடையாள இழப்புக்களின் வழியான சமூகமாற்றம் என்பது. இது எந்தளவுக்கு எமது சமூக அமைப்புக்கு பொருத்தமானது என்பது கேள்விக்குரியது. ஆயினும் சமூக மாற்றங்களை எட்டுவதற்குரிய பொதுநிலை நியமங்கள் சிலவற்றை விளங்கிக்கொள்ள இச்சிந்தனை இச்சங்கங்களுக்கு உதவலாம். கல்வி, பயிற்சி என்பவற்றை பெறுவதன்மூலம் இது சாத்தியமாகலாம்.

**இலங்கையில் பனை வளரும் பிரதேசங்களும் அவற்றின் எண்ணிக்கையும்**

| | மாவட்டம் | தொகை |
|---|---|---|
| 01. | யாழ்.மாவட்டம் | 3,500,000 |
| 02. | கிளிநொச்சி | 3,500,000 |
| 03. | மன்னார் | 3,000,000 |
| 04. | முல்லைத்தீவு | 500,000 |
| 05. | வவுனியா | 8,000 |
| 06. | அனுராதபுரம் | 40,000 |
| 07. | மட்டக்களப்பு | 200,000 |
| 08. | அம்பாறை | 40,000 |
| 09. | திருகோணமலை | 210,000 |
| 10. | புத்தளம் | 120,000 |
| 11. | அம்பாந்தோட்டை | 2,000 |
| | மொத்தம் | 11.200.000 |

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களை எதிர்வரும் நூற்றாண்டில் மேலும் பன்மடங்காக அபிவிருத்தி செய்வதற்குகந்த நவீன விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவ தந்திரோபாயங்கள்

## The Modern Scientific Suitable Management Stratagems to Develop the Palm Development Co-Operative Societies in Future Centuries



**இளையதம்பி சுப்பிரமணியம்** (B.A Ceylon),
**இளைப்பாறிய அதிபர்,**
**இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்.**
**உபதலைவர்,**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

நவீன உலக சமூக மேம்பாட்டுக்கும் (Modern World Social Improvement), மனிதனின் வளமான வாழ்வுக்குகந்த (Sweet life of human), பொருளாதார, கலாச்சார அபி விருத்திக்கும், கல்வி மறுமலர்ச்சிக்கும் (Education Renaissance), உலகெங்கும் பாரிய ஆல் விருட்சமாக வேரூன்றி வியாபித்துள்ள "உலக கூட்டுறவமைப்பே" (World Co-Operative Movement), புனிதமான கருவூலமாகவும் (Purity Treasure), பெருமதிப்புமிக்க சொத்தாகவும் (Large Valuable Asset), விளங்குவதால், 2009ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி நடைபெற்ற "84வது ஐக்கிய நாடுகள் மகாசபையின் வருடாந்த பொதுக்கூட்டம்" (Annual General Meeting of the large international contres organization) 2012ம் ஆண்டை "சர்வ தேச கூட்டுறவு அபிவிருத்தி ஆண்டு" பிரகடனப் படுத்தி (Declared as 2012 year is international co-operative development year) உலக கூட் டுறவு அமைப்பை வலுவூட்டி அபிவிருத்தி செய்ய துரித நடவடிக்கைகயை மேற்கொண்டுள்ளமை பெருமகிழ்ச்சியுடன் மனம்கொள்ளத்தக்கதாகும்.

சர்வதேச நாடுகளும், கோடிக்கணக்கான சர்வதேசக் கூட்டுறவாளர்களும் சர்வதேச கூட்டுற வமைப்பை வலுவூட்டிப் பலப்படுத்துவதற்கு அரும்பெரும் நற்பணிகளை நல்கிக்கொண்டிருக் கும் இப்பொன்னான காலகட்டத்தில், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங் களினதும், கொத்தணிகளினதும் நான்கு தசாப்த நிறைவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக "கற்பகதரு" என்ற பெயரினையுடைய மலரொ ன்றை வெளியிட முன்வந்துள்ள அரிய சந்தர்ப் பத்தில், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணிகளும், வட மாகாண சமாசமும், பேரிணையமும் பனை தென்னை வல்லுநர்களின் அறிவையும் (Educatio n), ஆற்ற லையும் (Ability), அனு பவத்தையும் (Experience), ஆளுமையையு ம் (Personality), நல் லொழுக்கத்தையும், நற் பண்புகளையும் (Excellent moral character), தொழில் நுணுக்கத்தையும் (Techniques), பன் மடங்காக அதிகரித்து குடும்பக் கௌரவம் மிக்க (Family dignit), இலட்சியவாதிகளாகவும் (Idealist), நற்பிரசைகளாகவும் (Excellent Human), மிகச் சிறந்த பனை தென்னை வல்லுநர் களாகவும் (Palm product mighty man or powerful man) உருவாக்கியமை பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்படவேண்டிய மாபெரும் சாத னையாகும்.

மேலைத்தேச நாடுகளான இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிடன், இத்தாலி, டென்மார்க், நோர்வே, கனடா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளி லும், ஆசிய நாடுகளான இஸ்ரவேல், யப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளிலுமுள்ள "கூட் டுறவு மக்கள் நிறுவனங்களைப் போன்றும்" (Co-operative peoples institutions) "கூட்டுறவு சமூக நிறுவனங்களைப் போன்றும்" (Co-operative social institutions) பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், அவற்றின் கொத்தணிகளும் சமாசமும், பேரிணையமும் பூர ணத்துவமான மக்கள் நிறுவனங்களாகவும், சமூக நிறுவனங்களாகவும், வலுவுள்ள பாரிய நிறுவனக் கட்டமைப்பாகவும் வியாபித்துள்ளமை கற்பனை

யிலும் சிந்திக்கமுடியாத மாபெரும் வலுவுடைய சாதனையாகும்.

இலங்கையில் வடபகுதியில் 1972ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் நிதி யமைச்சராகவிருந்த "ஜனநாயக சோசலிசவாதி யாகவும்" (Democracal Socialist), "தலைசிறந்த வலுவுள்ள தீர்க்கதரிசியாகவும்" (excellent powerful diplomat) விளங்கிய அமரர் டாக்டர் என்.எம்.பெரேராவின் அப்பாவிகளான வறிய ஏழைத் தொழிலாளர்களை ஊக்குவித்துப் பாது காக்கும் "சமூகமயமாக்கல் என்ற பாரிய கருது கோளினால்'' (large socialistic hypothesis) 1972ம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்பட்டுவரும் கடந்த நான்கு தசா ப்தங்களாக (1972-2012=40) இப்பாரிய சிறந்த கூட்டுறவு நிறுவனங்கள் பல நூற்றாண்டு கால மாக சொற்களுக்குட்படுத்தி வர்ணிக்கமுடியாத தாங்கமுடியாத முதலாளித்துவத்தினதும் (Capitalist), பெருநிலப்பரப்புடைமையாளர்களினதும் (Large land proprietors) சுரண்டல்களுக்கும், சித்திரவதைகளுக்கும், சாதி, இன, மத, பிரதேச முரண்பாடுகளுக்கும் (Social conflicts), சுயநல வாதத்திற்கும் (Selfishness), அநீதியான, நியாய மற்ற வாழ்வுக்கும் (Life of inequitable) உட் பட்டு வாழ வழியின்றி ஒழுங்கில்லாத, குழப்ப மான (Confusion) பரிதாபகரமான, நவீனமயப் படுத்தி, நாகரீகமடையாத (Unmodernize and Uncivilized) பரிதாபகரமான சோகம் நிறைந்த நிலையிலிருந்த பனை தென்னை வல்லுநர்களின் நவீனவாழ்வில் "தொழில் வளமும்'' (Labour provisions), கல்வி வளமும் (Educational provisions), செல்வவளமும் (Weaith provisions) வாழ்க்கை வளமும் (Life provisions), பண் பாட்டு வளமும் (Cultural provision) கொண்ட நவீன காலக் கோட்பாடுகளுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப (Modernization) புனர் நிர்மாணம் செய்து (Rehabilitation) "ஒரு புனித மான பொற்காலத்தை" (Purity golden period) உருவாக்கியமை, உலக கூட்டுறவாளர் அனை வரும் போற்றிப் புகழக்கூடிய "மாபெரும் குடும்ப, சமூக, கலாச்சார மறுமலர்ச்சியாகும்" (Great large family, Social and cultural renaissonce)

மேற்படி மாபெரும் கூட்டுறவுச் சாதனை களை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்களை எதிர்வரும் நூற்றாண்டுகளில் மேலும் தலைசிறந்த வலுவுள்ள நிறுவனங்களாக வடி வமைப்பதற்குகந்த நவீன விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவ தந்திரோபாயங்களை ஆய்வு செய்து முன்மொழிவது "நவீன ரீதியிலான தலை சிறந்த விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவ அணுகுமுறையாகும்'' (Excellent modern scientific management approach) அவை அனை த்தும் பின்வருமாறு,

### 01) கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் Member of Co-operative Society

பொதுப் பொருளாதாரத் தேவையும், போதிய அறிவும், ஆற்றலும், அனுபவமும், ஆளு மையும், சங்கத்தின்மீது போதுமான விசுவாசமும், கரிசனையும், சங்கச் செயற்பாடுகளில் கூடுத லான ஈடுபாடுள்ள தூய்மையான சுத்தமான அங் கத்தவர்கள் (Purity members) கூட்டுறவுச் சங் கங்களின் வெற்றிக்கு கருவூலமாகவுள்ளனர்.

ஆதலால் பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் பனை தென்னை வல்லுநர்கள் அனைவரையும் தமது சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களை பலப்படுத்தினால்தான் கூட்டுறவமைப்பின் மூலம் 'பாரிய உலக கூட்டுறவு சமுதாயத்தை" (Large world co-operative society) இலகுவில் தோற்றுவிக்க முடியும். தொழில்புரியத் தகுதியும் வலுவுமுள்ள அங்கத்துவ தகுதியுடைய பனை தென்னை வல்லுநர்களின் மொத்தத் தொகையில் எழுபத்தைந்து வீதத்திற்கு மேற்பட்டோர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களில் அங்கத்தவராக இணைந்து சிறப்பாக செயற்படுவது பாராட்டுக்குரியதாகும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் தமது சங்கத் தின் அயராத முயற்சிகளால் மனிதத் தன்மை யுள்ள (Human) புனிதமான அங்கத்தவராக தோற்றுவிக்கப்பட்டிருப்பினும், எதிர்வரும் நூற் றாண்டுகளில் பனை தென்னை வல்லுநர்களின் அறிவையும், ஆற்றலையும், பண்பையும் அபி விருத்தி செய்ய பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பாலர் பாடசாலை களையும், மகளிர் கல்வி நிலையங்களையும், முதியோர் கல்வி நிலையங்களையும், வாசிக சாலைகளையும், நூல் நிலையங்களையும் உரு வாக்கி அங்கத்தவர்களின் கல்வி அபிவிருத் திக்கு அயராது உழைக்கவேண்டியது

சமூகப் பணியாகும். கூட்டுறவு சமூகவியல், வாழ்க்கைக் கல்வி, பண்பாட்டியல், முகாமையியல் போன்ற துறைகளில் நூல்களையும் சஞ்சிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுதல்மூலம் பனை தென்னை வல்லுநர்களின் வாழ்வை மேலும் பன்மடங்காக ஒளிமயமானதாக்கலாம். கூட்டுறவு அறிவும், ஆற்றலும், அனுபவமும், ஆளுமையுமுள்ள அங்கத்தவர்களே கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கும், நற்செயற்பாட்டுக்கும் உரமாகவும், கருவூலமாகவும் உள்ளனர். ஆதலால் அங்கத்தவர்களின் அறிவை அபிவிருத்தி செய்வது கூட்டுறவு நிறுவனங்களின் முக்கிய நோக்கமாகும்.

கல்வி அறிவற்ற அங்கத்தவர்கள்மூலம் கூட்டுறவு நிறுவனங்களை வலுவுள்ள நிறுவனங்களாக உருவாக்குவது முயல்கொம்பாகவுள்ளது. இந்நிலையில் "கூட்டுறவைப் பற்றி பூரண அறிவற்றவன் கூட்டுறவின் ஜென்ம விரோதி" (Co-operative uneducated member is greatst enemy of the co-operative institution) என கூட்டுறவுத் தந்தை றொபேட் ஓவன் இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் மொழிந்த ஆங்கில முதுமொழி எமக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

## 02) கூட்டுறவாளரின் வலுவான தலைமைத்துவம்
## Powerful Leadership of Co-operators

கூட்டுறவாளர் தலைமைத்துவமே கூட்டுறவியக்கத்தின் தோற்றத்திற்கும், அபிவிருத்திக்கும் ஊன்றுகோலாகும். அமரத்துவமடைந்த கூட்டுறவுத் தந்தை றொபேட் ஓவன், சேர் ஹோரேஸ் பிளங்காட், வன்சிஸ்ராட் நீல், வில்லியம் தொம்சன், றபேஸ்சன் எம்.ரி. ஹேரிக், வி.எல்.மெத்தா, கல்வேட், வீரசிங்கம் போன்ற கூட்டுறவு மூதறிஞர்களின் அறிவும் ஆற்றலும் அனுபவமும் ஆளுமையுமே உலகக் கூட்டுறவியக்கத்தின் தோற்றத்திற்கும் மேம்பாட்டுக்கும் மூலவித்தாக அமைந்தது. "கூட்டுறவாளர் தலைமைத்துவ வலுமூலம்" (Powerful of Co-operators Leadership) கூட்டுறவியக்கத்தைப் பலப்படுத்தவும் "பாரிய உலக கூட்டுறவுச் சமூகத்தையும் " (Large world co-operative society) மிக இலகுவில் தோற்றுவிக்க முடியும்.

ஒற்றுமையும், இலட்சியப் பற்றுமில்லாது, பல பொருளாதார, சமூக, கலாச்சார இடர்களுக்குட்பட்டு, சிதறுண்டு விலங்குகள்போல் வாழும் அப்பாவி மக்கள் அனைவரையும் தமது கூட்டுறவறிவினாலும், ஆற்றலினாலும், ஆளுமையாலும் ஒற்றுமைப்படுத்தி, இலட்சியமயப்படுத்தி, அவர்களுக்கு போதிய அறிவும், பயிற்சியும், ஆலோசனையும் வழங்கி, அவர்கள் அனைவரையும் நன்மக்களாக்கி, ஒரு கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கி, அவர்கள் அனைவரையும் அச்சங்கங்களில் விசுவாசமும், பற்றுமுள்ள புனிதமான அங்கத்தவர்களாக இணைத்து, அவர்களின் வளமான வாழ்விற்காக அல்லும், பகலும் அயராது உழைக்கும் கூட்டுறவாளர் வலுவே கூட்டுறவாளர் தலைமைத்துவமாகும்.

உலகமெங்குமுள்ள நவீன கூட்டுறவாளர் அனைவரும், அமரத்துவமடைந்துள்ள கூட்டுறவு மூதறிஞர்களின் கூட்டுறவுத் தலைமைத்துவ வலுவை அடியொற்றிச் சிறப்பாகச் செயற்பட்டு, தமது கூட்டுறவு அறிவையும் (Co-operative and Mangement Knowledge), ஆற்றலையும் (Ability), அனுபவத்தையும் (Experience), ஆளுமையையும் சமூக நோக்கையும் (Service and social motive), பாரபட்சமற்ற நடு நிலைமையையும் (Impartial), விடாமுயற்சியையும் சுறுசுறுப்பையும் (Hard working and quick) விட்டுக்கொடுத்தலையும், சகிப்புத் தன்மையையும் (Give and take and endurance police), நேர்மையையும் வாய்மையையும் (Honest sincere and truth), நல்லொழுக்கத்தையும். நற்பண்பையும் (Excellent Moral charator) பன்மடங்காக அபிவிருத்தி செய்து "மகத்துவம் மிக்க கூட்டுறவு இலட்சியவாதியாகச் செயற்பட்டால்" (Honourable co-operative Idealistics) மட்டுமே கூட்டுறவமைப்பை பலம்பொருந்திய அமைப்பாக உருவாக்கலாம்.

## 03) சங்கத்தின் தலைசிறந்த நெறியாளர் குழு
## Excellent Board of Directors of the Society

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைப் பிரதிநிதிகளால் தமத சார்பில் குறித்த கூட்டுறவுச் சங்கத்தினை நடத்துவதற்கென பொதுச்சபைப் பிரதிநிதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் சங்கத்தின் நிர்வாக சபையினரே சங்கத்தின் நெறியாளர் குழுவாகும். நெறியாளர் குழுவில் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது அல்லது பதின்மூன்று அல்லது பதினைந்து பிரதிநிதிகள் வரை பதவி வகிக்கலாம். நெறியாளர் குழு உறுப்பினர்களின் தனித்

தனியான ஒற்றை எண்களில் (Single numbers) கட்டாயம் இருக்க வேண்டும். நெறியாளர் குழு உறுப்பினர் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சமூகம் கொடுத்தால் மட்டுமே நெறியாளர் குழுக் கூட்டத்தைக் கூட்ட முடியும். அரைவாசிக்கு மேற்பட்டோரே கோரமாகும்.

சங்கப் பொதுச்சபைத் தீர்மானங்களை அமுல்படுத்துதல், சங்கத்தை சிறப்பாக நிர்வகித்தல், சங்கத்தின் நாளாந்தச் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், பொதுச்சபைத் தீர்மானங்களுக்கு அமைய தேவைப்படும் வளங்களைப் பெற்று, சங்கத் தொழிற்பாட்டில் பயன்படுத்தல், சங்கத்தின் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவுசெய்யத் தேவையான பணியாளர்களை நியமித்தல், அவர்களிடமிருந்து உச்ச வேலைகளைப் பெற்று சங்கத்தை வலுவுடன் நிர்வகித்தல், பணியாளர்களைக் கட்டுப்படுத்தல், சம்பளம் வழங்கல், ஊக்குவித்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பொதுச் சபைத் தீர்மானத்துக்கு அமைய நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், விற்றல், ஈடுவைத்துக் கடன் பெறல், சங்கத்தின் நாளாந்தச் செயற்பாடுகளான கொள்வனவு, விற்பனை, பங்கீடு, சந்தைப்படுத்தல் போன்ற சகல செயற்பாடுகளையும் சிறப்பாக நடத்துதல், சங்கத்தின் விற்பனையையும் இலாபத்தையும் அதிகரித்தல், நட்டங்களையும் சேதங்களையும் முற்றாகக் கட்டுப்படுத்தல், சங்கச் செயற்பாடுகளை நிறைவுசெய்ய உபசபைகளைத் தெரிவுசெய்தல் போன்ற முகாமைத்துவச் செயற்பாடுகள் சட்டரீதியாக நெறியாளர் குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (Legal functions of board of directors of the society)

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பூரணத்துவமான வெற்றி, நெறியாளர்குழு உறுப்பினர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம், ஆளுமை, நேர்மை, விடாமுயற்சி, கடமையுணர்வு, சேவை மனப்பான்மை போன்றவற்றிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது. சகல நெறியாளர்குழு உறுப்பினர்களும் தமது இவ்வாற்றல்களையும், பண்புகளையும் பன்மடங்காக அதிகரித்துக்கொள்ள வேண்டும். சங்கமும் நெறியாளர் குழுவின் இவ்வாற்றல்களை அதிகரிப்பதற்கு உகந்த பயிற்சி வகுப்புக்களையும், கருத்தரங்குகளையும் காலத்திற்கு காலம் ஒழுங்குசெய்து நெறியாளர்குழு உறுப்பினர்களின் திறமைகளையும், பண்புகளையும் பன்மடங்காக அதிகரிக்க வேண்டும். மேலும் சங்கப் பொதுச்சபைக் கூட்டங்களில் நெறியாளர் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்போது பக்கச் சார்புகளையும், சுயநலத்தன்மைகளையும் முற்றாக நீக்கி, இவ்வுயர்ந்த திறமைகளும், பண்புகளுமுள்ளவர்களை மட்டுமே நெறியாளர்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்தால் சங்கங்கள் செயற்றிறன் மிக்க நிறவனங்களாகச் செயற்பட்டு, துரிதமாக அபிவிருத்தியடையும்.

சங்க நெறியாளர்குழு உறுப்பினர்களின் பொறுப்பு (Responsibility) "கூட்டுப்பொறுப்பாக" (Joint Responsibility) சட்டப்படி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நெறியாளர்குழு மேற்கொள்ளும் தீர்மானமொன்றினால் குறித்த கூட்டுறவுச் சங்கத்திற்கு பாதிப்புக்களோ, நட்டங்களோ ஏற்பட்டால், குறித்த தீர்மானத்தை மேற்கொண்ட நெறியாளர்குழு "உறுப்பினர் ஒவ்வொருவரும் தனித்தும், ஒருமித்தும் பொறுப்புடையவர்களாகும்" (Intividually and Joinly Responsibility)

ஒன்பது உறுப்பினர்களுள்ள ஒரு நெறியாளர்குழுவில் ஒரு முக்கியமான தீர்மானத்தை குழு உறுப்பினர்களுள் ஐவர் மட்டும் இணைந்து தீர்மானித்து, அத்தீர்மானத்தால் குறித்த சங்கத்துக்கு ரூபா 200,000 நட்டமேற்பட்டால், இந்நட்டத்துக்கு தீர்மானத்தை மேற்கொண்ட அனைவரும் தனித்தும், ஒருமித்தும் பொறுப்புடையவர்களாக இருப்பதினால், தீர்மானத்தை மேற்கொண்ட ஐவரில் நால்வர் இறந்தாலோ, அல்லது அவர்களிடம் குறித்த நட்டத்தை அறவிடக்கூடிய சொத்துக்கள் எதுவும் இல்லாவிட்டால் ஐந்தாவது நபரின் சொத்துக்கள் அனைத்தையும் சங்கம் சட்டரீதியாக நீதிமன்றம்மூலம் பறிமுதல்செய்து விற்று, சங்கத்துக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 200,000ஐ ஒருவரிடமிருந்து மட்டும் அறவிட்டுக்கொள்ளலாமென்பதே "தனித்தும் ஒருமித்தும்" என்ற பதத்தின் அர்த்தமாகும்.

ஆதலால் நெறியாளர்குழு உறுப்பினர்கள் அனைவரும் தமது கூட்டுப்பொறுப்பை நன்குணர்ந்து தீர்மானங்களை மேற்கொள்ளும்போது குறித்த தீர்மானத்தால் சங்கத்துக்கு ஏற்படப்போகும் அனுகூலங்களையும் (Benefits), பிரதிகூலங்களையும் (Un benefits), இலாப-நட்டங்களையும் (Profits and Losses) நன்கு ஆழ்ந்து சிந்தித்து (Deepthinking) குழு உறுப்பினர்களுடன் நன்கு விவாதித்து (Thingable trhat can be thought of conceivable), தொழில் நுணுக்கங்கள் (Techniquecals) நிறைந்த கூட்டுறவுச்

சங்கத்துக்கு பயன்தரவல்ல நுட்பமான சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டால் நெறியாளர் குழு உறுப்பினர் தமது கூட்டுப்பொறுப்பிலிருந்து தப்பிக்கொள்ளவும், குறித்த கூட்டுறவுச் சங்கம் துரிதமான அபிவிருத்தியடையவும் வழி பிறக்கும்.

மேற்படி பாரிய பொறுப்புக்களையும், கடமைகளையும் முற்றாக அறியாத பலரே இன்று கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாகவும், நெறியாளர் குழு உறப்பினர்களாகவும் பதவிகளை வகிக்கின்றனர். சில கூட்டுறவுச் சங்கங்களில் கோரமில்லாமல் நெறியாளர்குழுக் கூட்டங்கள் நடைபெறுவதையும், நெறியாளர்குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர், நெறியாளர் குழுக் கூட்டக் குறிப்புப் புத்தகத்தையும், நெறியாளர் குழுவுக்குச் சமூகம் கொடுப்பதற்காக பிரயாணப்படி பெறும் பற்றுச்சீட்டையும் நெறியாளர்குழு உறுப்பினரின் வீட்டுக்கு அனுப்பி கூட்டக்குறிப்பு புத்தகத்தில் கையொப்பங்களை பெற்ற சம்பவங்கள் பல ஒழுக்காற்று விசாரணைகளில் வெளிப்படுவதை எம்மால் பரவலாகக் காணமுடிகின்றது. இத்தகைய சட்டவிரோத அசம்பாவிதங்கள் முற்றாகத் தடைசெய்யப்படவேண்டும்.

## 04) திறமைமிக்க கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்
## Efficient Employees of the Co-operative Society

அறிவும், ஆற்றலும், அனுபவமும, ஆளுமையும், நேர்மையும், கடமையுணர்வும், சங்கத்தின்மீதான விசுவாசமும், பற்றும், நம்பிக்கையுமுடைய பணியாளர்களே ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கும், அபிவிருத்திக்கும் உகந்த ஊன்றுகோலாகும்.

நிறுவன பணியாளர்களின் முக்கியத்துவத்தை (Impotance of institutions Employees) "நவீன சமூகவியலின் தந்தை" (Modern father of sociology) மெக்ஸ் வெவர் (Max wewer) பின்வருமாறு விளக்கிக்காட்டியுள்ளார்.

நிறுவனத்தின் சொந்தக்காரர்களும், நிர்வாகிகளும், விஞ்ஞான முகாமைத்துவத் திறனற்றவர்களாகும். இவர்கள் தீர்மானங்களையும், திட்டங்களையும் உருவாக்கும் நிர்வாகிகளே (Administrators) நிறுவனத்தின் நிர்வாகிகள் அடிக்கடி மாறிக்கொண்டேயிருப்பார். இவர்கள் நிறுவனத்தில் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதில்லை. ஆனால் நிறுவனத்தின் பணியாளர்களே நிறுவனத்தில் பல வருடங்கள் நிலைத்திருந்து, நிறுவன நிர்வாகிகள் சிறந்த தீர்மானங்களையும், திட்டங்களையும் மேற்கொள்வதற்குகந்த "தொழிலின் பிரத்தியோக நுணுக்கங்களை" (Technicalities) முன்மொழிந்து நிர்வாகிகளுக்கு உதவிபுரிபவர்களாகவும், நிர்வாகிகள் உருவாக்கும் தீர்மானங்களையும், திட்டங்களையும் "தலைசிறந்த முறையில் அமுல்நடத்துவோராகவும்" (Excellent implement) நிறுவனத்தின் சொத்துக்களையும், மூலவளங்களையும், உற்பத்திக் காரணிகளையும் சேதாரம், அழிவின்றித் தக்கமுறையில் பல வருடங்கள் நிறுவனத்தில் நிலைத்திருந்து, அவற்றைப் பேணிப் பாதுகாத்து, அவற்றின் உச்சப் பயன்களைப் பெறும் வகையில் பயன்படுத்தி அல்லும் பகலும் அயராது உழைப்பவர்களாகவும், நிறுவனத்தின் நாளாந்தக் கடமைகளைச் சிறப்பாக நிறைவுசெய்பவர்களாகவும் நிர்வாகிகளுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டம் (Development Plan)> ghjPL (Budget), கணக்கறிக்கைகள் (Account satatement), வளர்ச்சி அறிக்கை (Development report), சாத்தியக் கூற்று அறிக்கை (Feasible report) நிர்வாகிகளுக்குத் திறம்படத் தயாரித்து வழங்குவோராகவும் விளங்குபவர்கள் நிறுவனத்தின் பணியாளர்களெனத் தெளிவாக விளக்கிக்காட்டியுள்ளார். (References the theory of social and economic organisation max wewer)

மேலைத்தேச நாடுகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் உலகம் பூராவும் போற்றிப் புகழும் மாபெரும் கூட்டுறவுச் சாதனைகளுக்கெல்லாம் கூட்டுறவாளரின் திறமையையும், உழைப்பையும்விட கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் அறிவும், ஆற்றலும், ஆளுமையுமே உரமாகவிருந்ததாக அகில உலக கூட்டுறவுச் சங்க சம்மேளனம் வெளியிடும் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (References co-operative review) ஆதலால் கூட்டுறவுப் பணியாளர்களை அறிவும், ஆற்றலுமுள்ள வல்லுநர்களாக தோற்றுவிப்பதன் மூலமே எமது கூட்டுறவு நிறுவனங்களை முழுமையான நிறுவனங்களாக அபிவிருத்தி செய்ய முடியும். ஆதலால்தான் மேலைத்தேசக் கூட்டுறவாளர்கள் தமது பணியாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதிலும் (Reasonable salary), போதுமான ஊக்குவிப்புக்களை வழங்குவதிலும் (Enough motivation), உற்சாகப்படுதது வதிலும் (Encourage), முன்னேற உதவி செய்வதிலும் (Help to develop) எல்லை கடந்த அக்

கறையையும், கரிசனையையும் செலுத்துவதால் மேலைத்தேச கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரியும் பணியாளர்கள் உலகில் மிக முதன்மை பெற்ற கௌரவமான நிலையில் காணப்படுகின்றனர். இதுபோன்றே யப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளிலும் கூட்டுறவுப் பணியாளர்கள் மிக வளமான கௌரவமான நிலையில் வாழ்கின்றனர். மேலைத்தேச கூட்டுறவாளர்களையும் கூட்டுறவுச் சங்கங்களையும் நாமும் முற்றாகப் பின்பற்றிப் பணியாளர்களை அபிவிருத்தி செய்ய பின்வரும் பணிகளைக் காலம் பிந்தாமல் நிறைவு செய்வதே கூட்டுறவை அபிவிருத்தி செய்ய உகந்த மார்க்கமாகும். அப்பணிகள் வருமாறு,

➢ மேலைத்தேச கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று எமது கூட்டுறவுப் பணியாளர்களும் தமது வாழ்க்கைச் செலவை முழுமையாக நிறைவுசெய்வதற்குகந்த "சட்டப்படியான நியாயமான சம்பளத்தை" (Reasonable legal salary) காலம் பிந்தாமல் வழங்க வேண்டும். நாளாந்தம் எட்டு மணித்தியாலங்களுக்குக் குறைந்த வேலை நேரமே எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களிலும் அமுல்படுத்தப்பட வேண்டும். மேலதிகமாக கடமைபுரியும் மணித்தியாலங்களுக்கு ஒன்றரை மடங்கு மேலதிக நேரச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். வாராந்தமும், மாதாந்தமும், வருடாந்தமும் "சட்டப்படியான விடுமுறை நாட்கள்" (Legal Holiday) யாவும் ஒழுங்காக வழங்கப்படுதல் வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்கள் யாவரும் சங்கத்தில் நிகரமான இலாபத்தை (Net profit) சங்கம் உழைக்க அயராது உழைத்தால் மட்டுமே சட்டப்படியான நியாயமான சம்பளத்தைப் பெற முடியும். நட்டத்திலியங்கும் சங்க கூட்டுறவுப் பணியாளர்கள் சட்டப்படியான நியாயமான சம்பளத்தைப் பெறமுடியாது.

➢ சகல கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள், சுகாதார மருத்துவ வசதிகள், சுகவாழ்வு வசதிகள், குடும்ப சமூக பாதுகாப்பு வசதிகள், அமைதி சமாதான வசதிகள் போன்ற யாவும் கூட்டுறவுச் சங்கங்களால் நிறைவு செய்யப்படவேண்டும்.

➢ எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களிலும் தொழிற்சாலைப் பாதுகாப்பு, காரியாலயப் பாதுகாப்பு, இயந்திரப் பாதுகாப்பு, குடும்ப சமூகப் பாதுகாப்பு, உடல், ஆயுள், வதிவிடம், வாகனம், குடும்ப உறுப்பினர் காப்புறுதிப் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். காப்புறுதிக் கட்டணத்தில் ஒரு பகுதியைச் சங்கமும் மறுபகுதியை பணியாளர்களும் செலுத்த ஒழுங்கு செய்யவேண்டும்.

➢பணியாளர்களுக்குத் தேவையான அவசரகால வசதிகள், கடன்பெறும் வசதிகள், போக்குவரத்து வசதிகள், கடமை நேரத்தில் உணவு விநியோகிக்கும் வசதிகள், பாலர் கல்வி, மகளிர் கல்வி, முதியோர் கல்வி போதிக்கும் வசதிகள், பணியாளர்களின் முதியோர் பாதுகாப்பு வசதிகள், கல்வி, பண்பாட்டு, பொழுது போக்கு, ஒழுக்க வாழ்வு வசதிகள் போன்ற அனைத்தையும் காலம் பிந்தாமல் செய்துகொடுக்கப்படல் வேண்டும்.

➢ தொழிலாளர்களுக்கு பிற்கால வாழ்வுக்குகந்த ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, பணிக்கொடை, ஓய்வூதிய வசதிகள் யாவும் காலம் பிந்தாமல் செய்துகொடுக்கப்பட வேண்டும். இக்கொடுப்பனவுகளில் ஒரு பகுதியைச் சங்கமும் மறுபகுதியை பணியாளர்களும் பொறுப்பேற்கலாம்.

➢ பதிவாளரும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் அங்கீகரித்துள்ள சம்பளத்திட்டங்களுக்கு மேலாகவும் திறம்படக் கடமைபுரியும் பணியாளர்களுக்கு "ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை" (Motivation payment) யும், தூண்டுதல் கொடுப்பனவுகளையும் (Incentive payment) சங்கம் தயாரித்து பதிவாளரினதும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்படுத்தலாம். உதாரணமாக நூறு அலகுகளை உற்பத்தி செய்யும் பணியாளர்களுக்கு ரூபா 200 வீதம் ஊக்குவிப்பும், தூண்டுதல் கொடுப்பனவும் வழங்கினால், இருநூறு அலுகுகளை உற்பத்திசெய்யும் திறமைமிக்க பணியாளருக்கு ரூபா 400 வீதம் தூண்டுதல் கூலியும், ஊக்குவிப்பும் வழங்குவது சட்ட விரோதமான (Illegal) செயலல்ல.

➢ ஒரு கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையமொன்றிலோ, உற்பத்தி நிலையமொன்றிலோ மாதாந்தம் ரூபா 600,000 ஐ விற்பனையாகவோ, உற்பத்தியாகவோ மேற்கொள்ளும் கிளை முகாமையாளருக்கு மாதாந்தம் ரூபா 1,000ஐயும், விற்பனையாளருக்கு ரூபா 500 ஐயும், மாதாந்தம் ரூபா 800,000 ஐ விற்பனையாகவோ, உற்பத்தியாகவோ மேற்கொள்ளும் கிளை முகாமையாளருக்கு மாதாந்தம் ரூபா 1,500ஐயும், விற்பனையாளருக்கு ரூபா 1,000ஐயும், மாதாந்தம் ரூபா 1,000,000ஐ விற்பனையாகவோ, உற்பத்தியாகவோ மேற்கொள்ளும் கிளை முகா

மையாளருக்கு ரூபா 2,000ஐயும், விற்பனை யாளருக்கு ரூபா 1,500ஐயும், ரூபா 1,000,000க்கு மேல் ஒவ்வொரு ரூபா 200,000க்கு மேல் விற் பனை அதிகரிப்புக்கோ, உற்பத்தி அதிகரிப் புக்கோ கிளைமுகாமையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் முறையே ஒவ்வொரு வருக்கும் ரூபா 500ஐ ஊக்குவிப்புக் கொடுப் பனவாகவும், தூண்டுதல் கொடுப்பனவாகவும் மேலதிகமாக வழங்குவதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையையும், உற்பத்தியையும் பன்மடங்காக அதிகரித்து, கூட்டுறவுச் சங்கங் களை துரிதமாக அபிவிருத்தி செய்யலாம். இக் கொடுப்பனவுகளுக்கு பதிவாளரினதும், கூ.ஊழியர் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத் தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இத்தூண் டுதல் கொடுப்பனவு முறை சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அமுல்படுத்தப்பட்டுள் ளமை பாராட்டுக்குரியதாகும். உதாரணமாக நல் லூர் ப.நோ.கூ.சங்கத்தில் இத்தூண்டுதல் கூலி முறை சிறப்பாக அமுல்நடத்தப்பட்டு பூரணத் துவமான வெற்றிகண்டுள்ளது. இத்தூண்டுதல் கொடுப்பனவால் சங்கத்தின் 90வீதமான கிளை நிலையங்களில் விற்பனை பன்மடங்காக அதிகரி த்து, தேறிய இலாபமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் திரு நெல்வேலிச் சந்தியிலுள்ள மக்கள் கடையில் 2011ம் ஆண்டு கார்த்திகை மாதம் விற்பனை ரூபா 1,450,000 ஆக அதிகரித்துள்ளது. கார்த் திகை மாதம் மக்கள் கடை கிளை முகாமையா ளருக்கு தூண்டுதல் கொடுப்பனவாக ரூபா 2,000மும் விற்பனையாளருக்கு ரூபா 1,000மும் தூண்டுதல் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. பல கடைகளும் நவீன சந்தையுமுள்ள திருநெல் வேலி நகரில் இத்தூண்டுதல் கூலிக்கொடுப்பன வால் மக்கள் கடையின் விற்பனை 2012ம் ஆண்டு தை மாதம் ரூபா 1,230,000 ஆகவும், மாசி மாதம் ரூபா 1,060,000 ஆகவும், பங்குனி மாதம் ரூபா 1,210,000 ஆகவும் அதிகரித்துள்ளது. (References shop managemenr the principals of scientific management author P.W.Taylor - Managementr offering I.L.O. Publications)

### 05) கூட்டுறவுச் சங்கங்களை முற்றிலும் சட்டபூர்வமான கூட்டுறவு நிறுவனங் களாக உருவாக்குதல்.

### Completely Implement the Co-operative Institutions as Legal Organization

நாட்டின் பொதுச்சட்டங்களையும், கூட்டு றவுச் சட்ட விதிகளையும், அவற்றுக்கீழான வர்த் தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்கவிதிகளையும் கூட்டுறவுச் சங்கங்களில் முழுமையாக அபிவிருத்திசெய்து, கூட்டுறவுச் சங்கங்களை முற்றிலும் சட்டபூர்வமான கூட்டுறவு நிறுவனங்களாக உருவாக்கிக் கொள்ள வேண் டும். மேற்படி சட்டச்சரத்துக்கள் யாவும் கூட்டுற வுச் சங்கங்களில் தவறாது முற்றிலும் அமுல் படுத்தப்படவேண்டும். சங்கங்களில் அமுல்படுத் தப்படாதுள்ள சட்டச் சரத்துக்கள் யாவும் காலம் பிந்தாமல் அமுல்படுத்தப்படவேண்டும். எடுத்துக் காட்டாக நீண்டகாலமாக அமுல்படுத்தப்படா துள்ள முக்கியமான சட்டச்சரத்துக்களைச் சுட்டிக்காட்டலாம்.

ஒரு கூட்டுறவுச் சங்க நெறியாளர்குழு உருவாக்கும் தீர்மானத்தால் குறித்த கூட்டுற வுச் சங்கத்துக்கு நட்டமேற்பட்டால் "அந்நட் டத்திற்கு குறித்த தீர்மானத்தை உருவாக்கிய நெறியாளர்குழு உறுப்பினர்கள் அனைவரும் தனித்தும், ஒருமித்தும் கூட்டுப்பொறுப்புடையவர்க ளாகும்" ஏழு உறுப்பினர்கள் பதவி வகிக்கும் நெறியாளர் குழுவில் நால்வர் மட்டும் ஒரு தீர் மானத்தை உருவாக்கிக் குறித்த கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூபா 500,000 நட்டமேற்பட்டால், இந்நட்டத்தை குறித்த தீர்மானத்தை எடுத்த நான்கு நெறியாளர்குழ உறுப்பினர்களிடம் சட் டப்படி அறிவிடலாமென்பதும், மூவர் இறந்தாலோ, அல்லது மூவரிடமும் குறித்த நட்டத்தை அற விடச் சொத்துக்கள் எதுவுமில்லாவிட்டால் தீர் மானத்தை மேற்கொண்ட நான்காவது நபரிடமி ருந்து சங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் முழுவதை யும் அறவாக்கலாமென்பதே "கூட்டுப்பொறுப்பு" (Joint responsibilitires) ஆகும். குறித்த தீர் மானத்தை மேற்கொண்ட மூன்று உறுப்பினர்களி டமும் சொத்துக்கள் இல்லாவிட்டாலோ, அவர் கள் இறந்தாலோ சொத்துள்ள உறுப்பினர் ஒரு வரின் சொத்துக்களை நீதிமன்றம்மூலம் கைப் பற்றி அவற்றை விற்று, நட்டம் முழுவதையும் அறவிடலாமென்பதே கூட்டுப்பொறுப்பின் உட் பொருளாகும். இம்முக்கியமான சட்டச்சரத்து முற் றாக அமுல்படுத்தப்படாது சங்கங்கள் தூங்கிக்

கொண்டிருப்பது ஆழ்ந்த கவலைக்குரியதாகும். இச்சட்டச் சரத்தை பூரணமாக அமுல்படுத்தி சங்கத்துக்கு ஏற்பட்ட நட்டங்களை தீர்மான மெடுத்த நெறியாளர்குழுவிடம் அறிவிட்டால் நெறியாளர்குழு உறுப்பினர் அனைவரும் தமது கூட்டுப்பொறுப்பையும் அதன் அபாயங்களையும் நன்குணர்ந்து நன்றாகச் சிந்தித்து சங்கத்துக்கு அனுகூலமான தீர்மானங்களை மேற்கொள்வர். இம்முக்கிய சட்டச்சரத்து நீண்டகாலமாக அமுல் படுத்தப்படாது தூங்கிக்கொண்டிருப்பதே இலங் கைக் கூட்டுறவியக்கத்தின் தோல்விக்குரிய முக் கிய காரணமாகும்.

முடிவடைந்த ஆண்டுக்குரிய கணக் காய்வு அறிக்கை சங்கப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, பொதுச்சபை உறுப்பினர் கள் கணக்காய்வு அறிக்கையை நன்கு பரிசீ லனை செய்து குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி னால்தான் வருங்காலங்களில் கணக்காய்வு அறி க்கை சிறப்பாக அமைவதுடன், சங்கமும் துரித மாக அபிவிருத்தியடையும். ஆனால் அநேகமான கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டங்களில் கணக் காய்வு அறிக்கை விஞ்ஞான முகாமைத்துவ ரீதியாக பரிசீலனை செய்து, குறை, நிறைகளை விமர்ச்சிகாமலுள்ளமை ஆழ்ந்த கவலைக்குரிய தாகும். இதுவும் கூட்டுறவுச் சங்க அபிவிருத் திக்கு முக்கிய தடைக்கல்லாகவுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பனை தென்னை வல் லுநர் தொழிலைப் புரிவோர் மட்டுமே சங்கத்தில் அங்கத்துவத்தைப் பெறமுடியும். பனை தென் னை வல்லுநர் தொழிலைப் புரியாதோர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களில் சட்டரீதியாக அங்கத்துவத்தைப்பெறமுடி யாது. ஆனால், சில பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பனை தென்னை வல்லுநர் பணியைச் செய்யாத ஆசி ரியர், அரச உத்தியோகத்தர் போன்றோர் தமது சுயநலத்தைப் பூர்த்தி செய்வதற்காகவும், பனை தென்னை வளங்களைச் சூறையாடுவதற்காகவும் பனை தென்னை வல்லுநர் பணிகளைப் புரிவோ ராக பாசாங்கு செய்து சங்கங்களில் அங்கத் துவம் பெற்று, நெறியாளர்குழு உறுப்பினர்க ளாகவும், தலைவர்களாகவும் செயற்படுவது ஆழ் ந்த கவலைக்குரியதாகும். இவர்களே இச்சங்கங் களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாகவுள்ளனர். இக்குறையை முற்றாக நீக்குவதற்கு அரச அதி காரிகளும், கூட்டுறவாளர்களும் அயராது உழை க்க வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிச் சட்டச் சரத் துக்கு அமைய பொதுக்கூட்டங்களும், கிளைப் பொதுக்கூட்டங்களும் கிளைக்குழுக் கூட்டங் களும் சட்டப்படி ஒழுங்காக நடைபெறாதுள்ளது ஆழ்ந்த கவலைக்குரியதாகும். அரசாங்க அதிகா ரிகளும், கூட்டுறவாளர்களும் உபவிதிகளுக்க மைய சங்கக் கூட்டங்களை சட்ட ரீதியாக ஒழுங் காக நடத்துவதன்மூலம் ப.தெ.வ.அ.கூ.சங்கங் களை மேலும் பன்மடங்காக அபிவிருத்தி செய் யலாம்.

## 06) சங்கங்களை அபிவிருத்தி செய்வதற் கான நவீன விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவத் தந்திரோபாயங்கள். Modern Scientific Management Stratagems to Develop the Societies

எமது கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரியும் பணியாளர்கள் அனைவரும் "பூர்வீககால துருப்பிடித்த உற்பத்தி, விற்பனை, பங்கீட்டு முறைகளையே" (Antiquities methods of productions selles and distributions of ancient period) நீண்டகாலமாகக் கடைப்பிடித்து வருகின் றனர். இப்பண்டைக்கால உற்பத்தி, விற்பனை முறைகள் மூலம் உற்பத்தியையும் விற்பனையை யும் அபிவிருத்தி செய்து கூட்டுறவுச் சங்கங் களை மேன்நிலைப்படுத்துவது மிகமிகக் கடின மான பணியாகும். ஆதலால் மேலைத்தேச கூட்டு றவுச் சங்கங்களைப் போன்றும், யப்பான், சீனா, இந்தியா போன்ற மிகவேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப்போன்றும் எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் "நவீன ரீதியிலான விஞ்ஞான முறையிலான தொழில் நுணுக்கங்களான உற் பத்தி, விற்பனை, பங்கீட்டு முறைகளை" (Modern scientific techniquecal methods of productstions, selles and distribution) காலம் பிந்தாமல் கைக்கொள்ளுவதே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்யும் உகந்த மார்க்கங்களாகும்.

யப்பான், சீனா, இந்தியா போன்ற அபி விருத்தி அடைந்துவரும் நாடுகளில் "நவீன விஞ் ஞான ரீதியிலான உற்பத்தி நுணுக்கங்கள் மூலமே" (Scientific techniquecals productions methods of modern period) மது உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரத்

தில் ஏறுதல், மரத்தைப் பண்படுத்தல், மதுவை உற்பத்தி செய்தல் போன்ற கடினமான செயற் பாடுகள் யாவும் "ஒழுங்குற அமைக்கப்பட்ட" (Methodical), "இயந்திரமயமாக்கப்பட்ட" (Mechanism), "விஞ்ஞான அணுகுமுறைகள்" (Scientific approach) யாவும் வெற்றிகரமாகக் கைக்கொள்ளப்படுவதால் உற்பத்தியின் அளவும், தரமும் (Production units & value) பன்மடங் காக அதிகரித்து நிறுவனத்தின் உற்பத்தியும், இலாபமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. உற்பத் தியை இயந்திரமயமாக்கியதன்மூலம் உற்பத்தி யாளர்களின் கடினமாக வேலைகள் யாவும் சுல பமான உற்பத்தி முறைகளாக்கப்பட்டுள்ளன. (Difficult production methods made as easily production methods)

மேலைத்தேச நாடுகளிலும், பொதுவு டமை நாடுகளிலும், யப்பான், இந்தியா போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் மதுவிநி யோகிக்கும் கடைகள் யாவும் நவீனமயமாக்கப் பட்டு (modernize) காற்றோட்ட வசதிகள் (Air condition methods) உருவாக்கப்பட்டுள்ளன. எமது பகுதிகளில் உள்ள மது விநியோகிக்கும் கடைகள் நவீனமயமாக்கப்படாதிருப்பது கவனத் தில் கொள்ளவேண்டியுள்ளது. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் மது விநியோகிக்கும் நிலையங்களை தனியார் மது விநியோகிக்கும் நிலையங்களைப் போன்று நன்கு குளிரூட்டி நவீனமயப்படுத்தல்மூலம் மது உற்பத்தி, விற்பனையையும் இலாபத்தையும் பன்மடங்காக அபிவிருத்தி செய்யலாம்.

மேலைத்தேச நாடுகளிலும், யப்பான், சீனா, இந்தியா போன்ற வேகமாக அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளிலும் மது விநியோ கிக்கும் கடைகளில் "நவீன ரீதியிலான மதுப் பங்கீட்டு முறைகள்" உருவாக்கப்பட்டுள்ளன. இம்முறைகள் மூலம் உற்பத்தி, விற்பனை, இலா பம் என்பவற்றைப் பன்மடங்காக அதிகரிக்கலாம். இதற்கேற்ற வழிவகைகளைத் தோற்றுவிக்க வேண்டியது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், கொத்தணிகளின தும், சமாசத்தினதும், பேரிணையத்தினதும் முக் கியமான பங்கு பணிகளாகும்.

**"பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பலம் பொருந்திய சிறந்த நிறுவனங்களாக வளர்க!"**

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பனந்தோட்டங்கள்**

| இடம் | | பிரதேச செயலர் பிரிவு | பரப்பளவு (ஏக்கர்) | ஆரம்பித்த ஆண்டு |
|---|---|---|---|---|
| 01. | மாமுனை | மருதங்கேணி | 50 | 1982 |
| 02. | புளியங்குளம் | வவுனியா | 50 | 1985 |
| 03. | வவுனிக்குளம் | முல்லைத்தீவு | 10 | 1985 |
| 04. | சிங்கைநகர் | பருத்தித்துறை | 500 | 1985 |
| 05. | பிள்ளையாரடி | மட்டுநகர் | 50 | 1986 |
| 06. | நறுவலிக்குளம் | மன்னார் | 15 | 1986 |
| 07. | குடத்தனை | பருத்தித்துறை | 10 | 1998 |
| 08. | புலோப்பளை | பளை | 10 | 1998 |
| 09. | ஊர்காவற்றுறை | ஊர்காவற்றுறை | 10 | 1998 |
| 10. | அராலி | சங்கானை | 10 | 1998 |



சோ.கோகுலதாசன் B.Sc. M.Sc
முன்னாள் பொதுமுகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.

# இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் பனை அபிவிருத்தி அவசியமா?

## முகவுரை

இலங்கையின் இயற்கை மூலவளங்களில் ஒன்றாகிய பனை வளமானது (Borassus flabellifer) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செறிவாகப் பரந்து காணப்படுகின்றது. எமது நாட்டிலுள்ள 11 மில்லியன் பனைகளில் 3.5 மில்லியன் யாழ்ப்பாண மாவட்டத்திலும், 3.5 மில்லியன் கிளிநொச்சி மாவட்டத்திலும், 3.0 மில்லியன் மன்னார் மாவட்டத்திலும், 1.0 மில் லியன் மட்டக்களப்பு, திருகோணமலை, அம் பாறை, அம்பாந்தோட்டை, புத்தளம், முல்லைத் தீவு, வவுனியா, ஆகிய மாவட்டங்களிலும் பரந்து காணப்படுகின்றது. ஆனால் கடந்த தசாப்தங் களில் போர்ச்சூழலினால் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் 2.5 மில்லியன் பனைகள் அழிக் கப்பட்டுள்ளன. என்றாலும் இம்மாகாணத்தில் காணப்பட்ட அதி உயர் பாதுகாப்பு வலயங்க ளில் பனையிலிருந்தது விழுந்த பனம் பழங் களிலுள்ள விதைகள் தாமாகவே முளைத்து இளம் வடலிகளாகவும், பனைகளாகவும் வளர்ந் துள்ளதனாலும் பனை அபிவிருத்தி சபையின தும், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுற வுச் சங்கங்களினதும் வருடாந்த பனம் விதை நடுகைத் திட்டத்தின் மூலமும் 11 மில்லியன் என்ற பனை வள எண்ணிக்கை இன்றும் ஓரளவு நிலை நிறுத்தப்படுகின்றது.

வட கிழக்கு மாகாணங்களில் தற்போது 60,000 குடும்பங்கள் நேரடியாகவும், 25,000 குடும்பங்கள் மறைமுகமாகவும் பனை வளத்தை நம்பி வாழ்கின்றன. குடிசைக் கைத்தொழிலாளர் கள், சீவல் தொழிலாளர்கள், மரக்காலைத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு வகை பனம் சாற்று உற்பத்தியாளர்கள் ஆகியோர் பனை வளத்திலிருந்து நன்மை பெறுவோரில் குறிப் பிடத்தக்கவர்களாவர். ஆனால் இம் மூலவளத் தில் 2% மாத்திரம் சாற்று உற்பத்திற்கு பயன் படுத்தப்படுவது மூலவளமானது வீணடிக்கப்படு வதற்குரிய ஆதாரமாகும். 1972ம் ஆண்டில் தொழில் செய்த 12,000 சீவல் தொழிலாளர்களின் எண்ணிக்கை. 1986ம் ஆண்டு 6,500 ஆகக் குறை ந்து தற்போது இவ் எண்ணிக்கை 4,500 ஆக வீழ்ச்சியடைந்துள்ளமை கவனத்தில் எடுக்கப் படவேண்டும். சீவல் தொழிலாளர்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்து, பனை ஏறும் அபாயம், தொழில் கஷ்டம், நவீன மயப்படுத்தாமை முத லிய காரணங்களினாலேயே சீவல் தொழிலாளர் களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து கொண்டு செல்கின்றது.

## பனையின் பயன்கள்

இலங்கையில் பனை வளத்தில் 58% பெண்பனைகளாகவும், 42% ஆண்பனைகளாக வும் காணப்படுகின்றன. பனம் பழம் பெண்பனை களிலிருந்து மாத்திரம் பெறப்படும். அதேவேளை சாற்று உற்பத்திகளை (பதநீர், கள்) ஆண்பனை களிலிருந்தும், பெண்பனைகிலிருந்தும் பெறக் கூடியதாக உள்ளமை ஓர் அனுகூலமாகும். வரு டம் முழுவதும் "கற்பகத்தரு" மிக நீண்ட கால த்திற்கு பல்வேறு பயன்களைத்தரவல்லது. பழம், சாறு, தும்பு, ஓலை, மரம், கிழங்கு ஆகிய ஆறு உபமூலப்பொருட்களாக பனை வளம் எண் ணூற்றுக்கும் அதிகமான உற்பத்தி பொருட் களை எமக்கு வழங்குகின்றது. ஆனால் விவசா யப்பயிர்கள் அல்லது தென்னை போன்றவற்றை பராமரிப்பது போன்று பனைக்கு நிலப்பண்படுத் தல், நீர்ப்பாசனம், உரப்பாவனை, விவசாய ரசாயனப் பாவனை போன்றவை தேவையற்றது என்பது ஓர் முக்கிய அனுகூலமாகும்.

பனையின் பயன்களின் உபமூலப்பொருட் களின் அடிப்படையில் நோக்கும்போது

சாற்று உற்பத்தி பொருட்களை பதநீர், கள், பாணி, பனங்கட்டி, கல்லாக்காரம், பனஞ்சீனி, வினாகிரி, சாராயம் என்பன குறிப்பிடத்தக்கன. பனம்பழ உற்பத்திகளான பனாட்டு, ஜாம், மென்பானம், நுங்கு, பனங்காய்ப் பணிகாரம், பெக்ரின் என்பவற்றை குறிப்பிடலாம். கிழங்கு உற்பத்திகளாவன ஒடியல், புளுக்கொடியல் என்பனவாகும். பனை ஓலை பொருட்களாவன பாய், கைப்பணிப்பொருட்கள், கால்நடைத் தீவனம் ஆகியன. தும்பு உற்பத்திகளாவன துாரிகை, கழிவறைத்துாரிகை, வீதிதுப்பரவு செய்யும் தும்புத்தடி என்பவற்றை குறிப்பிடலாம். மரப் பொருட்களாவன தீராந்தி, பலகை, தளபாடங்கள் கைப்பணிப்பொருட்கள் என்பன அடங்கும். முன்னைய காலத்தில் அதிக பாவனையிலிருந்த கிணற்றுத்துலா, ஓலைப்பட்டை என்பன கால ஓட்டத்துடன் பாவனையற்றுவிட்டன.

## பனைவள அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிறுவனங்கள்

பனை வளத்தின் உச்சப்பயன்பாட்டை பெற்று பனை வளத்தில் தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காகவும் ஆராய்ச்சி உற்பத்தி மூலம் உச்சப்பயன்பாட்டைப் பெறுவதற்கும் பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களும் பனை அபிவிருத்திச் சபையும் முறையே 01/05/1972 இலும் 07/08/1978 இலும் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்விரு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், ஏற்றுமதி உற்பத்தி, கிராமிய கம்பனி மற்றும் உள்ளூர், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் பனை அபிவிருத்திக்காக செயலாற்றி வருகின்றன. இவற்றைத் தவிர தனியார்களும் உற்பத்திகளிலும் பனம் விதை மீள் நடுகையிலும் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பனை உற்பத்திகளுக்கான மாலை வேளை சந்தைகளும் திக்கம் போன்ற இடங்களில் கூடியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், யாழ் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகம், தேசிய வடிவமைப்பு வலயம், ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகிய நிறுவனங்களும் பனை ஆராய்ச்சியில் தமது பங்களிப்பை வழங்குகின்றன.

## பனை அபிவிருத்தியும் ஆராய்ச்சியும்

பனை அபிவிருத்தி என்பது பனை மரத்தின் அபிவிருத்தி அல்ல. அதாவது பனை மரத்தை நம்பி வாழும் மக்களின் அபிவிருத்தியையே இது குறிக்கும். அதாவது இம்மக்களின் வருமானம் அதிகரித்து இவர்களின் குடும்பத்தார் பொருளாதார, கல்வி, கலாச்சார, ஆன்மீக சமூக ரீதியாக மேம்படும்போது ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டு பிராந்தியம் மேம்பட இறுதியில் தேசிய ரீதியான முன்னேற்றம் ஏற்படும்.

பனையின் பாரம்பரிய உற்பத்திகளின் தரம் மேம்படுத்தப்பட்டு நுகர்வோரினால் விரும்பி கொள்வனவு செய்யக்கூடிய அளவிற்கு இப் பொருட்களை மாற்றும் நடவடிக்கை தொடரும். அதேவேளை பனையின் புதிய உற்பத்திகளை ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது கைதடியில் மீள திருத்தி அமைக்கப்படும் பனை ஆராய்ச்சி நிலையம் தொழிற்படும் போது ஆராய்ச்சி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு ஆராய்ச்சியில் பெறு பேறுகள் தொழில் ரீதியான உற்பத்தி செயற்பாட்டிற்காக மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு அபிவிருத்தி மேம்படுத்தப்படும். உதாரணமாக பனம் பழத்திலிருந்து ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட "பெக்ரின்" தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. பனம்பழ பெக்ரின் பாவிக்கப்படும்போது அந்நிய செலவினை மீதப் படுத்தப்படும். மேலும் பனம் பழத்தின் "காறல்" தன்மையை அகற்றியபோது ஐந்து வகை பிளபலின் (Flaberin) பனம் பழக்கழி பிரித்து எடுக்கப்பட்டன. இது அம்பிசிலின் (Ampicillin) போன்று தொழிற்படும் நுண்ணுயிர்க் கொல்லியாக உள்ளது அவதானிக்கப்பட்டது. இது வர்த்தக ரீதியில் அறிமுகப்படுத்தும்போது பனம் பழத்திற்கு மிகக் கிராக்கி ஏற்படும் என்பது திண்ணம்.

## தேசிய, சர்வதேச கண்காட்சிகளும், சர்வதேச விருதும்

பனை அபிவிருத்தி சபை 1978ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து மாவட்ட, பிராந்திய, மாகாண, தேசிய மட்டங்களில் பல கண் காட்சிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. அவுஸ்திரேலியாவில் கடந்த காலங்களில் நடைபெற்ற கண்காட்சிகளில் சர்வதேச அவதானிகளின் பாராட்டுகளை பனை அபிவிருத்தி சபை காட்சிக்

கூடம் பெற்றமையும் பெருமைக்குரியது. மேலும் 2000ம் ஆண்டிற்கான சர்வதேச மட்ட சிறந்த உற்பத்திகான தங்கப்பதக்க விருதை வியாபார பூர்வாங்க போதனைகள் ஸ்தாபனத்தின் (Business Initiative Directions) சர்வதேச தேர்வுக் குழு பனை அபிவிருத்திச்சபைக்கு வழங்கி கௌரவித்துள்ளது என்பது சபையின் அண்மைக் கால புதிய கண்டு பிடிப்புகளின் சாதனைகள் சர்வதேச மயப்படுத்தப்படுகின்றது என்பதற்கு ஆணித்தரமான ஓர் ஆதாரமாகும். பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களும் பல்வேறு கண்காட்சிகளில் பங்கு பற்றி பாராட்டுக்களை பெறுவதும் பெருமைக்குறிய விடயமாகும்.

## பனை ஆராய்ச்சியின் முக்கியத்துவம்

கடந்த காலங்களில் யாழ் பல்கலைக் கழகம், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் என்பன பனை வளத்தில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றின் பெறுபேறுகள் பயனாளிகளுக்கு உரிய முறையில் சென்றடையாமையினால் ஆராய்ச்சி பெறுபேறுகளில் முழுப்பயனையும் இச்சமூகம் பெற முடியவில்லை. உணவு விவசாய நிறுவனத்தினால் (FAO) கம்போடியாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆராய்ச்சியில் பன்றிகளுக்கு பதநீர் உணவாக வழங்கப்படும்போது பன்றிகளின் வளர்ச்சி இறைச்சி தரம் என்பன மேம்பட்டதனால் தற்போது இது முக்கிய உணவாக ஊட்டப்படுவது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாட்டிற்காக காடு அழித்தல் துரித கதியில் மேற்கொள்ளப்படுவதனால் இயற்கை சமநிலை (Natural Balance) பாதிக்கப்பட்டு பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். ஆகவே மீளக் காடாக்குதல் (Reforestation) படிமுறையில் பனை நடுகை இலங்கையில் எந்தப்பாகத்திலும் சாத்தியமானதும் இலகுவானதுமானதுமான முயற்சியாகும். பனை மீளக் காடாக்குதல் திட்டத்தில் சேர்க்கப்படும் போது மற்றக்காட்டு மரங்கள் போல் நீர்ப்பாசனம் செய்து உரமிட்டு பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. மிருகங்களினாலும், மனிதனாலும் சேதமேற்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் போதுமானது. மேலும் பனை மீளக்காடாக்கலின் நடுகை செய்யும்போது இது காற்று தடுப்பியாகவும் (Wind Breakers) மண் அரிப்பைத்தடுப்பதற்கும் மற்றும் பெரிய மிருகங்கள் மற்ற மரங்களை அழிப்பதை தடுப்பதற்குமான ஒரு வேலியாக பயன்படும்.

மேலும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலத்தில் பனங்கள், தென்னங்கள் விற்பனையிலும் பனங்கட்டி உற்பத்தியிலும் மாத்திரம் ஈடுபட்டிருந்தன. ஆனால் தற்போது பல்வேறுவகையான பனை உற்பத்திகளில் ஈடுபடுவதுடன் சுதேச மருந்துப் பொருள் உற்பத்திகளிலும் ஈடுபடுவதுடன் சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி, ஆன்மீக. அரசியல் துறைகளிலும் ஈடுபட்டு நலிவுற்ற குடும்பங்களை மேம்படுத்துவதில் ஈடுபடுவதும் பாராட்டுக்குரிய அம்சமாகும்.

## மதுசார உற்பத்தி மேம்பாடு

மேலதிகமாக சீவப்பட்ட கள்ளு கடந்த காலங்களில் வீணாக ஊற்றப்பட்டது. இம் மேலதிக கள்ளை முழுமையாகப் பயன்படுத்துவதற்காக 23.02.1984ம் திகதி திக்கம் வடிசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சங்கானை, வரணி வடிசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தரமான மதுசாரம் உற்பத்தி செய்யப்பட்டும் அரசாங்க கலால் வரியினால் பனஞ்சாராய உற்பத்தி செலவுகளை அதிகமாக்கியது. இதை ஈடுசெய்வதற்காக அரசியல் ரீதியான அணுகுமுறையில் 1998, 1999ம் ஆண்டுகளில் 100% கலால் வரி செலுத்தாது விலக்கப்பட்டது. வரி விலக்கு படிப்படியாக 10% ஆக குறைவடைந்து 2005ம் ஆண்டுக்குப்பின் வரிவிலக்கைப் பெற முடியவில்லை. இதனால் உற்பத்தி செலவு அதிகமாகியது. ஆதனால் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டது. உதாரனமாக 2008ம்ஆண்டு அரசாங்கத்திற்கு வடிசாலை மூலம் கிடைத்த கலால் வரி ரூ 54.8 மில்லியன்கள் ஆகும். மேலும் போர் முடிவுற்ற இன்றைய கால கட்டத்தில் கொழும்புச் சாராய வகைகள் பல வட மாகாணத்தில் தாராளமாக மலிவு விலையில் கிடைப்பதனாலும் பனஞ்சாராய விற்பனையில் முன்னேற்றம் அற்றுக் காணப்படுகின்றது.

## பனை அபிவிருத்தி, ஆராய்ச்சி அவசியம்தானா?

இன்றைய கணணி மயப்படுத்தப்பட்ட பூகோள மயமாக்கல் காலகட்டத்தில்

விஞ்ஞான ஆராய்ச்சி வேகத்துடன் எமது பனை ஆராய்ச்சிகளும் வேகமாக மேற்கொள்ளப்படல் தவிர்க்க முடியாதது. ஆராய்ச்சிகள் மூலம் பெறப் படும் பெறுபேறுகளை அமுலாக்குவதற்கு நிதி வளம், பொருத்தமான கல்வித் தகைமையுள்ள மனித வளம் அவசியமாகும். இதற்கான ஏற் பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

பனஞ்சாராயத்தின் விற்பனையை இல ங்கையின் தென்பகுதிக்கு விஸ்தரிக்க நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிங்களப் பகுதி யில் பனஞ்சாராயத்திற்கு அதிக கிராக்கி உள் ளமை குறிப்பிடத்தக்கது.

பனை அபிவிருத்திச் சபை, பனை தென் னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் சகல மட்ட ஊழியர்களுக்கும் காலத்திற்கு காலம் அந்தந்த துறைகளில் ஆற்றல் மேம்பாடு (Capacity Building) கருத்தரங்குகள் மூலம் அவர்களில் ஆற்றலை மேம்படுத்த வேண்டும். இதன் மூலம் புதிய தந்திரோபாயங்களை அவர் கள் பெற்று நடைமுறைபடுத்தக் கூடியதாகவிருக் கும்.

மேலும் பனை சார் நிறுவனங்கள் வெறு மனே வேலைவாய்ப்பு நிறுவனங்களாகக் செயற் படாது. அபிவிருத்தி ஆராய்ச்சிகளுக்கான நிறுவ னங்களாக செயற்பட ஆவன செய்யப்படல் வேண்டும். பொருத்தமான மனித வள ஆளனியு டன் சாத்தியமான திட்டங்கள் அரசியல் பின்புலத் துடன் பொருத்தமான நிதிவழங்கும் நிறுவனங் களுக்கு (Donor Organization) சமர்ப்பிக்கு மிடத்து நிதிபற்றாக்குறை நீங்கிவிடும். அத்துடன் தேவையற்ற அரசியல் தலையீடின்றி அரசியல் ஆலோசனை, வழிகாட்டல் மூலம் பனை அபிவிரு த்தியை உச்ச நிலைக்கு கொண்டு செல்லலாம் என்பது கண்கூடும். 27.10.1993ம் திகதி 790/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க பனை மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டு) சட்டத்தை இறுக்கமாக அமுலாக்குவதுடன், வரு டாந்த பனை மீள் நடுகைத் திட்டத்தையும் துரிதமாக நடைமுறைப்படுத்தி தொடர்நடவ டிக்கை மூலம் மதிப்பீடு செய்து இம் மூலவள எண்ணிக்கையை அதிகரிக்க பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே இன்றைய காலக்கட்டத்தில் தாராள நிதியோட்டத்துடன் நவீன, விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளுடன் பனை வள அபி விருத்தி முழுமையாக நடைமுறைப் படுத்துமிடத்து, பனை வளத்தை நம்பிவாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் அபரிதமாக உயர் வதுடன் பனை எமது இலங்கைத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய வகிபாகமாக இருக்கும் என்பது திண்ணம். ஆகவே பனை அபிவிருத்தி அவசியமே!

**இலங்கையில் பனை மீள்நடுகை**

| ஆண்டு | ஏக்கர் | நடுகைசெய்த விதைகள் |
|---|---|---|
| 1982 | 550 | 220,000 |
| 1983 | 625 | 250,000 |
| 1984 | 875 | 350,000 |
| 1985 | 1,250 | 500,000 |
| 1986 | 440 | 175,000 |
| 1987 | 250 | 100,000 |
| 1988 | 500 | 200,000 |
| 1989 | 650 | 260,000 |
| 1990 | 525 | 210,000 |
| 1991 | 580 | 290,000 |
| 1992 | 250 | 125,000 |
| 1993 | 1,800 | 130,000 |
| 1994 | 1,800 | 820,000 |
| 1995 | 1,300 | 830,000 |
| 1996 | 1,950 | 625,000 |
| 1997 | 2,010 | 845,000 |
| 1998 | 2,025 | 1,003,000 |
| 1999 | 875 | 315,000 |
| 2000 | 1,300 | 545,000 |

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டில் மகளிர்குழுக்களின் பங்கு



திருமதி வே.செல்வரத்தினம்,
செயலாளர்,
மாவட்டக் கூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்.

இன்று சமூக, பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை கொள்வோரும் அதற்கான பணிகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவோரும் பெண்கள் அபிவிருத்தி பற்றி அதிகளவு அக்கறை காட்டிவருவதை அவதானிக்க முடியும். மேலும் பெண்களின் அபிவிருத்தி, அபிவிருத்தியில் பெண்கள் என்ற இரண்டு விடயங்களிலும் பெண்களின் பங்களிப்பை அல்லது ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதில் பெண்களை வலுவூட்டுதல் என்பது முக்கியமான அம்சமாக கருதப்படுகிறது. அதாவது பெண்களை வலுவூட்டி அவர்களை அபிவிருத்தி அடையச் செய்வதன்மூலம் சமூக, பொருளாதார அபிவிருத்தியிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய முடியும் என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட விடயத்தை உற்று நோக்கின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பல திட்டங்களினூடாக பெண்களை வலுவூட்டி, அவர்களின் ஆற்றலையும் சங்கங்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாடு என்ற பயணத்திற்கு பக்கபலமாக்கி கொண்டது என்றால் அதில் மிகையேதும் இல்லை.

கூட்டுறவு இயக்கம் உலகில் தோற்றம் பெற்ற பதினாறு தசாப்தங்கள் கடந்துவிட்டது. நமது நாடு கூட்டுறவில் நூற்றாண்டு விழாவைக் கண்டுவிட்டது. எமது நாட்டை பொறுத்தவரையில் கூட்டுறவு இயக்கம் காலத்திற்கு காலம் அரசாங்கங்களினால் கொண்டுவரப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை இயைபுபடுத்தி சமூக, பொருளாதார மேம்பாட்டு பணிகளுக்கு மௌனமாக பங்காற்றி வருகிறது. கூட்டுறவு இயக்கத்தை முற்றிலும் மக்கள் இயக்கமாக மாற்றிக் கொள்வதற்கு பெண்களின் பங்கும் பணியும் மிகவும் அவசியமானது என நீண்டகாலத்திற்கு முன்னதாகவே உணரப்பட்டது.

அனைத்துலக கூட்டுறவு நிறுவகத்தினால் 1975ம் ஆண்டு மலேசியாவில் நடத்தப்பட்ட மாநாட்டில் "கூட்டுறவு வளர்ச்சியில் பெண்களின் பங்கு" என்ற விடயம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டுமென்று தகவுரை செய்யப்பட்டது. இதன் பிரகாரம் இலங்கையில் இத்தகைய ஆய்வு ஒன்றுக்கு உதவியவர் திரு எம்.டி.குரூஸ் என்பவர். இவர் தனது ஆய்வு அறிக்கையில் முக்கியமாக குறிப்பிட்ட விடயம் இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இன்னும் ஆண்களின் கையே ஓங்கி நிற்கின்றது. அதாவது கூட்டுறவு இயக்கம் இன்னும் ஆண்களின் கோட்டையாகவே விளங்குகின்றது என்ற கருத்து தொனிப்பதான அறிக்கையாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தில் பெண்களை இணைப்பதற்கான பல்வேறு திட்டங்கள் வெளிநாடுகளின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக சுவீடன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை 1975 - 1980 ஆண்டு காலப்பகுதியில் "கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டம்" நாடு முழுவதிலும் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

இச்செயல்திட்டத்தின் காலப்பகுதியில் பலநோக்கு கூட்டறவுச் சங்கங்கள் பல இணைந்து சிறப்பாக செயற்பட்டபோதும், எமது மாவட்டத்தை பொறுத்தவரை மகளிர் கல்வித் திட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்கிய கூட்டறவு நிறுவனங்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே. இச்சங்கங்களின் வெற்றிகரமான மகளிர் திட்டமே அவர்களை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டில் ஒன்றிணைந்தது எனலாம்.

பனை தென்னை வள அபிவி

ருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சங்க மட்டம், கொத்தணி மட்டம், மாவட்ட மட்டம் என்ற பல் வேறு மட்டங்களிலும் மகளிர் கல்வித்திட்டங்கள் அமுல்படுத்தி வருவது சிறப்பான அம்சமாகும். மேலும் இந்நிறுவனங்கள் மகளிர் கல்வித் திட்டங் களை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுற வுச் சபை, யாழ்.பல்கலைக்கழகம், கல்வித் திணைக்களம், சுகாதார திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பொருத்தமான வளவாளர்களை இணைத்து பல் வேறு பயிற்சிகளை நடத்தியதன்மூலம் மிகச்சிற ந்த மகளிர் தலைவிகளை உருவாக்கியுள்ளார் கள். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்களின் மகளிர் குழு உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர்குழு நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வத்து டன் செயற்படுவதோடு, இலங்கை தேசிய கூட் டுறவுச் சபையால் தேசிய மட்டத்தில் நடத்தப் படும் நிகழ்வுகளிலும் இவர்கள் பங்குபற்றி தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவட்ட மட்டங்களில் கூட்டுறவாளர்கள் நடாத்துகின்ற மகளிர்தினப் போட்டிகள், கூட்டுறவு தினவிழா போட்டிகளில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த பெண்களே அதிகளவில் பங்குபற்றுவார்கள். குறிப்பாக மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், பேச்சு, கவிதை, கட்டுரை, குழுநடனம், போன்ற போட்டிகளில் மிகவும் ஆர்வத்தோடு பங்குபற்றி அதிகளவான பரிசில்களையும் தமதாக்கிக் கொள்வார்கள். கூட்டுறவைப் பற்றி சிறந்த முறை யில் பேசவல்ல தலைவிகள் பலரையும் உரு வாக்கியுள்ளார்கள்.

இவ்வாறு பெண்கள் அபிவிருத்தியில் இந் நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சியின் பய னாக இச்சங்கங்களின் மேம்பாட்டில் பெண்களின் பங்குபற்றும் வாய்ப்பு அதிகரித்தது. ஆரம்ப கால த்தில் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியா ளர்கள் யாவரும் ஆண்களாகவே இங்கு காணப் பட்டனர். 1980ம் ஆண்டுகளுக்கு பின்னர் இச்சங் கங்களின் மேம்பாட்டில் பெண்களின் பங்கும் பணியும் படிப்படியாக ஆரம்பிக்கத் தொடங்கி யது. பனை தென்னை வள மூலப்பொருட்களை கொண்டு தொழில் செய்யும் பெண்களும் இச்சங் கங்களில் அங்கத்துவம் பெறும் வாய்ப்பை பெற் றுக்கொண்டனர்.

இவ்வாறு அங்கத்துவம் பெற்ற பெண்கள் மகளிர் அபிவிருத்தி நோக்கில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு மகளிர்குழுக்களில் இணைந்து சங்க மட்ட, மாவட்ட மட்ட மகளிர் தலைவிகளாக செயற்பட்டு வருகின்றனர். இச்சங்கத்தை சார்ந்த சமூக மேம்பாடு கருதி மேற்கொள்ளப்படும் கல் விச் சேவைகளில் பெண்களின் பங்கு முக்கியம் பெற்றுள்ளது. குறிப்பாக இச்சங்கங்களால் நடத் தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களாக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கற்பித்தல் தொழிலை மேற் கொள்கின்றார்கள்.

மகளிர்களது குடும்ப பொருளாதார மேம் பாடு கருதி சுயவருமானத்தை அதிகரிக்கக்கூடிய தையல், மனையியல், கைவேலை, பனைவள உற்பத்தி போன்ற பயிற்சிகளை நடத்தி வரு கின்றனர்.

சங்கங்களின் பணிப்பாளர் சபையில் ஒவ்வொரு பெண்கள் இடம்பெற்று சங்க நிர்வாக பணிகளுக்கு தமது ஆலோசனைகளையும், ஒத் துழைப்புக்களையும் வழங்க ஆரம்பித்தனர். தொடர்ந்து சங்கத்தின் செயற்பாட்டு மட்டங்களில் பணியாளர்களுடன் இணைந்து சங்க வளர்ச்சி யில் நேரடியாக பங்கேற்க ஆரம்பித்தனர். செயற் பாட்டு மட்டங்களை தொடர்ந்து சங்கத்தின் கணக்காளர் போன்ற நடுத்தர முகாமைமட்ட பதவிகளில் சேர்ந்து செயற்திறன் மிக்கவர்களாக உயர்ந்துள்ளார்கள். தற்போது சங்கத்தின் உச்ச மட்ட பதவியாகிய பொதுமுகாமையாளர் பதவி களிலும் பெண்கள் இணைந்து சங்கங்களை முகாமை செய்து வருகின்றனர்.

இச்சங்கங்களில் வேலைசெய்யும் மொத் தப் பணித்தொகுதியில் சுமார் 19% பெண்க ளாகும். அநேக சங்கங்களில் கணினி இயக்குனர் களாக, கணக்குப் பதிவாளர்களாக, கணக்காளர் களாக பணித்தொகுதியை பெண்களே அணி செய்கின்றனர். எதிர்வரும் காலங்களில் பொது முகாமையாளர் பதவிகளையும் தற்போது இருப் பதைவிட கூடுதலான வீதம் பெண்கள் பெறும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இந்நிறுவனங் களில் பணிபுரியும் பெண்கள் கூட்டுறவுப் பணி யாளர்களுக்கான சான்றிதழ் பயிற்சிகள், மற்றும் பணியாளர்களுக்கான பல்வேறுமட்ட பயிற்சிகள், கருத்தரங்குகளில் இணைந்து தமது செயற் திறனை மேம்படுத்தி வலுவான வேலைப்படை யாகத் திகழ்கின்றார்கள். இவர்களது பங்க ளிப்பும், பணியும் பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்க மேம்பாட்டுக்கு ஒரு வலுவான சக்தியாக அமைந்துள்ளது என்ற செய்தி இனிமையானதே.

"வாழ்க கூட்டுறவு"

# நோய் தீர்க்கும் அரும்வளம் பனை வளம்

பனைவள ஆலோசகர்
வீ.ஜீ.தங்கவேல்



உலகிலுள்ள தாவரங்களில் மக்களுக்குப் பெரிதும் பயன்கொடுக்கின்ற தாவரமாகப் பனைவளம் காணப்படுகின்றது. இதனைத் தாவரங்களின் அரசி என்று பெரியோர்களால் போற்றப்படுகின்றது. பனையிலிருந்து 801 வகையான பொருட்களைப் பெறலாம் என்பதை தஞ்சையைச் சேர்ந்த அருணாச்சலக் கவிராயரால் எழுதப்பட்ட "தாலவிலாசம்" அல்லது "பனைமரக் காவியம்" என்னும் பழமையான நூல் பகருகின்றது. அதேவேளை பல்வேறு சித்தவைத்திய நூல்களிலும் பனையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. "யதார்த்த குண சிந்தாமணி" எனும் நூல் பனையின் பல பொருட்களால் மக்களுக்கு விளையும் நன்மைகளும், குணமாக்கும் நோய்களும் பற்றி விரிவாகக்கூறப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு நீண்ட ஆயுளையும், சுகத்தினையும் கொடுக்கும் பனைவள உணவுகள் நவீன ஆய்வுகளின் அடிப்படையில் அதன் போசாக்குப் பெறுமானங்களும் பெறுமானங்களின் விஞ்ஞான ரீதியாக அடையாளம் காணப்பட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருவது அண்மைக்காலமாக அதிகரித்துவரும் செயற்பாடாகும்.

மக்களின் ஆரோக்கியமான உடலுக்கும் நல்வாழ்வக்கும் உறுதுணையாக அமைவது சத்தான உணவுகளே. சத்துணவு என்பது மக்களின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் உதவும் மூலங்கள். புரதம், மாப்பொருள், கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள், சுவட்டு மூலகங்கள் ஆகிய சத்துக்களை விகிதாசார அடிப்படையில் கொண்ட உணவுகளையே சமவிகித உணவு என அழைப்பர். "சத்துணவு" உணவுச் சத்துக்களுக்கும், உடல் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நாம் அறிவோம். மனவளர்ச்சியும், நல்லெண்ணங்களும், புத்துணர்ச்சியும், ஊக்கமும் ஏற்பட்டு, அதன் விளைவாக நாம் அனுபவிக்கும் இன்பவாழ்வுக்கு இருப்பதுபோல் ஒவ்வோர் உணவுச் சத்துக்களும் உதவுகின்றது. உடலுக்குச் சக்தியை அளிப்பவை மாச்சத்து உணவுகளாகும். உடல் வளர்ச்சிக்கு இனிப்பு, கொழுப்பு உணவுகளும் உடற்கூறுகளின் செயல்களைக் கண்காணித்து நோய் தாக்காது தடுப்பது உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள், சுவட்டு மூலகங்கள் என உணவுச் சத்துக்களை வகுக்கலாம்.

இச்சத்துக்களே இரசாயன மாற்றமடைந்து உடலுக்குத் தேவையான குருதியாகவும், தசைகளாகவும், நரம்புகளாகவும் மாறுகின்றது. எனவே எல்லா உணவுச் சத்துக்களும் அடங்கியதாக சமவித உணவாக நமது அன்றாட உணவு அமைந்திருத்தல் வேண்டும். இவ்வாறு இல்லாது உயிர் சத்துக்களும் ஊட்டச்சத்துக்களும் இல்லாத உணவினை உண்பதன்மூலம் வளர்ச்சி குன்றியும், நோய்களால் பீடிக்கப்பட்டு உடல் நலிவுற்று, பல்வேறு உபாதைகளை ஏற்படுத்தும். ஆகவே குழந்தைகளின் வயதுக்கும் பால் வேறுபாடுகளுக்கு ஏற்பவும், இடத்தின் கால நிலைக்கேற்பவும், செய்யும் தொழிலுக்கேற்பவும் இவற்றுக்குத் தகுந்தவாறு உட்கொள்ளும் உணவின், சத்துக்களின் அளவு மாறுபட வேண்டும். குழந்தைகளுக்குப் போசாக்கான உணவு வழங்கப்படாதவிடத்து அவர்கள் கண்பார்வை நோய்கள், தோல் நோய்கள், கிரகிக்கும் தன்மை மாறுபடுதல் போன்ற பல்வேறு நோய்களினால் பாதிக்கப்படுவர்.

நாம் உட்கொள்ளும் உணவின் அளவுக் குறைபாட்டால், சத்துக்குறைபாட்டால், போசாக்கு மிக்க சத்தான உணவுகளை உண்ணாமல் துன்பப்பட்டு வருகிறார்கள். உணவியலைப் பற்றிய போதிய அறிவு இன்மையாலும், மூட நம்பிக்கைகளினாலும் நாகரீக மோகத்தினாலும் சத்தான உணவுகளைத் தெரிந்து பயன்படுத்தாமையாலும், ஏதோ வயிறு நிறைந்தால் போதும் என்ற நிலையில் சத்து இல்லாத உணவுகளால் உடல் பசியை தீர்க்க முனைவதாலும், இளம் வயதினர்பால் இன்று எழுந்துள்ள உடல் மெலிவு நடவடிக்கைகளினாலும் போதிய அளவு நிறை உணவு உண்ணாமல் நோன்பு இருத்

தல் காரணமாகவும் பல்வேறு நோய்த்தாக்கங் களுக்கு உள்ளாவதை அவதானிக்க முடி கின்றது.

இவற்றை மாற்றும் வகையில் எம்மை அண்டியுள்ள இயற்கை வளமான பனை வளத் திலிருந்து பெறும் சத்தான உணவுகளை அடை யாளம் கண்டு, அதனைத் தமது நாளாந்த உண வுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதன்மூலம் இலகுவாகவும் இலவசமாகவும் சத்தான உண வினைப் பெற்று பயன்படுத்த முடியும்.

பனை வள உற்பத்திகள் உண்பொரு ட்கள், உண்ணாப்பொருட்கள் என இரு பெரும் பிரிவுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. பூமியின் கற்பகதருவான பனை மரத்தின் வேரிலிருந்து நுனிவரை ஒவ்வொரு பாகமும் மக்களுக்குப் பயன்படுகின்றன. உண் பொருட்களாக பருவ காலத்தில் வெளிநீட்டமாகத் தோன்றும் பூந் துணரினைப் பதப்படுத்துவதன் மூலம் பதநீர், கள் முதலியனவும், நுங்கு, பனம்பழம், கிழங்கு, பூரான் முதலிய பிரதான உற்பத்திகளும், அவ ற்றைப் பதப்படுத்தவதன்மூலம் பெறப்படும் பனம் பாகு, பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனஞ் சீனி, கழிவப்பாகு, புளிப்படையாத கள், நுங்கு, பழத்திலிருந்து சாறு, பனாட்டு, குளிர்பானங்கள் மற்றும் பிரதியீட்டுப் பொருட்கள், கிழங்கிலிருந்து அவித்த கிழங்குகள், வெட்டுப் புழுக்கொடியல், ஒடியல், முதலியனவாகும். அனைத்து உற்பத் திப் பொருட்களும் பன்நெடுங்காலமாக எமது முன்னோர்கள் பயன்படுத்தி நீண்ட நெடுங்காலம் நோய் நொடியின்றி வாழ்ந்த வரலாற்றை பல் வேறு நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கிறது. கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ் மக்களின் முழுநேர உணவாகவும் பயன்பட்டு வந்துள்ளதை அறியக்கூடியதாகவுள்ளது. கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன்பும் போர் அனர் த்தங்கள் காரணமாக நிர்க்கதியாக விடப்பட்ட நெடுந்தீவு பகுதி மக்களின் அடிப்படை உணவுத் தேவையினை நிறைவுசெய்தது பனைவள உண வுகளே. அதனால்தான் பனைக்கும் பஞ்சம் போக்கி என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

பனைவள உணவுகளில் பஞ்ச காலங் களில் வெளி நீட்டமாகத் தோன்றும் பூந்துணர் களை (ஆண், பெண்) பதப்படுத்துவதன் மூலம் பெறப்படும் சுவைநீர் புளிப்படைந்து கள்ளாகவும், சுண்ணாம்பினால் பாதுகாக்கப்பட்டு பதநீராகவும் பெறப்படுகின்றது. பதநீர் எல்லா வயதினருக்கும் ஏற்ற உணவாகவும் பானமாகவும் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. பதநீருக்குப் பல சிறப் புப் பெயர்கள் உண்டு. சுரம், அமிர்தம், புதுமது, தெள்ளமுது, பசுநரு, பதநீர், பதிநீர் எனப் பல பெயர்களால் அழைப்பர். பயன்பல பெற்றவர்கள் ஆண் பனைப் பதநீருக்கு சோமபானம் என்றும், பெண் பனைப் பதநீருக்கு சுரபானம் என்றும் வகைப்படுத்தியுள்ளனர். சோம பானம் ஆன்ம சுத்தியை விரும்பியோர்களும், சுரபானம் உடல் நலமும் வீரியமும் வேண்டுவோர்க்கு உக ந்தது எனப் பெரியோர்களால் வகைப்படுத்தப் பட்டுள்ளது. பழந்தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்த பானமான பதநீர் சுவைமிக்க குளிர்பானம் மட்டுமன்றி எல்லாச் சத்துக்களும் அடங்கிய சிறந்த ஆகாரமுமாகும். பதநீரின் சிறப்பினைக் கூறவந்த தமிழகத்து பனைவள அறிஞர் பின் வருமாறு பகருகின்றார்.

*தூய்ப்பாலைப் போன்றதடி பாப்பா – பதநீர்*
*தமிழ் மக்கள் பானமடி பாப்பா – குடிக்கக்*
*குடிக்க இது இனிக்கும் – உன்*
*கொஞ்சும் முகச்சிரிப்பைப் பெருக்கும்*

கோடை காலத்துக் குளிர்பானமாகவும், கடுமையாக உழைக்கும் உழைப்பாளிகளின் தாகம் தீர்ப்பது மட்டுமல்ல இழக்கும் சக்தி யையும் ஈடுசெய்யும் பானமாகவும் பயன்படுகின் றது. ஆகவே பதநீர் ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர், இளைஞர்கள், யுவதிகள் யாவருக் கும் ஏற்ற பானமாகவும், ஒரு வேளை உணவா கவும் பயன்படுகின்றது. பதநீர் மட்டுமல்ல பதநீர் சார்ந்த ஏனைய உணவுகளான பனம்பாகு (பாணி), பனைவெல்லம்(பனங்கட்டி), பனஞ்சீனி, பனங்கற்கண்டு (கல்லாக்காரம்) என்பவை இனிப் புச் சுவைக்கு இனிப்பாகவும், போசாக்குக்கு போசாக்காகவும் பயன்படுகிறது. தமிழ் மக்களின் பாரம்பரிய வைத்திய நூல்களிலும், பாட்டிமாரின் கை வைத்தியத்திலும் கிராமிய வைத்தியத்தி லும் பிரதான பங்கு வகிப்பது பனை வெல்லம், பனங்கற்கண்டு ஆகியவற்றின் பயன்பாடுகள் பற்றி மிகவும் சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருவுற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகள் பிறந் தவுடன் அவர்களின் நாவில் பனைவெல்ல நீர் அல்லது பனங்கற்கண்டு நீரினைப் பருக்குவார் கள். இதனால் பிறந்த குழந்தையின் மலம் இலகுவாக கழிக்கவும், அவர்களின் உடல் அசைவுக்கேற்ற சக்தியையும் பருக்கும் நீர் கொடு க்கின்ற அதேவேளை, குழந்தையைப் பெற் றெடுத்த தாயின் இழந்த சக்தியினை மீளப்

பெறுவதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு விசேடமாகத் தயாரித்து வழங்கப்படும் உண வுடன் பனைவெல்லம் அல்லது பனங்கற்கண்டு வழங்கப்படுவது பாரம்பரிய மருத்துவ முறை யாகும். மனிதனின் பிறப்புமுதல் மரிக்கும் வரை அவனுடைய உணவுத் தேவையையும் போசாக் குப் பெறுமானங்களையும் வழங்கி அவனுடைய வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள தாவரம் பனைமரம் போல் வேறில்லை என்பர்.

சாற்று உற்பத்தி நடவடிக்கைகளில் பல் லாண்டு காலமாகப் பாவனையாளர்களின் விருப் பத்துக்குரிய போதை தரும் பானமாக மக்கள் மத்தியில் பிரபலம்பெற்று விளங்குவது "கள்" ஆகும். தமிழ் மக்களின் சங்ககால நூல்களில் பிரதான கருப்பொருளாகவும் விருந்து உணவின் போது பரிமாறப்படும் பிரதான பானமாகவும் இருந் துள்ளது. அதேவேளை பனங்கள்ளு காடியில் தயாரிக்கப்படும் மருந்துகள் பல அவற்றில் பல இன்று வழக்கிழந்து விட்டன. இன்றும் சித்த மருத்துவத்தில் பல சித்த மருந்துகள் செந் தூரம், பற்பங்க் குளிகைகள் பனைவெல்லத்தில் வைத்து மூடியே சாப்பிடவேண்டுமென்று கூறப் பட்டுள்ளது. அகத்திய குழம்பு என்னும் மருந்து பனைவெல்லத்தில் வைத்துத்தான் உட்கொள்ளப் படுகின்றது. இவை போன்ற பல நோய் தீர்க்கும் மருத்துவ குணங்களைக் கொண்டதாக பனை வள உணவுகள் காணப்படுகின்றன. சூரிய ஒளி யின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்பாக இறக்கப் படும் (அதிகாலை) கள் தெளிவாக, இனிமை யான தன்மையுடன் காணப்படும். இதன்போது உயிர்ச்சத்து C அதிகமானதாகக் காணப்படும். இச் சுவைநீரில் வெங்காயத்தை சிறு சிறு துண் டுகளாக வெட்டிப் போட்டு சின்னமுத்து, சின் னம்மை, கண்நோயால் பீடிக்கப்பட்டவர்கள், கணைச் சூட்டினால் பாதிக்கப்பட்டவர்கள், நிறை குறைந்தவர்கள் போன்ற அனைவருக்கும் நோய் தீர்க்கும் பானமாக இதனை அருந்துவார்கள். இன்னும் விசேடமாக வரகு, வைக்கோலால் பாளையைச் சுற்றிக் கட்டியும், வரகு, வைக் கோலால் கள் இறக்கும் கலயத்தினைச் சுட்டுக் காயவைத்துக் கட்டிப் பெறப்படும் கள் சகல ரோக நிவாரணியாக மக்களால் பயன்படுத்தப் பட்டு நலமடைந்துள்ள ஆதாரங்கள் பலவுண்டு. சுவைநீர் சேகரிக்கப்படும் மண் கலயத்துக்குள் பல்வேறு மூலிகைகள், வாசனைச் சரக்குகளைப் பொதிசெய்து, ஊறவிட்டு பல்வேறு நோய்களுக் கான மருந்துப் பானமாக வழங்கப்பட்டு வந்து ள்ளது. பனையின் மதுக்குணம் பற்றி யதார் த்தகுண சிந்தாமணி எனும் நூல் நோய்களையும் தீர்வுகளையும் பின்வருமாறு கூறியுள்ளது. (199)

*விற்றுதிர மூறுமதி வெப்படனே தாகம் போம்*
*பத்தமாந்ததுவுமோ பாரீக்கு – முந்து பித்தத்*
*தோன்றும் பாசனங்கள் சுத்தியுமாந் தோகை மின்னே*
*யேன்ற பனை மதுவிற்கே*

மயில்போலும் சாயலை உடைய பெண்ணே! பனங்கள்ளுக்கு சுக்கிலசோனித விரு த்தி சப்த தாதுக்களுக்கும் உறுதி பித்தாதிக்கம் இவையுண்டாம் தேகசூடும் விதாகமும் நீங்கும் இதில் பாசாணங்கள் சுத்தியாகும்.

பருவ காலங்களில் தோன்றும் பெண் பனைப் பாளைகள் இளமுதிர் நுங்குப் பருவம் அடைகின்றது. இந்நுங்கு மிகச் சுவையுடைய தாகும். தமிழ் நாட்டில் நுங்கினைத் தகரத்தில் அடைத்து சந்தைப்படுத்தி வருகின்றனர். யாழ்ப் பாணத்தில் நுங்கினைப் பெற்றால் பனம்பழம், கிழங்கு இல்லாதுபோகும் என்ற காரணத்தால் அணில் அரித்து விழும் நுங்கினையும், கடற்கரை யோரங்களில் வளரும் பனைகளில் இருந்து ஆசைக்கு ஒருசில குலைகளை வெட்டியும் பயன் படுத்துவார்கள். பெரும்படியான உற்பத்தி நடவ டிக்கைகளுக்குப் பயன்படுவதில்லை. பனம் நுங்கு தோலுடன் உண்டுவரின், சீதபேதி வயிற் றுப்போக்கை நீக்கும், வியர்வைக் குருவை நீக் கும், கண் அரிப்பைத் தடுக்கும், பசியைத் தூண் டும், உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் இந்நுங்கு, உயிர்ச்சத்து 'C' யும் கனியுப்புக்க ளையும் கொண்டிருக்கும்.

நுங்குப் பருவத்தைத் தொடர்ந்து பனம் பழப் பருவகாலம் வரும். பனம்பழத்தை சுட்டும், அவித்தும் காடியுடன் சேர்த்தும் ஒருவேளை உணவாக உட்கொள்வர். பனம் பழச்சாற்றினைப் பிழிந்து, சாறு பெற்று, காய விடுவதன்மூலம் பனாட்டு பெறப்படுகின்றது. பனாட்டினை சிறு சிறு துண்டுகளாக வெட்டி பாணி, எள்ளு, தேங் காய்ச்சொட்டு, மிளகு மற்றும் தேவையான சுவை யூட்டிகளைக் கலந்து மண்பானைகளில் சேமித்து வைத்து, மாரிகாலச் சிற்றுண்டியாகவும் வரும் விருந்தினர்களுக்கு வழங்கும் சுவையுணவாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனை யாழ்ப்பாண த்துக்குரிய உணவாகக் கொள்வர். பனம்பழம் சாறு, பனாட்டு என்பவற்றை உட்கொள்வதால், கரப்பான், அழுகிய சிரங்கு, மலபந்தம், பித்தவாயு, குடலிறக்க நோயின் தாக்

கம் என்பன நீங்கும்.

பனம்பழ பருவகால முடிவில் விதைகள் பெறப்பட்டு, பாத்திபோட்டு பராமரிப் பதன்மூலம், மூன்று மாத காலத்தின் பின்பு முறிகிழங்குப் பருவத்தில் பாத்தியிலிருந்து கிண்டியெடுத்துப் பதப்படுத்துவதன்மூலம் ஒடியல், புழுக்கொடியல் (அவித்த கிழங்கு) பெறப்படுகின்றது. ஒடியலி லிருந்து ஒடியல் மாவும், புழுக்கொடியலினை நேரடியாகவும், மாவாகவும் இடித்தும் பல்வேறு உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்து பயன்படுத் துவர். ஒடியல் மாவினை அடிப்படையாகக் கொண்டு, பிட்டு, கூழ், தோசை போன்ற உணவு களைத் தயாரித்து உண்பர். புழுக்கொடியல் மாவிலிருந்து லட்டு, கேக், நவீன சிற்றுண்டிகள் பல செய்து உண்டு மகிழ்வர். இவ் உணவுகள் உண்பதால் அத்திரச்சூடு, பித்த மேகம் என்பவை நீங்குவதுடன், குளிர்ச்சியும் வனப்பும் கூடும். ஊடல் நமைச்சலும் விரணமும், கரப்பான், சொறி சிரங்கு, மலச்சிக்கல் முதலிய பல நோய்களுக்கு நிவாரணியாகும்.

கிழங்கு உற்பத்தியின் இறுதியாக கிழங் காக வளரமுடியாத விதைகளிலிருந்து பூரான் (வித்தக விழையம்) பெறப்படும். இது மிகச் சிறந்த சிற்றுண்டியாகும். இதிலிருந்து தயின் பச்சடி, சட்னி, இனிப்புச் சுவையுடைய தின்பண் டங்கள் என்பவற்றை தயாரிக்கமுடிவதுடன், பத நீர் காய்ச்சப்படும்போது பூரானும் இணைத்து வெப்பமேற்றி உண்பது சிறுவர்களுக்கு மிகப் பிரியமான உணவாகும். உடல் குளிர்ச்சியும், பசியினைத் தூண்டக்கூடியதும், இலகுவில் சமி பாடடையக்கூடிய உணவாகவும் காணப்படுகின் றது.

தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் வாழ்வுக்கு பாதுகாப்பு அரணாகவும், கால்நடை உணவாகவும், கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதுடன், மனிதனுடைய நேரடிக் கண்காணிப்பு இல்லாத நிலையிலும் தானாகவே வளர்ந்து உணவாக, உறங்கும் இடமாக, எரிபொருளாக, போசாக்கு பானமாக சகல வழிகளிலும் உதவும் தாவரம் பனை யாகும். தமிழ் மக்களின் அடையாளமாக அவர் களின் அகவாழ்வு நிலையிலும், புறவாழ்வு நிலை யிலும் நெருக்கமான பிணைப்பினைக் கொண்ட மைந்த தன்மையினையும் பண்பாட்டுக் கோலங் களையும் வெளிப்படுத்தும் போந்தையின் சிறப்பு உணர்வோம்.

## பனைவள உற்பத்திகள்

### உண்பொருட்கள்

**பனம்பழம்-பழச்சாறு**

பழம், பனாட்டு, ஜாம், கோடியல், ஜோஸ், பாம்மெலோ, அல்வா, குளிர்களி,இனிப்பு வகைகள், ஜோவைன், மதுசாரம், வினாகிரி, பெக்ரின், மிருக உணவு.

**கிழங்கு**

ஒடியல், ஒடியல் மா, புழுக்கொடியல், பாம்போசா, பிஸ்கட், சொக்லேட், கேக், லட்டு, இனிப்பு வகைகள், புடிக்கொடியல் மா, உடன்கூழ், உடனடி தோசை, வடை, பிட்டு, பேக்கரி உற்பத்திகள்.

### உண்ணாப் பொருட்கள்

**ஓலை**

மிருக உணவு, கைப்பணி உற்பத்திகள் பாவனைப் பொருட்கள், வீடு வேய்வதற்கு, வேலி அடைக்க, அழகுரு உற்பத்தி, ஈர்க்கு, கூடைகள், உறி, சுளகு, தும்பு.

**நார்**

நார்ப்பின்னல், இருக்கைப் பின்னல், கூடைகள், பெட்டிகள், தட்டுகள், கடகங்கள்.

**மரம்**

மரங்கள், மரச்சட்டங்கள், அழகுருப் பொருட்கள், வேர் (கூடைகள்)

**பூந்துணர்சாற்று உற்பத்திகள்**

பதநீர், பனம்பாகு, பனைவெல்லம், பனம் கற்கண்டு, பனம்சீனி, கழிவுப்பாகு,சொக்லேட், இனிப்பு வகைகள், மதுசார உற்பத்திகள், வினாகிரி.



# பனை வள ஆராய்ச்சி நிலையமும் பனைசார் உற்பத்தி வல்லுனர்களுக்கான பயன்பாடும்

எம்.பி.லோகநாதன்
பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபையினால் 1974ம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்ட இலக்கம் 40இன் பிரகாரம் பகுதி II இல்(0) பிரிவில் பனை ஆராய்ச்சி நிலையத்தினை பரிசோதனை நிலையங்கள், நாற்று உற்பத்திகளை உருவாக்குவதுடன் அதனை பராமரிப்பதும் பனைசார் உற்பத்தி விஞ்ஞான ஆராய்ச்சிகளை செய்வதுடன் அதன்மூலம் பெரியளவில் உற்பத்திகளை உருவாக்குவதுடன், அவ்விடயமாக தொழில்நுட்பம், விரிவாக்கல் சேவைமூலம் பனைசார் உற்பத்திகளை நம்பி வாழும் மக்களை சென்றடைவதற்கான வழிவகைகளைச் செய்தல் பனை அபிவிருத்திச் சபையின் முக்கிய கடமையென விபரிக்கப்பட்டுள்ளது. இதனை மையமாக வைத்து 1974இல் ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபையால் 1983ம் ஆண்டளவில் பனை ஆராய்ச்சி நிலையமானது கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் தொடர்ச்சியாக நடைபெற்ற உள்நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக இந்நிறுவனம் பல்வேறு தாக்குதல்களால் சின்னாபின்னமாக்கப்பட்டது. இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட வேளையில் 1989-1992 ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கருத்திட்டம் மூலம் (UNDP) ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவ் உபகரணங்கள் யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாமல் கொழும்பு அலுவலகத்தில் வைத்து சில பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வந்தன. 2009ம் ஆண்டின் பின்பு இலங்கை அரசும் இந்திய அரசும் இணைந்து பாதிக்கப்பட்ட கட்டடத்தை புனரமைப்பதுடன் ஆராய்ச்சிக்கு தேவையான உபகரணங்கள், இரசாயனங்கள், வாகனங்கள் என்பன பனை ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டு 2012, ஜூலை மாதத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இலங்கை அரசு கட்டட புனர்நிர்மாணத்துக்கு 21 மில்லியன் ரூபாவையும், தீர்வைகளுக்கு 20.6 மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளது. இந்திய அரசு ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்கள், இரசாயனங்கள், தளபாடங்கள், வாகனங்கள் என்பவற்றுக்கு சுமார் 70 மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளது.

இவ்வாராய்ச்சி நிலையத்தில் தற்பொழுது பின்வரும் பிரிவுகளை இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. இரசாயன பகுப்பாய்வுப் பிரிவு (Analytical Division)
02. நுண் உயிரியல் துறை (Micro Biology Division)
03. உணவு தொழில்நுட்பத்துறை (Food and Technology Division)
04. தொழில்நுட்பப் பரம்பல் அல்லது ஆராய்ச்சி பிரச்சார பிரிவு (Research Dissemination Division)

## இரசாயன பகுப்பாய்வு பிரிவு
## Analytical Division

இப்பிரிவானது பனைத் தொழில்சார் வல்லுனர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய பிரிவாக இயங்குகின்றது. உதாரணமாக போத்தலில் கள், சாராயம் போன்றவற்றினை அடைப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு அவற்றின் இரசாயன பகுப்பாய்வு விபரமும் அவற்றிலுள்ள பிரத்தியோக உள்ளீடுகள் என்ன என்பதையும் பகுத்தாராய்ந்து வழங்குவதனால் அவற்றுக்கான அனுமதி பெறுவதனை உறுதிப்படுத்தலாம். அத்துடன் பனைசார் உற்பத்திப் பொருட்களின் உள்ளீடுகளை அறிந்து மற்றைய மாற்றுப் பொருட்களை விட, பனைசார் உற்பத்திப் பொருட்கள் சிறந்தன என்பதனை இப்பிரிவே உறுதிப்படுத்துவதுடன் அதனை பிரபல்யப்படுத்துவதற்கும் இப்பிரிவினை பனைசார் உற்பத்தி வல்லுனர்களும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் பயன்படுத்தலாம்.

மேலும் பனைசார் உற்பத்திப் பொருட்களை தரநிர்ணயம் செய்து பனை ஆராய்ச்சி நிலையத்தின் தரச் சான்றிதழ் வழங்

கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தவதன் மூலம் போலி உற்பத்திகளை இல்லாது செய்ய முடியும்.

### நுண் உயிரியல் துறை
### Micro Biology Division

இத்துறையானது சாற்றுசார், பழ்சார் மற்றும் கிழங்குசார் உற்பத்திப் பொருட்களில் நுண்ணுயிர்களின் தாக்கங்கள் அதற்கான மாற்றீடுகள் என்ன என்பதனை ஆராய்வதற்கான துறையாகும். அத்துடன், தும்புக் கழிவுகள் மூலம் உரங்களை நுண்ணுயிர்கள்மூலம் தயாரித்தல், வடிசாலையில் கழிவாக வரும் மிகுதிகள் மூலம் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல், பழம் சார், சாற்றுசார் உற்பத்திப் பொருட்கள் தரமாகவும், சுகாதாரமாகவும், குடிசைத் தொழில் மட்டத்திலும் தயாரிக்க முன்னெடுப்புகள் செய்வதற்கு இப்பிரிவு முன்னிற்கும்.

### உணவு தொழில்நுட்பத் துறை
### Food and Technology Division

இப்பிரிவுமூலம் தற்பொழுது வழக்கத்திலுள்ள பனைசார் உணவு உற்பத்திகளின் தரத்தினை கூட்டுதல், பெறுமதி சேர்த்தல், கவர்ச்சிகரமான பொதியிடல் போன்றவற்றை முன்னெடுப்பதுடன், புதிய உணவு உற்பத்தியை அறிமுகப்படுத்தி உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு பிரதான பங்கு வகிக்கும்.

### தொழில்நுட்பப் பரம்பல் அல்லது ஆராய்ச்சி பிரச்சாரப் பிரிவு
### Research Dissemination Division

இப்பிரிவே எதிர்காலத்தில் பனை ஆராய்ச்சி நியைலத்துக்கு மிக முக்கியமான பிரிவாகும். இப்பிரிவானது பனை ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்படும் சகல கண்டுபிடிப்புக்களையும், தொழில்நுட்பங்களையும் உடனடியாக பனைசார் உற்பத்தி வல்லுனர்கள், பனையை நம்பி வாழும் குடும்பங்களுக்கு தெரியப்படுத்தும் பிரிவாகும். இதனை ஊடகங்கள், துண்டுப்பிரசுரங்கள், போஸ்டர்கள், விளம்பரங்கள் மூலம் பிரச்சாரம் செய்வதுடன் புதிய தொழில்நுட்பங்களை அத்துறைசார் மக்களுக்கு, சங்கங்களுக்கு பயிற்சி வகுப்புக்கள், மாநாடுகள் நடத்துவதன்மூலம் தொழில்நுட்பங்கள் பரம்பலடையச் செய்தலாகும்.

மேற்குறிப்பிட்ட துறைகளுடன் எதிர்காலத்தில் கீழ்வரும் துறைகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன,

01. பயிர்த்தர அபிவிருத்தி
    Crop Improvement
02. அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்
    Post Harvest Technology
03. சந்தைப்படுத்தல் சமூக பொருளாதார முன்னேற்றல் துறை
    Marketing and Socio Economic Division

### பயிர்த்தர அபிவிருத்தி
### Crop Improvement

இத்திட்டமானது தற்பொழுது இயற்கையாக வளர்ந்திருக்கும் பனைகளில் மக்களுக்கு ஏதுவான இயல்புகளை கருத்தில்கொண்டு அவ்வியல்புகளுடைய தாய்ப் பனைகளை தெரிவு செய்து அவற்றின் விதைகள்மூலம் பனை நடுகை செய்தலாகும். பொதுவாக கீழ்வரும் ஏதுவான இயல்புகள் கருத்தில்கொள்ளப்படும்.

A. குட்டை மற்றும் நடுத்தர குட்டைப் பனைத் தெரிவு. இதன்மூலம் தற்பொழுது பற்றாக் குறையாகவுள்ள பனைத் தொழில் வல்லுனர்களின் பிரச்சினையை தீர்க்கமுடியும்.
B. இனிமையான, கசப்பற்ற, களிகூடிய விளைச்சல்தரக்கூடிய, சிறந்த வர்ணத்தையுடைய, வாசனையுடைய களியுடைய பழங்கள் தரக்கூடிய பனைகளை தெரிவு செய்தல்.
C. பெரிய விதைகளுடைய பழங்கள் தரக்கூடிய பனைகள்மூலம் பெரிய கிழங்குகளைப் பெறமுடியும்.
D. கூடிய தும்பு விளைச்சலைத் தரக்கூடிய நீண்ட கங்குமட்டை கொண்ட மரங்கள்.
E. கூடிய பதநீர் விளைச்சலைத் தரக்கூடிய மரங்கள்.

மேற்குறிப்பட்டவற்றில் குட்டைப் பனைத் தெரிவிலான தற்பொழுது இந்நிலையில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. இக்குட்டைப் பனைத் தெரிவுமூலம் நாம் பின்வரும் நன்மைகளைப்பெற ஏதுவாக இருக்கும்.

01. குறைந்த காலத்தினுள் பூக்கக்கூடியதாக இருக்கும். இதன்மூலம் பழங்கள், சாற்று உற்பத்திகளை பெறமுடியும். (உயரமான பனைகள் வழமையாக 15-20 ஆண்டுகள் வரை பூக்கள் வருவதற்கு காத்திருத்தல் வேண்டும்.)
02. பனையில் ஏறுவதற்கு இலகுவாக

இருக்கும் (குட்டைப் பனையின் உயரம் 10 அடிக்கு உட்பட்டுள்ளதனால் ஏறுவது சுலபம்.)

இவ்வாராய்ச்சி விடயமாக தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரியின் பேராசிரியர் வி.பொன்னுச்சாமி குழுவினரால் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திராப் பிரதேசம், மேற்கு வங்காளம், புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்பொழுது பல குட்டைப்பனை வகைகள் கண்டறியப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் பதநீர் சுரக்கும் மார்ச்-ஜுன்-ஜுலை மாதங்களில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பரவலாக பனை காணப்படும் ஐந்து மாநிலங்களில் 10 தோப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் 281 வகைகள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் 48 வகைகள் அதிக பதநீர் தரவல்லவை எனக் கண்டறியப்பட்டன. புதுச்சேரியில் கண்டறியப்பட்ட BFPU 22 என்னும் வகை அதிகளவாக ஆண்டொன்றுக்கு பனை ஒன்றில் 540.50 லீட்டர் பதநீரும், அதைத் தொடர்ந்து TNPM 08 என்னும் வகை 530.20 லீட்டர் பதநீரும் அளிக்க வல்லவை எனக்கண்டறியப்பட்டது. பொள்ளாச்சியில் கண்டறியப்பட்ட TNPO 02 வகையும், ஈரோடு மாவட்டம் கோபி அருகேயுள்ள நம்பியூரில் காணப்பட்ட BFNAM 01 வகையும் குறைந்தளவாக 450 செ.மீற்றர் உயரமும், அதைத்தொடர்ந்து TNPO 01 வகையும் குட்டையாகக் காணப்பட்டன. புதுச்சேரியில் கண்டறியப்பட்ட BFPU 24, பிள்ளைமடத்தில் காணப்பட்ட TNPM 08 மற்றும் பொள்ளாச்சியில் கண்டறியப்பட்ட TNPO 08 ஆகிய வகைகள் அதிக பதநீர் தரவல்லவையாகும். பனையின் பல்வேறு வகைகளில் காணப்பட்ட வேற்றுமைகளை கள ஆய்வுகள் தெளிவாக உணர்த்தின. இவ்வாராய்ச்சியினை அடிப்படையாக வைத்து இலங்கையில் கள ஆய்வுகளை மேற்கொண்டு குட்டைப் பனை வர்க்கங்களை தெரிவதுடன், இந்தியாவுடன் ஒருங்கிணைந்து ஆராய்ச்சி செய்வதன்மூலம் குட்டைப் பனை வர்க்கங்கள் பரிமாற்றம் செய்து பனை பயிர்த் தரத்தினை உயர்த்தலாம்.

## அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்
## Post Harvest Technology

இப்பகுதி பின்வரும் விடயங்களை அவதானத்தில் கொண்டு ஆராய்ச்சி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

A. தற்பொழுது அறிமுகப்படுத்தியுள்ள பனையேறும் கருவியினை தரமேம்படுத்தி பனைத்தொழில் வல்லுனர்களுக்கு வழங்குவதற்கான ஆராய்ச்சி.

B. தற்பொழுது பாவனையிலுள்ள பனங்களி பிரித்தெடுக்கும் இயந்திரத்தின் தரத்தை மேம்படுத்தி தன்னிச்சையாக இயங்கக் கூடிய தோலுரித்தல், களிபிழிதல், பிழிந்த களியை வெளியேற்றல் என்பன ஒரே இயந்திரத்தின்மூலம் செயற்படுத்தல்.

C. பனையோலை வாரும் இயந்திரங்களை மின்சக்தி மூலம் இயக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தல்.

D. பனம்களிசார் உற்பத்திகளை கோடியல், ஜாம் போன்றவற்றினை அடைப்பதற்காக புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தல்.

E. பனம்சாறுசார் உற்பத்தியினை இயந்திர மயப்படுத்தல்.

போன்றன சிலவாகும்.

## சந்தைப்படுத்தல் சமூக, பொருளாதார முன்னேற்றல் துறை
## Marketing and Socio Economic Division

எந்தவித ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டாலும் அதன் விளைவுகளை சந்தைப்படுத்தல் என்பன மிகவும் முக்கியமானது. இதற்கான சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிக்கான பனைசார் உற்பத்திப் பொருட்கள் உள்ளூர் ஏற்றுமதி சந்தையின் கேள்விகளை அறிந்துகொள்ள முடியும். அதேபோல் பனைசார் உற்பத்தியாளர்கள், பனைசார் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நுகர்வோரின் கருத்துக்களை அறிந்தே புதிய உற்பத்திகளையோ, தரத்தினை கூட்டுதலையோ மேற்கொள்ள முடியும். எனவே அதற்காக சமூக, பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவினை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும்.

மேற்கூறிய ஆராய்ச்சிக்கான பிரிவுகளையும் உள்ளடக்கி ஆராய்ச்சிக்கான அடித்தளம் இடப்பட்டு வருவது பனைசார் உற்பத்தி வல்லுனர்களின் பங்களிப்புடனே நடைபெற வேண்டும். அத்துடன் தற்போதைய நடைமுறைச் சிக்கலாக உள்ள பனை வெல்லம் உருகுதல், வடிசாலை உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு, கழிவு தும்புகளிலிருந்து உரம் தயாரித்தல், சமூக, பொருளாதார ஆராய்ச்சிகள், பனங்கள், பனஞ்சாராய உற்பத்திகளை தரமுயர்த்தல் என்பன பனந்தொழில் வல்லுனர்கள் எதிர்நோக்கும் பாரிய சவால்களாகும். எனவே இப்பிரச்சினைகளுக்கு உடன் தீர்வினை காண்பதற்கு ஒரு கால்கோள் விழாவாக பனை ஆராய்ச்சி நிலைய திறப்பு விழாவை நாம் கருதலாம்.

# தமிழ் இலக்கியங்களில் பனை

புலவர் கதிர் சீனித்தம்பி



குளம்தொட்டு வளம் பெருக்குவதுபோல் பனை தொட்டு வளம் பெருக்கி வந்தனர் நம் பழந்தமிழ் மக்கள். அந்த வகையில் தமிழ் மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துவிட்டமைக்கான அகச்சான்றுகளும் புறச் சான்றுகளும் நிறைய உள்ளன. இலக்கியங்களில் முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என மூன்று உள்ளன. தொல்காப்பியம் குறிப்பிடும் முதல், கரு, உரிப்பொருள் பகுப்பில் முதல் என்பது புவியியற் பின்னணியாகவும், கரு என்பது பொருளியற் பெரும் பகுதியாகவும், பண்பாட்டையும் கொண்டிருப்பதாகவும் கருத இடமுண்டு. முதலும் கருவுமே உரிப்பொருளாகிய வாழ்வைத் தீர்மானிக்கும் காரணங்களாக இருத்தலை சங்க இலக்கியங்களில் காணலாம். இதன் மறுபெயர்கள் பெண்ணை, தாலம், தானி, தானிப் பல், கற்பகதரு.

பெரும்பான்மையாக தமிழர் வாழ்ந்த, வாழும் நிலப்பரப்பின் புவியியல் அமைப்பில் தானாகவே வளர்ந்து நீரூற்றிப் பாதுகாக்க வேண்டிய தேவையின்றி பயன்தரும் ஒரு தாவரமாகப் பனை காணப்படுகின்றது. இதனாலே தமிழ்மக்களின் வாழ்வியலோடு பனை ஒன்றி இருத்தலில் வியப்பில்லை.

சங்க காலத்திலும், சம காலத்திலும் பனையும் பனம் பொருளும் நேரடியாகவோ உவமையாகவோ பேணப்பட்டு வந்துள்ளன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், தேவாரங்கள், சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் பலவற்றிலும் பனை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பனம் மட்டையை பனம் மடல் என்று அழைப்பர். பனம் மட்டையால் குதிரை செய்து அதில் உலா வந்து காதலைப் பலப்படுத்துதலை "மடல் ஏறுதல்" என அகத்தினை இலக்கியம் கூறும். எமது கல்வி மரபிலோ பனையோலை மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. பனையோலையால் செய்யப்பட்ட ஏடு, ஓலை என்ற பெயரால் வழங்கலாயிற்று. இன்றும் கிரா மங்களில் ஒருவரின் சாதனைக் குறிப்பினை ஓலை என்று வழங்கும் வழக்கம் இருந்து வருகின்றது. கடதாசி உபயோகத்துக்கு வருமுன்னர் பனையோலையே எழுதுவதற்குப் பயன்படுத்தப் பட்டது. இவ்வாறு தூதோலை, சாவோலை முதலான செயற்பாடுகளும் இக்காலத்திலும் வழக்கிலிருந்து வருகின்றன.

வீரத்துக்கு புகழ்மிக்க தமிழ்ப் பாமாலை சூட்டிய சங்க இலக்கியப் புலவர்கள் நிலத்தாவரமான பனையின் பயன்பாட்டையும் பாவுக்குள் பூத்துக்குலுங்க வைக்கத் தவறவில்லை. சங்க இலக்கியங்களில் பேசப்பட்ட பனம்பொருள் பற்றி புறநானூற்றில் ஒரு பாடல்.

*"தலையோர் நுங்கின் தீஞ்சாறுமிசைய*
*இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்*
*கடையோர் விடுவாய் பிசிரோடு சுடுகிழங்கு நுகர்"*

(புறம்)

இங்கே "நுங்கின் தீஞ்சாறுமிசைய பைங்கனி மாந்த" என்ற சொற்றொடர்கள் பனையின் பயன்பாட்டைக் கூறுகின்றன. பைங்கனி என்பது பைங்களி என அழைக்கும் வழக்கமுண்டு.

சங்க இலக்கியங்களில் பேசப்பட்ட பனம் பொருள் பற்றி சொற்கள் பல இன்று திரிந்து வழங்குவதையும் காணலாம்.

*"மாரிப் பித்திகத்து நீர்வளார் கொழுமுகை*
*இரும் பனம் பசுங் குடை பலவுடன் பொதித்து"*

குறுந்தொகையில் வரும் 'பசுங்குடை' என்ற சொல், பலவகையான உணவுப் பொருட்களையும் ஒருங்கே வைத்து மூடி என்ற பொருளில் வருவதாக உரையாசிரியர் கூறுவர். ஓலையிலே உணவுப் பொருட்களை மூடிக்கட்டிச் செல்லுதல் குடலையில் கொண்டு செல்லுதல் என்றும் வழக்காறு இன்றும் பேச்சு வழக்கில் இருப்பதைக் காணலாம். "குடை" என்ற சொல் காலப்போக்கில்

குடலையாக மாறி இருக்கலாம்.

"குடை" என்ற சொல்லே காலப்போக்கில் "குடலை" ஆக மாறியுள்ளது என்பதற்கு நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடல் ஒன்று அகச்சான்றாக விளங்குகின்றது.

*"உத்தன் தசை அறிந்தே ஓலைக்குடலை கட்டிச் சென்று விற்றனரோ தின்று பசியாறினரோ"*

என்ற பாடல்மூலம் "குடல்" குடலையாயிற்று

புறம் 177வது பாடலில் பனங்குடை என்ற சொல் உண்கலம் என்ற பொருளில் வருவதைக் காணலாம்.

*"இருள் பனங்குடையின் மிசையும்"*

என்ற தொடருக்கும் பெரிய பனையோலை இயன்ற குடையிலே நுகரும் என உரை கூறப்பட்டுள்ளது. இன்றைக்கு சில காலங்களுக்கு முன்னா், பனையோலையாற் செய்யப்பட்ட உண்கலம் "தட்டுவம்" என்னும் பெயரால் அழைக்கப்பட்ட வழக்காறு இருந்தது. இது முற்றாக அருகிவிட்டது என்று கூறமுடியாது.

புறம் 33வது செய்யுளில்,

*"மான்றசை சொரிந்து வட்டி"*

என்ற தொடர் இடம்பெறுகிறது. வட்டி என்ற சொல்லுக்குப் பொருள் உரையாசிரியர் "பெட்டி" என்றே உரைத்துள்ளார். குறிப்புரையிற் கடகப் பெட்டி அதாவது பனையோலையாற் செய்யப்பட்ட பெரிய பெட்டி என்றே குறிப்பிடுவார்.

மலைபடு கடாம் 152வது அடியில்,

*"ஊனார் வட்டியர்"*

என்ற தொடருக்கு நச்சினாக்கினியர் தனக்கிறைந்த கடகத்தையுடையது என உரைத்துள்ளார். வட்டி என்ற சொல் 'பெட்டி' எனத் திரிந்து, பின்னர் கடகப் பெட்டியாக இன்றும் வழங்கி வருவதைக் காணலாம்.

இன்றும் ஓலையால் இழைக்கப்பட்டவற்றுள் சிறியவற்றை பெட்டி என்றும் பெரியவற்றைக் கடகம், கடகப் பெட்டி என்றும் அழைக்கும் வழக்கத்தைத் தமிழ் மக்களிடையே காணலாம். இவ்வாறு சங்க இலக்கியங்களிலே நுங்கின் மேற்பாகத்தை பனை முகிழ் என அழைப்பர். இன்று இச்சொல் 'பனுவிழ்' என்று வழங்குவதை அவதானிக்கலாம். இவ்வாறு பல சொற்கள் இன்றைய வழக்கிலேயே மாறியும் திரிந்தும் வழங்கி வருவதைக் காணலாம். பனம் புடை (பனை மாலை-91) (பனைத்தோடு சிலம்பு 252-14) பெண்ணைப்பிழ்(கள்) (பட்டினப்பாலை 89) முதலான பல சொற்கள் இடம்பெற்றுள்ளமை தமிழ் மக்கள் பனம் பொருட்களோடு கொண்டிரு ந்த தொடர்பில் சாலப்புலப்படுகின்றது.

சங்க இலக்கியங்களில் கள் பரவலாகப் பேசப்படுகின்றது. அதிக பயன்பாட்டில் இருந்த பனம் கள் சமூகச் சீரழிவைக் கண்ட வள்ளுவர், 'கள் உண்ணாமை' என்னும் அதிகாரத்தை வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கலாம். திருக் குறளிலே பல இடங்களில் பனை உவமையாகக் கொள்ளப்பட்டமையையும் கண்டு கொள்ளலாம்.

பொதுவாக சங்க காலத்தைத் தொடர்ந்து வரும் இலக்கியங்களில் பனை அதன் பயன்பாட்டு ரீதியில் குறிக்கப்பட்டதிலும் பார்க்க உவமையாகப் பேசப்பட்ட இடங்களே அதிகம். திருக் குறள், சிலப்பதிகாரம் நீதி நூல்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் இவற்றிலே பனை பல்வேறு இடங்களிலும் உவமையாகப் பேசப்பட்டுள்ளன.

*தினைத் துணையாம் குற்றம் வரினும்*
*பனைத் தனையாகக் கொள்வர் பழிநாணுவார்*
(குறள் 433)

*"தலையாயர் எண்ணரும் பெண்ணை போன்று கீட்"*
(நாலடியார்)

*"பனையின் மேல் வற்றிய ஓலை கலகலக்கும்"*
(நாலடியார்)

*"இரு நெடும் பனங்காடு முழுமையும்*
*காடும் கையும் உடையன போல்"* (கலிங்கம்)

கூட்டம் கூட்டமாக இருக்கும் இடத்தை பனங்காடு, பனந்தோப்பு, பனங்கூடல் என அழைக்கும் வழக்கம் இன்றும் இருப்பதைக் காணலாம்.


ஈழத்து இலக்கியங்களில் சோமசுந்தரப் புலவர் பாடிய 'இலங்கை வாழும் தால விலாசமும்', பொன்னம்பல முதலியார் பாடிய 'பனை நானூறு' என்னும் கவிதை நூல் மட்டுமன்றி, இன்றும் பல ஈழத்துப் புலவர்களும் பனையின் பயன்பாட்டை உணர்ந்தே தம் கவிதைகளில் பனையைப் பாடு பொருளாகக் கொண்டனர்.

தமிழ் மக்களின் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட பனை, சங்க இலக்கியங்களிலும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்ற இலக்கியங்களிலும், நாட்டார் இலக்கியங்களிலும் இன்றுவரை நிலைத்துள்ளது.

# மறுமலர்ச்சிக்கு வழியமைத்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அமைப்பு முறைமை!

"மேவி அனைவரும் ஒன்றாய்--நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்"

*-பாரதியார்-*



**கண.கிருஸ்ணராஜன்,**
**முன்னாள் பொதுமுகாமையாளர்,**
**கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

ஆதி மனிதன் இயற்கையோடு இயற்கையாய் இணைந்து வாழ்ந்தான் அவனுக்கு வீடில்லை வாசலில்லை பணமில்லை அதனால் வாழ்வில் பயமுமில்லை.

நாம் வாழும் இந்த பூமி கோடிக் கணக்கான உயிரினங்களுக்குச் சொந்தமானது ஆனால் விலங்குகளில் ஒன்றான மனிதன் தனக்கு மட்டுமே சொந்தமானதென வீச்சுக் கொண்ட நிலையில் உரிமை கோரல்கள் வேறு.

மரவுரி கால மனித வாழ்வு முறைமையிலிருந்து படிப்படியாக தன் வாழ்வு நிலையை மாற்றிக்கொண்ட மனிதன் மெல்ல மெல்ல நாகரீகமான வாழ்வியல் வட்டத்தினுள் பிரவேசித்ததன் பயனாக மனிதர்களை பலதரப்பட்ட அளவிடைகளைக் கொண்டு தரப்படுத்திக் கொண்டனர் கற்றவர், கல்லாதவர், பணமுள்ளவர், பணமில்லாதவர், பிரதேச ரீதியான, மத ரீதியான, தொழில் ரீதியான வகைப்படுத்தல் எனும் நிலைகளில் வகைப்படுத்தலைப் பயன்படுத்தி அவர்களுக்குரிய தேவைப்பாடுகள் கவனிக்கப்படுவதிலும் பழகிக்கொள்வதிலும் முன்னுரிமை வேறுபாடு வலுப்பெற்றுக் காணப்பட்ட காலகட்டத்திற்குள் மனிதன் தன்னை உட்படுத்திட்ட பொழுதில் பலரும் பலதரப்பட்டதான இடர்களையும், இடைஞ்சல்களையும் நேருக்கு நேர் அனுபவித்துள்ள நிலைதனில் பனை தென்னை வளத்தை மூலாதாரமாகக் கொண்டு வாழ்வாதாரத்தை நடாத்தி வந்த தொழிலாளர் சமூகத்தினரும் பலதரப்பட்ட இடர்களை அனுபவித்தனர் இதிலிருந்து விமோசனம் பெறுவதற்காக சமுதாய வளர்ச்சியெனும் பாதை நோக்கி பயணிக்கப்பட வேண்டிய கட்டாயப்பாட்டுக்குள் தள்ளப்பட்டனர்.

சமுதாய வளர்ச்சி என்பது தேசிய வளர்ச்சிக்கான சமுதாயங்களின் முயற்சியாகும் (அச் சமுதாயங்களே உருவாக்கி நடத்தும் முயற்சியாகும்) அவர்களின் பொருளாதாரம், கலை, கலாச்சாரம் என்ற அனைத்துப் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியாகும் அதற்கு அரசு உதவ வேண்டும் அதற்கான முயற்சிகள் உருவாக தூண்டுதலை அளிக்க வேண்டும் சமுதாய வளர்ச்சியின் ஊடாகவே தேசிய வளர்ச்சியை அடையமுடியும்.

ஒரு சமூக அமைப்பை நிர்மாணிப்பதே நம்முடைய வேலை ஆனால் இவ்வித திட்டமிடுதல் ஒரு தனிவிதமாக இருக்கும் அதாவது ஜனநாயக கட்டுப்பாட்டிற்கு அடங்கிய சுதந்திரத்திற்கான திட்டமிடுதலாக இருக்க வேண்டும். அங்கத்துவம் கொண்டுள்ளவரிடையே தன்னம்பிக்கை, தன்முயற்சி, தன்னிறைவு, ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்வது என்ற கோட்பாடுகளையுடைய புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதாகும். அதற்கான கல்விசார் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலமாகவும் செயலாற்றுவதற்கான நிறுவனங்களை அமைப்பது மூலமாகவும் அங்கம் வகிப்போரிடையே ஒரு மன மாற்றத்தினை ஏற்படுத்த சமுதாய நலத்திட்டம் விளைகின்றது என்பதனால் பனை தென்னை வளம் சார்ந்த தொழிலாளர் சமுகத்தினது சமுதாய வளர்ச்சிக்கான வழியமைத்தல்களும் அவசியப்பாடுடையதாகவிருந்தது.

பனை தென்னை வளத் தொழிலாளர்களுக்குரிய ஏகபோக தொழில் வாய்ப்பினை 'மரவரி' முறைமையென்ற பெயரில் தொழில் செய் உரிமையினை பணம் படைத்தவர்களே பெற்றுக் கொண்டனர். உரிமை பெற்ற முதலாளித்துவவாதிகள் தொழிலாளர்களுக்குரிய தொழிலை இயலளவுக்கு மேலாக வழங்கியும், அவர்களுக்குரிய வேதனத்தை குறைத்து வழங்கியும், இவர்களின் தனிப்பட்ட விடயங்களில் தலையிட்டும், ஓய்வுப் பொழுது என்பது மறுக்கப்பட்டும், எனப் பலதரப்பட்ட முறை தவறிய செய்

கைகளைச் செய்து இவர்கள் மூலமாக பெரு மளவு உற்பத்திகளைப் பெற்று தமது குடும் பத்தின் பொருளாதார நிலையினை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள இத்தொழிலாளர்களைப் பக டைக்காய்களாகப் பயன்படுத்திக்கொண்டனர் இத னால் தொழிலாளர்களின் வயிறும் நிரம்பவில்லை, வாழ்வும் சிறக்கவில்லை, மனதும் மகிழவில்லை, எனும் பலதரப்பட்ட இன்னல்களில் சிக்கித் தவித்து வாழ்ந்தனர். இதற்கான விடிவுநிலையை ஏற்படுத்துவதற்காக இத்தொழிலாளர்களின் நல னிலும், நல்வாழ்விலும் அதீத அக்கறை கொண் டவர்களினால் அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட விழிப்புணர்வுடன் கூடிய பிராயத்தனத்தின் பய னாக கூட்டுறவு அமைப்பு முறைக்கு ஊடாக தொழிலாளர் சமுதாயத்தின் வளர்ச்சியினை ஏற் படுத்திடலாம் எனும் நோக்கில் அமைப்பு முறை மையொன்று 1972ஆம் ஆண்டு மே மாதம் 01ந் திகதி தொடக்கம் தொழிலாளர்களை ஒரு குடையின் கீழ் அணிவகுத்துக் கொள்வதற்காக தோற்றுவிக்கப்பட்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த தொழிலாளர்களை ஒரு குடையின் கீழ் அணி திரள்வதற்கான வழி முறைகளை ஏற்படுத்தப் பட்டிருந்தாலும் தொழிலாளர்கள் உயர்வு பெறக் கூடாது எனும் எண்ணம் கொண்ட ஒரு சிலரின் பிழையான தட்டிக் கொடுப்பினால் தொழிலாளர் சிலர் ஒருமுகப்படுத்தப்பட்ட நுகத்திலிருந்து தடம் புரளத்தொடங்கினார்கள் அவர்களின் விடிவு கால த்திற்காகத் தொடக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பு ரீதியான செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக் கலானார்கள். விற்பனை நிலையங்கள் களவாடப் படுதல், தீயிடப்படுதல், தொழிலாளரிடையே குழப் பம் விளைவித்தல், கைகலப்புக்கள், தொழிலுடன் தொடர்புடைய உபகரணங்கள் அழிப்பு, என்பன முடுக்கிவிடப்பட்டவர்களின் முயற்சிக்காக கிடை க்கப்பட்ட வெகுமதிகளாகின இதனை முற் போக்கு எண்ணம் கொண்ட தொழிலாளர்களினா லும், அத்தொழிலாளர்களின் வளர்நிலைப் போக் கில் ஆத்மார்த்தமாக அக்கறை கொண்ட முன்ன ணிச் சிந்தனையாளர்களினாலும், தகர்த்தெறியப் பட்டது. அதன் பயனாக தொழிலாளர் மத்தியில் விழிப்புணர்வின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

"எண்ணங்கள் செய்கைகளெல்லாம் – இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"

*–பாரதியார்–*

சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது தொழிலாளர் சமுகத்தைச் சேர்ந்த படித்த இளை ஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டது. அத்தருணத்தில் படித்து விட்டு வேலை வாய்ப்பின்றியிருந்த பல பட்டதாரிகள் உட்பட்ட பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு அவர் களின் குடும்ப நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டது அதன் பயனாக அவர்களின் குடும்பங்களில் தென்றல் வீசத் தொடங்கியது குடும்பநிலை புதுப்பொலிவு தென்படத் தொடங்கலாயிற்று.

வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட தொழி லாளர் குடும்பம் சார்ந்த பணித்தொகுதியினரால் தமது நிறுவனமெனும் மன உணர்வுடன் தமது பணிகளை வினைத்திறனுடன் முழுமூச்சுடன் தொழிற்பட்டதனால் நிறுவனத்தின் வளர்ச்சி எதிர் பார்த்த வேகத்தை விட பல்மடங்கு வேகத்துடன் தமது வளர்நிலை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தன. அக்காலப்பகுதியில் நிலவிய அரச பொருளாதாரக் கொள்கையின் பயனாக உள்ளூர் வளம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை ஊக்கு வித்துக் கொள்ளும் திட்டத்திற்கமைவாக பனை சார் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்க அதே வேகத்தில் நிரம்பலையும் அதிகரித்த சங்கங்களின் செயற்திட்டங்களினால் சங்கங்களின் வியாபாரப் பெருக்கங்கள் ஏற்பட்டு அதிக லாபம் உழைக்கப்பட்டது இதன் மூலமாக வும் சங்கத்தினதும், சங்கம் சார்ந்தவர்களினதும் பொருளாதார நிலை வளப்படலாயிற்று.

சங்கங்களுக்கிடையே ஒற்றுமையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி அமைப்பு ரீதி யான ஒருமைப்பாட்டுப் பலத்தினை வெளிக் கொணர்வதற்காக போட்டிகளும், கலை நிகழ்வு களும், காலத்துக்குக்காலம் ஒவ்வொரு இடங்க ளிலும் நடாத்தப்பட்டு ஊக்குவிப்பதற்காக பரிசுக ளும் வழங்கப்பட்டது. இதன் மூலமாக தொழிலா ளர், பணியாளர்களுக்கிடையே நல்லுணர்வு ஏற் பட்டு புரிந்துணர்வுடன் தொழிற்பட முடிந்தமை யால் தொடர்பாடல் முறைமையிலும், அவர்களின் கலை கலாச்சாரத்திலும் முன்னேற்றம் ஏற்பட லாயிற்று.

வளரும் சமுதாயம் தான் மேலோங்க முடியும் என்ற இயல் பொய்த்து விடவில்லை. தொழிலியல் சமுகம் எழுச்சி கொண்டெழுந்த மையால் நாட்டின் வளர்ச்சிக்கு உதவி வருகின் றமையை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக சங்கத்தின் தொழிற்பாட்டு நிலமை முன் னோக்கிச் செல்வது

உறுதிப்படுத்தப்பட்ட நிலை யில் சங்கம் தனது செயற்பாட்டினை விரிவுபடுத் திக் கொள்ள பல நலத்திட்டங்களை முன்வைக் கத் தொடங்கின.

### (அ) கல்விச் சேவை.

அழிவில்லாச் செல்வமாகிய கல்வியின் மூலமாகவும் தடைகளைத் தகர்த்திடலாம் என் பதில் உறுதிப்பாடு கொண்ட சங்க அமைப்பு கல்வியை ஊக்கப்படுத்திடவென பலவேலைத் திட்டங்களை கட்டம் கட்டமாக மேற்கொண்டு வருகின்றனர். அதாவது முன்பள்ளிக் கல்விச் சேவை, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம், க.பொ.த.(சா/தரம்), க.பொ.த.(உ/தரம்) சித்தி பெற்றவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசுத் திட் டங்கள், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர் களுக்கான (கல்வியல் கல்லூரிகள் உள்ளடங் கலாக) நிதியுதவித் திட்டம், முன்பள்ளி மாணவர், ஆசிரியைகளுக்கான சீருடை விநியோகத்திட்டம், முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு வழங்கல் திட்டம், தொழிலாளர்களுக்கான தலைமைத் துவம், சட்ட ஆலோசனை, நிர்வகித்தல், கணக் குப் பேணல் என்பனவற்றுக்கான பயிற்சிகளும், கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சேவைக்கால பயிற்சிகள் என்பவைகளை நடாத்தி அவர்களின் இயலளவு, ஆற்றல், ஆளுமை, என்பவைகளை வளர்த்துக் கொள்ளுதல் இவற்றின் காரணமாக தொழிலாளர்களும், பணியாளர்களும் என கணிச மானவர்கள் உயர்கல்வியைப் பெற்று அரசாங்கப் பணிநிலைகளில் உயர்ந்துள்ளமையையும் காண முடிகின்றது.

### (ஆ) பொருளாதார நலத்திட்டம்

"இல்லாதானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்"

சங்கங்கள் தான் சார்ந்தவர்களின் பொரு ளாதார நிலையில் மாறுதல்களை ஏற்படுத்துவ தில் குறியாகக் கொண்டு செயற்திட்டங்களை வரைவு செய்து அமுல்படுத்திக் கொள்ளுகின் றது. அதன் பயனாக அங்கத்தவர்களுக்குப் பல அமைப்பு மட்டங்களில் தொழிற்படும் போது அவர்கள் தமது குடும்ப பாரத்தைச் சுமந்து கொண்டு கஷ்டப்பட்டுழைத்து தமது குடும்பத் தையும், தமது சங்கத்தினையும் வளர்த்துக் கொண்டதற்காக அவர்களது எதிர்கால நலனுக் காகவும், தேவைப்பாட்டிற்காகவும் ஓய்வூதியத் திட்டங்கள் (சங்கம், கொத்தணி, சமாசம், விவ சாயத் திணைக்களம்.) அமுல்படுத்திக் கொள்ளுதல், தொழில்புரியும்போது எதிர்பாராத வித மாக விபத்து ஏற்படும்போது இழப்பீட்டு/பாதிப்பு நிவாரணமாக விபத்துநிதி நலத்திட்டத்தின் ஊடாக நிவாரணம் பெறுதல், உழைக்கும் பொழுதில் சேமிக்கும் திட்டங்கள் (கட்டாய சேமம், சாதாரண சேமம்) எனவும், பணியாளர் களுக்கு ஓய்வூதியத்திட்டம் என்பனவும், அமுல் படுத்தி சங்கத்தை நம்பியுள்ளவர்களின் எதிர் காலத்திற்கு வளம் சேர்க்கும் புனித பணியாக கொண்டு தொழிற்பட்டு வருகின்றன.

### (இ) கலைவிருத்தி

சங்கம் சார்ந்தவர்களின் பல்துறை ஆற் றல்களை பெருக்கிக் கொள்ளும் முகமாக கால த்திற்குக் காலம் கலைவிழாக்களை ஏற்பாடு செய்து பல்தரப்பட்ட போட்டிகளை நடாத்தி பரி சுகள், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் என்பன வழங்கி ஒவ்வொருவரினுள்ளுமுள்ள ஆற்றல் களை வெளிக்கொணரச் செய்து அவர்களை ஊக்கப்படுத்திக் கொள்ளுதல் மூலமாக அமை ப்பு ரீதியான அகலப் பார்வையையும், ஆளு மையையும் விருத்தி செய்துகொள்ளக் களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

### (ஈ) கிராமிய அபிவிருத்தி

நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தமது அமைவிடத்திற்குட்பட்ட பொது அமைப்புக்களின் கோரிக்கைக்கமைவாக தேவைப்பாட்டுக்குரிய உதவிகளை நிறைவுசெய்து கொடுப்பதன் மூல மாகவும் கிராம முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் உபாயப்பாங்கினையும் நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. அது மட்டுமன்றி பெரிய வட்டத்தி னுள் சென்றும் தேவைப்பாடுடைய நற்காரிய பணிகளை மேற்கொள்ளுகின்ற தர்ம அமைப்புக் களுக்கும் சூழ்நிலைகளுக்கு அமைய பரோப காரம் செய்வதனையும் (நலீல்ட் பாடசாலைக் கான உதவிகள், சுனாமி அனர்த்த உதவிகள், இடப்பெயர்வுக்கான உதவிகள், வெள்ள அனர் த்த உதவிகள்...............) அவதானிக்க முடி கின்றது.

## (உ) ஊடகப்பணி.

எந்தவொரு அமைப்பினதும் ஸ்திர நிலையை வெளியுலகிற்கு எடுத்தியம்புவது அதனது ஊடகத்துறை என்பதற்கமைவாக சங்க அமைப்பு முறைமைக்குட்பட்ட நிறுவனங்களின் தலைமை ஸ்தாபனமான வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக அமைப்புசார் செய்திகளையும், செயற்திட்டங்களையும் மாதாந்தம் 'கற்பகம்' எனும் பத்திரிகை மூலமாக வெளியுலகிற்கு நிறுவனங்களின் முன்னேற்றத்தினையும், சேவைகளையும் எடுத்தியம்புகின்றது. இதன் மூலமாக எழுத்தார்வமுள்ளவரின் ஆக்கப்பணிகளும் சிறக்க இப்பத்திரிகை வழியமைத்துக் கொடுப்பதனால் எழுத்தாக்கத்துறையிலும் இந்த அமைப்புச் சார்ந்தவர்கள் பிரகாசிக்க ஏதுவாகவுள்ளது.

இயற்கை எவருக்கும் பாரபட்சம் காட்டுவதில்லை மனிதர்களே தம்மிடையை பாரபட்சம் காட்டுதல், போட்டி, பொறாமை, வெட்டுக்குத்து, சண்டை, சச்சரவு எனும் பழிச்செயல்களில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொள்கின்றனர். இந்த நிறுவனங்களின் பிரதான தொழிற்பாட்டுடன் தொடர்புடைய தருக்களான பனையும், தென்னையும் இயற்கையானவை என்பதனால் அவை எவ்வகையிலும் பாரபட்சம் காட்டாது எல்லோருக்கும் வளப்பயன்கள் அனைத்தையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றன.

1972ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க அமைப்பு முறைமை ஆரம்பிக்கும்போது தனித்து ஒரு முயற்சியுடன் மட்டும் தொடக்கப்பட்டது (கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்) காலப்போக்கில் தருக்களுடன் தொடர்புடைய ஏனைய உற்பத்திப் பொருட்களுடன் விரிவுபடுத்தப்பட்ட சங்க முறைமையாக மாற்றப்பட்டது (தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்) இந்த நிறுவனத்தின் வளர்ச்சிகளையும், அதனது வீச்சினையும், எழுச்சியினையும் கருத்தில்கொண்டு நிறுவனத்தின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தப்படவேண்டிய சூழ்நிலை காலத்தின் தேவையாகக் கொள்ளப்பட்டதனால் பனை தென்னை வளம் சார்ந்த உற்பத்திகளுடன் மட்டுப்படுத்தி நின்று விடாது பலதரப்பட்ட சேவைகளையும் வழங்குதல் வேண்டும் எனும் நோக்கில் சங்க அமைப்பிற்கு 'பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்' எனும் பெயர் மாற்றத்துடன் தனது வள அபிவிருத்திக்கான பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றது. கால ஓட்டத்தில் தேவைகள் கண்டுணரப்பட்டு படிநிலையாக நிறுவனப் பெயர் மாற்றங்களுக்கு உட்படுத்தி சட்ட நகர்வுகளுக்கமைவாக செயற்படுத்தி, முன்னேற்றி வருவதுடன் சங்க அமைப்புக்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பல கட்டமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதாவது சங்கங்கள் பிராந்திய மட்டத்தில் ஒன்றிணைந்து கொத்தணிகளாகவும், சங்கங்கள், கொத்தணிகள் ஒன்றிணைந்து சமாசம் எனும் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி துறைசார் சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் சமபார்வை, சமவலிமை என்பதற்கமைவாக முன்னெடுத்துச் செல்வதனைக் காணமுடிகின்றது.

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பல்பரிமாண நிலையில் தான் சார்ந்தவர்களின் ஆற்றல்களை வளர்த்துக் கொண்டதனால் தொடர்புடையவர்கள் மேடைக் கூச்சம்/அவைக் கூச்சம் அற்றவர்களாகவும் முன் ஆயத்தமின்றி ஒரு நிகழ்வைப் பொறுப்பேற்று தலைமை வகித்து திறம்பட நடாத்தி முடிக்கக் கூடியதான ஆற்றல்களையும், ஆளுமைகளையும் இந்த அமைப்புதான் சார்ந்தவர்களை வளர்த்துவிட்டுள்ளது.

இந்த தொழிலாளர் அமைப்பு 40 வருட கால ஓட்டத்தில் சகல துறைகளிலும் முன்னேறித் தன் தடத்தை திறமையுடன் பதித்துள்ளமையால் சங்கம் சார்ந்தவர்களை மாவட்டசபை, மாகாணசபை, தேசியசபை ஆகிய சபைகளின் நிர்வகிப்புக் குழுக்களுக்கான போட்டிகளில் உட்படுத்தி அரசியல் அந்தஸ்து வழங்கி தேசிய ரீதியாக பேசப்படுவதற்கு இந்த நிறுவனங்களின் பலமே மூலகாரணமானது என்பதை கடந்த கால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்நிறுவனங்கள் பலம் பொருந்திய அமைப்பாக பரிணமித்துள்ளமை மறுப்பதற்கில்லை என்பதனால் கடந்த காலம், நிகழ்காலம் போன்று எதிர்காலத்திலும் தேசிய நிர்வகிப்பு நீரோட்டத்தினுள் நிறுவனம் சார்ந்தவர்கள் உள்வாங்கப்பட நிறுவனம் வலிமைமிக்கதாகத் தொடர்ந்திருக்க வேண்டும்.

இந்த அமைப்புக்கள் தமது 40 வருட கால உழைப்பால் காணி, கட்டிடங்கள், வாகனங்கள், வங்கி வைப்புக்கள், என்பவைகளில் பலமிக்கதாகவிருக்கின்றது. பெருமளவிலான சங்கங்கள் காலமாற்றத்தை உள்வாங்கி துரித நிதிக்கொடுக்கல், வாங்கல்களுக்காக வங்கிச் சேவை வசதிகள், நவீன முறைகளில் அலுவலக அமைப்பு, கிளை நிலைய அமைப்பு வசதிகளையும், ஏனைய பல விடயங்

களையும் ஏற்படுத்தியுள்ளமையையும் காணமுடியும்.

இந்த நிறுவனங்கள் பலரின் கல்வி, தொழில் உயர்வுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. வேலை செய்து கொண்டே தனது படிப்பினைத் தொடர்ந்தவர்களில் அனேகர் இங்கு பெற்ற அனுபவம், பட்டறிவு என்பன பின்னாளில் அவர்களை உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளர்களாகவும், திணைக்களங்களில் கல்விப்பணிப்பாளர்களாகவும், கணக்காளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களாக, அதிகாரிகளாக பரிணாமம்பெற இந்த நிறுவனங்கள் வழியமைத்துக் கொடுத்துள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களாக சகல துறைகளிலும் இக்கூட்டுறவு அமைப்பு வளர்ச்சி கண்டு அதனை நம்பி வாழ்வாரத்தைப் போக்கிக் கொள்ளும் தொழிலாளர்களும், அவர் சார்ந்த குடும்பங்களும் இவ்வமைப்பின் மூலம் அதிகரித்த வருமானத்தை ஏற்படுத்தியும், பணியாளர்களுக்கு தொழில் லட்சணத்தை ஏற்படுத்தி அவர்களை மெருகூட்டிச் சிறப்பான வாழ்க்கை முறைமையைக் கொண்டிருப்பதுடன் தர்மப்பணியினை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கும் பலதடவைகளில் காலத்தின் தேவை கருதி நற்பணியினை முன்னெடுத்துச் செல்லும் இந்தக்கட்டமைப்பும், அதனுடன் தொடர்புடையவர்களும், மேன்மேலும் வளரவும், வளம் பெறவும், அதன் பணிகள் நேரிய பாதையில் முன்னெடுக்கப்பட இறையருள் வேண்டுகின்றேன்.

**"கூட்டுறவு வாழ்க! வளர்க! சிறக்க!"**

**தெரிவுசெய்யப்பட்ட பனை மரத்திலிருந்து பெறப்பட்ட பழம், பழச்சாற்றின் சிறப்பியல்புகள்**

| வகை இல. | தோலின் நிறம் | பழத்தின் நிறம் | ப.சாற்று நிறம் | பழத்தும்பு | சாற்றின் தன்மை | மணம் | சுவை |
|---|---|---|---|---|---|---|---|
| AL-01 | சிவப்பு | தோடம்பழநிறம் | தோடம்பழ நிறம் | குறைவு | மென்மையானது | குறைவு | இனிப்பு |
| AL-02 | சிவப்பு கலந்த கபிலம் | மஞ்சள் | மஞ்சள் | பாரமானது | தடிப்பானது | சிறிதளவு | காறல்சுவை அதிகம் |
| AL-03 | முழுக்கறுப்பு | - | - | - | - | - | - |
| AL-04 | மஞ்சள் | மஞ்சள் | கடும் மஞ்சள் | பாரமானது | தடிப்பானது | பலமானது | காறல்சுவை குறைவு |
| AL-05 | மென்பச்சை மஞ்சள் மேற்பகுதி | - | - | - | - | - | - |
| AL-06 | சிவப்பு கலந்த மஞ்சள் | கடும் தோடம்பழ நிறம் | தோடம்பழ நிறம் | நடுத்தரம் | மென்மையானது | பலமானது | இனிப்பு |
| AL-07 | கறுப்பு மேற்பக்கம் சிவப்பானது | கிறீம் நிறம் | ஆழமான தோடம்பழ நிறம் | நடுத்தரம் | மென்மையானது | பலமானது | இனிப்பு |
| AL-08 | கறுப்பு முகப்பக்கம், கடும்சிவப்பு தோடம்பழ நிறம் | தோடம்பழ நிறம் | தோடம்பழ நிறம் | பலமானது | தடிப்பானது | பலமானது | இனிப்பு |
| AL-09 | கூடுதல் சிவப்பு தோடம்பழ நிறம் | தோடம்பழ நிறம் | மஞ்சள் | நடுத்தரம் | தடிப்பானது | சிறிதளவு | காறல் சுவை குறைவு |
| MK-01 | கறுப்பு முகப்பும் அரைசிவப்பு மஞ்சள்நிறம் | கடும் மஞ்சள் | தோடம்பழ நிறம் | பாரமானது | மென்மையானது | விருப்பமானது | காறல்சுவை குறைவு |
| MK-02 | கறுப்பு | மஞ்சள் | கடும்மஞ்சள் | பாரமானது | தடிப்பானது | சிறிதளவு | காறல்சுவை குறைவு |
| MK-04 | முழுக்கறுப்பு | மஞ்சள் | மஞ்சள் | பாரமானது | மென்மையானது | விருப்பமானது | இனிப்பு |

# நேர்மை!



கண்ணுக்குத் தெரியாத
கருத்துடைய பொருள்
எண்ணம் தெளிவெனில்
ஏற்றம் பெறவைக்கும் பொருள்
மண்ணும் மறை நான்கும்
சொல்லும் கருத்திலெல்லாம்
என்றும் மனிதனை வாழ்வில்
ஏற்றம் பெறவைக்கும் பொருள்
சொல்லும் சொல்லில் நேர்மை
செய்யும் தொழிலில் நேர்மை
இனிய பந்தத்திலும் நேர்மை
இருப்பின் உன் வாழ்வினிதே!

கரவை பிறேம்

# பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்



சங்கத்தின் பணிப்பாளர்கள்



சங்கத்தின் பணியாளர்கள்






கௌரவிப்பு விழா நிகழ்வின்போது




கூட்டுறவு திணைக்களத்தால் நடத்தப்பட்ட கண்காட்சியில் சங்கத்தின் விற்பனை நிலையத்தின் முன்பாக...



பனைவளம் பெருக்கி வளமுடன் வாழ, கூட்டுறவில் நாட்டுயர்வு காண,
பனந்தொழில் வல்லுநர்கள் ஒன்றுபட்ட 40வது ஆண்டில்......
அனைத்தையும் இழந்து நிற்கின்றோம்,
எஞ்சியது எமது இயற்கை மூலவளமான
கற்பகதரு மட்டுமே!
இந்தப் பனை வளம் எமது எதிர்கால சந்ததிக்கு
நாம் விட்டுச்செல்லப்போகும் அசையாத சொத்து!
இதனையும்
அழித்தால்.....?
நாளாந்தம் வெட்டித் தள்ளுகிறார்களே!
நெஞ்சு நெருடுகிறது!
எமதருமை தமிழ்பேசும் பெருங்குடி மக்களே! தமிழர்தம் தலைவர்களே!
பொறுப்பற்ற வகையில் பனை வளத்தை வெட்டி அழிக்கும்
கொடிய செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு
நாம் அனைவரும் உறுதி பூணுவோம்!
பனை வெட்டுவது சட்டப்படி குற்றமாகும்
எங்கிருந்தாலும் பனை வளத்துக்காக வாழ்கின்ற
"கற்பகக் காவலன்" க.நடராசா
(பனைசார் நிறுவனங்களின் ஸ்தாபகர்) தொ.பே 00612-98965186
"பனையை நடுவோம் பயனைப் பெறுவோம்" என்றார் வள்ளல் மில்க்வைற் கனகராஜா

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுச் சுவடுகள்.......

### சங்கத்தின் தோற்றம்

கோண்டாவில் இணுவில் கள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம் எனும் பெயருடன் 1972ம் ஆண்டு மே மாதம் 01ம் திகதி எமது சங்கம் உருவாக்கப்பட்டதுடன் இதன் எல்லைப் பரப்பாக உடுவில், நல்லூர் பிரதேச செயலகங்களின் நிர்வாகப் பிரதேசத்துக்குட்பட்ட 11 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசம் ஆகும். இப்பகுதியில் 11 கள் விற்பனை நிலையங்கள் ஒரு கிராமிய வங்கி ஒரு உற்பத்தி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிறுவனமாகும்.

### அங்கத்துவம்

சங்கத்தின் ஆரம்ப அங்கத்துவம் சில நூறுகளாக இருந்த போதிலும் படிப்படியாக இவ் எண்ணிக்கை உயர்வடைந்து தற்போது ஆயிரத்து இருநூற்று நாற்பது உறுப்பினர்கள் அங்கத்துவத்தைப் பெற்று இருப்பதுடன் இதில் சீவல் தொழில்வல்லுனர்கள் ஆயிரத்து நூறு பேரும் நூறு மகளிர் உறுப்பினர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் சீவல் தொழிலையே முக்கிய தொழிலாகக் கொண்டு இயங்கிய போதும் காலப் போக்கில் சங்கத்தின் துணைவிதி நடைமுறை விதி திருத்தங்களுக்கேற்ப மகளிர் அங்கத்துவம் உள்வாங்கப்பட்டு இவர்களுக்கான செயற்பாடும் உருவாக்கப்பட்டது.

### தொழிற்பாடு

இச் சங்கம் ஆரம்ப இலக்கிற்கு ஏற்ப கள் விற்பனையையே முழு ஈடுபாட்டையும் கொண்டு வளர்ந்த போதிலும் காலப் போக்கில் வெல்ல உற்பத்தி, சீனி உற்பத்தி போத்தல் கள்ளு உற்பத்தி போன்ற முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வெற்றிகண்டுள்ளதுடன் தற்போது ஆரம்ப காலத்தில் எம்மால் அமைக்கப்பட்ட கிளை நிலையங்களில் சிலவற்றை அகற்றப்பட்ட நிலையிலும் சங்க வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படாத வகையில் நகர்ந்து வருகின்றது.

### அங்கத்துவ நலத்திட்டங்கள்

இச் சங்கத்தின் கீழ் இணைந்து தொழிலாற்றிவரும் அங்கத்தவர்களுக்கு ஆற்றி வரும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களாக பின்வரும் நலத்திட்டங்களை அறிமுகம் செய்து மிகச் சிறப்பாக நடாத்தி வருவதில் நிர்வாகம் வெற்றி கண்டுள்ளது.

1. ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்கான மாதாந்த ஓய்வூதியம் வழங்கி வருதல். (தற்போது இவ்வாறாக 36 பேர் மாதாந்தம் பயன் பெற்று வருகின்றனர்)
2. உறுப்பினர்கள் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் க.பொ.த சா/தரம், உ/தரம், பல்கலைக் கழகச் சித்தி பெற்றவர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கல்.
3. உறுப்பினர்கள் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு சுற்று வட்டத்திலான வங்கி வைப்புச் செய்தல்.
4. உறுப்பினர்கள் பணியாளர்கள் மரணம் அல்லது நிரந்தரப் பாதிப்பு ஏற்படின் அவர்களின் ஒரு பிள்ளைக்கான கல்விக் கொடையை தொடர்ச்சியாக வழங்கல்.
5. முன்பள்ளி நிலையங்களை நடாத்துதல் ஆசிரியர்களுக்கான சம்பளம் மாணவர்களுக்கான போஷாக்கு சீருடை மற்றும் தகுதிகாண் பரீட்சைகளை நடாத்தி பரிசில்களை வழங்குதல்.
6. முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகளுக்கான அன்பளிப்பாக நிதி வழங்கி ஊக்கப்படுத்தல்.
7. உறுப்பினர்கள், பணியாளர்கள் மகளிர் உறுப்பினர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கூட்டுறவுத் துறை சார்ந்தவர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல்.
8. உறுப்பினர்கள் பணியாளர்கள்

அவர்க ளைச் சார்ந்த பிள்ளைகளுக்கான மாலை நேரக்கல்வியினை சனசமூக நிலையங்களூடாக இலவசமாக வழங்குதல்.

9. உறுப்பினர்கள் பணியாளர்கள் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு இலவச கண் பரிசோதனையை மேற்கொண்டு வருடாந்தம் மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல்.
10. சிறந்த உறுப்பினர்கள் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உறுப்பினர்கள், பணியாளர்கள் வருடாந்தம் கௌரவிப்புச் செய்து பரிசில்கள் வழங்கல்.
11. உறுப்பினர்கள் பணியாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் வருடாந்தம் வழங்குதல்.

இத்திட்டங்களின் கீழ் பல நூறு அங்கத்தவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் பயன் பெற்று வருவதுடன் மேலும் பெருமளவான அங்கத்தவர்கள் விவசாய ஓய்வூதிய காப்புறுதித் திட்டத்தில் இணைக்கப்பட்டு 75 அங்கத்தவர் வரை விவசாய ஓய்வூதியத்தினைப் பெற்று வருகின்றனர்.

## பணித் தொகுதி

சங்கத்தில் பல்வேறுபட்ட தொழிற்பாடுகளிலும் ஏறத்தாழ ஐம்பது பணியாளர்கள் சங்கத்தில் ஆரம்ப நிலையில் இருந்து இச்சங்க வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்பினை நல்கி தற்போது சங்கப் பணி நிலையில் தொடர்ந்தும் நீடித்து உழைக்க முடியாமல் விலகிய போதும் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு உழைத்து வருபவர்கள் இன்றும் உள்ளனர். இவர்களது சிறப்பான சேவையை மதிப்பிடப்பட்ட இவர்களை கௌரவித்து இவர்களுக்கான பல நலத்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பணியாளர் தமக்கென நலன்புரி அமைப்பினையும் சி.க.வ.கூ. சங்கத்தினையும் உருவாக்கி தமக்குள்ளாக பயன் பெற்று வருவதையும் பெருமையுடன் கூறமுடியும்.

## சொத்துக்கள்

1981ம் ஆண்டில் சங்கத்தின் தலைமை அலுவலகம் நிர்மானிப்புக்காக ஓர் காணி கட்டடம் கொள்வனவு செய்து தற்போது இரண்டு காரியாலய 2 மாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து கிளை நிலையங்கள், உற்பத்தி நிலையத்துக்கு பொருத்தமான பல துண்டுக் காணிகளை ஆங்காங்கே கொள்வனவு செய்யப்பட்டதோடு பாரிய செலவுகளில் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு இன்று பல லட்சம் மதிப்புள்ள சொத்துக்களை அசையும், அசையாச் சொத்துக்களையும் இச்சங்கம் பேணி வருவதோடு அவ்வப்போது இருந்த நிர்வாகத்தினரின் அரும்பெரும் பணியின் காரணமே இச் சொத்துகளைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக இருந்தது.

## சமூக நலத் திட்டங்கள்

பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்து அவ்விடங்களில் முன்பள்ளிகளை நிறுவி தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி மற்றும் போஷாக்கு உணவு சீருடை போன்றவற்றை வழங்குவதனூடாக சமூக நலனில் அக்கறை செலுத்தத் தொடங்கிய எமது சங்கமானது படிப்படியாக அதனை விரிவுபடுத்தி சனசமூக நிலையங்களுக்கான நிதி உதவி, தொழில் சார் பயிற்சிகள் மகளீருக்கான தையல் மற்றும் முக ஒப்பனைப் பயிற்சிகள் என்பவற்றை வழங்கி சுயதொழில் ஊக்குவிப்பினை மேம்படுத்தியும் பள்ளி மாணவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்புக்களை நடாத்தியும் வருவதுடன் அங்கத்தவர்களின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு கிராமிய வங்கியை நிறுவி சேமிப்பு சிக்கனம் உழைப்பு என்பவற்றை ஊக்கப்படுத்தியதினூடாக எமது கிராமிய வங்கியில் தற்போது இலட்சக் கணக்கான ரூபாய்களை கணிசமான அங்கத்தவர்கள் வைப்பிலிட்டுள்ளார்கள் என்ற செய்தியினூடாக அவர்களின் வாழ்வாதாரம் வியக்க வைக்குமளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

## சாதனைகள்

சங்கங்களுக்கிடையேயான செயற்பாடுகளில் மாகாண மட்டத்திலும் சரி, சமாச மட்டத்திலும் சரி, பல தடவைகள் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்ட சாதனையை தனதாக்கிக் கொண்ட இச் சங்கமானது தொடர்ந்தும் அத் தரத்தினையும் அனைத்துக் தரப்பினரினது நற்பெயரையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. கல்விச் செயற்பாடுகளில் ஆரம்பகாலம் முதற்

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்!




சங்கத்தின் பணிப்பாளர்கள்



சங்கத்தின் பணியாளர்கள்




சமாசத்தால் நடத்தப்பட்ட 90வது கூட்டுறவுதின விழாவில் சிறந்த சங்கத் தெரிவுப்போட்டியில் 2ம் இடம்பெற்றமை



சிறந்த தலைவர்கள், அங்கத்தவர்கள் கௌரவிப்பு நிகழ்வின்போது..



முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பின்போது

40வது அகவை கண்டு நிற்கும் எமது பனை தென்னை வள
சங்கங்களை வாழ்த்துவதுடன், 40வது அகவை
சிறப்பு மலர் பொலிவுறவும் எமது நல்வாழ்த்துக்கள்!

## எமது செயற்பாடுகளும் சேவைகளும்

### அங்கத்தவர் நலத்திட்டங்கள்

- மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்.
- விபத்து மரணக்கொடை வழங்கல்.
- கூட்டுறவுக் கல்விப் பயிற்சி வழங்கல்.

### மகளிர் நலத்திட்டங்கள்



- தையல், மனைப்பொருளியல், அழகுக் கலை பயிற்சியளிப்பு.
- சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு.

### கிராமிய வங்கிச் சேவை



- அங்கத்தவர்களின் சேமங்களைப் பேணல்
- அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கல்.

### கல்வி ஊக்குவிப்புத் திட்டம்



- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
  ஆசிரியர் வேதனம், மாணவர்,
  ஆசிரியர் சீருடை, சத்துணவு வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி, பல்கலைக்கழக அனுமதி என்பவற்றுக்கு நிதி ஊக்குவிப்பு வழங்கல்.

### சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

பொது நிகழ்வுகளுக்கான அன்பளிப்பு வழங்கல்.

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

தாவடிச் சந்தி,
கோண்டாவில்

தொலைபேசி:
021 222 3539


கொண்டு இன்று வரை அனைவராலும் போற்றப்படும் முன்னுதாரணமாகக் கொள்ளப்படும் நிர்வாகமாக மிளிர்வதுடன் கூட்டுறவாளர் தின விழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறும்போது அதில் பலதரப்பட்ட போட்டிகளிலும் ஆர்வத்து டன் கலந்துகொண்டு பல நூறு வெற்றிக் கேட யங்களைத் தனதாக்கிக்கொண்டு வருகிறபோது, இவை எல்லாவற்றுக்கும் சிகரம் இட்டாற் போல் 2011ம் ஆண்டில் தேசிய மட்ட ரீதியில் சங்கங் களின் சகல செயற்பாடுகள் அடங்கிய தெரிவுப் போட்டியில் அகில இலங்கையில் இருக்கக் கூடிய அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இருந்து எமது சங்கம் முதல் சங்கமாக தேர்வு செய்யப்பட்டு விருது பெற்று பெரும் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.


## எதிர்கால நோக்கு

இச் சங்கம் துறைசார்ந்த வகையில் காத் திரமான பணிகளை செய்து நாற்பது ஆண்டுகால வரலாற்றுச் சாதனையைப் படைத்து வருகின்ற போதிலும் எதிர்பார்ப்புக்கள் முழுமைபெற வில்லை. பலவிதமான தடைகளைத் தாண்டி முன்னேறும் முயற்சியில் வெற்றிகரமாக செயற் படும் நாம் இச் சங்கத்தோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரோடும் வழிகாட்டல் ஆலோ சனை ஒத்துழைப்பு என்பவற்றுக்காக என்றுமே சிரம் தாழ்த்தி நன்றி கூறுவதோடு எதிர்கால இலக்காக சீனி உற்பத்தி ஆலை, பனம் பொருள் விற்பனைச் சாலை ஆகியவற்றை நிறுவி கூட்டு றவு சார்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டு செயற்பட வுள்ளோம் என்பதையிட்டு பெருமிதமடைகிறோம்.

## பனம்பழ உணவுகள்

எமது முன்னோர்கள் பனம்பழச் சாற்றினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு உணவுப் பொருட் களைப் பாரம்பரியமாக மேற்கொண்டு வந்துள்ளார்கள். அந்த உணவுகளாக,








- பனம் களியும், பயிற்றம் பருப்பும், தேங்காய்ப் பாலும், உப்பும் சேர்த்து அவித்து உண்ணுதல்.
- தினையரிசிமா அல்லது அரிசி மா அல்லது கோதுமை மாவுடன் கலந்து பனங்காய்ப் பணியாரம் சுட்டு உண்பர்.
- பனம் களி கலந்து தோசை சுட்டு உண்ணுவர்.
- பனம் களியுடன் சம்பா அரிசி மா அல்லது தினை அரிசி மாவைக் கலந்து பிசைந்து அதனுடன் பனை வெல்ல மும், தேங்காய்ப் பாலும் பருப்பும் சேர்த்து பிசைந்து உருட்டி நெய், இலுப்பெண்ணெய் முதலியவற்றில் பொரித்து எடுத்துப் பயன்படுத்துவார்கள். இப்பலகாரம் பல நாட்களுக்கு பழுதடையாமல் இருக்கும்.
- பனங்களியுடன் தினைமாவையும் தேங்காய்ப்பாலை யும் சேர்த்து பொங்கலிட்டு உண்ணும் வழக்கமும் நிலவியது. இதனை மாலையில் செய்து ஆறவைத்து மறுநாட் காலையில் எடுத்து கேக் துண்டுகள் போல வெட்டிச் சாப்பிடலாம். மிகச் சுவையாக இருக்கும்.
- பனாட்டினை உண்பதால் கரப்பான், கிரந்தி, அழுகிய கிரந்தி, சொறி, தேமல், நீர்க்கடுப்பு, தலைப்பாரம், மலச் சிக்கல், குடல்சிக்கல் என்பன நீங்கும். இதனைப் பதார் த்தகுணசிந்தாமணி எனும் ஆயுர்வேத நூல் பின்வரு மாறு பகருகின்றது.

"நாளும் பனம்பழத்தை நல்லமுதாயுண்ணுங்கா
லாளுங் கரப்பானழுகிரந்தி – நீளுமலஞ்
சிக்கும் பித்தத்தில் வளி சேருதல் நோய்க்கனமு
தித்திக்கும் பலக்குமெனச் செப்பு"

# வரலாற்றுத் தடங்கள்............. கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வாழ்வையும் வரலாற்றையும் எழுதும்போது, டொக்டர் என்.எம். பெரேரா அவர்களது பெயரை குறிப்பிடாமல் விடமுடியாதென்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில் மிக மிக முக்கியத்துவம் மிக்கதாக காணப்படும் "பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தை" உருவாக்கிய ஸ்தாபகராக டொக்டர் என்.எம்.பெரேரா அவர்களே இருந்தார் என்பதை இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் பல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மறந்துவிட்டனவா? என ஐயப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

1970களின் ஆரம்பத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணியே அரசைக் கைப்பற்றிக்கொண்டது. சிறீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உருவான அரசியல் கட்சிகளின் கூட்டணியில் டொக்டர் என்.எம்.பெரேரா அவர்கள் நிதி அமைச்சராகப் பதவி ஏற்றார். மாக்ஸீஸ கொள்கையால் பெரிதும் கவரப்பட்டு, மாக்ஸீஸ கொள்கையை தனது வாழ்வியல் கொள்கையாக வரித்துக் கொண்டு, மக்கள் மத்தியில் செயற்பட்ட டொக்டர் என்.எம்.பெரேரா அவர்கள், யாழ்ப்பாணச் சமூக உருவாக்கம் பற்றிய தெளிந்த ஞானத்தைக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாண சமூக உருவாக்கத்திலும், சமூகச் செயற்பாட்டிலும் சாதிப் பிரிவுகளும், சாதி ரீதியிலான ஒடுக்குமுறைகளும் மிக முக்கியமான பங்கை வகித்தது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அந்த வகையில் சீவல் தொழிலாளர் சமூகமானது அன்றைய காலங்களில் மிக மோசமான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு, சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களாக மிகவும் மோசமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தார்கள். கல்வி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த அந்த மக்களை தனியார் கள்ளுக் கொட்டில் சொந்தக்காரர்கள் மிக மோசமான பொருளாதார சுரண்டல்களுக்கு உள்ளாக்கி வந்தனர். உயர்ந்த வருமானத்தைத் தரும் சிறந்த உழைப்பாளர்களாக விளங்கிய இவர்களை பொருளாதார ரீதியில் உயரவிடாது பல வழிகளிலும் உயர் சமூகத்தினர் என தம்மைக் கூறிக்கொள்வோர் தடுத்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்து சீவல் தொழிலளர் சமூகத்தின் அன்றைய கடை நிலை வாழ்க்கைச் சூழல் பற்றியும், சீவல் தொழிலின் பொருளாதார முக்கியத்துவத்தையும் புரிந்துகொண்ட டொக்டர் என்.எம்.பெரேரா அவர்கள் 1970களில் சீவல் தொழிலை கூட்டுறவு மயப்படுத்தினார். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தை பாராளுமன்றத் தீர்மானமாகக் கொண்டு வந்ததுடன், திரு சண்முகலிங்கம், திரு தங்கவடிவேல் போன்ற தீவிரமான சமூக சேவையாளர்கள் ஊடாக அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தனர்.

கோப்பாய் பனை தென்ன வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து வைத்ததில் திரு கு.தங்கவேல் அவர்களது பங்கு மிக முக்கியமானது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்தான் இந்த தங்கவடிவேல். இவர் மேட்டுக்குடி உயர் மத்திய தர வர்க்கத்தில் பிறந்த ஒருவராக இருந்த போதிலும் "மாக்ஸிஸ்" கொள்கையின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தமையால் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவராக அந்த மக்கள் சமூகத்திற்காக தன்னையே அர்ப்பணித்து உழைப்பவராகத் திகழ்ந்தார். எனவேதான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது ஆரம்பிக்கப்படும்போது பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தபோதிலும் அச்சவால்களை திரு தங்கவடிவேல் அவர்கள் துணிச்சலுடன் எதிர்

கொண்டார்.

தனியார் கள்ளுக்கொட்டில் முதலாளிகள் இந்த சங்கத்தை எதிர்த்து மிகத் தீவிரமாகச் செயற்பட்டார்கள். சீவல் தொழிலாளர்களையே இந்த சங்க உருவாக்கத்திற்கு எதிராகத் தூண்டி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அமைப்பாளர்கள் மீது பலாத்காரப் பிரயோகம்கூட செய்ய முயன்றார்கள். ஆனால் திரு கு.தங்கவடிவேல் அவர்களும் அவருக்கு பக்கபலமாய் நின்ற இளைஞர்களும் மிக துணிச்சலுடனும் சாமர்த்தியத்துடனும் செயற்பட்டு, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தை கோப்பாயில் அமைப்பதில் வெற்றிகண்டார்கள்.

25.03.1972 அன்று சனிக்கிமை இரவு 9.30 மணிக்கு கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது நிர்வாக சபைக்கூட்டம் கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமானது. இக்கூட்டத்திலே திரு ப.அருமைத்துரை, திரு செ.மரியநாயகம், திரு வே.தங்கராசா, திரு க.நல்லான், திரு க.பொன்ராசா ஆகிய ஒன்பது உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். இவர்கள் அனைவரும் நியமிக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களாக இருந்தார்கள். கூட்டுறவுப் பரிசோதகர் திரு யோ.சண்முகம் தலைமையில் இச்சங்கத்தின் முதலாவது நிர்வாக சபைக் கூட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமானது.

ஆரம்ப காலத்தில் நியமன உறுப்பினர்களே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்களாக இருந்தார்கள். அந்த வகையில், கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது நியமனத் தலைவராக கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு நல்லையா அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு நல்லையாவைத் தொடர்ந்து திரு கு.தங்கவடிவேல், திரு பரமலிங்கம், திரு கனகலிங்கம், திரு நவரத்தினம், திரு க.செல்லத்துரை போன்றோர் 1972ம் ஆண்டிலிருந்து 1982ம் அண்டு வரை நியமனத் தலைவர்களாக இருந்து சங்கத்தை சிறந்த முறையில் வழிநடத்திச் சென்றார்கள். அத்துடன் செல்லத்துரை, நவரத்தினம், தங்கராசா போன்றோர் நிமயனத் தலைவர்கள் காலத்தில் நியமிக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களாக இருந்து சங்கத்துக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு, நியமனத் தலைவர் முறை நீக்கப்பட்டு, சீவல் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து தலைவரை தெரிவு செய்யும்முறை உருவானது. சீவல் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து தலைவரை தெரிவுசெய்யும் முறை உருவான காலத்திலிருந்து இன்றுவரை திரு யோ.மாசிலின், திரு க.பொன்னுத்துரை, திரு சி.இரத்தினம், திரு ஆ.சின்னத்துரை, திரு சி.பாலசிங்கம், திரு க.செல்லத்துரை, திரு இ.உதயசூரியன் ஆகியோர் இன்றுவரை தலைவர்காளக இருந்து சங்கத்தை சிறந்த முறையில் வழிநடத்தினார்கள், நடத்தி வருகின்றார்கள் என்பதற்கு கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் இன்றைய வளர்ச்சி நிலை சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகால நியமனத் தலைவராக நியமிக்கப்பட்ட திரு நல்லையா அவர்களுக்கு சொந்தமான இரண்டு அறைகள் மட்டும் உள்ள ஒரு கடைத்தொகுதியிலேயே கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது தனது தலைமைக் காரியாலயத்தை அமைத்து செயற்பட ஆரம்பித்தது. மூன்று, நான்கு ஆண்டுகளாக இக்கடைத் தொகுதியில் செயற்பட்ட கோப்பாய் சங்கத்தின் காரியாலயம் 1975ல் கோப்பாய் தெற்கில் உள்ள தபாற் கந்தோருக்கு முன்னால் ஓர் பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்து தனது காரியாலயத்தை அவ்வீட்டுக்கு மாற்றிக்கொண்டது.

சங்கம் ஆரம்பித்து சரியாகப் பத்து வருடங்களின் பின்பு கோப்பாய் தெற்கில் வீட்டுடன் 6 பரப்பு காணியை சொந்தமாக வாங்கி சங்கத்தின் சொந்தக் காணியில் தனது தலைமைக் காரியாலயத்தை அமைத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்தது. இவ்வாறு தனது சொந்த நிலத்தில் தலைமைக் காரியாலயத்தை அமைத்து மிகச் சிறப்பாக செயற்பட்டு வந்த கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது இன்று தனது சொந்த நிலத்தில் அழகான ஓர் கட்டடத்தை அமைத்து, மிகச் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. இது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச் சங்க வரலாற்றில் ஓர் இமாலய சாதனைதான்.

வர்த்தக மயப்படுத்தப்பட்ட கல்வி முறைமையானது கல்வி பற்றி அறிவியலுக்கு புறம்பான பிரச்சாரத்தை வர்த்தக நோக்கு

டன் மக்கள் மத்தியில் மேற்கொண்டு பாட சாலைப் படிப்பை மேற்கொண்டு சான்றிதழ் பெறாத எவராலும் எதுவுமே செய்யமுடியா தென்ற மாயத்தோற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் பாடசாலைப் படிப்பை படித்து சான்றிதழ் பெறாத சாதாரண சீவல் தொழிலாளர்களால் நிர்வகிக் கப்படும் கோப்பாய் பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கமானது தொடர்ந்து இலாபத்தில் செயற்பட்டு, சொந்தமாக காணி வாங்கி, அதில் ஓர் மாடிக் கட்டடத்தை உரு வாக்கி, அங்கே நவீன முறையில் தனது தலை மைக்காரியாலயத்தை அமைத்துள்ளது. இந்தக் கட்டடத்தை திரு இ.உதயசூரியன் தலைவரா கவும், திரு சி.இரத்தினம் அவர்களைச் செய லாளராகவும், உபதலைவராக திரு இ.ரகுநாத னையும், மகளிர்குழு உறுப்பினராக திருமதி துஷிதா ரவிகரன், திரு க.தவராசா, திரு கா.முரு கன், திரு மு.தவராசா, திரு ஐ.செல்வராசா, திரு இ.அன்ரன்றொபேட், பொதுமுகாமையாளர் திரு க.கிருஷ்ணராஜன் போன்றவர்களை நிர்வாக உறுப்பினர்களாகவும் கொண்ட இன்றைய நிர் வாகமும் பணியாளர்களும்தான் புரிந்தார்கள் என் பதை பெருமையுடன் இங்கே பதிவுசெய்து கொள் கின்றோம். ஏனெனில், பல கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ லில் இன்னும் சில சங்கங்கள் தமது பணியாளர் களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் தமது கட்டடத் தொகுதியில் சிலவற்றை விற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சாதாரண சீவல் தொழிலாளர்களால் நிர்வகிக்கப்படும் கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது யாருடைய உதவியுமின்றி தனது சொந்தச் செலவில் ஓர் மாடிக்கட்டடத்தை அமை த்துக்கொண்டமையானது ஓர் சாதாரண விடய மல்ல.

## கல்விப் பணி

ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச் சிக்கும் கல்வி மிகமிக அவசியமானது என்ற வகையில் பாலர் பாடசாலைகள் சிலவற்றை எமது சங்கம் நடத்தி வருவதுடன், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள் ளைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, குறிப்பிட் டளவு நிதியுதவியை செய்து வருகின்றது. அத் துடன், அங்கத்தவர்களின் பிள்ளைகள் பல்கலை க்கழகம் சென்று படிக்கும் நிலை உரு வாகும்போது, அப்பல்கலைக்கழக மாணவர் களுக்கு வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை அம்மாணவர்களின் படிப்பு செலவுக்காக வழங்கி வருவதுடன், சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளுக் கும் ஓர் குறிப்பிட்டளவு நிதியை கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வழங்கி வருகின்றது.

## வைத்தியசேவை

ஒரு சமூகத்தின் உயர்ச்சியிலும் வளர் ச்சியிலும் அந்தச் சமூகத்தின் உடல் ஆரோக் கியம் மிக முக்கியமான பங்களிப்பை செலுத் துகின்றது என்ற வகையில், நடமாடும் சித்த வைத்திய சேவையை கோப்பாய் பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்க எல்லைக்குட்பட்ட கிராமங்களில் இலவசமாக நடத்தி வருகின்றது. ஒரு நாள் முழுவதும் மேற்படி வைத்திய சேவையை சித்த வைத்தியர்களை அழைத்து மேற்கொள்வதுடன், அன்றைய செலவை சங்கமே பொறுப்பேற்றுக் கொள்கின்றது. இந்த நடவடிக்கைமூலம் மக்க ளின் ஆரோக்கியத்தை பாகாப்பதுடன், சுதேச வைத்தியத்துறையையும் சங்கம் ஊக்குவித்து வருகின்றது.

கோப்பாய் பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் நலன்சார்ந்த செயற்பாடுகள் பின்வரும் அடிப் படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

01. விபத்து நிதித்திட்டம்.
02. ஓய்வூதியத் திட்டம் (பாதுகாப்பு நிதி)
03. இலாபப் பகிர்வு.
04. கடன் திட்டங்கள்.
05. வங்கி நடைமுறையினூடாக கட்டாய சேமிப்புத் திட்டம்

எனப் பல்வேறு திட்டங்களி னூடே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## விபத்துநிதித் திட்டம்

முப்பது முழ மரத்தில் தன் தொழில் நிமித்தம் ஏறி இறங்கும் ஒரு சீவல் தொழிலாளி தற்செயலாக விபத்துக்குள்ளாகலாம் என்ற கரு துகோள் புறந்தள்ளி விடமுடியாத நிலை ஏற்பட லாம். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அவனது குடும்பம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டமே இந்த விபத்துநிதித்

# கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களின்
வெள்ளிவிழா நிகழ்வின்போது






சங்கத்தின் தலைமைக்காரியால திறப்புவிழாவின்போது

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் "கற்பகதரு" வை வாழ்த்தி நிற்கின்றோம்!

### எமது வியாபார நடவடிக்கைகள்

- கள் கொள்வனவு, விற்பனை
- போத்தற் கள் உற்பத்தி, விற்பனை
- சுவையுணவு விற்பனை
- நிழற்படப் பிரதியாக்கல்





### எமது வாடகைச் சேவைகள்

- கட்டடம் (கடை)
- பிளாஸ்றிக் கதிரைகள்
- வாகனம்





### எமது நலத்திட்டங்கள்

- அங்கத்தவர், பணியாளர்களுக்கான ஓய்வூதிய திட்டம்
- அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்பு



கடன் வழங்கல்

கிராமிய வங்கி



- பாலர் பாடசாலைகளை இயக்குதல்
- பொது நிகழ்வுகளுக்கும், பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கும் அன்பளிப்பு வழங்கல்.

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

பருத்தித்துறை வீதி, கோப்பாய்

தொலைபேசி: 021 223 0395

திட்டமாகும். இதற்குத் தேவையான நிதியை அங்கத்தவா்களிடமிருந்து அறவிட்டு, சமாசத்தில் அவர்கள் பெயர்களில் வைப்புச் செய்து விபத்துக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கு அவர்களது நிலைமைகளுக்கேற்ப சமாசத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது சீவல் தொழிலாளர்களுக்கு அவர்களது எதிர்காலம் பற்றிய ஓர் பெரும்நம்பிக்கை ஏற்படுத்தும் திட்டமாக இன்று வரை செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## ஓய்வூதியத்திட்டம்

தனது இளமைக்காலம் முழுவதும் உழைப்பில் ஈடுபட்டுவரும் ஒரு மனிதன், தனது முதுமைக் காலத்தில் பொருளாதாரக் கஸ்டங்களுக்கு முகங்கொடுக்காமல் நம்பிக்கையுடன், சந்தோசமாக வாழவேண்டும் என்பதற்காக உருவானதே இந்த ஓய்வூதியத்திட்டம். இத்திட்டம் 60வயது பூர்த்தியடைந்த உறுப்பினர்களுக்கு மாதாந்தம் சிறுதொகையை வழங்கி வருகின்றது.

## இலாபப் பகிர்வு

கூட்டுறவு என்பது அங்கத்தவர்களுக்கே சொந்தமானது. அவர்களது வாழ்வியல் முன்னேற்றத்துக்காக கூட்டாகச் சேர்ந்து உழைக்கின்ற ஒரு நிறுவனம்தான் கூட்டுறவு. மூலதனம், உழைப்பு ஆகிய இரண்டினதும் சேர்க்கையின் விளைவு தான் பண்டம். அந்தப் பண்டங்களது விற்பனை மூலம் கிடைக்கின்ற இலாபம் கூட்டுறவில் அங்கம் வகிக்கும் உழைப்பவனுக்கு சொந்தமாக வேண்டும். இதுவே கூட்டுறவின் அடிப்படைக் கொள்கையாகும். இந்தக் கூட்டுறவுக் கொள்கையானது கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் ஒவ்வொரு வருடமும் சங்கத்தால் உழைக்கப்படும் இலாபத்தை அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் மிகச் சிறந்த முறையில் கடைப்பிடிக்கப் படுகின்றது. அத்துடன், ஒவ்வொரு வருடமும் வரும் சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி ஆகிய இரு பண்டிகைகளுக்கும் கொடுப்பனவு என ஒரு தொகைப் பணத்தை அங்கத்தவர்களிடம் இருந்து போத்தல் ஒன்றுக்கு ரூபா 3.00 வீதம் அறவிட்டு பண்டிகைக் கால சேமம் என வழங்கி வருகின்றது.

## வங்கி நடைமுறையும் கட்டாய சேமிப்பும்

நலிவுற்ற மக்களின் வாழ்வில் முன்னேற்றத்துக்கும், அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கும் சேமிப்பு என்பது மிகமிக அவசிய மானது. இதைப் புரிந்துகொண்ட கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது, சீவல் தொழிலாளர்களுக்காக ஓர் வங்கி நடைமுறையை சங்கத்தில் ஏற்படுத்தியுள்ளது. அந்த வங்கியிலே ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு போத்தலுக்கு ரூபா 4.50 வீதமும், சங்கம் 50 சதம் வீதமும் வைப்பிலிட வேண்டும். இந்தச் சேமிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு அங்கத்தவரும் தாம் சேமித்த பணத்தில் 75%ஐ வங்கியிலிருந்து கடனாகப் பெறமுடியும். இவ்வாறு வங்கிச் சேவையை செய்வதன்மூலம் சீவல் தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதார உயர்வுக்கு கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரும் பங்களிப்பை தனது அங்கத்தவர்களுக்கு செய்து வருகின்றது. இது மட்டுமல்லாது அங்கத்தவர் மரணித்தால் அவரது மரணச் சடங்கிற்காக ரூபா 5,000ஐ கோப்பாய் சங்கம் அங்கத்தவர் குடும்பத்துக்கு வழங்கி வருவதுடன், 60 வயதைப் பூர்த்திசெய்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதாமாதம் மேலதிக ஓய்வூதியத்தை வழங்கி வருகின்றது. அது மட்டுமல்ல திருமணப் பதிவை மேற்கொள்ளாத அங்கத்தவர்களுக்கு 1993ம் ஆண்டு காலப் பகுதியில் திருமணப் பதிவை மேற்கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும் வாழும் மானிட நேயம், சுயநல மற்ற சமூக சேவைகள், கூட்டுழைப்பின்மூலம் உயர்ந்து நிற்கும் பொருளாதார வாழ்வும் என மானிட விழுமியங்கள் கூட்டுறவு தனது கருநிலையில் கொண்டிருப்பதை கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வாழ்வும் வரலாறும் எமக்கு எடுத்துக் காட்டுவதுடன், கூட்டுறவால் மட்டுமே சீரழிந்து கிடக்கும் மானிடவாழ்வையும் இயற்கைச் சூழலையும் பாதுகாக்க முடியும் என்ற செய்தியையும் எமக்கு எடுத்துரைக்கின்றது.

# அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## தோற்றமும் வளர்ச்சியும்

எமது சங்கம் 19-02-1972இல் பதிவுசெய்யப்பட்டபோதும், எமது சங்கம் ஐந்தாம் மாதம் 1972ல் இருந்தே செயற்பட ஆரம்பித்தது. அன்று வடபகுதி திட்டமிடல் பணிப்பாளராக விருந்த உயர்திரு க.சண்முகலிங்கம் அவர்களோடு, எமது சங்கத்தை ஆரம்பிப்பதற்கு மிகவும் சிரத்தையுடன் செயற்பட்ட அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திரு சூரன் மாணிக்கம் அவர்கள் முதலாவது நியமனத் தலைவராக நியமிக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் முதலாளிகள் எமது கிளைகளை அமைப்பதால் பலவகை அழுத்தங்களை பாரமாகக் கொடுத்தார்கள். ஆயினும் எமது சங்கத்தின் ஆரம்பகால முகாமையாளர் திரு கு.கணேசன் அவர்கள், பணியாளர்களின் துணை கொண்டு கிளைகளை அமைப்பதில் தலைவரின் விடாமுயற்சியில் வெற்றிகண்டார். எமது சங்கம் பலதரப்பட்ட எதிர்ப்புக்களின் மத்தியிலும் வெற்றிகரமாக முன்னோக்கி தவள ஆரம்பித்தது.

இந்நிலையில், அன்றைய திட்டமிடல் பணிப்பாளரும், பின்பு உலகவங்கி ஆலோசகருமாகவிருந்த உயர்திரு க.சண்முகலிங்கம் அவர்கள், தலைவர் நியமனத்தை இலகுபடுத்த எமது சங்கத்தின் இரண்டாவது நியமனத் தலைவர் ஆனார். இவர் தனது திணைக்கள உதவியினாலும் தனித்துவமான ஆற்றலினாலும் சங்கத்தை இலாபகரமான இயக்கியதுடன், சங்கத்தை பல்துறை வளர்ச்சிகளில் ஈடுபட வித்திட்டார். அத்துறைகள் வெற்றியடைய துறைசார்ந்த, படித்த வாலிபர்களை உள்வாங்கினார். இம்முயற்சி எமது வளர்ச்சிப் பாதையில் ஒரு பாரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது எனக்கூறலாம் என்பதுடன், இவ்வாறான பெருமைக்குரியவர்களின் தலைமைத்துவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்று புளகாங்கிதம் கொள்வோம்.

மூன்றாவது நியமனத் தலைவராக அன்றைய திட்டமிடல் பணிப்பாளர் திரு கே.சி.லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டார். அவர் முன்னவரின் நல்ல திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத் துச் சென்றார். அவரது காலப் பகுதியும் எமது சங்க வரலாற்றில் முற்போக்கு வளர்ச்சிக் காலம் எனலாம்.

அடுத்தது எமது சங்க நான்காவது நியமனத் தலைவர் கோப்பாய் உதவி அரச அதிபராக இருந்த உயர்திரு க.மாணிக்கவாசகர் அவர்கள் ஆவார். அவரது நிர்வாகத் திறமையும் மூளைவளமும் எமது சங்க வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது எனலாம்.

அடுத்து ஐந்தாவது நியமனத் தலைவராக ஆசிரியராகக் கடமையாற்றிய திரு நல்லதம்பி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவர் தனது துரிதமான செயற்பாட்டின்மூலம் சங்கத்தின் தேவைகளை இனங்கண்டு, செயற்படுத்தி, சங்கத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

எமது 6வது நியமனத் தலைவர் யாழ். கச்சேரியில் விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தராக இருந்த துடிப்புள்ள இளைஞனான திரு சி.நவரத்தினம் அவர்கள் ஆவார். அவர் மிகுந்த ஆர்வத்துடன் சங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டார். குறிப்பாக சங்க வளர்ச்சியில் பணியாளர்களின் பங்கு வலுவானது என்பதை அவர்களுக்கு உணர்த்தியதுடன், கடமையில் தவறும் பணியாளர்களை நிறுத்தி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இவ்வாறாக எமது சங்கம் எதிர்த்த அனைத்துச் சக்திகளையும் வீழ்த்திப் புதிய உத்வேகத்துடன் வெற்றிகரமாக முன்னேறிய வேளையில், தலைவர் நியமனத்திலும் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்ற புதிய சிந்தனை பலதரப்பட்ட மட்டங்களிலும் ஏற்பட்டதன் காரணமாக, அங்கத்தவர் மத்தியில் இருந்தே தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிலை உருவாகியது. அதாவது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் தெரிவு போன்று எமது சங்கத் தலைவர்களும் அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்படலாயினர்.

அவ்வாறே அங்கத்தவர்களால்

தெரிவுசெய்யப்பட்ட முதலாவது அங்கத்தவர் தலைவராக திரு ச.தியாகராசா அவர்கள் தெரிவானார்கள். அவர் தனது மாணவப் பருவம் தொட்டே கொண்டிருந்த முற்போக்கு சிந்தனைகளின் துணைகொண்டு நியமனத் தலைவர்களுக்கு தான் எந்த வகையிலும் சளைத்தவர் அல்லர் என்று செயற்றிறமையால் நிரூபித்துக் காட்டினார். அவரது திறமையான தலைமைச் செயற்பாட்டினால் படித்த பணியாளர்களிடமிருந்து, தாழ்வான மதிப்பீடுகளையும் வெற்றிகண்டதுடன் அன்று எமது சங்கங்களின் உதவி ஆணையாளராகவிருந்த திரு க.வேலாயுதம் பிள்ளை அவர்களின் துணையுடன் சங்கத்துக்கு சொந்தமான பல இலட்சம் ரூபா பெறுமதியான காணி கட்டடங்களை கொள்வனவு செய்தார். அவரது காலப் பகுதி எமது சங்க வரலாற்றில் என்றும் அழியாத சின்னங்களாக காட்சியளிக்கின்றன.

எமது அடுத்த அங்கத்துவ தலைவர் திரு பொ.சுந்தரம் அவர்கள் ஆவார். அவர் தனது தலைமைத்துவக் காலத்தில் அங்கத்தவர், பணியாளர்கள் மத்தியில் மிகவும் அன்புடன் பழகி, சங்கத்தை அவர்களின் துணைகொண்டு மேலும் ஒருபடி வளர்த்தெடுத்தார்.

இவ்வாறாக பல வகையிலும் எமது சங்கம் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருந்த வேளை, எமது பிரதேசத்தில் 1987ல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது, எமது சங்க நிதி இலட்சக் கணக்கில் சூறையாடப்பட்ட போதும், ஆவணங்கள் சேதமாக்கப்பட்டபோதும், எமது சங்கம் பாதிப்படையாமல் தொடர்ந்து முன்னேறக் கூடிய வகையில் எமது நிதிவளம் இருந்தது என்று பெருமைப்படலாம்.

அடுத்த எமது தலைவர் திரு பொ.அழகரத்தினம் அவர்கள் ஆவார். அவரது காலப்பகுதியில் எமது நிர்வாக நடவடிக்கைகளில் பிற தலையீடுகள், நெருக்கடிகள் இருந்தபோதும், முகாமையாளரின் நளினமான செயறங்பாடுகளினால் சங்கம் இலாபகரமாகவே இயங்கியது.

எமது அடுத்த தலைவர் திரு செ.கணபதிப்பிள்ளை ஆவார். இவர் எமது சங்கத்தின் ஒழுங்கான மூத்த அங்கத்தவராவார். இவரது மென்மையான போக்கும், இக்காலப் பகுதியில் உதவி ஆணையாளராகவிருந்த திரு தி.சபாரத்தினம் அவர்களின் முற்போக்கான உயர்ந்த சிந்தனையாலும் வெறுமனே கள் உற்பத்தி செயற்பாட்டுடன் இருந்து வந்த எமது சங்க மானது, சட்டபூர்வமாக "கூட்டுறவு உணவகம்", "சித்த மருத்துவம்'' மூலம் அங்கத்தவர் குடும்பங்களுக்கான இலவச சுகாதார சேவைகள் போன்றவற்றையும் செயற்படுத்தி, சமுதாயத்தில் உயரிய அந்தஸ்தையும் அடைந்தது எனலாம்.

அடுத்த தலைவர் திரு செ.தங்கப்பழம் ஆவார். இவர் மிகவும் துடிப்புள்ள இளைஞர் ஆகையால், குறுகிய காலமானாலும் வேகமாக செயற்பட்டு அங்கத்தவர் தலைவர்கள் பலபடிகள் வளர்ந்து விட்டார்கள் என்று மீண்டும் ஒருமுறை நிரூபித்தார்.

எமது அடுத்த அங்கத்தவர் தலைவர் திரு மா.தங்கராசா அவர்கள் ஆவார். இவரும் மிகக் குறுகிய காலமாகிலும் எல்லோருடனும் இணங்கி செயற்பட்டு சங்கத்தை வளர்த்தெடுத்தார்.

அடுத்த தலைவர் திரு மு.தர்மராசா ஆவார். இவரது காலப்பகுதி முன்னேற்றகரமான வளர்ச்சிப் பாதையில் சென்றபோது, 1995ம் ஆண்டு வடபகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் எமது சங்கத்துக்கு பலலட்சம் ரூபா பெறுமதியான சொத்து இழப்புகள் ஏற்பட்டு, சங்கம் அழிந்துவிடுமோ என்று எண்ணக் கூடிய பேராபத்து ஏற்பட்டது. சுமார் நாற்பது இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய சொத்துக்களும், ஆவணங்களும் முற்றாக அழிந்து, ஒரு சிறு தொகைப் பணத்துடனே மீள தென்மராட்சிப் பகுதியில் இயங்க ஆரம்பித்தது. சங்க நிர்வாகமும் பணியாளர்களும் துணிவுடன் செயற்பட்டதால் சங்கம் இன்று நிலைத்து நிற்கின்றது.

இவ்வாறான இக்கட்டான நேரத்தில் தென்மராட்சி பகுதியில் சாவகச்சேரியில் சங்கத்தைப் பொறுப்பேற்ற தலைவர் திரு க.ஆறுமுகம் ஆவார். இவர் தனது நிர்வாகத்தில் இருந்த அனுபவத்தினாலும், பணியாளர் மத்தியில் தனக்கு இருந்த செல்வாக்கினாலும் திரும்பவும் வலிகாமம் வந்து சொந்த இடத்தில் காலூன்ற வழி வகுத்தார். .

அடுத்து எமது சங்கத்தின் 15வது தலைவராக திரு மு.இரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவர் முன்னைய தலைவர் ஆறுமுகம் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை மிகவும் சிரத்தையுடன் செயற்படுத்தி வந்தார். இவரது காலப் பகுதியில் சங்கத்தின் முழுமையான செயற்பாடுகளையும் புனரமைக்க வேண்டியிருந்தது. அதன் அடிப்படையில் சங்கத்தின் மூத்த பணியாளர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டின்மூலம் மீண்டும் சங்கத்தின் கிளை நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள்

என்பன புனரமைக்கப்பட்டு, சகல செயற்பாடு களும் இயங்க ஆரம்பித்தன.

அடுத்து வந்த தலைவர் திரு செ.காந்த ராசா அவர்கள் ஆவார். தற்பொழுதும் சங்கத்தின் தலைவராக இருந்து சங்கத்தை இலக்கை நோக்கி வழிநடத்தி வருகின்றார். 22.05.2001ம் ஆண்டு சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்ற இவர், ஆரம்பத்திலிருந்தே சங்கத்தை சீரான வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தி வருகின்றார். புதிய சிந்தனைகளும், அவ்வாறான சிந்தனை களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டு மென்ற எண்ணமும் கொண்ட இவரது காலப் பகுதி சங்கத்தை பலமடங்கு வளர்ச்சி பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. சங்கத்தின் கிராமிய வங் கிப் பிரிவும் இவரது காலப் பகுதியிலேயே உரு வாக்கப்பட்டு, இன்று உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றது.

மேலும் இவரது காலப் பகுதியில் GTZ நிறுவனத்தின் உதவியுடன் புத்தூர் மேற்கு கிந்து சிட்டிப் பகுதியில் பாரிய போத்தற் கள் உற்பத்தி நிலையம் ஒன்று 2006ம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து கிளை நிலையங்களுக்கு தேவையான காணிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தம்பாலை, வல்லை, நெருப்புமூட்டி, கிழக்குப் புத்தூர், கிந்து சிட்டி, வடக்குவெளி ஆகிய கிளை நிலையங் களின் காணிகள் சங்கத்தின் உடமையாக்கப் பட்டது.

அத்துடன், ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர்களை கௌரவிக்கும் முகமாகவும், அவர்கள் பாதிப்புறும் வேளையில் நலத்திட்ட உதவிகளை மேற்கொள்ளும் முகமாகவும் முன் பள்ளி ஆசிரிய, மாணவர்களுக்கு சீருடை வழங் கும் முகமாகவும், வேறும் பல நலத்திட்டங் களையும் நடைமுறைப்படுத்துவதற்கென நடை முறை விதி ஒன்றையும் உருவாக்கி நிதி ஒதுக் கத்தினையும் மேற்கொண்டு அவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றோடு நின்றுவிடாது, வெஸ்ரன் யூனி யன் பணப்பரிமாற்ற சேவையையும், வல்லை, நெருப்புமூட்டி போன்ற கிளை நிலையங்களை நவீன விற்பனை நிலையங்களாகவும் கட்டி முடிக்கப்பட்டு, அங்கு கதிரை, மேசையிலிருந்து பாவனையாளர்கள் "கள்ளு" அருந்தக்கூடிய வகையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன.

மேலும் இச்சங்கத்தின் கிளைநிலையமும் சுற்று மதில் அமைக்கப்பட்டு நவீனமயமான கட் டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. சங் கத்தின் கடந்த காலச் செயற்பாடுகளில் கோடிட்டுக் காட்டக்கூடிய செயற்பாடாக வல்லை பனஞ்சீனி உற்பத்தி தொழிற்சாலை குறிப்பிடத் தக்கது. இயந்திரத்துடன் மனித வலுவையும் பயன்படுத்தி இந்த சீனித் தொழிற்சாலையில் தரமான பனஞ்சீனி உற்பத்தி செய்யப்பட்டு, குடா நாடு முழுவம் விநியோகிக்கப்பட்டமை பெரு மைக்குரிய விடயமாகும். எமது சங்கத்தில் மூன்று வெல்ல உற்பத்தி நிலையங்கள் நடத் தப்பட்டு, இவற்றுள் தரமான வெல்ல உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதுடன், குடாநாட்டில் ஆகக் கூடிய அளவு உற்பத்தியை மேற்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அன் றைய இக்கட்டான சூழ்நிலையிலும் அங்கத் தவர்களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி கிராமங்களில் பாலர் பாடசாலைகளை அமைத்து, இலவசமாக அவர்களுக்கு ஆரம்ப கல்வி புகட்டுகின்ற செயலானது சங்கம் தன்ன கத்தே கொண்டுள்ள நோக்கத்தை எட்டி நிற்கின் றது என்றுகூறிப் பெருமைகொள்வோம்.

இச்சங்கமானது 2010,2011,2012ம் ஆண்டு களில் மாவட்ட மட்டத்தில் 1ம் தரச் சங்கமாக தெரிவுசெய்யப்பட்டமையும், 2011, 2012ம் ஆண்டு களில் வடக்கு மாகாணத்தின் சிறந்த சங்கமாக (1ம் இடம்) தெரிவு செய்யப்பட்டமையும், 2011ம் ஆண்டு உறுப்பினர் ஒருவருக்கு அன்பளிப்பாக வீடு ஒன்றை கட்டிக் கொடுத்தமையும் சங்கத்தின் முழுமையான வினைத்திறனையும், அங்கத்தவர், பணிப்பாளர்கள், பணியாளர்களின் அர்ப்பணிப் பான செயற்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின் றது.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கு அமைவாக சங்கம் மேலும் பல புதிய தொழில் முயற்சிகளை தொட ங்குவதற்கான திட்டங்களை தீட்டி, மாறி வரும் பொருளாதார யுகத்தில் நீண்டு நிலைத்திருக் கக்கூடிய வகையில் தொலைநோக்கும், செயற் பணியும் கொண்டு இச்சங்கம் செயற்பட்டு வரு வது ஆரோக்கியமான ஒரு சமுதாய மாற்ற த்தை ஏற்படுத்தும் என்பதில் அணுவளவேனும் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

**வாழ்க கூட்டுறவு! வளர்க அதன் பணி!**

# அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

வரலாற்றுப் பதிவுகள்!



சங்கத்தின் பணிப்பாளர் சபை



சங்கத்தின் பணியாளர்கள்



சங்கத்தில் நடைபெற்ற விழா ஒன்றின்போது



போத்தலடைப்பு நிலைய திறப்புவிழாவின்போது.



தும்பு உற்பத்தி தொழிற்சாலை திறப்புவிழாவின்போது..

"கற்பகதரு"
40வது ஆண்டு சிறப்பு மலர்
பொலிவுற எமது நல்வாழ்த்துக்கள்!

சங்கத்தின் சேவையில்....

கூட்டுறவு புத்தக நிலையம்
Co-op Book Centre
நியாய விலையில் அப்பியாசக் கொப்பிகள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

கூட்டுறவு நகர்
Palm Co-op City
அங்கத்தவர்களுக்கான
உள்ளீடுகள் நியாய
விலையில் பெற்றுக்
கொடுத்தல்.

WESTERN UNION
MONEY TRANSFER
வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை
WESTERN UNION Money Transfer

தும்பு பொருட்கள்
உற்பத்தி
Fibre Products

கல்விச் சேவை
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு
- ஆசிரியர், மாணவர்களுக்கான சீருடை
- புலமைப்பரிசில் திட்டம்
- மேற்படிப்புக்கான உதவு தொகை
- பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

கிராமிய வங்கி
- நிலையான வைப்பு கடன் சேவை.
- ஓய்வூதிய சேவை
- பரிசில் திட்டம்

மகளிர்க்கான சேவை
- தையல், மனைப் பொருளியல் பயிற்சி.
- சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்கல்.
- கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்.

அங்கத்தவர் நலத்திட்டம்
- ஓய்வூதியம், விபத்து, மரணக் கொடை
- ஓய்வுபெற்ற, சிறந்த உறுப்பினர் கௌரவிப்பு.
- கல்விப் பயிற்சியளிப்பு

நிழற்படப் பிரதியாக்கம்

கவரிடுதல்

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் [வ-து]

யாழ்-பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி

தொ.பேசி: 0213213566, 0217451900
தொ.நகல்: 0217451901

# அரியாலை

## வரலாற்று தடங்கள் .....

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

காலம் காலமாக முதலாளி வர்க்கத்தினராலும், உயர்சமூகம் எனத் தங்களைக் கூறிக்கொள்வோராலும் அடக்கி ஒடுக்கப்பட்டு, மிகவும் வறிய வாழ்க்கை வாழ்ந்து வந்த பனந்தொழில் வல்லுநர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம்கொண்ட அப்போதைய அரசாங்கம் 1972ம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களது ஆட்சிக் காலத்தில் நிதி மந்திரியாகவிருந்த டாக்டர் என்.எம்.பெரேரா அவர்களும் அவரது கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் தோழர் அ.விசுவநாதன், செனற்றர் நல்லையா, ஆசிரியர் க.நடராசா போன்றோர் இணைந்து பனம் தொழில் வல்லுநர்களை கூட்டுறவு இயக்கத்தில் இணைப்பதற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டனர். இத்திட்டமானது நாடாளுமன்றத்தில் ஆராயப்பட்டு, திட்டத்தை அமுல்படுத்திக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டதன் பயனாக பனம் தொழில் வல்லுநர்களுக்கு தனித்துவமான ஒரு நிலை ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.

இத்திட்டம் பற்றி 1972ம் ஆண்டு இலங்கை வானொலியில் திட்டமிடல் அதிபரினால் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இதனை வானொலிமூலம் அறிந்துகொண்ட பனந்தொழில் வல்லுநர்கள் தமக்கு ஓர் நல்ல காலம் பிறந்திருக்கிறது என மகிழ்ந்து இத்திட்டத்தை வரவேற்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் எல்லைகள் வகுக்கப்பட்டு, சங்கங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய அரியாலையிலுள்ள பனந்தொழில் வல்லுநர்களை ஒருங்கிணைத்து அரியாலை கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தை டாக்டர் என்.எம்.பெரேரா அவர்கள் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துக்கொள்வதற்கான அங்குரார்ப்பணக் கூட்டத்தை கூட்டி நிர்வாகத்தைத் தெரிவுசெய்தார்கள். நியமனத் தலைவராக தோழர் திரு அ.விசுவநாதன் அவர்கள் அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்டார். பனந்தொழில் வல்லுநர்கள் சார்பில் திரு சி.கணேசன் அவர்க்ள உப தலைவராகவும், திரு செ.இராசரத்தினம் அவர்கள் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இச்சங்கத்தின் முதலாவது கூட்டுறவுப் பரிசோதகராக திரு போல் சண்முகம் அவர்களை கூட்டுறவுத் திணைக்களம் நியமித்துக்கொண்டது. சங்கத்தின் பொதுமுகாமையாளராக திரு துரையப்பா அவர்களும் நியமிக்கப்பட்டார். சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு, நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பான விளக்கத்தினை அரியாலை கிராமத்திலுள்ள பனம் தொழில் வல்லுநர்களுக்கு வாகனத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு, வீதி வீதியாக செய்தி அறிவிக்கப்பட்டது. இதனால் பனந்தொழில் வல்லுநர்கள் சங்கத்தில் வந்து இணைந்துகொண்டு, அங்கத்தவர்களாக செயற்படத் தொடங்கினர். சங்கத்திற்கென தலைமைக் காரியாலயத்தை அங்கத்தவரான திரு வே.அரியதுரை என்பவரது வேலப்பர் வீதியிலுள்ள வீட்டில் வாடகை எதுவும் இல்லாமல் அமைத்துக்கொள்ளப்பட்டது. இச்சங்கமானது 01-03-1972ம் அண்டு பதிவுக்குட்படுத்தும்போது, 07 கிளைகளைக் கொண்டதாக இருந்தது. தளபாட வசதிகள் இல்லாத நிலையிலும், அங்கத்தவர்கள் எல்லோரும் ஒரு மனதோடு தமது சொந்தப் பாத்திரத்தையும், தளபாடங்களையும் வழங்கி, கூட்டுறவுத் தன்மையுடன் மேற்படி கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்துக்கொண்டனர்.

1974ம் ஆண்டு தோழர் திரு அ.விசுவநாதன் அவர்களது ஒத்துழைப்புடன்

அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு சொந்தமான ஒரு பகுதி காணியில் வெல்லத் தொழிற்சாலை கட்டு வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, இக்கட்டடத் திற்கான அடிக்கல் திரு கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்களினால் நாட்டப்பட்டது. வெல்லத் தொழிற் சாலை இயங்கிக் கொண்டிருக்கும்போது, மக்கள் மத்தியில் தென்னம் பதநீரில் உற்பத்தி செய் யப்பட்ட வெல்லத்திற்கு அதிக கிராக்கி காணப் பட்டது. தொழிற்சாலைக்கு வேண்டிய ஆலோச னைகளையும், பயிற்சிகளையும் அரியாலையைச் சேர்ந்த கலாநிதி டாக்டர் சு.மோகனதாஸ் அவர் கள் வழங்கினார்கள்.

சங்கம் ஆரம்பித்ததிலிருந்து அரியாலைச் சங்கமானது சகல சங்கங்களுக்கும் தேவையான படிவங்களை கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு வழங்கி வந்தது. சமாசம் ஆரம்பிக்கப்பட்டு, சமா சத்திற்கு வருமானம் தேடும் முயற்சியில் திரு க.நடராசா அவர்கள் முயற்சியில் சங்கத் தலை வர் திரு த.சிவலிங்கம் காலத்தில் மேற்படி சங்கமானது படிவங்கள், அதற்கான விறாக்கி, அப்பகுதியில் வேலை செய்த பணியாளர்கள் உட்பட்டவற்றை சமாசத்துக்கு வழங்கியதனால் சமாசம் வளர்ச்சிபெற அரியாலை சங்கம்தான் உதவியது என்பதை எவரும் மறுக்கமுடியாது. மேற்படி பணியாளர்களுக்கு 2 வருடங்கள் அரி யாலை சங்கமே வேதனத்தை வழங்கிவந்தது. அப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாள ராகவிருந்த திரு வே.வேலாயுதம்பிள்ளை அவர்க ளால், 1978ம் ஆண்டினை சங்கங்களின் காணி, கட்டட கொள்வனவு ஆண்டாக பிரகடனப்படுத்தி, வலுவான தீர்மானம் மகாநாட்டில் நிறைவேற் றப்பட்டது. இத்தீர்மானத்துக்கு அமைவாக அக் காலத்தில் தலைவராகவிருந்த திரு த.சிவ லிங்கம், செயலாளராகவிருந்த திரு மு.தில்லை யம்பலம் ஆகியோரது காலத்தில் இல.15, நடுத் தெரு ஒழுங்கையில் 3 பரப்பு கொண்ட காணி, பழைய சுண்ணாம்பு கட்டடத்தினாலான வீடு ஒன்றை உள்ளடக்கியதாக ரூபா 160,000க்கு கொள்வனவு செய்யப்பட்டு, அக்கட்டடத்தின் முகப்பு மட்டும் புனரமைப்பு செய்யப்பட்டு, 23-05-1982ம் ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருவே.வேலாயுதம் பிள்ளை அவர்களாலும், அப்போதைய பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க.நடராசா அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. தலை மைக் காரியாலயத்தில் ஒரு பகுதி அமரர் தோழர் திரு அ.விசுவநாதன் ஞாபகார்த்த கூட்ட மண் டபமாக திறந்து வைக்கப்பட்டது. அதனை தொட ர்ந்து நிலையான காணி, கட்டடத்துடன் நல்ல நிலையில் சங்கம் இயங்கி வந்தது.

2000ம் ஆண்டு போர்ச்சூழல் காரணமாக சங்கம் இடம்பெயர்ந்து கோண்டாவில் சங்கத்தின் ஒரு பகுதியில் கிட்டத்தட்ட 3 வருடங்கள் இய ங்கி வந்தது. அக்காலத்தில் கோண்டாவில் சங் கத்தில் செயற்பட்ட நிர்வாக சபை, தலைவர், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பை நாம் என்றென்றும் மறப்பதில்லை. அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

2003ம் ஆண்டளவில் திரும்ப வந்து சீர ழிந்த நிலையிலிருந்து சங்கமானது சீர்செய்யப் பட்டு இயங்கிவந்தது. பின்பு சங்கக் கட்டடம் (சுண்ணாம்பு கட்டடம்) திரும்ப அகற்றப்பட்டு, கொங்கிறீற் போடப்பட்டு வடிவமைப்பு செய்யப் பட்டு, கல்லினால் கட்டி சிறப்பான காரியாலய மாக அமைத்துக்கொள்வதற்கு அப்போதைய தலைவர், கட்டடக் கலைஞரான திரு த.சிவலிங் கம் அவர்களின் ஆலோசனையும், உடல் உழை ப்பும் பெரிதும் உதவின.

தற்போதைய சங்கமானது தனது இடப் பெயர்வுக்கு பிற்பட்ட செயற்பாடுகளை படிப்படி யாக ஆரம்பித்துக்கொண்டு வருவதுடன், தனது 40 வருட காலத்தில் அரியாலை பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது குறிப்பிடத்தக்க சில விடயங்களையே சுருக்க மாக கொண்டுள்ளது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய ஒத்துழைப்பு வழங்கிய அங்கத்தவர் கள், பணியாளர்கள், நிறுவனத்தினர் தொடர்பு டைய நிறுவனத்தினைச் சேர்ந்தவர்கள், குறிப் பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையா ளர் திரு வீ.கே.அருந்தவநாதன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு இ.பாலச்சந்திரன் அவர்க ளது சிறப்பான ஆலோசனையுடன், தற்போதைய தலைவர் திரு தி.யோகரத்தினத்தின் சிறப்பான தலைமையுடன், பொதுமுகாமையாளர் திருமதி பி.சாந்தினியின் முகாமைச் சிறப்புடன், பொறுப் புணர்ச்சியுள்ள உறுப்பினர்கள், பணியாளர்க ளுடன் இயங்கி வருகிறது. 40வது ஆண்டுவிழா கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், அனைவரையும் நினைவுகூர்ந்து, எமது நன்றியினைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

# அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்!



சங்கத்தின் பணிப்பாளர் சபை



சங்கத்தின் பணியாளர்கள்



நவீன கிளை நிலைய திறப்புவிழாவின்போது



2009ம் ஆண்டு நடைபெற்ற மரம்நாட்டு விழாவின்போது.



மகளிர்குழு உறுப்பினர் சுயதொழில் பயிற்சி நிறைவின்போது..



# 40 வது


## ஆண்டு நிறைவு மலரான
## “கற்பகதரு”
## சிறப்புற வாழ்த்துகின்றோம்

## எமது சேவைகளும் செயற்பாடுகளும்



பனை தென்னை வள உற்பத்திகள்

நலநோங்கும் திட்டங்கள்



கிராமிய வங்கிச் சேவை

தங்குமிட வாடகைச் சேவை

குறைந்த கட்டணத்தில் நிறைவான வசதிகளுடன்
கூடிய தங்குமிட தேவைக்கு எம்மை நாடுங்கள்

## அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இல.15, நடுத்தெரு லேன்,
அரியாலை.

தொலைபேசி:-
021 222 6336

# சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## 40 ஆண்டு கால வரலாறும் வளர்ச்சியும் சாதனையும்

இச் சங்கமானது 1972ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. காலம்காலமாக மரவரி முறையில் சிக்குண்டு நசுக்கப்பட்ட பாமர சீவல் தொழிலாளர்களை முன்னேற்றும் நோக்கத்துடன் 1972 ஆம் ஆண்டு வைகாசி மாதம் அன்றைய நிதி மந்திரியாக இருந்த அமரர் கலாநிதி என்.எம்.பெரோ அவர்கள் எடுத்த முற்போக்கான மாற்றமே இதற்கு வித்தாக அமைந்துள்ளது. இத் திட்டத்தை வெற்றிகரமாக தொடக்கி வைப்பதற்கு முழு மூச்சாக நின்று பாடுபட்டு உழைத்தவர். அன்று இச் சங்கங்களுக்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளராக இருந்து கடமை புரிந்த திரு.க.சண்முகலிங்கம் என்பவரை நாம் எல்லோரும் கட்டாயமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

இவர்களது விடா முயற்சியின் பயனாக சங்கானை, சுழிபுரம், அராலி, காரைநகர் ஆகிய பகுதிகளில் கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரில் சிறிய சங்கங்களாக தனித்தனி காரியாலங்களை அமைத்து அவர்களுக்கு ஏற்ற கிளைகளை அமைத்து அங்கத்தவர்கள் அன்று உற்பத்தி செய்த கள்ளை கொள்வனவு செய்து அவற்றின் ஒரு பகுதியை விற்பனை செய்தல, விற்கப்படாத கள்ளை அகற்றுதல் போன்ற நடவடிக்கையை செய்து வந்தது. இதன் பயனாக சகல தொழிலாளர்களும் தமது உற்பத்திக்கு சராசரி வருமானம் பெறத் தொடங்கினார்கள். இவ்வாறு இருந்த போதும் ஒரு பகுதியினர் சங்கத்துக்கு எதிராகவே இருந்து வந்தது குறிப்பிடக்தக்கது.

இவ் வண்ணமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைந்த இச் சங்கங்கள் அக்காலத்தில் உற்பத்தி செய்து வழங்கிய கள் போத்தல் ஒன்றிற்கு 25 சதம் வீதம் ஒவ்வோர் அங்கத்தவர்களிடமும் அறவிட்டு அவர்களுக்கு விப த்து ஏற்பட்டால் அக்காலம் இருந்த நிர்வாக சபை விபத்துக்கு ஏற்ற விதத்தில் விபத்துக்கொடை வழங்கும் திட்டத்தை அமுல்செய்து வந்தது.

1973 - 1974 இக் காலப்பகுதியில் மேற்கூறிய நான்கு சங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு சங்கானையில், வடடுக்கோட்டை தொகுதிகள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்கம் என்னும் பெயரில் கள் கொள்வனவு விற்பனை செய்தலை தனது தனித் தொழிலாக கொண்டு செயற்பட்டு வந்தது. 1974ம் ஆண்டில் உலகச் சந்தையில் சீனியின் விலை என்றும் இல்லாதவாறு உயர்ச்சியடைந்தது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வருகையின் பின் 1975ம் ஆண்டு பனம் பதநீரில் வெல்லம், சீனி ஆகிய வற்றை உற்பத்திசெய்ய திட்டமிட்டு சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கம் அந்த ஆண்டிலே அரசாங்கத்தினால வழங்கப்பட்ட கடன், மானியம் என்பவற்றின் உதவியுடன் இச் சங்கம் தொல்புரம், சங்கானை, அராலி ஆகிய பகுதிகளில் மூன்று வெல்ல நிலையத்தை ஸ்தாபித்து வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டது. இக்காலத்திலே கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம் என இருந்த பெயர் வட்டுத் தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றப்பட்டது.

கள் உற்பத்தி விற்பனையுடன் வெல்ல உற்பத்தி விற்பனையையும் தனது அபிவிருத்தியில் ஒன்றாக செய்து வந்தது. அன்று அரசாங்கத்தின் கொள்கைத்திட்டம் சங்கத்திற்கு பாதமாக அமைந்ததால், அந்த ஆண்டிலே வெல்ல உற்பத்தி கைவிடப்பட்டது. அதாவது உற்பத்திச் செலவுக்கேற்ப விற்பனவு செய்ய முடியாத நிலை. இக்காலத்தில் வட்டுத் தொகுதி பிரதேச அபிவிருத்திச் சங்கத்தினாலே போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை இயக்கப்பட்டு வந்தது. இதன் பயனாக ஓரளவு சங்கத்தை நடாத்தக்கூடியதாக இருந்ததே ஒழிய சங்கம் இலாபகரமாக இயங்க முடியவில்லை.

மேலும் 1980.02.06ம் திகதி இருந்த நிர்வாக சபையினரின் ஆக்கபூர்வமான ஊக்கத்தினால் போத்தல் கள் அடைப்பு நிலையம் இச் சங்கத்துக்கு கிடைத்தது. இதன் மூலம் இச் சங்கம் கள் உற்பத்தி விற்பனை, வெல்ல உற்பத்தி விற்பனை, போத்தலில் கள் அடைத்தல், விற்றல் ஆகிய தொழிலை செய்து அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளினை ஊற்றும் நிகழ்வில் இருந்து ஓரளவு தவிர்த்து செயற்பட்டு வந்தது.

அத்துடன் சங்கத்திற்கு சொந்தமாக காணி கொள்வனவு செய்வது தொடர்பில் 15.12.1980ல் சுழிபுரம், காளுவன் பகுதியில் ஒரு காணியைக் கொள்வனவு செய்து ஒரு கிளையை அமைத்து அப் பகுதி மக்கள் உற்பத்தி செய்யும் கள்ளை கொள்வனவு செய்து வருகிறது. இக் காலத்தில் 15% வியாபார மொத்த விற்பனை வரி அமுலில் இருந்தது 1981 கார்த்திகை மாதம் 10% வீதமாக வியாபார மொத்த விற்பனை வரி குறைக்கப்பட்டது. இவ் வரி 10% வீதமாக குறைக்கப்பபட்டதால் 5% வீத வரியினை அப் போது இருந்த நிர்வாக சபையினர் 05 வீத்தை அங்கத்தவர்களுக்கு கட்டாய சேமமாக ஒதுக்கி வைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு அன்று முதல் ஒவ்வொரு அங்கத்தவர்களின் பெயரில் கட்டாய சேமம் கணக்கிடப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு அங்கத்தவர்களும் தங்கள் பெயரில் கட்டாய சேமம் சேமிக்கக் கூடியதாகவுள்ளது. இத்திட்டம் அங்கத்தவர்கள் ஓய்வு பெறும் காலத்தில் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு மார்கழி மாதம் அன்று தலைவராக இருந்த திரு.சு.நடேசு அவர்களின் விடா முயற்சியின் பயனாக அன்று இருந்த நிர்வாக சபையும் சேர்ந்து கட்டிடத்துடனான காரியாலயத்தை கொள்வனவு செய்து அக் கட்டிடத்தை திருத்தி அமைத்து 13.06.1982 திகதி திரு.சு.நடேசு அவர்களது தலைமையில் அக் காலத்தில் கூ.அ.உ.ஆணையாளராக இருந்த திரு வேலாயுதபிள்ளை அவர்களால் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. தனது 10ம் ஆண்டு பூர்த்தி விழாவினை வெகு விமரிசையாக கொண்டாடியது, இவ் விழாவில் துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதனோட்டம், கயிறு இழுவைப் போட்டி, சாதாரண ஓட்டப் போட்டி, அங்கத்துவ மகளிர்களுக்கான போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் சங்கானை பட்டினசபை இருக்கும் கலை அரங்கத்தில் தனது இரவு நிகழ்ச்சியினை நடா த்தி தனது புதிய கட்டட அங்குராப்பணத்தை ஆரம்பித்து அக்கட்டடத்தில் இருந்து அங்கத்த வர்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வந்தார்.

சங்கம் தனது தொழிற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கோடு அன்று தலைவராக இருந்த *திரு.சு.நடேசு அவர்கள் ஏனைய நிர்வாக சபை*யினரின் உதவியுடன் 1981ஆம் ஆண்டில் காணியுடன் காரியாலயம் வாங்கியது போன்று 1982 ஆம் ஆண்டு இ.எப்.லொறி ஒன்றையும் கொள்வனவு செய்தார்கள். இவ் வாகனத்தின் உதவியுடன் உள்ளூரிலுள்ள கிளைகளுக்கிடையில் கள் மாற்றத்தை செய்து மேலும் தொழிற்பாட்டை விருத்தி செய்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இச் சங்கம் 28.07.1986ல் நிற்சாமற் பகுதி மக்கள் கிளை அமைப்பதற்கு ஒரு காணியினையும் 3.11.1986ல் சங்கானை பொல்வத்தையில் காரியாலயத்துக்கு வேறு ஒரு பெரிய கட்டிடத்துடனான வளவை கொள்வனவு செய்தது. மேலும் 01.10.1987ம் திகதி சுழி புரம், குடாக்கனையில் ஒரு காணியையும்,26.02.1988ல் வட்டுக்கிழக்குப் பகுதியில் ஒரு காணியையும்,16.01.1089ல் அராலி வடக்கில் ஒரு காணியையும், 02.12.1989ல் சங்கானையில் ஒரு காணியையும், 05.11.1989ல் வட்டு மேற்கில் ஒரு காணியையும், 18.04.1992ல் சங்கானை காரியாலயத்துடன் காணியும்,13.12.1992ல் காரைநகர் ஊரில் ஒரு கிளைக்கான காணியும் கொள்வனவு செய்தது.

1992ம் ஆண்டில் இருந்து அங்கத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கதிரை வாடகைக்கு வழங்கும் சேவையையும் செய்து வருகிறது. சங்க தொழில் பரப்பில் இருக்கும் சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் ஆகிய வற்றிற்கு நிகழ்வுகளுக்கு அன்பளிப்பாக நிதியுதவி செய்து வருகிறது. 91/92, 92/93 காலப் பகுதியில் அங்கத்துவ மகளிர்களுக்கு பனை ஓலை மூலம் பயிற்சி கொடுத்து அதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சங்கானையில் உள்ள பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் விற்பனை செய்து வந்துள்ளது. மேலும் அராலியில் உள்ள கயிறு திரிக்கும் தொழிற்சாலையில் கயிறு உற்பத்தி செய்தும் மகளிர் குழுவினரால் தயாரித்த பிஸ்கற், ஜீவாகாரம், மிக்சர், பருப்பு ஆகிய பொருட்களை விற்பனை செய்தும் வந்துள்ளதால் இலாபத்தை ஈட்டியது

டன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் சங்கம் கள் கொள்வனவு விற்பனை, வெல்ல உற்பத்தி விற்பனை போத்தல் கள் உற்பத்தி, லோவைன் உற்பத்தி, பனம் பொருள் உற்பத்தி, ஜீவாகார உற்பத்தி, மகளிர் குழு தென்னந்தும்பு உற்பத்தி,பனம் பொருள் உற்பத்தி நிலையம் நடத்துதல் போன்று பாரிய நிறுவனமாக இந் நிறுவனம் திகழ்ந்தது.

கடந்த காலத்தில் சங்கத்தின் செயல்பாடுகளுக்கும் காலக் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட முன்னேற்றம் காரணமாக அடைந்த பயன் உணர்ந்த அங்கத்தவர்கள் தமது முன்னேற்றமான கல்வி சுகாதாரம், கலாச்சாரம் போன்றவற்றிற்கு வளர்ச்சி சங்கத்தின் ஊடாகவே அமையவேண்டுமென்பதில் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர். இதன் காரணமாக தமது உற்பத்திகளை முழுமையாக சங்கத்திற்கு வழங்கி தங்களது எதிர்காலத்தை நிச்சயித்துக் கொண்டனர். இதன் விளைவாக அங்கத்தவர்களின் கட்டாய சேமம் பன் மடங்கு அதிகரித்துள்ளது. இவற்றை உணர்ந்த அங்கத்தவர்கள் மேலும் சங்கத்துடன் இணைந்து ஆக்கபூர்வமாக செயல்பட்டு வருகின்றனர்.

மேலும் இச்சங்கத்தின் பெயர் 1992ம் ஆண்டு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேலும் 1997ஆம் ஆண்டில் எமது சங்கத்தின் கீழ் 02 முன்பள்ளிகள் முதன்முதலாக இணைக்கப்பட்டது. இம் முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கும் எமது சங்கத்தினால் வேதனமும் வழங்கப்பட்டு வந்தது. மேலும் 2002ம் ஆண்டில் மேலும் 08 முன்பள்ளிகள் எமது சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மொத்தமாக 10 முன்பள்ளிகள் இயங்கி வந்தன.

அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளை இலகுபடுத்தும் நோக்கத்துடனும் அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்கத்தினை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2004ம் ஆண்டில் எமது சங்கத்தில் கூட்டுறவு கிராமிய வங்கி ஒன்று உருவாக்கப்பட்டது கடந்த காலத்தில் மது விற்பனை நிலையமாக இருந்த கட்டடம் மீள் புனர் நிர்மானம் செய்யப்பட்டு, அக் கட்டடத்திலேயே கூட்டுறவு கிராமிய வங்கி நடாத்தி வருகின்றோம். இக் கிராமிய வங்கி ஆரம்பித்ததன் விளைவாக அங்கத்தவர்கள் தமது கொள்வனவுப் பணத்தினை முழுவதையும் எடுத்து செலவளிக்காது. குறிப்பிட்ட தொகையை சேமித்து. சேமிப்பு பழக்கத்தினை தம்மிடையே வளர்த்துக் கொண்டார்கள். இக் கிராமிய வங்கி ஊடாகவே அங்கத்தவர், பணியாளர்கள் கொடுப்பனவுகள், கடன் வழங்கல், பண்டிகைக்கால கொடுப்பனவு வழங்கல் போன்றவை இடம்பெற்று வருகின்றன.

2005ம் ஆண்டில் மேலும் 08 முன்பள்ளிகள் எமது சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மொத்தமாக 18 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இம் முன்பள்ளிகளில் மொத்தமாக 22 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருவதோடு சுமார் 435 சிறார்கள் கல்வி கற்று வந்தனர். இங்கு முதன்மை ஆசிரியருக்கு 1000/-வும் இணை ஆசிரியருக்கு ரூபா 750/- என வேதனம் வழங்கப்பட்டு வந்தது. மேலும் கொத்தணியின் அனுசரணையுடன் முன்பள்ளி சிறார்களுக்கு இலவசமாக சத்துணவு, சீருடைத் துணிகள் என்பனவும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சீருடை சேலையும் வழங்கப்பட்டு வந்தன. எமது சங்கத்தின் கிளைகள் நவீனமாக கட்டப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கு அமைய கிளை இல 55 காளுவன் கிளையும் கிளை இல 59 வட்டுமேற்கு மில்லடி என்ற கிளையும் 2006ம் ஆண்டு 03ம் மாதத்தில் நவீன முறைப்படி கட்டிடங்களாக அமைக்கப்பட்டு அதில் கிளை இல 59 மட்டும் தற்போது விற்பனை நிலையமாக இயங்கி வருகின்றது.

எமது சங்கத்தின் பொதுமுகாமையாளராக இருந்த திரு.த.செல்வராசா அவர்கள் 2006/05/31ம் திகதியுடன் ஓய்வு பெற்றுக் கொண்டார். இவர் தனது சேவை காலத்தில் எமது சங்கத்தை யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய சங்கங்களைவிட மிகவும் திறமையாக, இலாபத்தில் நடாத்திச் சென்றுள்ளார். இவரது சேவையை பாராட்டி சங்க நிர்வாகமும் பணியாளர்களும் இணைந்து இவருக்கு சேவை நலன் பாராட்டு விழா நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எமது சங்கத்திற்கு புதிய பொதுமுகாமையாளராக, இச் சங்கத்தில் கணக்கு பதிவாளராக கடமையாற்றி வந்த திரு.சி.தயாபரன் அவர்கள் நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய 2006.06.01ம் திகதி பதவியைப் பொறுப்பேற்று இச் சங்கத்தை வழிநடத்தி வருகின்றார்.

2006.08.11ம் திகதி யாழ்-கண்டி வீதி (A9) மூடப்பட்டதன் காரணமாக கொழும்பில் இருந்து மதுபானங்கள் எவையும் யாழ்

மாவட் டத்திற்கு இறக்குமதி செய்யப்படவில்லை. இதன் காரணமாக உள்ளூர் உற்பத்திகளை பெருமள வில் சந்தைப்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதனால் இக்காலப் பகுதியில் எம்மிடம் இருந்த போத்தல்கள், சாராயம் என்பன கூடிய பெறுமதி யில் விற்பனை செய்யப்பட்டது. இதனால்தான் சுமார் ரூபா 3900000.00 கிடைக்கப்பெற்றது. இக் கால கட்டத்தில் நிர்வாகத்தில் தலைவராக இருந்த திரு.வ.முத்துராசா அவர்களும்,ஏனைய நிர் வாக உறுப்பினர்களும் இணைந்து எமது சங்க அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தினை எடுத்து 2010ம் ஆண்டு தொடக்கம் 60 வயதை பூர்த்தி செய்கின்ற அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குவதற்கான முன் ஆயத்தமாக இந் நிதியாண்டில் கிடைக்கப்பெற்ற இலாபத்தில் இருந்து ரூபா 2500000/= இவ் ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 2007/08ம் மாதத்தில் இருந்து ஒவ்வொரு அங்கத்தவர்களிடம் இருந்து ஒரு போத்தலுக்கு 50 சதப்படி அறவிடப்பட்டு இந் நிதியத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பண்டிகை கால கொடுப்பனவுகளை வழங்கும் முகமாக அங்கத்தவர்களிடம் இருந்து ஒரு போத்தலுக்கு ரூபா1/- வீதம் விசேட சேமமாக அறவிடப்பட்டு வருடத்தில் வருகின்ற பண்டிகை தினங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அமரத்துமடைந்துள்ள எமது பெருமைக்குரிய சிவனேசன் அவர்கள் தனது நிதி ஒதுக்கீட்டில் கணினி ஒன்றை 2007/09ம் மாதம் எமக்கு அன்பளிப்பாக தந்துள்ளார். இதனால் எமது சங்க செயற்பாடுகள் இலகுபடுத்தக் கூடியதாக காணப்படுகின்றது. மேலும் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 06ம் திகதி முன்பள்ளி ஆசிரியர்களை எமது சங்கம் கௌரவித்துக் கொண்டு வருகின்றது. அத்துடன் முன்பள்ளி விளையாட்டு விழாவுக்கு அன்பளிப்பையும் வழங்கி வருகின்றது.

எமது கிராமிய வங்கியில் சேமிப்பினை வைத்திருக்கும் அங்கத்தவர்களில் குறிப்பிட்ட சில அங்கத்தவர்களது உச்ச சேமிப்புத் தொகை சுமார் ரூபா 100,000.00திற்கு மேல் காணப்படுகிறது. இச் சேமிப்புத் தொகையை அவதானித்த ஏனைய அங்கத்தவர்களும் தங்களது சேமிப்புத் தொகையை இன்னும் கூடுதலாக அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தொழிற்பட்டு வருகின்றனர்.

மேலும் ஒவ்வொரு வருடமும் சராசரியாக சுமார் 500ற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் தொழிற்பட்டு வருகின்றனர். மேலும் இன்றைய காலகட்டத்தில் எமது சங்க அங்கத்தவர்கள் அரசாங்க ஓய்வூதியர்கள் போல் வருமானம் பெற்று வருகின்றனர். அதாவது சமாசத்திலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவையும், கமநல காப்புறுதியிலிருந்து ஓய்வூதியத்தையும் பெற்றுக்கொள்கின்ற அதே நேரத்தில் சங்க மட்டத்திலான ஓய்வூதியத்தையும் பெறவுள்ளனர்.

மேலும் எமது சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் பல துறைகள் தொடர்பான பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசமும், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையும் வருடாந்தம் பயிற்சிகளை வழங்கி வருகின்றது அதன் காரணமாக சங்க செயற்பாடுகள் மிகவும் திறமையாக நடாத்தப்பட்டு வருகிறது.

எது எவ்வாறாயினும் எமது சங்கமானது இத்தொழில் சார்ந்த மக்களின் வாழ்வில் ஒளி காட்டி நிற்கின்ற நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றது என்பதில் யாரும் மாறுபட்ட கருத்துகள் கூறமுடியாது 'அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஒத்துழைப்பினால் சங்கம் வளர வேண்டும் சங்கத்தின் வளர்ச்சி மூலம் அங்கத்தவர்கள், பணியாளர்கள் நன்மைபெற வேண்டும்'.

**நன்றி.**

# சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்




சங்கத்தின் பணிப்பாளர் சபை




சங்கத்தின் பணியாளர்கள்

## 40 ஆண்டுகள் நிறைவுகாணும் எமது பனை தென்னை வள சங்கங்களையும் 40வது ஆண்டு சிறப்பு மலரான "கற்பகதரு"வையும் வாழ்த்துகின்றோம்

### பிரதான செயற்பாடுகள்



- கிளை நிலையங்களை நவீனமயப்படுத்தி விற்பனையினை அதிகரித்தல்.
- பாரிய தொழிற்சாலை அமைப்பில் போத்தற் கள் உற்பத்தி செய்தல்.
- மீதமான சாற்று உற்பத்திகளை வடிசாலைக்கு வழங்குதல்.
- கிளை ரீதியாக சுவையுணவு விற்பனை செய்தல்.
- நிழற்படப் பிரதிச் சேவை.



### கிராமிய வங்கிச் சேவை

- அங்கத்தவர் சேமிப்பை அதிகரித்தல்.
- அங்கத்தவர் அல்லாதோரின் நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்.
- அங்கத்தவர்களின் நிலையான வைப்புக்கு எதிரான கடன் வழங்கல்.
- அங்கத்தவர் அல்லாதோருக்கு கடன் வழங்கல்.
- ஓய்வூதியம் வழங்கல்.



### அங்கத்தவர் நலத்திட்டம்

- அங்கத்தவர் வாழ்வாதாரக் கொடுப்பனவு.
- விபத்து மரணக் கொடை
- சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு.
- கல்வியும் பயிற்சியளிப்பும்.


### கல்விசார் சேவைகள்

- சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுக்கு அன்பளிப்பும், ஆசிரியர்களுக்கு வேதனமும் வழங்குதல்.
- அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல்.



### வாடகைச் சேவை

- வாடகை வான் சேவை



## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டது]

பொன்னாலை வீதி,
சங்கானை.

தொலைபேசி:
021 373 5403

# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்

வடக்கில் அடிமட்ட சமுதாயத்தில் புரட்சிகர மாற்றம் ஒன்றுக்கு வித்திட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உதயம் பெற்று இவ்வாண்டின் வைகாசித் திங்கள் முதலாம் நாளுடன் நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. நீண்ட பாரம்பரியமும் கடின உழைப்பும் கொண்ட தொழில்சார் உற்பத்திச் சமூகம் ஓய்வின்றி உழைத்து முதாளித்துவ சக்திக்ளுக்கு ஏணிப் படியாக இருந்த நிலைக்கு முற்றுப் புள்ளியிட்டு நான்கு தசாப்தங்கள் கூட்டுறவுக் கூடாரத்துள் நகர்ந்து வந்துள்ளன. இம்மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டவர்களை நன்றியோடு நினைத்து தொடர்ந்தும் வீறுநடைபோட உறுதி பூணுவோம். அடக்குமுறைக்கும் அறியாமைக்கும் ஆட்பட்டு வெளிச்சத்திற்கு வரத் தயங்கிய சமூகம் இன்று நாடறிந்த கூட்டுறவுச் சங்கமாக எழுச்சி பெற்றுத் திகழ்கின்றது.

சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி ஆகிய முப்பெரும் பிரதேசங்களை உள்ளடக்கி 1972ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் நாளில் இக்கூட்டுறவுச் சங்கம் பதிவு பெற்றது. இப்பரந்த பிரதேசத்தின் இயற்கை வளமான பனையையே தம் வாழ்வுக்கும் வளமைக்குமான மூலாதார மாகக் கொண்டு வாழும் இக்கூட்டுறவாளர்களின் அர்ப்பணிப்புடனான செயல்திறனும் கூட்டுறவுச் சித்தாத்தங்களின் படியான பங்களிப்பும் இந் நாற்பது ஆண்டுகளிலும் படிமுறை வளர்ச்சிக்கு அச்சாரமாக அமைந்துள்ளது. இக்கூட்டுறவாளர்களோடு இணைந்து பணித்தொகுதி ஆற்றிய கண்ணியமான பணிகள் வாயிலாக இக்கூட்டுறவுச் சக்கரம் முன்னோக்கி நகர்ந்து அளப்பெரும் சாதனையைப் படைத்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தின்பால் நன்பிக்கையுடன் ஈர்த்து வலுவூட்டி தளராது பயணிக்க காலத்தின் தேவைக்கேற்ப கரம் கொடுத்து வழிகாட்டிய கூட்டுறவு அபிவிருத்தி சார்ந்த அரச அதிகாரிகள், ஆர்வலர்கள் நகமும் சதையுமாக இணைந்து இன்றுமட்டான அசைவுகளில் ஆக்கபூர்வமாக உழைத்து நிற்கின்றார்கள்.

மாபெரும் விருட்சமாக வளர்ந்து ஆயிரமாயிரம் பேருக்கு நிழல் ஈந்து வியாபித்துள்ள இக்கூட்டுறவு அமைப்பு தன்னகத்தே பல கட்டமைவுகளை இசைவாக்கி வலுப்பெற்றுள்ளது.

சங்கம் கடந்து வந்த பாதையில் இச்சங்கத்தை வழிநடாத்திய தலைவர்கள், அவர்கள் வகித்த பதவிக் காலத்தின்படி இதன் கீழ் காணலாம்.

01. திரு.எச்.பாலசிங்கம், பிர.இலிகிதர், தொழில் திணைக்களம். 01.05.1972 - 30.03.1973
02. திரு.பி.என்.பற்றிக், உதவி அரச அதிபர், வலி.தெற்கு. 01.04.1973 - 01.12.1975
03. திரு.அ.சிவபாதம், அதிபர் 02.12.1975 - 22.12.1977
04. திரு.எஸ்.குமாரசாமி, உதவி அரச அதிபர், வலி.தெற்கு. 23.12.1977 - 24.04.1978
05. திரு.ச.அண்ணாமலை, சுன்னாகம் சங்க அங்கத்தவர். 25.04.1978 - 09.06.1980
06. திரு.பே.செல்லத்துரை, சுன்னாகம் சங்க அங்கத்தவர். 10.06.1980 - 12.07.1980
07. திரு.சு.சதாசிவம், சுன்னாகம் சங்க அங்கத்தவர். 13.07.1980 - 12.07.1980
08. திரு.செ.முருகேசு, சுன்னாகம் சங்க அங்கத்தவர். 05.10.1984 - 22.02.1986
09. திரு.தே.மதுரநாயகம், சுன்னாகம் சங்க அங்கத்தவர் 23.02.1986 - 30.09.1989
10. திரு.க.மெய்யழகன், சுன்னாகம் சங்க அங்கத்தவர் 01.10.1989 - 20.08.1991
11. திரு.சீ.செல்லத்துரை, சுன்னாகம் சங்க அங்கத்தவர் 21.08.1991 - 16.03.1993
12. திரு.தே.நாகராசா, சுன்னாகம் சங்க அங்கத்தவர் 17.03.1993 - 04.01.1995
13. திரு.தே.மதுரநாயகம், சுன்னாகம் சங்க அங்கத்தவர் 05.01.1995 - 05.01.1999
14. திரு.க.மெய்யழகன், சுன்னாகம்

சங்க அங்கத்தவர் 06.01.1999 - 20.05.2001

15. திரு.தே. மதுரநாயகம், சுன்னாகம் சங்க அங்கத்தவர் 21.05.2001 - 17.09.2004
16. திரு.சி.பாலையா, சுன்னாகம் சங்க அங்கத்தவர் 18.09.2004 - 23.09.2007
17. திரு.க.மெய்யழகன், சுன்னாகம் சங்க அங்கத்தவர் 24.09.2007 - இன்றுவரை

### கிராமிய வங்கி

இதில் கிராமிய வங்கி அமைப்பு ஒரு பாரிய கட்டுமானமாகவும், அங்கத்தவர்களின் பொருளாதாரப் பின்னணியில் உந்துசக்தியாகவும் திகழ்கின்றது. அங்கத்தவர்களுக்கான சேமிப் புக்கள், ஓய்வு நலத்திட்டங்கள், கடன் திட்டங்கள் இவ்வங்கியின் வாயிலாக ஒழுங்கமைக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. அத் துடன், முதன் முதல் 2000ம் ஆண்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வரலாற்றில் எமது சங்கம் மேற்படி வங்கி அமை ப்பை உருவாக்கியதும் வரலாற்றில் மைல்கல் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களில் முதன்முறையாக கணனியை எமது சங் கம் 2002ல் கொள்வனவு செய்து கணக்குகளை கணனிமயப்படுத்தியுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

### அசையும் அசையாச் சொத்துக்கள்

சங்கத்தின் தலைமை அலுவலகம் சுன் னாகம் மின்சாரநிலைய வீதியில் சொந்தக் காணி கட்டிடத்தில் இயங்கிவருகின்றது. போத்தலில் கள் அடைப்பு, மற்றும் வெல்ல உற்பத்திக்கான அலகுகளும் தலைமை அலுவலக வளாகத்தி னுள் இயங்குகின்றது. சங்கம் இயக்கி வருகின்ற பதினான்கு கிளைகளில் 12 கிளைகள் சொந்த நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 08 கிளைகளில் கட்டிடங்கள் தகுந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கன்ரர் வாகனம், முச் சக்கரவண்டி, லான்ட்மாஸ்ரர், துவிச்சக்கரவண்டி என்பன சங்கத்தின் தொழிற்பாட்டின் தேவை கருதி கொள்வனவு செய்யப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றது.

### அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம்

அங்கத்தவர்களின் ஓய்வுநலத்திட்டம் பதி னைந்து வருடங்களாக சிறப்புற தொழிற்படுத் தப்பட்டு வருகின்றது. 60 வயதைப் பூர்த்தி செய்த வர்கள், சுகவீனம் காரணமாக தொழிலை மேற் கொள்ள இயலாதவர்கள் இத்திட்டத்தின் கீழான நடைமுறைப் பிரமாணங்களுக்கமைய நன்மை களைப் பெற்று வருகின்றனர். 160 மட்டான அங்கத்தவர்களின் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழான நன்மைகளை அனுபவிக்கின்றனர். இத் திட்டத்திற்கான வைப்பு நிதியின் வட்டி வரு மானத்திற்கீடாக மாதாந்தம் ரூபா 60,000.00 வரை நிதி பிரயோகிக்கப்படுகின்றது.

### பாலர் பாடசாலை

01.09.1993ல் முதல் 04 பாலர் பாடசாலை களை ஆரம்பித்த சங்கம், சங்கத்தின் தொழிற் பரப்பில் அங்கத்தவர்கள் செறிந்து வாழும் பகு திகளில் இன்று 23 பாலர் பாடசாலைகளை இயங்கி வருகின்றது. பாலர் பாடசாலை ஆசிரியர் களுக்கான படி வழங்கலுக்கென வைப்பிலிடப் பட்ட நிதியில் கிடைக்கும் வட்டி வருமானத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர் களுக்கான மாதாந்தப் படி வழங்கப்பட்டு வருகின் றது. வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்.கொத்தணியின் அனுசரணையுடன் பிள்ளைகளுக்கும் ஆசிரியர் களுக்குமான சீருடை வழங்கப்பட்டு வருகின்றது. பாலர் பாடசாலைகள்தோறும் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு சங்கத்தின் நிதிப் பங்களிப்பும் வலிகாமம் கொத்தணியின் நிதிப் பங்களிப்பும் தொடர்ச்சியாக உதவுவதான ஏற்பாடு இடம்பெறுகின்றது.

### சிறந்த அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு

கிளைகள் மட்டத்தில் தெரிவு செய்யப் படும் தகமையுடைய அங்கத்தவர்கள் மூவர் வீதமாக அனைத்துக் கிளைகளாலும் தெரிவா கும் அங்கத்தவர்களுக்கும், பணித்தொகுதியில் இருந்து இனங்காணப்படும் பணியாளர்களுக்கு மாக வருடாந்தம் சான்றிதழ், மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கி கௌரவிப்பு விழா சிறப்பாக நடாத்தபப்பட்டு வருகின்றது. அங்கத்தவர் மத்தி யில் இது விழிப்புணர்வூட்டும் ஓர் நிகழ்வாகவர வேற்பைப் பெற்றுள்ளது.

### தேசிய மட்டப் பரிசு

2011ல் தேசிய மட்டத்தில் எமது சங்கத் திற்கு 02வது இடம் கிடைக்கப்பெற்ற தும், இதற்கான பரிசு, எமது சங்கத்திற்கு குருநாகலில் நடைபெற்ற கூட்டுறவாளர் விழாவில் கிடைக்கப் பெற்றதும் எமது சங்கத்திற்குக் கிடைத்த அரிய நிகழ்வாகும்.

கூட்டுறவு வரலாற்றில் நடப்பாண்டு 40வது அகவைக் காலம். இக்காலமும் எதிர்காலமும் எமது அமைப்புக்கள் செவ்வனே செயலாற்று வதற்கான காலமாகக் கொள்ளுதல் அவசியமா னது. கூட்டுறவின்பால் ஒன்றிணைந்து அனை வரையும் கரமிணைத்து செயற்படுவோம் என்பதே எமது எண்ணமும் அபிலாசையுமாகும்.

# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்





சங்கத்தின் அங்கத்தவர் கௌரவிப்பு விழாவின்போது



சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வின்போது..



சங்கத்தின் வெல்ல உற்பத்தி நிலையத் திறப்புவிழாவின்போது


சமூகத்தின் எழுச்சிக்கும் வாழ்வுக்குமாக
உதயமாகிய இக்கூட்டுறவு அமைப்பானது,
அதன் வழியே சென்று, 40 ஆண்டுகளில் பல
சாதனைகளை படைத்துள்ளமையையிட்டு பெருமை
கொள்வதோடு, 40வது ஆண்டு நிறைவு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்
எமது உற்பத்திகளும் சேவைகளும்
சுத்தமான பனை வெல்லம் உற்பத்தி
சுவையான பதநீர் உற்பத்தி
கிராமிய வங்கிச் சேவை
மகளிர் குழு உறுப்பினர்களுக்கு சுயதொழில் பயிற்சி
கல்விச்சேவை
முன்பள்ளிகளை நிர்வகித்தல்
அங்கத்தவர், பணியாளர் மற்றும் மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கல்விப் பயிற்சி
அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்.
வாடகை வாகன சேவை (லொறி)
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டுள்ளது)
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்
021 224 0022

# தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கம் 06-03-1972ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவுக்கு முன்னர், இரு அங்குரார்ப் பண கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதன் முதலாவது கூட்டம் பாரதி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும், 2வது அங்குரார்ப் பண கூட்டம் யா/வலித்தூண்டல் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் நடைபெற்றுள்ளன. இச்சங்கப் பதிவுக்காக அயராது உழைத்தவர்களில் திரு சுவக்கீன் அன்ரனி லாசறஸ், திரு சி.கதிரவேலு, திரு மு.வயிரமுத்து போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களில் திரு சி.கதிரவேலு இச்சங்கத்தின் முதலாவது செயலாளராகவும், தொடர்ந்து 14 வருடங்கள் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். இச்சங்கத்திற்கு ஆரம்பகால நியமனத் தலைவராக திரு வ.கிருஷ்ணசாமி அவர்கள் சேவையாற்றி, இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டுள்ளார். உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த திரு அமிர்தசாகரன் அவர்களும், அதனையடுத்து திரு வ.பொன்னம்பலம் அவர்களும், அடுத்து திரு வே.மாணிக்கம் அவர்களும் நியமனத் தலைவர் காளகவிருந்து இச்சங்கத்தின் வளர்ச்சிக்குச் சேவையாற்றியுள்ளனர்.

நியமனத் தலைமையின் கீழ் இந்நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பை தெரிவுத் தலைவரிடம் கையளிக்கும் நோக்கத்துடன் அக்காலத்தில் யாழ்.மாவட்டத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகவிருந்த திரு ச.வேலாயுதம்பிள்ளை அவர்கள் முன்னைய ஏற்பாட்டை தடைசெய்து, தெரிவுத் தலைவரிடம் பொறுப்பளித்தார். அவ்வகையில் முதலாவது தெரிவுத் தலைவராக திரு க.உருத்திராபதி அவர்கள தெரிவு செய்யப்பட்டார். இவரைத் தொடர்ந்து திரு பூ.இரத்தினம் அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் காலத்தில் சங்கம் சேந்தாங்குளத்தில் 1 இலட்சம் போத்தல் கள்ளை வருடமொன்றுக்கு (பருவகாலத்தில்) போத்தலில் கள் அடைக்கும் பாரிய ஆலையை சங்கத்தின் சொந்த நிதியிலும் அங்கத்தவர் கிளடம் பெற்ற நிதிமூலமாகவும் உருவாக்கினார். இதன்மூலம் அங்கத்தவர் மத்தியிலிருந்த அகற்றுக் கள் பிரச்சினை ஓரளவு நீங்கி, சங்கத்துடன் இணைந்து உழைக்கும் ஆர்வம் மேலோங்கியது. இதன் விளைவாகச் சங்கம் வருடா வருடம் இலாபங்களைச் சம்பாதித்து அங்கத்தவர், பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன், இக்காலத்தில் தலைமைக் காரியாலயம், பல உற்பத்தி நிலையங்கள், கிளை நிலையங்களுக்கு காணி, கட்டடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. தனித்து கள்ளுடன் நிற்காது பனாட்டு, கல்லாக்காரம், பனை வெல்லம், பனம் பழத்திலிருந்து பானம், சுவை மிகு பதநீர் போன்ற உற்பத்திகளை ஊக்குவித்து புதிய வரலாற்றை உருவாக்கியது. இவை 1981ல் இருந்து ஏற்பட்டவை.

இதற்குட்ட பனை வெல்லத் தொழிற் சாலையை திரு கொல்வின் ஆர்.டி.சில்வா திறந்து வைத்தமையும், அக்காலத்தில் பனை வெல்ல உற்பத்தியில் இலாபத்தைச் சங்கம் ஈட்டியதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்காலத்தில் ஆறு(6) பனை வெல்லத் தொழிற்சாலைகள் இயங்கியது. 1977ஆம் ஆண்டின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இத்தொழிற்சாலைகள் நட்டமடைய நேர்ந்தது. 1984ம் ஆண்டின் பின் புதிய வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருந்த சங்கம், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள் இழப்புக்கள் எற்பட்டன. இவ் இடப்பெயர்வினால் அங்கத்தவர்கள் சிதறி வாழ்ந்த பிரதேசங்களைவிட்டு வேறு இடங்களில் குடியேறினர். இக்காலத்தில் கடமையிலிருந்த தெரிவுத் தலைவர் திரு க.சண்முகலிங்கம் சங்கத்தின் கட்டுக்கோப்பு அழியாது பல திட்டங்களை வகுத்து, அதனூடாக சங்கத்தினை சிறப்புற நடத்தி வந்தார். இவரைத் தொடர்ந்து வந்த திரு நா.கணேசன் அவர்கள் பல இடப்பெயர்வுக் காலத்திலும் சங்கத்தின் தொழிற்பாட்டை ஸ்த்திரத்துடன் காத்து, மீளச் சொந்தப் பிரதேசத்தில் இயங்கப் பல சேவைகளைப்

புரிந்துள்ளார்.

இச்சங்கமானது, தனது அங்கத்தவர்களு க்கு நிலையான சேமத்திட்டம் ஒன்றை உரு வாக்கி பல இடப்பெயர்விலும் கணிசமான அளவு சேமிப்பைத் தமது பிற்கால வாழ்வுக்குச் சேமி க்க வழிகாட்டியது. இது தவிர, கணிசமான அங்கத்தவர்களை விவசாய ஓய்வூதியத்திட்டத் திலும் சேர்த்துள்ளது. வடமாகாண பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் காப்பு றுதித் திட்டத்திலும் தொழிற்படும் அங்கத்த வர்கள் அனைவரையும் இணைத்துள்ளது.

1991ம் ஆண்டில் பனை வெல்ல உற்பத் தியில் பெரிதும் இலாபகரமாக இயங்கியது. இது மட்டுமல்லாது அக்காலம் சீனிக்குப் பதிலாக கணிசமான அளவு மக்களை பனைவெல்லப் பாவனையையும் அதிகரிக்கச் செய்தது. பின்னர் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின் காரணமாக இத் தொழிற்பாட்டையும் கைவிட நேர்ந்தது. இக்கால த்தில்தான் சங்கத்தின் செயற்பாட்டுப பிரதேசத் தின் 90வீதமான பகுதியும் மக்கள் புலம்பெயர்ந்து செல்ல, மீதமாகவுள்ள 10 வீதமான இடத்தி லேயே இரு கிளை நிலையங்களை நடத்தி, அங்கத்தவர்களின் உற்பத்தியை கொள்வனவு செய்து சேவையாற்றி வந்துள்ளது.

இச்சங்கத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலம் முதல் 1990ம் ஆண்டு இடப்பெயர்வு வரை நிரந்தரப் பணியாளர் 54 பேரும், 25 தற் காலிகப் பணியாளர்களும் கடமை புரிந்துள்ளனர். அதன் பின் 15 நிரந்தரப் பணியாளர்களுடன் சங்கம் இயங்கி வந்தது. இவர்களில் 6 பணியா ளர்கள் சுமார் 25 வருடங்கள் தொடர்ந்து பணி யாற்றி வந்தவர்களாவர். இவ் இடப்பெயர்வின் போது சங்கத்தின் சொத்துக்கள், ஆவணங் களைப் பாதுகாப்பதில் பணியாளர்களின் பங் களிப்பு பெரிதும் மேலோங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சங்கம் பதிவுசெய்யப்பட்ட 1972ம் ஆண்டில் 600 அங்கத்தவர்களும், படிப்படியாக உயர்ந்து 25 வருட நிறைவில் 1350 அங்கத் தவர்களும் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இவர் களில் 200 அங்கத்தவர்கள் தொடர்ந்து 25 வருடங்கள் தொழிற்பட்டுள்ளனர். அங்கத்தவர் களுக்கு பல தொழில்சார் பயிற்சிகளும், நிர்வாக, தலைமைத்துவ பயிற்சிகளும் வழங்கப்பட்டு, அங் கத்தவரிடையே பரஸ்பர ஒத்துழைப்பு மேலோங் கியுள்ளமை இச்சங்க வரலாற்றில் குறிப்பிடத் தக்க அம்சமாகும். தவிர மகளிர் அங்கத்தவர் களுக்கான சுய உற்பத்திக்கான பயிற்சிகளும் இக்காலத்தில் வழங்கப்பட்டதோடு, சிறு கைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனை ஊக்குவித்தும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கம் 25 வருட நிறைவில் பல இடப் பெயர்வுகளைச் சந்தித்து சொத்துக்களை இழந் தும், பொருட்களை இழந்தும் நிதிப் பலத்தைப் பொறுத்தமட்டில் கீழ் நிலையை அடைய வில்லை. இடர் நிலைகளை முன்னுணர்ந்து அங் கத்தவர், பணியாளர் இடர்கால ஒதுக்கீடுகள் பல உருவாக்கப்பட்டு, இடர்காலத்தில் வழங்கி காப்பாற்றப்பட்டுள்ளனர். இச்சங்கம் நிர்வாக ரீதி யாகவும் பொருளாதார ரீதியாகவும் ஸ்த்திரத் துடன் உள்ளமையைக் காணமுடிந்தாலும், இந் நிறுவனத்தை நம்பி உழைக்கும் 800க்கும் மேற் பட்ட அங்கத்தவர்கள், பணியாளர்களும் அவர்க ளது குடும்பங்கள் மீளக் குடியமரும்போது வசதி கள் பெற பல இலட்சம் ரூபா தேவையுற்றமையும் இங்கு குறிப்பிடலாம்.

திரு நா.கணேசன் தலைவரைத் தொடர் ந்து திரு க.சின்னராசா தலமைப் பொறுப்பை ஏற்று சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்தினார். சமூக நலத்திட்டங்களை உரு வாக்கி, அங்கத்தவர் சேமிப்புக்களை அதிகரித்து அங்கத்தவர்கள், பணியாளர்கள் விருத்திக்கு சேவையாற்றியுள்ளார். சங்கத்தின் பணித்தொகுதி மீள் அமைப்பில் ஆளணி அங்கீகாரம் மீள் அமை ப்பு செய்யப்பட்டு ஸ்திரமான ஆளணி நிர்ணயம் பெறப்பட்டுள்ளது. திரு க.சின்னராசாவின் தலை மைத்துவத்தினைத் தொடர்ந்து திரு கா.கதிர மலை தலைமைப் பொறுப்பேற்று சங்க வளர்ச்சி யில் இருந்த திட்டங்களை செழுமைப்படுத்துவ திலும், மீள அனுமதிக்கப்பட்ட சங்கத்தின் தொழில்பரப்பில் கிளைகளை மீள நிறுவி சங்க மேம்பாட்டுக்கு உழைத்தமையுடன், சங்க அங்கத் தவர்கள் உயர் வருமானம் பெறவும், இலாபங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையும் குறிப்பிடலாம். பணி யாளர் ஊக்குவிப்பு வழங்கி, சங்கம் சிறப்பாக நடந்துள்ளது. திரு கா.கதிரமலை அவர்களைத் தொடர்ந்து திரு ம.தவபாலன் தலைமைப் பொறு ப்பை ஏற்று தொடர்ந்து திட்டங்களை முன்னெடுத் தமையுடன், கிராமிய வங்கி அமைப்பு முறையை ஏற்படுத்தி அங்கத்தவர் மத்தியில் சேமிப்பு நிலை யை மேம்படுத்தியதுடன், அங்கத்தவர், பணியா ளர் சமூக நலத்திட்டங்களை நல்ல நிலையில்

பேணி, சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் மாற்றியுள்ளார். திரு மு.தவபாலன் அவர் களைத் தொடர்ந்து திரு க.அருணகிரிநாதர் தலைமைப் பொறுப்பேற்று இன்றுவரை (40வது ஆண்டில்) சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தி வருகிறார். இவரது காலத்தில் மீள குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் கிளை பல அமைக்கப்பட்டதுடன், 40வது ஆண்டில் அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் இரு வெல்ல நிலைய கட்ட டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தலா ரூபா 45 இலட்சம் பெறுமதியானவை. வசந்தபுரம், வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது. மது வகைப் பொருட்களுடன் மட்டுமல்லாது, உபஉணவுப் பொருட்களான பனைவெல்லம், பனாட்டு, புழுக்கொடியல், பன்ன வேலை பொருட்கள் என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட்டு தொழிலாளர்களையும் மகளிர் குழு அங்கத்தவரையும் ஈடுபடுத்தி, இவ் உற்பத்திகள் மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டு, பனை வெல்லத் திட்டம் நடைமுறைப்படுத்தி நல்ல வருமானம் பெறுவதுடன், பயனாளிகளும் நன்மை அடைகின்றனர்.

அங்கத்தவர்களுக்கான சேமிப்பு திட்டங்கள், ஓய்வுகாலக் கொடுப்பனவு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அங்கத்தவர்கள் பெரிதும் நன்மையடைகின்றனர். இன்னமும் சங்கம் தனது தொழிற்பரப்பில் மீள குடிய மர அனுமதிக்கப்படவில்லை. விடுவிக்கப்பட்ட 30 வீதமான தொழில் பரப்பில் நடவடிக்கையை மேற்கொள்கிறது. 30 அங்கத்தவர்களும் 16 பணியாளர்களும் தொழில்புரிந்து வருகிறார்கள். முழுமையான பிரதேசமும் விடுவிக்கப்படும்பட்சத்தில் 800ற்கு மேற்பட்ட அங்கத்தவர்களும் 100க்கு மேற்பட்ட பணியாளர்களும் வேலைவாய்ப்பு பெற முடியும் என எதிர்பார்க்கிறோம்.

சங்கம் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தி முன்பள்ளி கல்விக்கு ஊக்குவிப்பு, பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பு வழங்கி கல்வி அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதனால் சமூகத்தில் ஸ்திரத்தன்மையை பேணக்கூடியதாகவுள்ளது. சங்கத்தின் வளர்ச்சியில் பனம்தொழில் வல்லுநர் நேரடி நிர்வாக முறை இருப்பதினால் அரசின் எதுவிதமான மானியமும் பெறாது, பெருந்தொகையான வரியை செலுத்தியும், குறைந்த இலாபத்தில் நிர்வாக செலவுகளை ஈடுசெய்வதுடன், பல சமூக நலத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது இக் கூட்டுறவு அமைப்பு சார்ந்துள்ள சமூக மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றி இலக்கை அடைந்துள்ளது என குறிப்பிடலாம்.

இச்சங்க வளர்ச்சிக்கு பணியாளர் ஒத்துழைப்பு மிக முக்கியமானது. வெறுமனே ஊதியம் பெறுபவர் என்ற நிலைக்கு அப்பால் அர்ப்பணிப்புடன் சமூக மக்களுக்கு ஆற்றும் சிறந்த சேவை என செயற்பட்டு வருவது விசேட கவனத்தில் கொள்ளவேண்டியது. இந் நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை (40வது ஆண்டில்) பணிபுரிந்த பணியாளர் இதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளனர். இச்சங்க பொதுமுகாமையாளர் திரு கா.சிவஞானம் 1985ல் இருந்து இன்றுவரை (2012) இந்நிறுவன வளர்ச்சிக்கு சிறப்பாக கடமையாற்றி வருகிறார்.

சங்கம் 40வது வருட நிறைவில் நிதிப் பலம், நிர்வாகப் பலத்துடன் நல்ல ஆளணி வளத்துடனும் இயங்குகிறது. தனது அங்கத்தவர்களுக்கு பல சேவைகளை ஆற்றி வருகிறது. மேலும் பல ஆண்டுகள் அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு சேவையாற்ற வேண்டும். சங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்பை வரலாற்று ரீதியாக பார்க்குமிடத்து, நேரடியாக தொடர்புடைய கூட்டுறவுத் திணைக்களத்துடன் நல்ல உறவினைப் பேணி வருகிறது. ஆரம்பகால கூட்டுறவு ஆணையாளர்கள் சங்கத்தினை பதிவு செய்வதிலும் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் வழிகாட்டியுள்ளனர். திரு ச.வேலாயுதபிள்ளை அவர்களின் காலத்தில் வளர்ச்சி அதிகமானதாகும். இதனை தொடர்ந்து நெருக்கடியான காலத்தில் சேவையாற்றியிருந்த திரு தி.சபாரத்தினம் காலத்தில் சங்கம் பல காணிகளை செந்தமாக கொள்வனவு செய்து பொருளாதார ரீதயில் உயர்வடைந்தது. நிர்வாக ரீதியாகவும் வளர்ச்சியடைந்தது. கூ.அ.உ. ஆணையாளர் திரு சு.கணேசமூர்த்தி காலத்தில் நிதிப்பலம் பெறவும், நிர்வாக ஆளுமையை வளர்க்கவும் பெரிதும் உதவியுள்ளீர். திரு க.ஐயாத்துரை கூ.அ.உ.ஆணையாளர் காலத்தில் கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டு, அங்கத்தவர்கள், பணியாளர்கள் சேமிப்பு வளர்ச்சி பெறவும் சங்கமும் நிதிப் பலமடையவும் உதவியுள்ளார். 40வது ஆண்டில் சேவையிலுள்ள கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் பல வழிகளிலும் சிறப்பாக சேவையாற்றி சங்க வளர்ச்சிக்கு பெரிதும் வழிகாட்டி வருகின்ற

மையை இச்சந்தர்ப்பத்தில் சிறப்பாக குறிப்பிட லாம்.

இச்சங்க வளர்ச்சிக்கு சமாசம் ஆரம் பிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை பல வழிகாட்டல்களை வழங்கி, குறிப்பாக அங்கத் தவர் ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படு த்தி அங்கத்தவர்களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றது. சமூக மேம்பாட்டுத் திட்டம் மூலமும் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு பல நன்மைகளை செய்து வருகிறது. வலிகாமம் கொத்தணி ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு குறிப்பாக அங்கத்தவர் பொருளாதார விருத்திக்கு பெரிதும் உதவியுள்ளது. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை இதன் பணியாளர் அங்கத்தவர்களுக்கு பல பயிற்சிகளையும் தலைமைத்துவ வழிகாட்டல் களையும் வழங்கிவருகின்றமை இங்கு குறிப்பி டத்தக்கதாகும். பனை அபிவிருத்திச் சபை உற் பத்திதுறைசார் தொழில்நுட்பங்களை நிறுவன அபிவிருத்தி தொழில் வளம் செழிக்க பெரிதும் உதவியுள்ளது. காலத்திற்கு காலம் நியமனம் பெற்ற தலைவர்கள் உதவியுள்ளனர். இவர்களில் சமாசத்தின் ஆரம்ப செயலாளரும், பனை அபி விருத்திச் சபை தலைவராகவுமிருந்த திரு க.நட ராசா, தொடர்ந்து வந்த திரு மு.பாக்கியநாதன் இன்று தலைவர் பொறுப்பு வகிக்கும் திரு ப.சீவ ரத்தினம் ஆகியோர் செய்த உதவிகள் பாராட்டப் படவேண்டியவை.

சங்கத்தின் வரலாற்றில் அரச நிதி உத விகள் கிடைத்த காலம் ஐக்கிய முன்னணி அரசு காலமாகும். இவ்வகையில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்து கலாச்சார அமைச்சராக இருந்தபோது, அள வெட்டி கணேஸ்வரத்தில் ரூபா 10 இலட்சம் நிதி உதவியில் உற்பத்தி நிலைய கட்டடமும், தற்போது வெல்ல நிலைய கட்டடங்களுக்கு ஒவ்வொன்றும் ரூபா 45 இலட்சம் கொண்ட இரு கட்டடங்களும் கிடைத்துள்ளன. அமைச்சர் அவர்கள் இச் சமூக மக்களுக்கும் இக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் அளித்த உதவியை நன்றியுடன் இச்சங்கம் வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிடு கிறோம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வரலாற்றில், உற்பத்திச் சங் கமாக திகழும் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 40வது வருட நிறைவில் தனக்கென தனி இடம் அமை த்து செயற்படுகிறது என்ற மகிழ்வுடன் வரலாற் றுக் குறிப்பை நிறைவு செய்கிறது.

**சங்கத்தின் நியமனத் தலைவர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு வ.கிருஷ்ணசாமி, உள்ளூராட்சி முன்னாள் உதவி ஆணையாளர் | 1972 - 1973 |
| 02. திரு எஸ்.அமிர்தசாகரன், உதவி அரச அதிபர் | 1973 - 1975 |
| 03. திரு வ.பொன்னம்பலம் | 1975 - 1978 |
| 04. திரு வே.மாணிக்கம் | 1978 - 1980 |

**தெரிவுத் தலைவர்கள்**

| | |
|---|---|
| 01. திரு க.உருத்திராபதி | 1980 - 1981 |
| 02. திரு பூ.இரத்தினம் - | 1981 - 1989 |
| 03. திரு க.சண்முகலிங்கம்- | 1989 - 1992 |
| 04. திரு நா.கணேசன் - | 1992 - 1998 |
| 05. திரு க.சின்னராசா - | 1998 - 2001 |
| 06. திரு கா.கதிரமலை- | 2001 - 2005 |
| 07. திரு மு.தவபாலன் - | 2005 - 2007 |
| 08. திரு க.அருணகிரிநாதர்- | 2007 - 2012 |

**பனை வெல்லத்தின் உயிர்ச் சத்துக்களும் ஊட்டச்சத்துக்களும்**

| | | | |
|---|---|---|---|
| ➢ சீனிச்சத்து | 92.76 | ➢ உயிர்ச்சத்து சி (அஸ்கோபிக் அமிலம்) | 11mg |
| ➢ ஈரச்சத்து | 4.70 | ➢ உயிர்ச்சத்து பி (தயாமைன்) | 0.21mg |
| ➢ புரதம் | 0.20 | ➢ உயிர்ச்சத்து (றில்போபிளேவின்) | 432mg |
| ➢ இரும்பு | 1.40 | ➢ நிக்கோடினிக் அமிலம் | 5.24mg |
| ➢ கல்சியம் | 0.58 | | |
| ➢ பொஸ்பரஸ் | 0.005 | | |

# தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்



சங்கத்தின் பணிப்பாளர்கள்



சங்கத்தின் பணியாளர்கள்




வெள்ளிவிழா நிகழ்வின்போது



உற்பத்தி நிலையத் திறப்பு விழாவின்போது



40வது ஆண்டு நிறைவு விழாவின்போது

எமது அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
மற்றும் எமது சகோதர நிறுவனங்களுக்கும்
40வது ஆண்டு நிறைவு நல்வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்!

40

## கிராமிய வங்கிச் சேவை

- அங்கத்தவர் நிலையான வைப்பு
- அங்கத்தவர்க்கான கடன் வழங்கல்






## கல்வி அபிவிருத்தித் திட்டம்

- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
- அங்கத்தவர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கல்விப் பயிற்சி.

## உற்பத்திகள்

- போத்தற் கள்
- பனை வெல்லம்
- கல்லாக்காரம்
- பனாட்டு
- ஒடியல், புழுக்கொடியல்




## சமூக நலத்திட்டங்கள்

**தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

புகையிரத நிலைய வீதி, [வரைவுள்ளது]
மல்லாகம்.

021 321 1351

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## தோற்றமும் வளர்ச்சியும் — ஒரு பார்வை

இச்சங்கமானது 1972ம் ஆண்டு, பங்குனி மாதம் 1ம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. பலகாலமாக மரவரிமுறையில் சிக்குண்டு நசுக்கப்பட்ட பாமர பனந்தொழில் வல்லுநர்களை முன்னேற்றும் நோக்குடன் 1972ம் ஆண்டு வைகாசி மாதம் 01ம் திகதி அன்றைய நிதி மந்திரியாக இருந்த கலாநிதி என்.எம். பெரேரா அவர்கள் எடுத்த முற்போக்கான மாற்றமே இதற்கு வித்தாக அமைந்தது. இத்திட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பித்துவைப்பதற்கு முழுமூச்சாக நின்று பாடுபட்டு உழைத்தவர், அன்று இச்சங்கங்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக இருந்த திரு க.சண்முகலிங்கம் அவர்களும், எமது இனத்துக்கு வழிகாட்டியாக விளங்கிய எம்.சி.சுப்பிரமணியம், செனட்டர் நல்லையா, திரு க.நடராசா ஆசிரியர் ஆகிய இவர்களது விடாமுயற்சியின் பயனாக சாவகச்சேரி, கைதடி ஆகிய பகுதிகளில் கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரில் சிறிய சங்கங்களாக தனித்தனி காரியாலயங்களை அமைத்து, சாவகச்சேரி சங்கத்துக்கு திரு க.நடராசா ஆசிரியர் அவர்கள் நியமனத் தலைவராகவும், திரு மு.சின்னத்துரை ஆசிரியர் செயலாளராகவும், திரு கனகசிங்கம் அவர்கள் பொதுமுகாமையாளராகவும், கைதடிச் சங்கத்துக்கு திரு ச.வாரித்தம்பி தலைவராகவும், திரு பொன்.செல்லையா செயலாளராகவும், திரு ப.செல்லத்துரை அவர்கள் பொதுமுகாமையாளராகவும் கடமை புரிந்தனர்.

இச்சங்கங்கள் தங்கள் தொழிற்பரப்புக்கு ஏற்ற கிளைகளை அமைத்து, அங்கத்தவர்கள் உற்பத்தி செய்த கள்ளினை கொள்வனவு செய்தல், அவற்றில் விற்பனைக்கு மிதமிஞ்சிய கள்ளினை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளை செய்து வந்தது. இதன் பயனாக சகல பனந்தொழில்வல்லுநர்களும் தமது உற்பத்திக்கு சராசரி வருமானம் பெறத்தொடங்கினர். இவ்வாறு இருந்தபோதும் மரவரிமுறையை ஆத ரித்த முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினர் அப்போது சங்கத்துக்கு எதிராகவே இருந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சங்கம் பதிவுக்குப்பின்னர் 04-03-1973ல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் திரு போல் சண்முகம் அவர்களின் முன்னிலையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நியமனத் தலைவராக திரு க.நடராசா அவர்களும், செயலாளராக திரு செல்லையா அவர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அன்றைய கூட்டத் தீர்மானத்திற்கு அமைய 16.05.1973 அன்று சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் இயங்கிய இரண்டு சங்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, சாவகச்சேரி கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் மட்டுமே இயங்கத் தொடங்கியது.

1972ம் ஆண்டு வைகாசி மாதம் 01ம் திகதி சங்கங்கள் உருவாக்கப்பட்ட பின்பு, முதன் முதலாக சாவகச்சேரி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தனங்கிளப்பு வீதியில் உள்ள தவறணையை அப்போதைய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக இருந்த திரு க.சண்முகலிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைத்த தன்மூலம் சங்கங்களின் வரலாறு ஆரம்பமான பெருமை எமது சங்கத்துக்கு உண்டு. உலகத் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கப்பட்ட மே 1ம் நாளில் எமது ஏழைத்தொழிலாளர்களின் வாழ்வுக்கு ஒளிமயமாக இத்தவறணை முறை ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை, 45 வருட சுரண்டல் மரவரி அமைப்பு முறைக்கு சாவுமணி அடிக்கப்பட்டது.

சாவகச்சேரி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் 639 அங்கத்தவர்களுடன் இச்சங்கம் 11-03-1972ல் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று இச்சங்கம் 40 வருடங்களைப் பூர்த்திசெய்த நிலையில், 2049பேரை

மொத்த அங்கத்தவர் தொகையாகவும், 264 அங்கத்த வர்கள் தற்போது தொழிற்படும் அங்கத்தவர்க ளாகவும் காணப்படுகின்றனர். தலைவர்கள் மர பில் அமரர் திரு பொ.சின்னராசா, திரு கி.பூபால சிங்கம் அவர்கள் காலத்தில் சங்கம் மென்மேலும் வளர்ச்சி கண்டதுடன், சங்கத்தின் ஒழுங்கு, கட் டுப்பாடு, நிர்வாகத் திறமை போன்றவை சங்க வளர்ச்சியின் படிக்கற்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் அக்காலத்தில் காணி கட்டடங்களும் கொள்வனவு செய்யப்பட் டது. மேலும் சங்க வளர்ச்சியில் திரு வே.கிருஷ்ணன் அவர்கள் 1985ம் ஆண்டு தொடக் கம் தொடர்ந்து 21 வருடங்களாக பொதுமுகாமை யாளராக இருந்து சேவையாற்றி சங்க வளர்ச் சிக்கு அரும்பாடுபட்டு உழைத்துள்ளார். இக் காலப்பகுதியில், 1974இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருடிக்கடியில் பொதுமக்களின் பாவனைக்கு சீனிப் பற்றாக்குறை ஏற்பட்டதை கவனத்தில்கொண்ட நியமனத் தலைவர் திரு க.நடராசா அவர்கள் அப்போதைய அரசாங்கத்து டன் பேச்சுவார்த்தை நடத்தி மக்கள் வங்கிமூலம் கடன்பெற்று, தச்சன்தோப்பு, கைதடி வடக்கு, மட்டுவில் தெற்கு, மானாவளை, அல்லாரை, சிக்னல் மரத்தடி ஆகிய இடங்களில் எமது சங்கம் பதநீர் உற்பத்தியைப் பெருக்கி, பனை வெல்ல உற்பத்தி நிலையங்களையும், சரசாலை யில் சீனித்தொழிற்சாலையையும் உருவாக்கிய போது, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளு க்கு முடிவு கட்டியதுடன், நாட்டின் பொருளாதார நெருக்கடியை குறைப்பதற்கு கரம்கொடுத்து உதவியது குறிப்பிடத்தக்கது. இச்சங்கம் தென்ம ராட்சி இடப்பெயர்வின்போது, அச்சுவேலியிலும், கோப்பாயிலும் சங்கத்தை நடாத்தியதுடன், திருநெல்வேலி சந்தையின் சைக்கிள் வாடகை நிலையத்தை நடத்தி பணியாளர்களுக்கு சம் பளம் கொடுத்தும், ஏனைய பணியாளர்களை வேறு சங்கங்களுக்கு கடமைக்கு அமர்த்தியும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை ஈடுசெய்தது. எமது அங்கத்தவர்களின் தொழில் ஆபத்து நிறை ந்ததாகையால், அவர்களின் உயிருக்கு உத்தர வாதம் வழங்கமுடியாது. அந்த வகையில், அவர் கள் தொழில் விபத்துக்குட்படும்போது அச்சந்தர்ப் பத்தில் விபத்தின் தன்மைக்கு ஏற்ப உதவித் தொகை வழங்கும் நோக்கில் அங்கத்தவர் விபத் துப் பாதுகாப்பு நலத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி சமாசம் வழங்குவதுடன், சங்கமும் ஒரு தொகை நிதியை அவர்களின் பங்களிப்புக்கு ஏற்ப வழங்கி வருகிறது. எமது அங்கத்தவர்கள் இல்வாழ்க் கையை நடாத்துவதற்கு சமயாசாரப்படி திரு மணம் செய்திருந்தும் அதற்கான சட்டப்படியான பதிவுகள் எதுவும் இல்லாத நிலையைக் கண்ட எமது சங்கம், திருமணப் பதிவை மேற்கொள் ளாத அங்கத்தவர் தம்பதிகள் தொடர்பான விப ரங்களை திரட்டி அவர்களுக்கான இலவச திரு மணப் பதிவை மேற்கொண்டது. இந்நடவடிக்கை மூலம் சங்கம் அங்கத்தவர் குடும்பங்களுடன் நெருக்கமான உறவை பேணிவருகிறது என்பதை காணமுடிகிறது. அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நிலையைக் கவனத்தில் கொண்ட சங்கம், தனது தொழிற் பரப்புக்குள் பாலர் பாடசாலைகளை நடத்தி வரு வதோடு, முன்பள்ளிகளில் நடைபெறும் மெய்வல் லுநர் திறனாய்வுப் போட்டி விழாக்கள் நடத்துவது டன், பல்கலைக்கழக அனுமதி, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாண வர்களுக்கு கல்வி உதவி தொகையை வங்கி யில் வைப்பிலிட்டு வருகிறது. அக்கால அங்கத்த வர்களில் சிலருக்கு தமது கையொப்பத்தை எழுதமுடியாதவர்களுக்கு சங்கம் எடுத்த முயற்சி யினால் கல்வி உத்தியோகத்தர் மூலம் எழுத் துப்பயிற்சி வழங்கப்பட்டது.

மற்றும் எமது சங்கத்தின் கிளைகளில் விற்பனைக்கு மிதமிஞ்சிய கள்ளை வடிசாலை க்கு அனுப்புவதற்காக சங்கம் 2003ம் ஆண்டு புதிதாக "240" எனும் உழவு இயந்திரத்தை கொள்வனவு செய்தது. அத்துடன், கிளைக்கு கிளை மிதமிஞ்சிய கள்ளை மாற்றம் செய்வதற் காக 2011ம் ஆண்டு புதிதாக ஒரு மூன்று சக்கர மோட்டார் வண்டி கொள்வனவு செய்யப்பட்டது. துற்போது வீதி அகலிப்பு காரணமாக அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் சங்கச் செயற்பாடு களுக்கு ஏற்படும் தடங்கல்களை நிவர்த்திக்கும் நோக்குடன் புதிதாக மின்பிறப்பாக்கி (5KV) ஒன்றை கொள்வனவு செய்துள்ளது. எமது சங் கம் நடத்தும் 17 கிளை நிலையங்களில், 09 கிளைகளுக்கு நவீன கட்டடங்கள் அமைக்கப் பட்டு, நவீன கிளை நிலையங்களாக இங்குகின் றன. 89வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன் னிட்டு கடந்து வருடம் (2011) எமது சங்கத்தின் மிக வறிய அங்கத்தவர் ஒருவரை தெரிவுசெய்து, ரூபா 442,000 செலவில் புதிய வீடு ஒன்றை இலவசமாக அமைத்துக்கொடுத்துள்ளது. மேலும்

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



சங்கத்தின் பணிப்பாளர் சபை




சங்கத்தின் பணியாளர்கள்

வரலாற்றுப் பதிவுகள்!




முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு
இலவச சீருடை வழங்கலின்போது




89வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு
அங்கத்தவர் ஒருவருக்கு இலவசமாக அமைத்துக்கொடுக்கப்பட்ட வீடு

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
## 40வது ஆண்டு சிறப்பு மலர் அழுகுற
## எமது நல்வாழ்த்துக்கள்!

### அங்கத்தவர் நலத்திட்டம்

- ஓய்வூதியம், மரணக் கொடை வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு.

### மகளிர் சேவை

- தையல், மனையியல், அழகுக் கலைப் பயிற்சி வழங்குதல்.
- சுயதொழில் உற்பத்தி ஊக்குவிப்பு.



### கிராமிய வங்கிச் சேவை

- நிலையான வைப்புக் கடன்.
- ஓய்வூதியச் சேவை.



### வாடகைச் சேவை

- வாடகைக் கதிரை
- வாடகை உழவு இயந்திரசேவை.



### தொழில்நுட்ப சேவைகள்

- நிழற்படப் பிரதி இயந்திர சேவை.
- தொலைநகல் வசதி.




### சமூகம்சார் அபிவிருத்திச் சேவைகள்

அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்றவர்களுக்கும் ஊக்குவிப்பு நிதி வழங்கல்.



### முன்பள்ளிச் சேவை

- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கல்.
- முன்பள்ளி கலை, விளையாட்டுவிழா நிகழ்வுகளுக்கு நிதியுதவி வழங்கல்.
- பாடசாலை உபகரணம், சீருடை வழங்கல்.

### பனைசார் உற்பத்தி

- பனைவெல்ல உற்பத்தி.
- பனங்கற்கண்டு [கல்லாக்காரம்] உற்பத்தி.
- போத்தலில் கள் அடைத்தல்.

### வீடமைப்புத் திட்டம்

மிக வறிய அங்கத்தவர்களுக்கு இலவசமாக வீடமைத்துக் கொடுத்தல்.



## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டது]

டச்சு வீதி,
சாவகச்சேரி.

தொ.பே:
021 227 0086

எமது சங்கத்தின் ஏனைய செயற்பாடுகளில் ஒன்றாக, அங்கத்தவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக 2006ம் ஆண்டு முதல் கிராமிய வங்கி ஒன்றை ஆரம்பித்துள்ளது. அங்கத்தவர்கள் 60 வயது பூர்த்தியடைந்து ஓய்வு பெறும்போது அவர்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்காக விபத்து நிதிப் பங்களிப்புக்கு ஏற்ப விபத்து ஓய்வூதியம் ஒன்று சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும் 60 வயது பூர்த்தியடைந்தும் தற்போது சங்கத்தில் தொழிற்படும் அங்கத்தவர்களுக்கு சங்கம் விபத்துக் கொடை ஒன்றை வழங்குகிறது. 60 வயது பூர்த்தியடைந்த பணியாளர்களுக்கான ஓய்வூதிய திட்ட நடைமுறையை யாழ்.மாவட்ட பணியாளர் நலன்புரிச் சங்கம் மேற்கொள்வதையிட்டு அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் பெருமைகொள்கின்றன.

இச்சங்கம் தன்னுடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பார்க்குமிடத்து, நேரடியாக கூட்டுறவுத் திணைக்களத்துடனான உறவு, ஒத்துழைப்பு நல்ல நிலையில் இருந்து வருகிறது. சங்க வளர்ச்சிக்கு சமாசம் காலத்திற்கு காலம் பல பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகிறது. யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை பணியாளர், அங்கத்தவர்களுக்கு பல பயிற்சிகளையும், அபிவிருத்தி, நிர்வாகத் திறன் விருத்திக்கும் பெரிதும் உதவியுள்ளது. பனை அபிவிருத்திச் சபையும் அங்கத்தவர்களின் தொழில் தொடர்பில் உதவிகளை வழங்கி வருகிறது. கூட்டுறவு வரலாற்றில் உற்பத்தி, விற்பனைச் சங்கமாகத் திகழும் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 40வது வருட நிறைவில் தனக்கென ஓர் தனியிடத்தை அமைத்து செயற்படுகின்றது என்ற நிறைவில் சங்கத்தின் வரலாற்றுக் குறிப்பை நிறைவு செய்கிறது.

## பனம்பழச் சாற்றின்மூலம் தயாரிக்கப்படும் உணவுகள்

### கோடியல் (இரசம்) கிறஸ்

**பருவ காலத்தில் சேமித்து வைத்த பழச்சாற்றில் இருந்து கோடியல் (கிறஸ்) பின்வரும் பொருட்களின் அளவில் கலந்து தயாரிக்கலாம்.**

| | |
|---|---|
| பனம்பழச்சாறு | – 1 கிலோ |
| சித்தரிக்கமிலம் | – 1 கிராம் |
| சீனி | – 1 1/2 கிலோ |
| பென்சோயிற் | – 1/2 கிராம் |
| பெக்ரின் | – 3 கிராம் |

மேலே குறிப்பிட்ட அளவு பொருட்களை பெற்று மண் அல்லது எவர் சில்வர் பாத்திரத்தில் பனம்பழச் சாற்றினையும் சீனியையும் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். அப்பொழுது சிறிதளவு நுரைகள் தோன்றும். இந்நுரைகளை கரண்டி மூலம் அகற்றிவிட வேண்டும். கொதித்திக்கொண்டிருக்கும்போது சித்தரிக்கமிலத்தையும் பின்பு பெக்ரினையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். திரவம் நன்றாகக் கொதிக்கும் போது அதனைக் கரண்டியினால் அள்ளிவிட்டுப் பார்த்தால் தேன் போன்ற பதத்தில் இருக்க வேண்டும். இவ்விடத்தில் பென்சோயிற் இரசாயனத்தினைக் கலந்து அடுப்பிலிருந்து இறக்கி சூடு நன்றாக ஆறமுன்பே சுத்திகரிக்கப்பட்டு ஆயத்தமாக வைத்திருக்கும் போத்தல்களில் நிரப்பி அதற்கான அடைப்பினால் இறுக்கி மூடிச் சந்தைப்படுத்தலாம். பல நாட்களுக்கு பழுதடையாது இருக்கும்.

### ஜாம் தயாரித்தல்

| | |
|---|---|
| பனம்பழச்சாறு | – 1 கிலோ |
| சித்தரிக்கமிலம் | – 1 கிராம் |
| சீனி | – 1 1/2 கிலோ |
| பென்சோயிற் | – 1/2 கிராம் |
| பெக்ரின் | – 3 கிராம் |

பனம்பழச்சாற்றிலிருக்கும் "காறல்" சுவையினை சமப்படுத்தும் வகையில் சர்க்கரைப் பூசனி, தக்காளி இன்னும் ஏனைய பழச்சாறுகளை சம அளவாகச் சேர்த்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பனம்பழச் சாற்றினையும் தெரிந்தெடுக்கப்பட்ட வேறு பழச்சாற்றினையும் சம எடையாகச் சேர்த்து நன்கு கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்கும்போது கொதிகலன் அடிப்பகுதிவரை அடிக்கடி கிளற வேண்டும். நன்கு கொதித்த பாகினை அகப்பையினால் அள்ளிவிட்டுப் பார்க்கும்போது தடிப்பான நிலையில் இருந்தால் உடனே இறக்கி சுத்திகரிக்கப்பட்டு ஆயத்த நிலையில் வைத்திருக்கும் வெற்றுப்போத்தல்களில் நிரப்பி காற்றுப் புகாத மூடியினால் அழுத்தமாக மூடிப் பயன்படுத்தலாம்.

# கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்று நோக்கு

இச்சங்கமானது 1972ம் ஆண்டு கொடிகாமப் பகுதியில் வாழ்கின்ற பனம் தொழில் வல்லுனர்களின் கலை, கலாச்சார, கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டது. அந்த வகையில் 11.03.1972ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட J/1595 என்ற பதிவிலக்கத்தி னூடாக சட்ட அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டது. மேற்படி சங்கமானது தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

சங்கம் உருவாக்கப்பட்ட ஆரம்ப ஆண்டிலேயே 707 அங்கத்தவர்களையும் 68 பணியாளர்களையும் தன்னகத்தே கொண்டு செயற்படத் தொடங்கியது.

**இச்சங்கத்தின் பிரதான தொழிற்பாடுகள் (ஆரம்பத்தில்)**

- பனை, தென்னங் கள்ளினை அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்தல்.
- போத்தல்கள் அடைத்து விற்பனை செய்தல்.
- பனை வெல்லம் உற்பத்தி செய்தல்.
- கூட்டுறவு சேவை விற்பனை நிலையம்
- முன்பள்ளிக் கல்விச் சேவை.
- அங்கத்தவர்களுக்கான இலகு கடன் வசதிகள்.

மேற்படி தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆரம்ப காலகட்டத்தில் கச்சாய், மிருசுவில், வரணி ஆகிய இடங்களில் மூன்று விற்பனை நிலையங்கள் மட்டுமே இருந்தன. பிற்காலப்பகுதியில் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரித்தமையினால் தொழிற்பாடுகளை விருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டதனாலும் கொடிகாமப் பிரதேசம் அனைத்தினையும் உள்ளடக்கக் கூடிய வகையில் 18 விற்பனை நிலையங்களையும், 14 வெல்ல உற்பத்தி நிலையங்கள், ஒரு போத்தல் உற்பத்தி நிலையம் என்பவற்றை உருவாக்கி கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தொழிற்பாட்டை விஸ்தரித்து முன்பள்ளியினையும் 07 ஆக அதிகரித்து கல்விச் சேவையினையும் விஸ்தரித்து இச்சங்கம் உருவாக்கப்பட்ட நோக்கத்தினை அடைந்து தூரநோக்கினை எட்டிக் கொண்டிருந்தது.

அத்துடன் சமூக சேவை நலத்திட்டங்களையும் இச்சங்கம் மேற்கொண்டு வந்தது. அந்த வகையில் மகளீர்களை கூட்டுறவுக்குள் இணைத்து அவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியினை வழங்கி சமூகத்தில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

கூட்டுறவு என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக தற்போதிருக்கின்ற 18 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பான்மையானவை அழிவு நிலையில் இருந்தன.

இந்த நிலையில் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது தாய்போல இருந்து இடம்பெயர்ந்த அங்கத்தவர்களுக்கு தொழில் புரிவதற்கான வசதிகளை வழங்கி அத்துடன் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கி பாரிய சேவையினை புரிந்து அச்சங்கங்கள் தொடர்ந்தும் கூட்டுறவு சேவைகளை வழங்க வழிவகுத்தது.

இன்றைய நிலையில் இச்சங்கத்தின் தொழிற்பாடுகள் ஒடுங்கிய நிலையே காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு அகச் சூழல், புறச் சூழல் காரணமாக அமைந்திருக்கின்றது. இதனால் தற்போது 10 விற்பனை நிலையங்களும் ஒரு போத்தலடைப்பு நிலையமும், ஒரு வெல்ல உற்பத்தி நிலையம், 06 முன்பள்ளிகள் மட்டுமே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

# கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

**வரலாற்றுப் பதிவுகள்!**



சங்கத்தின் பணிப்பாளர்கள்



சங்கத்தின் பணியாளர்கள்



சங்கத்தில் நடத்தப்பட்ட விழாவின்போது




சங்கத்தின் மரம் நடுகை நிகழ்வின்போது


கற்பகதரு
40 வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!
போத்தற் கள் உற்பத்தி
கிராமிய வங்கிச் சேவை
கிராமிய வங்கி
கல்வி மேம்பாட்டுத் திட்டம்
மகளிர் மேம்பாட்டு திட்டம்
சமூக நலத் திட்டங்கள்
கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
பிரதான வீதி,
கொடிகாமம்
021 373 5262

இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 21 பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் கள். அத்துடன் கல்விச் சேவையினை வழங்கு வதற்காக பதினொரு ஆசிரியர்கள் கடமைபுரிகின் றார்கள். இந்நிலையில் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்கள், ஆசிரியர்களுக்குமான கொடுப் பனவை மேற்கொண்டு சேமிப்பினை உருவாக்கு வதற்காக கிராமிய வங்கிச் சேவை 2011ம் ஆண் டிலிருந்து உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டி ருக்கின்றது. இன்றுவரை தொழிற்பட்ட 2100 அங் கத்தவர்களில் தற்போது 300 அங்கத்தவர்களே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவர்களு டைய வாழ்க்கைத் தரத்தினை மேலும் வளப் படுத்தி இந் நிறுவனமானது நிலைத்து நின்று கூட்டுறவு சேவையினை வளங்கக்கூடிய வகை யில் மதுசார்ந்த தொழிற்பாடுகள் மட்டுமன்றி எதிர்காலத்தில் இதர உபஉணவு வசதி மற்றும் துணைநிலைச் சேவைகளையும் வழங்கக்கூடிய வகையில் இச்சங்கத்தின் தொழிற்பாடுகள் அமையவிருக்கின்றது.

## பனம்பழச் சாற்றின்மூலம் தயாரிக்கப்படும் உணவுகள்

### சோஸ் உற்பத்தி


| | |
|---|---|
| பனம்பழச்சாறு | – 1 கிலோ |
| சீனி | – 125 கிராம் |
| பென்சோயிற் | – 40 கிராம் |
| மிளகாய்த்தூள் | – 20 கிராம் |
| வெங்காயம் | – 10 கிராம் |
| கராம்பு | – 1 கிராம் |
| ஏலம் | – 1 கிராம் |
| கறுவா | – 1 கிராம் |
| மிளகு | – 2 கிராம் |
| வினாகிரி | – 40 மி.லீற்றர் |
| சோஸ் என்கான்சர் | – 1 கிராம் |
| பெக்ரின் | – 1 கிராம் |

மேலே குறிப்பிட்ட அளவு பொருட் களைச் சேர்த்துக் கொதிக்க வைக்க வேண்டும். இதன்பின் கரண்டியினால் அள்ளிப் பார்க்கும்போது தடிப்பாகவும் நல்ல மணமாகவும் தோன்றும்போது வெப்பத்தினைக் குறைத்து அடுப்பிலிருந்து இறக்கி பின்பு கொதிநிலை ஆற முன்பே சுத்திகரிக்கப்பட்ட போத்தல்களில் விட்டு நிரப்பிக்கொள்ளலாம்.



### இனிப்புக் கிறீம்

பனம்பழ பருவகாலம் குறிப் பிட்ட இரு மாதங்கள் மட்டுமே இருக்கும். இக்காலத்தில் மட்டு மல்ல வருடம் தோறும் பல்வேறு சிற்றுண்டிகள் செய்து பயன்படுத் தப்பட்டு வருகின்றது. இந்நிலை யினை மாற்றும் வகையில் பருவ காலத்தில் மட்டுமல்ல ஏனைய காலங்களிலும் பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட் டதே கிறீம் ஆகும். பின்வரும் அளவுகளில் பொருட்களைச் சேர்த்து கிறீம் தயாரிக்கலாம்.




| | |
|---|---|
| பனம்பழச்சாறு | – 1 கிலோ |
| சித்தரிக்கமிலம் | – 0.05 கிராம் |
| சீனி | – 1 கிலோ |
| பெக்ரின் | – 0.05 கிராம் |
| பென்சோயிற் | – 1/2 கிராம் |
| பெக்ரின் | – 3 கிராம் |

மேற்குறிப்பிட்ட அளவுகளில் பொரு ட்களை எடுத்து சேர்த்துக் கொதிக்கவைத்து தடிப்பான பதார்த்தமாக மாறிவரும்போது அடுப்பிலிருந்து இறக்கி பாதுகாப்பாகச் சுத்திகரிக்கப்பட்ட போத்தல்களில் அடை த்து தேவையானபோது பயன்படுத்திக்கொள்ளலாம். சீனி சேர்க்காமலும் தயாரித்து வைக்கலாம்.

# 40 ஆண்டுகால வளர்ச்சிப் பாதையில்...

## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்- - - ஒரு நோக்கு

1972இல் வடமாகாணத்தில் உருப்பெறத் தொடங்கிய காலகட்டத்தில் ஊர்காவற்றுறைப் பகுதியினைச் சேர்ந்த கள்ளு உற்பத்தியாளர்கள் தமக்குள் ஒன்றிணைந்து தமக்கான ஒரு சங்கத்தினை உருவாக்கி 1972.03.11ம் திகதி பதிவு செய்திருந்தனர்.

இவ் அங்கத்தவர்களின் விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றியென்றே இச் சங்கத்தின் தற்போதைய வளர்ச்சியை குறிப்பிட வேண்டும். ஏனெனில் சங்கத்தை உருவாக்கும்போது பட்ட இன்னல்கள் சொல்லில் அடங்காதவை. இவ்வாறு 1972ல் ஆரம்பிக்கப்பட்டபோது சங்கத்தின் முதலாவது தலைவராக ச.கணபதியும் பொதுமுகாமையாளராக ம.யோசராசன் என்பவரும் இருந்தார்கள். இவர்களின் வழிநடத்தலில் சங்கம் சிறுக சிறுக நிதிப்பலம் பெறத்தொடங்கியதுடன், சங்கத்தினால் தாம் பெறும் நன்மைகளையும் உணரத் தொடங்கினார்கள்.

இதன் பின்னர் 1980 தொடக்கம் 1983 வரையான காலப்பகுதியில் சங்கம் தனித்து நிற்கக்கூடிய பலத்துடன் காணப்பட்டது. இவ்வாறு வளர்ச்சி நோக்கி சென்று கொண்டிருந்த சங்கத்தின் வளர்ச்சிப்பாதையில் 1989ம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு முற்றாக அவர்கள் தங்கள் சொத்துக்களை இழக்க காரணமாக அமைந்தது. தமது தலைமைக் காரியாலயக் கட்டிடம், கிளைக் கட்டிடங்கள், பொதி ஊர்தி, இருப்புக்கள், நிதியென எதுவுமேயற்ற நிலையில் எப்பதிவுகளும் இன்றி முற்றாக சங்கம் அழிவு நிலைக்கு சென்றது. பின்னர் 1996ம் ஆண்டு மீள்குடியேற்றம் நடைபெற்றபோது மீளவும் சங்கத்தின் பெயரில் வங்கிகளிலுள்ள பணத்தினை மீட்க போதிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அங்கத்தவர்கள், பணியாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து உழைத்ததன் பயனாக மீளவும் புதுப்பொலிவு பெறத்தொடங்கியது.

இக்காலப்பகுதியில் கள் விற்பனை மட்டுமல்லாமல் ஏனைய பனைசார் உற்பத்திகளிலும் சங்கத்தின் செயற்பாடுகள் நடைபெற்றதுடன், யாழ் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி கண்டது. சங்க வரலாற்றில் ஒன்பது தலைவர்களைக் கடந்து இன்று நிமிர்ந்து நிற்கின்றது. சங்கம் கண்ட தலைவர்கள் வரிசையில்,

திரு ச.கணபதி
திரு அ.சந்தியோகு
திரு கு.மத்தியாஸ்
திரு அ.மங்களதாஸ்
திரு க.கனகராசா
திரு அ.தானியேல்
திரு ஆ.நாகராசா
திரு இ.ஜெறாட் ஜெயசீலன்
திரு தீ.அன்ரனி பெர்ணாண்டோ

என அத்தனை தலைவர்களின் சிறந்த தலைமைத்துவம் பொதுமுகாமையாளர், கணக்காளர், பணியாளர்களின் அர்ப்பணிப்பான உழைப்புக்களும் இச் சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில் முக்கியமானவை. காலம் செல்லச் செல்ல சங்கத்தின் வளர்ச்சியிலும் பல பரிமாணங்களைக் கடந்து இன்று ஒரு சமூகத்தின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்கின்ற ஓர் சமூக நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றது.

அங்கத்தவரின் உற்பத்திகளை விற்பனை செய்து அவர்களுக்கான பணத்தினை வழங்குகின்ற செயற்பாட்டோடு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் தன் அங்கத்தவர் சார்ந்த அபிவிருத்தியிலும் கால் பதித்து திகழ்கின்றது. அங்கத்தவர் விபத்து நிதி, அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காக புலமைப் பரிசில்களை வழங்குவதுடன் அவர்களுக்கான கல்வி உபகரணங்களையும் வருடாவருடம் வழங்கி வருகின்றது. சங்கத்தின் மேற்பார்வையின்கீழ் இரு முன்பள்ளிகளை நடத்துவதுடன் அம் முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை, கல்வி உபகரணம், விளையாட்டு நிகழ்வுகள், கலைவிழாக்கள் என்பவற்றுடன் ஆசிரியர் சம்பளத்தினையும் வழங்கி

# ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழாவின்போது



சங்கத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வின்போது



சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு விழாவின்போது


40வது அகவையில் கால் பதிக்கும்
எமது சக பனை தென்னை வளச் சங்கங்களுக்கும்
கற்பகதரு மலருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!
பனை வெல்லம் உற்பத்தி
பதநீர். கள் போத்தலில் அடைத்து விற்பனை
பனைசார் பொருட்கள் விற்பனை
பாலர் கல்வி ஊக்குவிப்பு
கிராமிய வங்கிச் சேவை
மகளிருக்கான சேவைகள்
வாடகை பாரவூர்தி சேவை
தொலைபேசி சேவை
உளவள நலத்திட்டம்
அங்கத்தவர் நலத்திட்டங்கள்
ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
[வரையறுக்கப்பட்டது]
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.
021 492 2311

கல்விப் புலத்துக்காக உழைக்கின்ற சமூகப்பணியை செவ்வனே செய்து வருகின்றது.

சமூகமட்ட அமைப்புக்களான ஆலயங்கள், பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றுக்கான நிதி உதவியினை மேற்கொள்வதன் ஊடாக அவற்றின் பயன்கள் மக்களைச் சென்றடைய நிதி ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றமையானது இச் சங்கம் ஓர் சமூகமயப்படுத்தப்பட்ட நிறுவனம் என்பதற்கு எடுத்துக் காட்டு.

இன்று இதன் பரிமாணம் ஓரளவு சிறப்புற செயற்படினும் கடந்த காலத்தில் ஏற்பட்ட நீடித்த யுத்தம் காரணமாக ஒட்டுமொத்த சொத்திழப்புக்களை சந்திக்க நேர்ந்தது. இருப்பினும் இடப்பெயர்வின் பின் ஒன்று சேர்ந்த அங்கத்தவர்களின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் மீண்டும் இச்சங்கம் தலைதூக்கி இன்று 615 உறுப்பினர்களுடன் 08 கிளைநிலையங்கள், போத்தலடைப்பு நிலையம், தலைமைக் காரியாலயம், வாகனசேவை, பதநீர் உற்பத்தியென வளர்ச்சிப் பாதை நோக்கி படிப்படியாக அடியெடுத்து வைக்கிறது.

இச் சங்கத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் பட்டை தீட்டப்பட்டு மீண்டும் பனை வெல்ல உற்பத்தி, பனம் சீனி, பனங் கற்கண்டு என பல்வேறு உற்பத்திகளை செய்வதற்கு திட்டமிட்டிருப்பதுடன் பனை உப உணவு உற்பத்தி விற்பனை நிலையத்தினையும் ஆரம்பித்து யாழ் மாவட்டத்தில் பனை சார் உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தனது இலக்கை நோக்கி மெல்ல நகர முனைகின்றது.

## பனம் பானம்




| | |
|---|---|
| பழச்சாறு | 1 கிலோ |
| சீனி | 1 1/4 கிலோ |
| ஐஸ் எசென்ஸ் | 1 1/4 கிலோ |
| சித்தரிக்கமிலம் | 3 1/2 கிராம் |
| மஞ்சள் கலர் | 1 கிராம் |
| மெற்றாபைசல்பைற் | 1 கிராம் |
| தோடம்பழக் கலர் | 1/4 கிராம் |
| நீர் | தேவையான அளவு |

மேற்குறித்தளவு பொருட்களை எடுத்து முதல் இரு பொருட்களையும் சேர்த்துக் கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின் இரசாயனங்களை சேர்த்துக்கொள்வதுடன் தேவையானளவு நீரினை சேர்த்துக்கொள்ள வேண்டும். நன்கு கொதிக்க வைக்கும்போது நுரைகள் தோன்றும். கண் கரண்டி மூலம் அகற்றிக்கொள்ளலாம். 15-25 நிமிடங்கள் கொதித்த பின் அகப்பையினால் அள்ளிப் பார்க்கும்போது ஓரளவு தடிப்பான நிலையிலிருக்கும்போது நிறத் தூளினைக் கலந்து நிறமூட்டியவுடன் அடுப்பிலிருந்து இறக்கி சூடு ஆற முன்பாக சுத்திகரிக்கப்பட்ட போத்தல்களில் விட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும்.

# யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

வரலாற்றுப் பதிவுகள்

## தோற்றமும் வளர்ச்சியும்

இச்சங்கமானது யாழ்ப்பாண மாநகர கள் உற்பத்தி விற்பனைவுக் கூட்டுறவுச் சங்கம் என 11-03-1972ல் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு உதயமானது.01-05-1972ல் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய கால கட்டத்தில் கல்விமானாகவும், சமூகத்தின் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தவருமான திரு ஞா.நல்லையா அவர்கள் நியமனம் பெற்ற ஒரு தலைவராகவும், பொதுமுகாமையாளராக திரு வ.கந்தையா அவர்களும் சங்கத்தின் ஆரம்பத் தலைவர், பொதுமுகாமையாளராகக் கொண்டு இச்சங்கம் ஆரம்பமானது.

சங்கத்தின் எல்லைப் பரப்பாக யாழ்ப்பான மாநகர அமைப்பில் 1ம் இலக்க முனீஸ்வரன் வீதி கிளை, கொட்டடி, வில்லூன்றி, மண்டைதீவு, நாவாந்துறை, ஓட்டுமடம், நாச்சிமார் கோவிலடி, பூநாறி மரத்தடி, கலட்டி, அரசடி, அஞ்சனந் தாழ்வு, ஸ்ரேசனடி, இராசாவின் தோட்டம், றக்கா வீதி, குரநகர் திட்டி, குரநகர் எனப் 15 கிளை நிலையங்களுடன் இயங்கி வந்த இச்சங்கம், யாழ்.மாவட்டத்தில் அதிகளவான கள் கொள் வனவும் விற்பனையும் அதிக இலாபமும் கொண் டியங்கிய ஒரு சங்கமாக திகழ்ந்தது. ஆரம்பத் தில் 800 முதல் 1,000 வரையான அங்கத்தவர் களையும், 50 ற்கு மேற்பட்ட பணியாளர்களையும் கொண்டு இயக்கம் பெற்றது. கள் உற்பத்திச் சங்கங்களின் வரலாற்றில் முதல் முதலாக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இல. 330 இல் அடுக்குமாடிக் கட்டடத்துடன் கூடிய 2.5 பரப்புக் காணியினை ரூபா 100,000ற்கு கொள் வனவு செய்து, அதனை தலைமைக்காரியாலய மாகக் கொண்டு இயங்கியது.

1974ம் ஆண்டு சங்கங்கள் பனை வெல்ல உற்பத்திகளில் ஈடுபட்டபோது இச்சங்கமும் ஓட்டு மடம் தனியார் காணியில் ஓர் வெல்லத் தொழிற் சாலையையும், தலைமைக் காரியால யத்தின் பின்பக்கத்தின் பழைய கட்டடத்தில் ஓர் வெல்ல உற்பத்தி நிலையத்தையும் அமை த்து, அந்த நிலையத்தில் முதன் முதலாக மின் அடுப்பு மூலம் பனை வெல்லம் உற்பத்தி செய்த பெருமையும் இச்சங்கத்துக்கே உரியது.

இக்காலத்திற்கு பின்பு சங்கத்தின் தொழி லாளர் மட்டத்தில் தலைவராக வந்த திரு இ.தர்ம குலசிங்கம், திரு லெ.பால்சாமி ஆகியோரதும், பொதுமுகாமையாளராக அக்காலத்தில் கடமை யாற்றிய திரு ம.ஞானரட்ணம் ஆகியோரதும் சேவைக்காலத்தில் யாழ்.நகரின் மையப் பகுதி யில் இச்சங்கம் இயங்கி வந்ததால், 1983ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகளால் சங்கத்தின் விற்பனைகளில் வீழ்ச்சி ஏற்படத்தொடங்கியதால், ஆரம்பத்தில் சங்கம் இருந்த நிலையைவிட சற்று கீழ்நிலையை அடைந்தது. இக்காலத்தில் ஊரடங்கு உத்தரவு போன்ற இராணுவ நெருக்கடிகளால் சங்க வளர்ச் சியில் தடைகள் ஏற்படத் தொடங்கியது. (1981-1987) இதனைவிடவும் குடிமனைகளுக் கிடையில் அமைந்திருந்த சங்கத்தின் கள் விற் பனை நிலையங்கள் சில மக்களின் எதிர்ப்பால் இயக்க முடியாமல் போனது.

1991ற்கு பின்பு பொதுமுகாமையாளராக விருந்த திரு அ.செல்வராசா அவர்களதும் அப் போது தலைவராக இருந்த திரு லெ.பால்சாமி அவர்களதும் நல் உழைப்பின் பயனாகவும் அர்ப் பணிப்புடன் கூடிய செயற்பாட்டின் பயனாகவும் யுத்தசூழல், இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோதிலும் கூட, சங்கத்தின் நிதி நிலைமையானது வீழ்ச்சி யடையாமல் இருந்தது. அத்தோடு இச்சங்கத்தின் ஒரு நேர்மைத் திறனான தலைவராக திரு சா.செல்வரட்ணம் அவர்களும் இக்காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்காக பெரும் பாடுபட்டுச் செயற்பட்டவராவார். 1995 காலப்பகுதியில் சங்கம் இடம்பெயர நேரிட்டபோது, யாழ்ப்பாணத்தைவிட்டு தென்மராட்சிக்கு சென்று, அங்கே கல்வயல் என்னும் பகுதியில் காரியாலயம் அமைத்த

# யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்!


சங்கத்தின் பணியாளர்கள்



சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வின்போது..


கௌரவிப்பு விழாவின்போது


நவீன கிளை நிலையத் திறப்பு விழாவின்போது


40வது அகவை
கண்டு நிற்கும் எமது பனை
தென்னை வளச் சங்கங்களை
வாழ்த்துவதுடன், 40வது அகவை
சிறப்பு மலர் பொலிவுறவும் எமது
நல்வாழ்த்துக்கள்!
எமது உற்பத்தி, விற்பனை மற்றும் சேவைகள்
போத்தற் கள் உற்பத்தி, விற்பனை
பனை வெல்லம் விற்பனை
சுவை உணவு விற்பனை
கிராமிய வங்கிச் சேவை
அங்கத்தவர்களின் சேமங்களை பேணல்.
அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கல்.
கல்விச் சேவை
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, க.பொ.த.(சா/த) சித்தி பெற்ற, பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கு நிதி ஊக்குவிப்பு வழங்கி கௌரவித்தல்.
நலன்புரிச் சேவைகள்
ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு.
யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
[வரையறுக்கப்பட்டது]
இல. 330,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
021 222 2492

துடன், மறவன்புலவில் ஓர் கிளை நிலையத்தையும், மீசாலையில் ஓர் கிளை நிலையத்தையும், மதுபான விற்பனை நிலையத்தையும் தற்காலிகமாக இயக்கி வந்தது. அக்காலத்தில் சங்கம் தனது சொந்த இயக்கத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு கட்டாய சேமத்தில் ஒரு பகுதியை வழங்கியது. மேலும் பணியாளர்களுக்கு முற்பணமும் வழங்கியது.

இக்காலத்தில் சங்கத்தின் தலைவராகவிருந்த திரு சி.குணரத்தினம் தென்மராட்சியில் இடம்பெயர்ந்து இருந்தபோதும், சில அங்கத்தவர்கள், பணியாளர்கள் வன்னிக்கும் இடம் பெயர்ந்து சென்றிருந்தனர். தென்மராட்சியை இராணுவம் கைப்பற்றிய பின்பு, 1996ன் மே மாதமளவில் மீண்டும் சங்கம் தனது சொந்த இடத்திற்கு திரும்பி, அப்போது தலைவராக இருந்த திரு த.செந்தில்ராசாவினதும், பொதுமுகாமையாளரான திரு அ.செல்வராசாவினதும் திறமையான நிர்வாக நடவடிக்கைகளால் சங்கத்திற்கென 4 அல்லது 5 கிளை நிலையங்களை புனரமைப்பு செய்து இயங்க ஆரம்பித்தன. முனீஸ்வரன், குருநகர், ஓட்டுமடம், இராசாவின் தோட்டம் ஆகிய நான்கு கிளைகளுமே அவையாகும். சங்கம் மீள இயங்க ஆரம்பித்த காலத்தில் மாதாந்தம் நட்டமடையாதது மட்டுமல்ல, சங்கத்திற்கென சொந்தமாக காணிகள் வாங்கி கிளை நிலையங்களை அமைத்தது. அந்த வகையில் ஓட்டுமடம், சாண்டா தெருவில் 6 பரப்புக் காணி ரூபா 400,000ற்கும், மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் 4 பரப்புக் காணி ரூபா 600,000ற்கும் கொள்வனவு செய்யப்பட்டது. அதன்பின்பு திரு ஆ.புவனேந்திரன் தலைவராகவிருந்தபோது, பொதுமுகாமையாளர் திரு அ.செல்வராசாவுடன் இணைந்து மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனாக யாழ்.நகர், கந்தப்பசேகரம் வீதியில், முனீஸ்வரன் கிளைக்கென 6 பரப்பு, 7 குழி அளவுகொண்ட காணி ரூபா 2,300,000ற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

பொதுமுகாமையாளராக இருந்த திரு அ.செல்வராசா 06-11-2006ல் ஓய்வுபெற்றுச் சென்ற பின்பு, சங்கத்தின் அப்போதைய தலைவரான திரு லெ.பால்சாமி காலத்தில் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு க.தெய்வேந்திரம் அவர்கள், சங்கத்தினால் விளம்பரப்படுத்தப்பட்ட வெளிவாரியான விண்ணப்பத்தின் நேர்முகத் தேர்வின் மூலம் 01-02-2007முதல் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி வருகின்றார். இக்காலத்தில் 29-09-2007முதல் 15-11-2010 வரை திரு க.ஜெகநாதன் அவர்கள் தலைவராக இருந்தார். இவரது காலத்தில் நாவாந்துறை பொம்மை வெளியில் தனியார் காணியில் ஓர் கிளை நிலையம் இயக்கப்பட்டது. 15-11-2010முதல் சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட திரு செ.நடராசா அவர்களதும், பொதுமுகாமையாளரதும் நன்முயற்சியினால் நாவாந்துறை, பொம்மைவெளிப் பகுதியில் சங்கத்திற்கென 1.25 பரப்பு கொண்ட காணி ஒன்று ரூபா 250,000ற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இக் காணிக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு ரூபா 550,000உம், கிளைக் கட்டடம் அமைக்க ரூபா 689,000உம், காணிக்கு மண் பரப்புவதற்கு ரூபா 300,000உம் என மொத்தம் 18 இலட்சம் ரூபா செலவில் ஓர் நவீன கிளை நிலையம் அமைக்கப்பட்டு, யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் 2011ம் ஆண்டு முடிவில் முனீஸ்வரன், நாவாந்துறை, ஓட்டுமடம், குருநகர், இராசாவின் தோட்டம் என ஐந்து இயங்கி வந்தபோதிலும், குருநகர் காணியின் ஒப்பந்தம் 2011ம் ஆண்டு பங்குனியுடன் முடிவடைந்ததால், அக்காணி, கட்டடத்தை குடியிருப்பதற்காக அக்காணியை நிர்வகித்து வந்தவர்களுக்கு வழங்கி கிளையை மூடவேண்டிய நிலையும், 2012ம் ஆண்டு, தை மாதம் முடிவில் றெயில்வே காணியில் இயங்கி வந்த இராசாவின்தோட்டம் கிளையும் ரயில்பாதை விஸ்தரிப்புக்காக மூடப்பட்டது.

தற்போது சங்கம் முனீஸ்வரன், நாவாந்துறை, ஓட்டுமடம் ஆகிய மூன்று கிளைகளுடன் 10 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது. குருநகர் பகுதியில் கிளை ஒன்றினை அமைக்க கூ.அ.உ.ஆணையாளருடன் தொடர்புகொண்டு அவர்கள் கடற்றொழிச் சங்க உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து கிளை அமைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. தற்போது 60 அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கும் சங்கம், போத்தலில்கள் அடைக்கும் செயற்பாட்டினையும் மேற்கொண்டு வருகின்றது. சங்கத்தின் ஆற்றலுள்ள நிர்வாக சபையினர், பணியாளர்கள், அங்கத்தவர்களின் முயற்சியில் இலாபகரமாக இயங்கி வருகின்றது.

# பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## 40 ஆண்டுகள் நிறைவில் ஒரு பார்வை

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தற்போதைய வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலக எல்லைப் பரப்பினையும், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மணற்காடு, அம்பன், நாகர் கோவில் உள்ளிட்ட எட்டு கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தினை தனது தொழிற்பரப்பாக கொண்டு பருத்தித்துறை என்ற பெயரினையும், புலோலி என்ற பெயரினையும் கொண்டு இரண்டு சங்கங்களாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், தொழிற்பரப்பினையும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையினையும் கருத்தில் கொண்டு சில காலங்களின் பின்னர் பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என ஒரு சங்கமாக செயற்பட்டு வந்தபோது, 1993ல் சங்கத்தின் துணைவிதிகளில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களின் காரணமாக பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டு வந்தது. இருந்தபோதும், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தனியான சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நீண்டகால கோரிக்கையின் காரணமாக 2004 மே மாதத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென தனியான சங்கம் பதிவுசெய்யப்பட்டமையால் எமது சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்த வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கென விடுவிக்கப்பட்டு, தற்போது பருத்தித்துறை பிரதேச நிர்வாக எல்லைப் பரப்பினை (வடமராட்சி வடக்கு) தனது தொழிற்பரப்பாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது கரையோரப் பிரதேசங்களை அண்மித்திருந்தபோதும், தென்னை வளத்தினைவிட பனை வளத்தினையே அதிகமாகக் கொண்டுள்ளது. 1990க்கு பின்னர் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழ்நிலை காரணமாக தென்னை, பனை மரங்கள் அழிக்கப்பட்டமையால் தொழில் வளம் பாதிக்கப்பட்டது. பனைவளம் அழிந்தமையினை கருத்தில் கொண்ட எமது சங்கம், 1993, 1994, மற்றும் 1995 காலப் பகுதிகளில் கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழ் 150,000ற்கு அதிகமான பனம் விதைகளை நடுகை செய்தமையின் மூலம் பனை மீள் நடுகையினை உத்வேகப்படுத்தியிருந்தது. ஆயினும் இத்திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் சங்கத்தால் பனை நடுகை செய்யப்பட்ட இடங்கள் வேலி அடைத்து பராமரிக்கப்படாமையினால் இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியை அடையமுடியவில்லை. எமது சங்கத்தின் செயற்பாட்டினைப் பொறுத்தவரை சகோதர பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை ஒத்ததாக இருக்கின்றது. இருந்தபோதும், பனைசார் உற்பத்திப் பொருட்களை, குறிப்பாக பனைவெல்லம், பனஞ்சீனி என்பவற்றினை உற்பத்தி செய்த சங்கங்களில் முதன்மைபெற்ற சங்கமாகவும் திகழ்ந்தது. தற்போது பல்வேறு காரணங்களாலும் இத்துறைசார் நிறுவனங்களுக்கு போதிய ஆதரவு வழங்க எத்தரப்பும் முன்வராத நிலைமை காரணமாகவும் பனைவெல்லம், பனஞ்சீனி உற்பத்தி செய்ய முடியாதுள்ளது.

இச்சங்கம் தனது அங்கத்தவர்களது சமூக, பொருளாதார, கலை, கலாச்சார மேம்பாடு கருதி பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவற்றில் கட்டாய சேமம், ஓய்வூதியம் வழங்கல், பாடசாலை உபகரணங்கள் வழங்கல், அங்கத்தவர்கள், பணியாளர்களது நலன்கருதி சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டுவந்த, தற்போது ஓய்வூதியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால் கைவிடப்பட்ட குறுகியகால விபத்து கொடுப்பனவுத் திட்டம் என்ப வற்றுடன்

# பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்



சங்கத்தின் பணிப்பாளர்கள்



சங்கத்தின் பணியாளர்கள்



சங்கத்தின் கௌரவிப்பு நிகழ்வின்போது




சங்கத்தினால் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்ட நிகழ்வின்போது



சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழாவின்போது

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 40 ஆண்டுகள் நிறைவில் பெருமிதத்துடன் களிப்புற்றிருக்கும் இவ்வேளையில்....,

# வாழ்த்துகின்றோம்!

வடக்கில் தோன்றி வளம் பெருக்கி
அங்கத்தவர் வாழ்வில் வசந்தம் வீசிட
வழிசமைத்த எம் கூட்டுறவு நிறுவனங்கள்
இன்னும் பல்லாண்டுகள் சேவைகள் புரிந்து
நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்!

## உற்பத்தி செயற்பாடுகள்



உப உணவு உற்பத்திகள்

- தரமான பனை வெல்லம்
- தரமான ஓடியல்
- தரமான புழுக்கொடியல்

போத்தற் கள் உற்பத்தி

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட தரமான பனங்கள்

## ஏனைய செயற்பாடுகளும் சேவைகளும்



- கிராமிய வங்கிச் சேவை
  - சேமிப்புத் திட்டம்
  - கடன் திட்டம்
- அங்கத்தவர் நலத்திட்டங்கள்
- மகளிர் சுயதொழில் பயிற்சித் திட்டம்
- தொலைபேசிச் சேவை
- வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை

WESTERN UNION
MONEY TRANSFER

**பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ-து)**

கிராமக்கோட்டடி, புலோலி,
பருத்தித்துறை.

தொ.பே.: 0213214402/0212260032
தொ.நகல்: 0212260032

இளைப்பாறிய அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான கௌரவிப்பு விழா, சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்களினது பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், உயர்கல்வி வாய்ப்பைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு போன்ற சேவைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அண்மைய காலங்களில் எமது பகுதிகளில் ஏற்பட்ட மீள் குடியேற்றம், இயல்பு நிலையின் பின்னர், வெளிநாட்டில் வசித்தவர்களது வருகை அல்லது குடியேற்றம் காரணமாக கிளைகளினது செயற்பாடுகளில் பெரும் இடர் நிலைகளை சங்கம் சந்தித்து வருகின்றது. தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான மாற்றங்கள் காரணமாக, குறிப்பாக வேறு தொழிலுக்கு வாய்ப்புக்கள் பெருகியுள்ளமையினால் அத்தொழிலை நாடி எமது அங்கத்தவர்கள் செல்வதாலும் ஆபத்தான இத்தொழிலில் போதியளவு வருமானம் கிடைக்காமையினாலும் தொழிலில் இருந்து விலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இளைய சந்ததியினர் இத்தொழிலில் எது வித நாட்டமும் செலுத்தாமையினாலும் இத்துறை நலிவடைய தொடங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது வருத்தத்துக்குரியதாகும். மேலும் எமது பகுதிகளிலிருந்து காலச்சூழ்நிலை காரணமாக பல பழைய பொருட்கள் பாவனையிலிருந்து அருகிச் சென்றமை போன்று பனைசார் உற்பத்திப் பொருட்களும் அருகும் நிலையை அடைந்துள்ளமை வருத்தத்துக்குரியதாகும். மேலும் சங்கம் தனது வழமையான தொழிற்பாட்டுடன், கிராமிய வங்கிச் சேவை, வெஸ்ரன் யூனியன் பணப் பரிமாற்ற சேவை, பாம்சிற்றி போன்ற சேவைகளை விஸ்தரித்து வருகின்றது. மகளிர் குழுக்களையும் ஆரம்பித்து, அதனூடாக சங்கத்தின் உபவிதிக்கேற்ப சங்க நிர்வாகத்திலும் மகளிர் பிரதிநிதி ஒருவரை இணைத்து நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சங்கம் தனது தொழிற்பாடுகளை கொண்டு நடத்துவதற்கு வசதியாக பிரதான வீதியான யாழ்.வீதியில் கிராமக்கோட்டடி, புலோலி என்னும் இடத்தில் சொந்தமாக காணி ஒன்றினை கொள்வனவு செய்து, 2006ம் ஆண்டு 5,000,000ரூபா செலவில் புதிய தலைமை அலுவலகம் ஒன்றினை அமைத்து செயற்பட்டு வருகின்றபோதிலும், கட்டட மேல்மாடி வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது சிறப்பினைக் குறைப்பதாக அமைகின்றது. எதிர்காலத்தில் இக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு, சிறப்பான சங்கமாக செயற்பட இறை ஆசி சங்கத்துக்கு கிட்டுமென நம்புகின்றோம்.




## ஒடியல் மா தோசை

(செய்முறை)

**தேவையான பொருட்கள**

| | |
|---|---|
| உழுந்து | - 1சுண்டு |
| அரிசி மா | - 2 சுண்டு |
| ஒடியல் மா | - 1 சுண்டு |
| பேக்கிங் பவுடர் அல்லது அப்பச்சோடா | - 1 தேக்கரன்டி |

**செய்முறை:** ஊறவைத்த உழுந்தை நன்கு அரைக்க வேண்டும். ஒடியல் மாவை ஊறவைத்து நீரைத் தெளித்து எடுக்கவும். பின்பு ஒரு துணியில் இட்டுப் பிழிந்து மாவை உழுந்தோடு சேர்த்துப் பிசையவும். அத்துடன் அரிசிமா, பேக்கிங் பவுடரையும் போட்டுப் பிசையவும். குறைந்தது 6 மணித்தியாலங்களின் பின் தோசைக் கல்லில் எண்ணெய் தடவித் தோசையாக வார்த்துக் கொள்ளவும். சம்பல் அல்லது சட்னியுடன் சாப்பிடலாம்.

# கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## 40 ஆண்டுகள் நிறைவில் தடம் பதிக்கின்றபோது....

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 20-03-1972 அன்று, யா/1603 எனும் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கமானது ஆரம்பகாலத்தில் கரவெட்டி பிரதேச சபையின் நிர்வாக எல்லைப் பரப்பிற்குட்பட்ட உடுப்பிட்டி, கட்டைவேலி ஆகிய உப அலுவலகங்களின் நிர்வாகப் பரப்பினை தனது தொழிற் பரப்பாகக் கொண்டு செயற்பட்டு வந்தது. இச்சங்கம் ஆரம்ப காலத்தில் கட்டடைவேலி - உடுப்பிட்டி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரிலும், பின்னர் 1975ம் ஆண்டு காலப் பகுதியில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினது பொருளாதாரக் கொள்கைகளுக்கு அமைய உள்ளூர் உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கத்தின் செயற்திட்டத்திற்கு அமைவாக பனை வெல்லம், பனஞ்சீனி என்பவற்றின் உற்பத்தியில் சங்கங்கள் ஈடுபாடு காட்டியமையால், கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரிலிருந்து தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இதன் பின்னர் 1993ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் இச்சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

கட்டைவேலி-உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டு வந்த இதே சங்கம், 1993ம் ஆண்டு சங்கத்தின் துணைவிதிகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கரவெட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பரப்பினை தொழிற் பரப்பாகக் கொண்டு (உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை விடுத்து) கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது.

இச்சங்கமானது அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் பனைசார் உற்பத்திகளான கள், பதநீர் என்பவற்றை கொள்வனவு செய்து, அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றது. அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற கள்ளு சங்கத்தின் கிளைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. விற்பனையின்பின் எஞ்சுகின்ற கள் வடிசாலைக்கு மாற்றப்பட்டு, பனஞ்சாராயம் வடிப்பதற்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதனைப்போலவே கொள்வனவு செய்யப்படுகின்ற கள்ளின் ஒரு பகுதி, கள்ளின் பருவமற்ற காலப்பகுதியான ஆவணி முதல் மார்கழி வரையிலான காலத்தில் பயன்படுத்துவதற்கு வசதியாக போத்தலில் கள் அடைக்கப் பயன்படுகிறது. இவ்வாறு போத்தலில் கள் அடைப்பதற்கான தொழிற்சாலை ஒன்று சங்கத்தின் தொழிற்பாட்டப் பிரதேசத்திலுள்ள கம்பர்மலை என்ற இடத்தில் உடுப்பிட்டி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு த.இராசலிங்கம் அவர்களால் 25-01-1983ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, 05-03-1984ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் அப்போதைய கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளும், சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். மேலும் கொற்றாவத்தை, புதுத்தோட்டம், கரணவாய் தெற்கு (அண்ணாசிலையடி), அல்வாய் தெற்கு, கரவெட்டி மேற்கு போன்ற இடங்களில் வெல்ல உற்பத்தி நிலையங்களும் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்தன. அத்துடன். 1990ம் ஆண்டு காலப் பகுதியில் எமது சங்கம் பனங்கள்ளிலிருந்து பற்பசை, பனம் ரொபி, பனம் பாண், பனம் பிஸ்கட், மற்றும் கள்ளு மண்டியிலிருந்து சோக், கலர் வகைகள் போன்ற பொருட்களை பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்தபோதும், இவற்றின் விற்பனையிலும், நுகர்விலும் எற்பட்ட மந்தநிலை காரணமாக இப்பொருட்களின் உற்பத்தியினை தொடர்ந்து

# கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



சங்கத்தின் பணிப்பாளர் சபை



சங்கத்தின் பணியாளர்கள்


## வரலாற்றுப் பதிவுகள்!



மரநாட்டு விழாவின்போது



போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை
திறப்புவிழாவின்போது [1983]


கற்பகதரு
40வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!
எமது செயற்பாடுகளும் சேவைகளும்
போத்தற் கள் உற்பத்தி
பல்பொருள் விற்பனை நிலையம்
பனைசார் பொருட்கள் விற்பனை
அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை
கிராமிய வங்கிச் சேவை
உழவு இயந்திர வாடகை சேவை
நலத்திட்ட செயற்பாடு
கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
021 321 6451

முடியவில்லை. இப்பரீட்சார்த்த முயற்சியானது பலராலும் பாராட்டப்பட்டது.

ஆரம்ப காலத்தில் 18 கிளை நிலையங்கள் இயங்கி வந்தன. தற்போது 10 கிளை நிலையங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் கிளைகளை புதிதாக அமைக்க முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன. கிளைகள் அமைக்கப்படுவதனை பல காரணிகள் முட்டுக்கட்டை போட்டு தடுத்து வருவதனை காணமுடிகிறது.

இச்சங்கம் ஆரம்ப காலத்தில் பல கஸ்டங்களை எதிர்கொண்ட போதிலும் 1990ம் ஆண்டின் பின்னர் நல்ல நிலையில் பல்வேறு வேலைத் திட்டங்களுடன் செயற்பட்டு வந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போது, பனைத் தொழிலையே தமது ஜீவனோபாயமாகக் கொண்ட சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தோன்றாத் துணையாக நின்று பேருதவி புரிந்து வந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து, இன்றும் செயற்பட்டு வருகின்றது.

தற்போது எமது சங்கம் 1961 மொத்த அங்கத்தவர்களையும், சுமார் 200 பேரை இயங்கும் அங்கத்தவராகவும் கொண்டு இயங்கி வருகின்றது. அங்கத்தவர்களைப் போன்றே 23பேர் கொண்ட பணித்தொகுதியினையும் கொண்டுள்ளது. இச்சங்கத்தில் பணிபுரிந்த பணியாளர்களில் பலர் இன்று அரசாங்க நிறுவனங்களில் அலுவலர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்களைப் போலவே யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற அமரர் திரு கி.சிவநேசன் அவர்களும் எமது சங்கத்தின் முன்னாள் பணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது சங்கம் தனது வழமையான செயற்பாடுகளுடன் பல்வேறு சேவைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவற்றுள் கிராமிய வங்கிச் சேவை, கட்டாய சேமம், ஓய்வூதியம் வழங்கல், பாடசாலை உபகரணங்கள் வழங்கல், இளைப்பாறிய அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரை கௌரவித்தல் மற்றும் பனைசார் உற்பத்திப் பொருட்களை (கைப்பணிப் பொருட்கள்) விற்பனை செய்வதற்காக பனையகம் என்ற பெயரில் விற்பனை நிலையம் ஒன்றையும் நடத்தி, அங்கத்தவர்களுக்கு சேவையாற்றி வருகின்றது.

சங்கம் தனது செயற்பாட்டுக் காலத்தில் தனக்கென சொந்தமான தலைமை அலுவலகத்தை கொடிகாமம் வீதி, நெல்லியடி என்ற இடத்தில் கொண்டுள்ளது. அத்துடன் கிளை நிலையங்களையும் சொந்தமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. சங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக சங்கத்துடன் தொடர்புடைய பல அங்கத்தவர்களை கூட்டுறவுத் துறைக்குள் உள்வாங்கி, அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணர சந்தர்ப்பங்கள் வழங்கியமையினால் இன்று பல அங்கத்தவர்கள் பல்வேறு துறைகளிலும் தலைமை தாங்கி செயற்பாடுகளை மேற்கொண்டு நடத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளமையை எவரும் மறுக்க முடியாது. அதனைப் போலவே எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்களுடைய பிள்ளைகள் இன்று கல்வியில் முன்னேற்றகரமான நிலையை அடைந்து, சமூக சீர்திருத்தத்துடன்கூடிய சமூக மேம்பாடு காண வழிசெய்தமை எமது சங்கத்தின் சாதனை என்றால் அது மிகையாகாது.




## புழுக்கொடியல் மா அல்வா (செய்முறை)

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| புழுக்கொடியல்மா | - 1 சுண்டு |
| சீனி | - 1 1/2 சுண்டு |
| ஏலப்பொடி | - 1 தே.கரண்டி |
| வனிலா | - 1 தே.கரண்டி |
| நெய்/மாஜரின் | - 1 மே.கரண்டி |

**செய்முறை:** சீனியைப் பாகுபோல காய்ச்சவும். கம்பிப் பதம் வந்ததும் புழுக்கொடியல் மாவைச் சிறிது சிறிதாக இட்டுக் கிளறவும். தாச்சியில் ஒட்டாத பதம் வந்தவுடன் நெய்தடவிய பலகையில் கொட்டித் தட்டிப் பின்பு வெட்டிப் பரிமாறலாம்.

# மானிப்பாய் பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வரலாறும் வளர்ச்சியும்

பரம்பரை பரம்பரையாக முதலாளி வர்க்கத்தினாலும் உயர் சமூகத்தினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்டு மிகவும் வறிய வாழ்க்கை வாழ்ந்து வந்த சீவல் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்வடைச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட அப்போதைய அரசாங்கத்தின் நிதி அமைச்சராக இருந்த டாக்டர் என்.எம். பெரேரா அவர்களும் அவரது கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் தோழர் அ.விசுவநாதன் செனற்றர் நல்லையா எம்.சி. சுப்பிரமணியம் போன்றோர் இணைந்து சீவல் தொழிலாளர்களை கூட்டுறவு இயக்கத்தில் இணைப்பதற்கான திட்டத்தை வகுத்து 1972ம் ஆண்டு வைகாசி மாதம் மானிப்பாயில் மானிப்பாய் நவாலி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் இளவாலை கள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச்சங்கம், பண்டத்தரிப்பு, மாதகல் கள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி கள் உற்பத்தி விற்பனவுச்சங்கம் என நான்கு சிறிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்களுக்கு சிறுபான்மைத் தமிழர்களின் பிள்ளைகளுக்கே வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் இச்சங்கங்கள் தனித்தனியாக இயங்கியபோது பல சிரமங்களின் மத்தியில் அங்கத்தவர்களின் கள்ளைக் கொள்வனவு செய்து விற்பனவு செய்தும், விற்கப்படாத கள்ளை அகற்றியும் வந்தது. பின்னர் 1973ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட நான்கு சங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு வலி.தென்மேற்கு கள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டது. இச்சங்கம் மாதகலிலிருந்து ஆனைக்கோட்டை வரையிலான பரப்பளவைக் கொண்டதாக அமைந்திருந்தது. இச்சங்கங்களுக்கு ஆரம்பகாலத்தில் நியமனத் தலைவர்களே நியமிக்கப்பட்டு சங்கங்களை வழிநடத்தி வந்தனர். இச்சங்கத்தின் பரப்பளவு அதிகமாக இருந்தால், அங்கத்தவரிமிருந்து கூடுதலாக கள்ளைக்கொள்வனவு செய்து விற்கமுடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியும் கட்டமுடியாத நிலை ஏற்பட்டது. அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் உலக சந்தையில் சீனியில் விலை அதிகரிப்பை கவனத்தில் கொண்டும் 1975ம் ஆண்டு நியமனத் தலைவராக நிமிக்கப்பட்ட தலைவர் திரு.சு.இராசரத்தினம் அவர்களினதும், அப்போதிருந்த நிர்வாக சபையின் அயராத உழைப்பினாலும், சண்டிலிப்பாய், மாதகல், நவாலி, சுதுமலை ஆகிய இடங்களில் பனங்கட்டித்தொழிற்சாலை அமைத்து பனங்கட்டி உற்பத்தி செய்தும், சண்டிலிப்பாயில் போத்தலில் கள் அடைத்தல், சீனி உற்பத்தி செய்தல் போன்ற தொழிற்பாடுகளைச் செய்தும் அங்கத்தவர்களை ஊக்குவித்து. அத்துடன் திட்டமிடல் பகுதியில் கடன் பெற்று சங்கத்திற்கான போத்தல் கள் அடைக்கும் தொழிற்சாலை பனங்கட்டி உற்பத்தி நிலையம் போன்ற இரண்டு கட்டடங்கள் சொந்தமாக கட்டப்பட்டன. அத்துடன் 15 கிளைகளும் நடாத்தப்பட்டன.

சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது திரு.க.சண்முகலிங்கம் அவர்களும், 1974ம் ஆண்டு தொடக்கம் 1987 ஐப்பசி மாதம் வரை திரு.ச.வேலாயுதபிள்ளை அவர்களும் கூ.அ.உ. ஆணையாளராக கடமையாற்றினர். திரு.ச. வேலாயுதபிள்ளை அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவராவர். 1978, 1979ம் ஆண்டு காலப்பகுதியில் வழி நடாத்துவதற்கு ஒரு நிரந்தர பொதுமுகாமையாளர் இல்லாதிருந்தபோது 1980ம் ஆண்டு தை மாதம் சங்கப் பணியாளராக கடமையாற்றிய அமரர் திரு.க.சந்திரராசா அவர்கள் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டபோது சங்கம் நட்டத்தில் இயங்கி வந்தது. இவர் தனது விடாமுயற்சியின் பயனாகவும், சக பணியாளர்களின் ஒத்துழைப்

சங்கத்தின் வளர்ச்சிக்காக தனது முழு நேரத்தையும் செலவழித்தார். இதன் பயனாக சங்கம் தனது பத்தாவது (10வது) ஆண்டு விழாவை வெகுவிமரிசையாக சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலய வளவில் கொண்டாடியது. 19810 ஆண்டு அங்கத்தவர்களுக்கான கட்டாய சேமம் ஒதுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அத்தொகையை வங்கியில் வைப்புச்செய்து அங்கத்தவர் இறக்கும் பொழுது அல்லது ஓய்வு பெறும்போது வட்டியுடன் வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு சங்கம் வளர்ந்துவரும் காலத்தில் 1981ம் ஆண்டு காலப் பகுதியில் வியாபார மொத்த விற்பனை வரி 10% மாகக் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக சங்கம் இலாபம் அடையும் காலத்தில் அங்கத்தவர்களுக்கும் சங்கம் 5% கட்டாய சேமமாக ஒதுக்கி வந்துள்ளது. இது இப்படி செயற்பட்டு வரும் காலத்தில் 1983ம் ஆண்டு மீண்டும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சங்கம் நடாத்தமுடியாத சூழ்நிலை உருவாகியது. இருந்தும் கூ.அ.உ.ஆணையாளர் திரு. ச.வேலாயுதபிள்ளை அவர்களின் ஆலோசனையின் பேரிலும் பொதுமுகாமையாளர் அவர்களினதும் விடாமுயற்சியின் பயனாகவும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பைப்பெற்றும் சங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வந்தது. இவருடைய கடமைக் காலத்தில் இரண்டு மதுபான விற்பனை நிலையங்களும் நடாத்தப்பட்டன.

மேலும் சங்கத்தின் பரப்பளவு கூடுதலாக இருந்தபோதும் சங்கம் தொழிலாளர்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு செறிவு குறைந்த மதுசார உற்பத்தி செய்தல், போத்தலில் கள் அடைத்தல், போத்தலில் கருப்பநீர் அடைத்தல், பனங்கட்டி உற்பத்தி செய்து யாழ் மாவட்டத்திற்கு வெளியே கொண்டு சென்று விற்றல் போன்ற செயற்பாடுகளைச் செய்து இலாபம் அடைந்த வந்தது. சங்கத்தின் பரப்பளவு கூடுதலாக இருந்தையும் சங்கத்தைக் கட்டுப்பாடாக நடாத்த முடியாத நிலையையும் அவதானித்த கூ.அ.உ.ஆணையாளர் அவர்கள், பண்டத்தரிப்புப் பகுதி அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 01.12.1985ம் மானிப்பாய் பரிஸ் தெ.ப.பொ. உ.வி.கூ.சங்கம், பண்டத்தரிப்பு பரிஸ் தெ.ப.பொ. உ.வி.கூ.சங்கம் என இரண்டு சங்கங்களாகப் பிரித்தார். சங்கம் பிரிக்கும்போது சொத்துக்கள், பணியாளர்கள் எல்லாம் சங்கத்தின் அங்கத்தவர்களின் தொகைக்கேற்ப பிரிக்கப் பட்டன. சங்கம் பிரிக்கப்பட்ட பின்னர் மானிப்பாய் தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கம் மிக இலாபகரமாக இயங்கியது. மீண்டும் 1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் நாட்டில் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலையால் சங்கம் ஒன்பது இலட்சம் பெறுமதியான சொத்து இழப்பைச் சந்தித்தது. 1988ம் ஆண்டு கூ.அ.உ.ஆணையாளராக நியமனம் பெற்ற திரு. சபாரத்தினம் அவர்களின் ஆலோசனையின் பயனாக மீண்டும் சங்கம் புத்துயிர் பெற்றது. 1980ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 1990 புரட்டாதி மாதம் வரை சங்கம் பலவிதமான சோதனைகளைச் சந்தித்தபோதும் அமரர் திரு.க.சந்திரராசா அவர்களின் செயற்திறமையினால் சங்கம் நிலைகொண்டு தலை நிமிர்ந்து நின்றது. இவர் 05.10.1990 தொடக்கம் கோண்டாவில் தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கத்திற்கு மாற்றலாகியபின் திரு ஜே.பி.குணரத்தினம் அவர்கள் சங்கத்தின் பொதுமுகாமையாளராக நியமிக்கப் பட்டார். இவர் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய காலத்தில் சங்கத்தில் நடைமுறையில் இருந்துவந்த கட்டாயசேமத் திட்டத்துடன் அங்கத்தவர் சாதாரணசேமம், அங்கத்தவர் குடும்ப பராமரிப்பு நிதி போன்ற திட்டங்களையும் உருவாக்கினார் அங்கத்தவர்களின் உழைப்பில் ஒரு பகுதியை சேமிக்கும் பழக்கமாக சாதாரணசேமம் என்ற பெயரில் கழிக்கப்பட்டு அவர்களது தனியான பெயரில் கணக்கு வைக்கப்பட்டு வந்தது. இதிலிருந்து ஒரு தொகைப்பணத்தை அங்கத்தவர்களின் தேவைக்கேற்ப கடன் வழங்கி அதன் வட்டியை சங்கத்திற்கு இலாபமாகக் காட்டப்பட்டது. இச்சாதாரண சேமத்திற்கு அங்கத்தவர்களுக்கு வட்டி சங்கம் வழங்கி வந்தது. இதேபோன்று குடும்ப பராமரிப்பு நிதி அங்கத்தவர்களின் கொள்வனவுப் பணத்தில் 05 சதம் கழித்து சங்கம் மாத இலாபத்தில் 5 சதம் ஒதுக்கி வங்கியில் வைப்புச் செய்து இத்தொகையின் வட்டியில் அங்கத்தவர்களின் தேவைக்கேற்ப கடன் வழங்கி உதவி செய்தமையும், அங்கத்தவர் ஓய்வு பெறும்போது இந்நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1994ம் ஆண்டு மகளிரையும் இச் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்த்து கிராமம் தோறும் மகளிர் குழுக்களை அமைத்து தையல் பயிற்சி, பன்னவேலைப் பயிற்சி, பாலர் பாடசாலைகள் நடாத்துதல், சில்லறைப்பொருள் விற்பனை நிலையங்களைத் திறந்து மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் போன்ற

சேவை களையும் ஆற்றி வந்துள்ளது. 1994ம் ஆண்டு தையல் பயிற்சி நிலையம் மூலம் கண்காட்சி நடாத்தி சான்றிதழ்களும் வழங்கிக் கௌர வித்தது. பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறார்களுக்கு இலவசசீருடை, சத்துணவு வழங்கியும் வருடாவருடம் விளையாட்டுப்போட்டிகள் நடா த்தியும் பரிசில்கள் வழங்கியும் ஊக்குவித்து வருகின்றது. அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகள் பரீட்சையில் விசேட சித்தி பெற்றால் அதற்கு ஊக்குவிப்பாக ஒரு தொகை பணத்தை சங்கம் வழங்கி வருகின்றது. நிர்வாக சபை உறுப்பினர், பணியாளர், மகளிர் குழு, பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு சமாசம் யாழ் மாவட்ட கூ.சபை ஆகியவற்றின் உதவி மூலம் கல்வி பயிற்சி அளிக்கப்படுகின்றது தொட ர்ந்து சங்கத்தின் விற்பனைக்கு மிஞ்சும் கள்ளை வலிகாமம் கொத்தணி வடிசாலைக்கும்,திக்கம் வடிசாலைக்கும் அனுப்பி அதன் மூலம் பெறப் படும் வருமானத்தை அங்கத்தவர்களுக்கு வழங் கப்படுகிறது.

சங்கம் கள்ளு மட்டுமன்றி, சாராயம், போத்தல் கள் போன்றவற்றையும் விற்பனை செய்து வருமானத்தைப் பெறுவதுடன் சில்லறைப் பொருள் விற்பனை நிலையத்தின்மூலம் குறை ந்த விலையில பொருள்களை அங்கத்தவர்களு க்கு வழங்கி சேவை நோக்கத்தோடு செயற்பட்டு வருகின்றது.

மேலும் 1993 - 1994 சித்திரை மாதத்திற் கிடையில் சங்கத்திற்கென சொந்தமாக ஆறு பரப்புக் காணியுடன் காரியாலயக் கட்டடமும், சுதுமலை, நவாலி, மாகியப்பிட்டி ஆகிய இடங் களில் கிளைகள் அமைப்பதற்காக சொந்தமான காணிகளையும் கொள்வனவு செய்துள்ளது. இன் னும் தொழிலாளர்களின் வாழ்வை வளமாக்க அவர்களிடத்தில் ஒரு சேமிப்பு உருவாகும் பழக் கத்தை உண்டாக்க வேண்டுமென்று அமரர்.க.சந் திரராசா அன்று எடுத்த முயற்சி 2000ம் ஆண்டு 02ம் மாதம் 17ம் நாள் மானிப்பாய் பனை தெ.வ. அ.கூ.சங்கத்தில் பல பிரமுகர்களின் மத்தியில் கூட்டுறவு கிராமிய வங்கி திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களினால் திறந்து வைக்கப் பட்டது. இந்த நாள் அங்கத்தவர்களின் வாழ்வில் ஒரு மறக்க முடியாத பொன்னாளாக அமைந்துள் ளது. அங்கத்தவர்கள் தனது உழைப்பிலே ஒரு பகுதியை சேமிக்கவும், ஓய்வூதியம் பெறுவோர் அதன் ஒரு பகுதியை சேமிக்கவும் பழகியுள் ளனர். இக்கிராமிய வங்கி மூலம் குறைந்த வீத வட்டிக்கு அங்கத்தவர்கள் தமது தேவைக் கேற்றவாறு கடன் பெறக்கூடியதாக அமைந் துள்ளது. அத்துடன் சங்கம் பனை அபிவிருத் திச் சபையின் ஒத்துழைப்புடன் பழுதடைந்த கள்ளை வினாகிரி உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக வினாகிரி கட்டிடம் ஒன்று சொந்த மாகக் கட்டியுள்ளது.1972ம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட இச்சங்கம் பல இன்னல்கள் மத்தியிலும் பொதுமுகாமையாளர்கள், நெறியாளர் குழு, பணி யாளர்களின் சிறந்த செயற்பாட்டினால் சங்கம் சிறந்த ஒரு நிதியுடைய சங்கமாக சிறந்து விளங் கியது. அத்துடன் 25வது ஆண்டு நிறைவை ஒட்டிய வெள்ளி விழாவையும் கொண்டாடி அங் கத்தவர்கள், பணியாளர்களைக் கௌரவித்து பரிசில்களையும் வழங்கியது. கடந்த காலங்க ளில் சங்கம் அடைந்த வளர்ச்சியினால் அங்கத்த வர்கள் வலிகாமம் பனை தெ.வ.அ.கூ.சங்கங் களின் கொத்தணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அனேகமான நன்மைகள் அங்கத்துவ சங்கங் களுக்குக் கிடைந்துள்ளன. விற்பனைக்கு மிஞ் சிய ஏராளமான கள்ளை வடிசாலைக்கு அனுப்பி அதன்மூலம் கிடைக்கும் வருமானம் அங்கத்தவர் களின் கொள்வனவுப்பணம் சிரமமின்றி வழங் கப்பட்டு வருகின்றது. அத்துடன் சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் செறிவு குறைந்த மது சாரம், பாணி, போன்றவற்றையும் வலிகாமம் கொத்தணிக்கு விற்பனை செய்து வருமானம் பெறப்பட்டு சங்கத்தை இலாபகரமாக இயக்க வழி வகுத்துள்ளது.

அத்துடன் வலிகாமம் கொத்தணி பொதுச்சபை உறுப்பினர், இயக்குநர் சபை உறு ப்பினர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்குக் காலத்திற்குக் காலம் பயனுள்ள பயிற்சிகளை அளித்து சங்கத்தை வழி நடாத்துவதற்கு உதவி புரிகிறது. அத்துடன் கொத்தணி அடையும் இலா பத்தில் அங்கத்தவர்களுக்கு இரண்டாம் தட வைக் கொடுப்பனவு அங்கத்தவர் விபத்து, ஓய்வூ தியம் பாலர் பாடசாலை சிறார்களுக்கு சத்து ணவு வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. பணியாளர்கள் சங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழ ங்கி வருகின்றனர். அங்கத்தவர்களின் ஒத்துழைப் பினால் சங்கம் மேன்மேலும் வளர வேண்டும். சங்கத்தின் வளர்ச்சி மூலம் அங்கத்துவ சமூகம் எல்லா வளமும் பெறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்த நிலையில் எமது சங்கத்தின்

# மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்!


சங்கத்தின் பணிப்பாளர் சபை


சங்கத்தின் பணியாளர்கள்


தலைமைக் காரியாலய திறப்பு விழாவின்போது



சங்கத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில்


சங்கத்தின் நவீன கிளை நிலைய திறப்பு விழாவின்போது [1992]


பனை தென்னை வளத்தின்
பலமிகு உறுதித் தன்மையின்
40 ஆண்டின் நிறைவில்
மேலும் உயர்ந்திட
நாமும் வாழ்த்துகின்றோம்!
எமது சேவைகளும்
போத்தலில்
அடைக்கப்பட்ட
சுவையூட்டப்பட்ட
பதநீர்
சுத்தமான முறையில்
தயாரிக்கப்பட்ட பனை வெல்லம்
முன்பள்ளிகளை
நிர்வகித்தல்
கற்பகதரு விற்பனை
நிலையம்
கிராமிய வங்கி
ஓய்வூதியம் மற்றும் சமூகநல
மேம்பாட்டுத் திட்டங்கள்
மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
பிரதான வீதி,
மானிப்பாய்.
தொலைபேசி:
021 225 5109

பல் வேறு நலத்திட்டங்கள் பற்றி நோக்குவோம்.

## சமூக நல வேலைத்திட்டம்

1991 -1994 வரை கருப்பநீர் பாணி வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டதுடன் படிப்படியாக வளர்ச்சி அடைந்து மேற்படி உற்பத்தி தொழில் திட்டம் 1995க்கு பிற்பகுதியில் இராவணுவ நடவடிக்கை இடம் பெயர்வுகளால் பாதிப்படைந்து மீண்டும் 1998இல் இருந்து இற்றை வரை கருப்பநீர் பாணி வெல்ல உற்பத்தி திட்டம் செய்யப்படுகின்றது. 1993ல் ஜே.பி.குணரட்ணம் அவர்கள் அங்கத்துவ ஓய்வூதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு தற்சமயம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்று வயது முதிர்ந்த அங்கத்தவர், விதவைகள் என்ற ரீதியில் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் மேற்படி முகாமையாளரால் மகளிர்குழு கிராமங்கள் ரீதியாக அமைக்கப்பட்டு பெண்களுக்கான தையல் பயிற்சி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1994ல் அங்கத்தவர் குடும்பநல ஓய்வூதிய நிதியம் திறக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கான சமூக நலன் வேலைத்திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு தற்சமயம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1993இல் முன்பள்ளி அமைப்புகள் மூலம் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் பாலர் கல்வி விருத்திக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக இற்றைவரை சங்க எல்லைப்பரப்பினுள் 09 முன்பள்ளிகள் நிறுவப்பட்டு நடாத்தப்பட்டுள்ளது. அத்துடன் வருடாவருடம் விளையாட்டு விழாக்கள் நடாத்தப்பட்டு பரிசுகள் வழங்கி சிறார்களை ஊக்குவித்து வருகின்றது.

2000ம் ஆண்டு மா.ரவிராஜா பொதுமுகாமையாளராக இருந்த காலப்பகுதியில் கூட்டுறவு கிராமிய வங்கி பிரிவு முதன்முறை அறிமுகப்படுத்தி 17.02.2000ந் திகதி அங்கத்தவர் உழைக்கும்போதே சேமிக்கும் திட்டங்கள் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு திறம்பட செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் அங்கத்தவர் பிள்ளைகள் பல்கலைகக்ழக அனுமதி, புலமைப்பரிசில் அனுமதி பெற்றவர்களுக்கான ஊக்குவிப்பு புலமைப்பரிசில் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2001ம் ஆண்டு கள்ளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் வினாகிரி உற்பத்தி தொழிற்பாட்டுக்கான ஓர் தொழிற்சாலை பனை அபிவிருத்தி சபையின் நன்கொடையாக பெறப்பட்டு வடமாகாணத்தில் இரண்டாவதாக செய்யப்படும் வினாகிரி தொழிற்சாலை என்ற பெருமையும் தற்போதைய முகாமையாளரால் சந்தை நோக்கில் வெளியிடவென தயார்படுத்தப்பட்டுள்ளது.

28.02.2002 இல் இருந்து திரு.க.சற்குணலிங்கம் அவர்கள் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டு இருந்தார். இவரது காலத்தில் சங்கம் தொடர்ந்தும் இலாபத்தில் செயற்பட்டு வந்துள்ளது.

2004ம் ஆண்டு நிக்கொட் நிறுவனத்திடமிருந்து ரூபா இரண்டு இலட்சம் (200000.00) கிராமிய நிதி ஆவணங்கள் பாதுகாப்பாக வைப்பதற்கு அலுமாரி, காசுப்பெட்டி (அயன் சேவ்) ஆகியன அன்பளிப்பாக பெறப்பட்டது.

2005ம் ஆண்டு யாழ் மாவட்ட நாடாளமன்ற உறுப்பினராக இருந்த சிவனேசன் அவர்களுடன் தொடர்பு கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ரூபா ஒரு இலட்சம் (100000.00) கணனி ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக அன்பளிப்பாக பெறப்பட்டது.

2007ம் ஆண்டு G.T.Z நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வெல்ல உற்பத்தி நிலையத்திற்கான உபகரணங்கள் ரூபா பத்துலட்சம் (10,00000.00) சொந்தமான கிளை இல -72 அமைந்துள்ள காணியில் நிரந்தமான கள் விற்பனை நிலையம் ரூபா நான்கு இலட்சம் (400000.00) செலவிலும் அமைத்து வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் சங்க நிதியில் இருந்த 2007ம் ஆண்டு ரூபா ஒரு இலட்சத்து எண்பத்திஏழு ஆயிரம் (187000.00) பெறுமதி உள்ள நிழற்பட பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

01.01.2011 இல் இருந்து ஏற்கனவே நடைமுறையில் இருந்த நலத்திட்டம் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு அங்கத்தவர், பணியாளர் சமூக மேம்பாட்டு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

# வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## தோற்றமும் வளர்ச்சியும்

1972ம் ஆண்டு யாழ் மாவட்டத்திலே முதன்முறையாக கூட்டுறவுத் தவறணை முறை அமைக்கப்பட்டு வருகையில் எமது தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறையை தலைமையகமாகக் கொண்டு தீவுப்பகுதிகளை உள்ளடக்கியதாக "தீவுப்பகுதி கள்ளு உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்" எனும் பெயரில் ஊர்காவற்றுறையில் முதன்முறையாக ஸ்தாபிக்கப்பட்டது. நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய கிராமங்களில் சீவல் தொழில்புரிந்தவர்கள் நீண்ட தூரம் சென்று தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டி இருந்தது. இவ்வாறான சிரமங்களை நிவர்த்தி செய்யுமுகமாக வேலணையை சேர்ந்தவரும் முன்னாள் தலைவருமாக இருந்தவருமான திரு.சி.கந்தசாமி அவர்கள் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு கா.பொ.இரத்தினம் அவர்களை சந்தித்து நிலைமையை விளக்கி தீவகம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மேற்படி கிராமங்களை உள்ளடக்கி வேலணையில் ஓர் சங்கத்தினை உருவாக்கி உதவுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் உடனேயே தொலைபேசி மூலம் அப்போதைய கூ.அ.உ. ஆணையாளராக இருந்த திரு.க.சண்முகலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்டு வேலணையில் புதிதாக சங்கம் ஒன்று அமைப்பதற்கான ஒழுங்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க 1972ம் ஆண்டு சித்திரை மாதம் 11ந் திகதி அன்று வேலணை சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் அங்குரார்ப்பண கூட்டம் நடைபெற்று 'வேலணை கள்ளு உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்' என பெயரிடப்பட்டது இதன்படி பதிவுக்கு விண்ணப்பித்ததன் பேரில் இச்சங்கமானது 11.04.1972ந் திகதியன்று 1606ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கான இடம் பெறுவதில் அப்போது சிரமங்கள் இருந்ததால் வேலணை மேற்கை சேர்ந்த பனந்தொழில் வல்லுனரான திரு.மு.சுப்பிரமணியம் அவர்களின் கடைத்தொகுதியில் இயங்கத் தொடங்கியது எமது சங்கத்திற்கான கிளைகளை அமைப்பதற்கான இடங்களை பெறுவதிலும் அன்று பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி இருந்ததால் இவற்றையெல்லாம் முறியடித்து பதினொரு கிளை நிலையங்கள் திறக்கப்பட்டது. மேற்படி சங்கம் இயங்கி வருகையில் 1974ம் ஆண்டு இதன் பெயர் 'தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்' என மாற்றமடைந்தது கூட்டுறவு தவறணை முறையால் சுரண்டலில் விடுபட்ட சீவல் தொழிலாளர்களின் கள் உற்பத்தி காலப்போக்கில் அதிகரித்ததால் பெருந்தொகையான கள்ளு அகற்றவேண்டி ஏற்பட்டது. இதனை ஓரளவு தவிர்ப்பதற்காக பதநீர் உற்பத்தி செய்வதென முடிவு செய்யப்பட்டு எமது சங்கத்தினால் வேலணை மேற்கிலும் அல்லைப்பிட்டியிலும் இரண்டு பனை வெல்ல உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வெல்ல உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. சில காலங்கள் இயங்கினாலும் தொடர்ந்து இவ் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்தன வெல்லத்திற்கான கேள்வியும், சந்தை வாய்ப்பும் இல்லாத காரணத்தினால் காலப்போக்கில் இவ் உற்பத்தி நிறுத்தப்பட்டு மிதமிஞ்சிய கள் வடிசாலைகளுக்கு மாற்றப்பட்டது.

எமது சங்கத்திற்கான நிரந்தர தலைமை அலுவலக கட்டடம் அமைவதற்காக அப்போது தலைவராக இருந்த திரு.சி.கந்தசாமி அவர்களின் முயற்சியால் வேலணை வங்களாவடியில் இதற்கென காணி பெறப்பட்டு அலுவலகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு காலப்போக்கில் நிரந்தரமான இடத்தினை அடைந்தது. மேற்படி சங்கம் சிறப்பாக இயங்கி வருகையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990ம்

# வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

வரலாற்றுப் பதிவுகள்!



சங்கத்தின் பணிப்பாளர் சபை



சங்கத்தின் பணியாளர்கள்



சங்கத்தின் தும்பு உற்பத்தி தொழிற்சாலை திறப்பு விழாவின்போது



கௌரவிப்பு விழா நிகழ்வின்போது



திறப்பு விழாவின்போது



கற்பகதரு 40வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!
போத்தற் கள், பதநீர் தயாரிப்பு
கிராமிய வங்கிச் சேவை
தும்பு பொருட்கள் உற்பத்தி
சுவையுணவு உற்பத்தி
பாம் கோப் சிற்றி
வாடகை தண்ணீர் தாங்கி
வாடகை பிளாஸ்ரிக் கதிரைகள்
வாடகைப் பந்தல்
கல்வி ஊக்குவிப்பு சேவை
Labels for Education
நலன்புரித் திட்டங்கள்
வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)
1ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை
021 321 0083

ஆண்டு எமது அலுவலகம் சேதம டைந்தது. இவ்வாண்டில் தீவுப்பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக சங்கமும் இடம் மாற்ற லாகி யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் தற்காலிக மாக இயங்கி வந்தது. அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்து யாழ்.குடாநாட்டில் பரவலாக வாழ வேண்டிய சூழ்நிலை காரணத்தினால் அவ்வப் பிரதேசங்களில் உள்ள எமது சகோதர சங்கங் களில் தற்காலிக உறுப்பினர்களாக இணைக்கப் பட்டு தொழிற்பட்டு வந்தனர். எமது சங்கப் பணி யாளர்களில் கூடுதலான பணியாளர்கள் வேறு சங்கங்களில் கடமையாற்ற அமர்த்தப்பட்டு பணி யாற்றி வந்தனர். நாளடைவில் சங்கத்தின் செயற் பாடுகள் சுருக்கமடைய யாழ்ப்பாணம் பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணியில் பொறுப்புக்கள் கையாளிக்கப்பட்டு எஞ்சிய பணி யாளர்களும் யாழ். கொத்தணியில் இணைக் கப்பட்டனர். சங்கத்தின் இவ்வாறான நிலையில் 1995ம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட இடப் பெயர்வும் பின்னர் 1996ம் ஆண்டில் தென்மராட் சியில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாகவும் அதேவேளை தீவுப்பகுதிக்கு மக்கள் மீள்குடியேற் றமாகவும் அமைந்தது.

எமது பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் தற்காலிக அலுவலகத்தில் எமது சங்கம் செயற்பட ஆரம்பித்தது. நாளடைவில் அங்கத்த வர்களின் மீள் குடியேற்றமும் அதிகரிக்க சங்க செயற்பாடுகள் சிறப்பாக இயங்கின. 2002ம் ஆண் டின் பிற்பகுதியில் அங்கத்தவர்களின் கட்டாய சேமிப்பு , பணியாளர் பிணை, பணிக்கொடை என்பன நிலையான வைப்புக்களில் வைப்பிலிடப் பட்டுள்ளது. மேலும் சங்கத்திற்கு பனை அபிவி ருத்திச் சபையில் தும்பு உற்பத்தி நிலையம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. மேலும் பின்வரும் செயற்பாடுகளும், அபிவிருத்தி பணிகளும் திறம் பட இயங்கி வருகின்றன.

01. பதநீர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு பனை வெல்லம் தயாரிக்கப்பட்டு வருகின் றமை.
02. மேலதிகமான உற்பத்தி கள் போத்தலில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின் றமை.
03. பனம் தும்பு உற்பத்தி செய்யப்பட்டு தும் பிலான கைப்பணிப் பொருட்கள் செய்து வருகின்றமை.
04. உள்ளூர் உற்பத்திப் பொருட்களை செய்து 'பாம் கோப் சிற்றி' என்னும் விற்பனை நிலையம் நடாத்தி வருகின்றமை.
05. அங்கத்தவர், பணியாளர்களுக்கு கல்வி நிதி திட்டத்தின் மூலம் நலத்திட்டங்கள் மேற்கொண்டு வருகின்றமை.
06. கிராமிய வங்கியின் ஊடாக அங்கத்தவர், பணியாளர்கள் இவர்களின் பிள்ளைகளின் வைப்புக்கள், கொடுப்பனவு நடவடிக்கை கள் செய்து வருகின்றமை.
07. அங்கத்தவர்,பணியாளர்கள், அங்கத்தவர் அல்லாததோருக்கான நிகழ்வுகளுக்காக குறைந்த வாடகை சேவையாக பந்தல், கதிரை, தண்ணீர்த் தாங்கிகள் வழங்கி வருகின்றமை.

மேற்படி எமது சங்க தோற்றத் தினையும் செயல்பாடுகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் கொண்டுள்ளது என்பதினை சமர்ப் பிப்பதில் பெருமையடைகின்றோம்.




## புழுக்கொடியல் மா கேசரி (செய்முறை)

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| புழுக்கொடியல்மா | - 1 கிலோ | ஏலக்காய் | - 5 |
| சீனி | - 350 கிராம் | பேரீச்சம்பழம் | - 50 கிராம் |
| ரவை | - 250 கிராம் | பிளம்ஸ் | - 50 கிராம் |
| பால் | - 1/2 போத். | உப்பு | - சிறிதளவு |
| நெய் | - 1/2 போத். | கஜூ | - 50 கிராம் |

**செய்முறை:** கஜூ, பிளம்ஸ், பேரீச்சம்பழம் ஆகியவற்றைத் தனித்தனியே நெய்யில் வறுத்தெடுத்து, பின் ரவையையும் வறுத்தெடுக்கவும். ரவை யையும் புழுக்கொடியல் மாவையும் அரைப் போத்தல் நீர்விட்டு வேகவிட்டு, பின் பாலையும் சீனியையும் சேர்த்து நன்கு வேகவிடவும். கஜூ, முந்திரி வற்றல், ஏலக்காய், பேரீச்சம்பழம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அடிப்பிடியாமல் நெய்விட்டுக் கிளறிப் பதமானதும் இறக்கி நெய் தட விய பலகையில் கொட்டிப் பரிமாறவும்.

# பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வரலாற்று தடங்கள்.....

1972ம் ஆண்டில் யாழ்.மாவட்டத்திலும் ஏனைய இடங் களிலும் அமைப்பு ரீதியாகவும், சமூக ரீதி யாகவும் ஓர் மாற்றம் நிகழ்ந்தமை வரலாறாகி விட்டது. சீவல் தொழிலாளர் சமூகம் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் தம்மை நிறுவன மயப்படுத்திய ஆண்டு அதுவாகும்.

அந்த வரலாற்றோடு எமது சங்க வரலா றும் ஆரம்பமாகியது. யாழ். மாவட்டத்திலுள்ள எமது பகுதியில் பொதுவாக அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தவறணை முறையில் எமது பகுதி அங்கத்தவர்களும் இணைந்து மாதகல் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், விளான் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என இரு சங்கங்களை அமைத்தனர். இச்சங் கங்கள் பண்டத்தரிப்பு, இளவாலை, சில்லாலை, மாதகல், சகாயபுரம், விளான் ஆகிய கிராமங் களை உள்ளடங்கியதாக அமைந்தன. கூட்டுறவு அமைப்புமுறை ஆரம்பமான காலம் என்பதாலும், பல சங்கங்கள் சிறிது சிறிதாக அமைக்கப்பட் டதாலும் சங்கங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி, பலமிழந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்ட இக்காலகட்டத்தில், இவற்றினை இணை த்து இயக்க கூட்டுறவுத் திணைக்களத்தால் எடுக்கப்பட்ட முடிவின்படி, இச்சங்கங்கள் மானிப் பாய் பகுதியில் இயங்கிய சங்கங்களோடு, 1973ம் ஆண்டு காலப்பகுதியில் இணைக்கப்பட்டு, வலி தென்மேற்கு கள்ளு உற்பத்தி விற்பனவுக் கூட் டுறவுச் சங்கம் எனப் பெயரிடப்பட்டு இயங்கியது. இக்காலகட்டத்திலிருந்து சங்கம் சண்டிலிப்பாய் சங்கத்திலிருந்து 1985ம் ஆண்டு பிரிக்கப்பட்டு, புதிய சங்கமாகப் பதிவுபெறும் வரை சண்டிலிப் பாய் சங்கத்தின் செயற்பாடுகளோடு இணைந்து எமது அங்கத்தவர்கள், பணியாளர்கள் செயற்பட் டனர்.

### புதிய கட்டமைப்பு உதயம்

1973ம் அண்டுக்கும் 1985ம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் இச்சங்கத்தின் நடவடிக் கையில் அங்கத்தவர்கள் திருப்தியுறாமையும், தாம் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுகின் றோம் என்பதனை உணர்ந்தமையாலும் இச்சங் கத்தில் இருந்து தாம் விடுபட்டு தமது பகுதிக் கென ஓர் சங்கத்தினை அமைக்க முன்வந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இக் காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்த திரு ச.வேலாயுதம் பிள்ளை அவர்களிடம் பிரச்சினைகளை எடுத்து விளக்கி, தமது கோரிக்கையை அங்கத்தவர்கள் முன்வைத்தமையை அடுத்து, அவரது ஒத்து ழைப்போடும், அப்போதைய மூத்த பணியார்க ளாக இருந்த பணியாளர்களின் ஒத்துழைப் போடும், ஏனையோரின் ஒத்துழைப்போடும் 01.12.1985இல் இருந்து சங்கம் பிரிந்து பண்டத் தரிப்பு பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் இயங்கியது. இது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகா ரம் புதிய உபவிதியினை தயாரித்து 23.12.1985இல் சட்டபூர்வமாக பதிவுசெய்யப்பட்டு. ஜே/1762 என்ற இலக்கம் இச்சங்கத்துக்கு வழங் கப்பட்டது.

### எழுச்சியும் வளர்ச்சியும்

09.12.1985இல் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு ச.வேலாயுதபிள்ளை அவர் களின் சமூகத்துடன் கூட்டப்பட்ட ஆரம்பப் பொது க்கூட்டத்தில் இச்சங்கத்தின் ஆரம்பத்துக்காகப் பாடுபட்ட திரு யோ.செபஸ்தியாம்பிள்ளை அவர் கள் தலைமையில் புதிய நிர்வாக சபை அமைக் கப்பட்டது. 23.04.1989 வரை இவரது தலைமை யிலான நிர்வாக சபை செயற்பட்டது. இந்நிர்வாக காலத்தின்போது, 1986 முதல் ஆறு மாதத்தில்

சங்கம் இலாபகரமாக இயங்கி வங்கியில் கணிச மான தொகையை நிலையான வைப்பிலிட்டது டன், 2ஆம் தடவைக் கொள்வனவாக அங்கத்த வா்களுக்குக் கொடுப்பனவு செய்தமையும் குறிப் பிடத்தக்கது.

### சூழ்நிலையை ஒட்டிய தளர்வு

1987ம் ஆண்டு நாட்டில் அசாதாரண சூழ் நிலை ஏற்பட்டு, சங்கத்தின் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டபோதிலும், அவ்வாண்டும் சங்கம் இலாபத்தில் இயங்கியமை குறிப்பிடத்தக்க அம் சமாகும். இவ்வாண்டிலும் 2ம் தவணைக் கொடுப் பனவு சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. 1988ம் ஆண்டில் சங்கம் நட்டத்தில் இயங்கியது.

### நிர்வாக மாற்றமும் வளர் நிலையும்

22.04.1989ல் கூடிய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப் பட்டது. இந்நிர்வாக சபையின் சார்பாக புதிய தலைவராக திரு ஞா.சூசைப்பிள்ளை அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். 19-06-1991 வரை இவரது தலைமையிலேயே சங்கம் தனது பணிகளை ஆற்றிவந்தது.

1989ம் அண்டில் புதிய நிர்வகிப்பில் ஏற் பட்ட மாற்றம் சங்கம் இலாபகரமாக இயங்கிய மையிலிருந்து தெரியவருகிறது. இவ்வாண்டில் சங்கம் இலாபகரமாக இயங்கியதுடன், அங்கத் தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்பனவும் வழங் கியுள்ளது. இவ்வாண்டின் இலாபத்துக்கு காரண மானவற்றில், விற்பனைக்கு பின் எஞ்சும் கள் ளிலிருந்து பாணி வடித்து, அதன்மூலம் அதிக இலாபம் உழைத்தமையும் ஒன்று என்பது இங்கு குறிப்பிடவேண்டியதாகும்.

1990ம் ஆண்டிலும் சங்கம் இலாபகரமாக இயங்கியது. போத்தலில் கள் அடைத்து விற்கும் புதிய முயற்சியும் இவ்வாண்டில் மேற்கொள்ளப் பட்டது. 2ம் தடவைக் கொடுப்பனவு இவ்வாண்டில் அங்கத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாண் டில் சங்கம் சங்கானை வடிசாலைச் சமாசத்தில் ரூபா 120,000ஐ செலுத்தி பங்குதாரராக இணைந் ததுடன், சுமார் ரூபா 372,000 பெறுமதியான காணி ஒன்றினைக் கொள்வனவு செய்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### புதிய உற்பத்தி முதலீடுகள்

1991ம் ஆண்டு முதல் ஆறு மாதத்தில் சங்கம் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியதுடன், கள்ளிலிருந்து பாணி உற்பத்தி செய்யப்பட்டதில் பெரும் நட்டமும், பனை வெல்ல உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும் 19.06.1991இல் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் பிரதிபலித்தது. அதன் காரணமாக 19.06.1991ல் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக திரு இ.இராசநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட் டார். இவ்வாண்டில் சங்கம் நட்டத்தில் இயங் கியது. இந்நட்டத்துக்கு பாணி உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும், பனை வெல்ல உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும் பிரதான காரணங்களாக அமைந்தன. இருப்பினும் சங்கம் ரூபா 89,000 பெறுமதியான உற்பத்தி நிலையக் கட்டடத்தை அமைத்ததுடன், ரூபா 65,000 பெறு மதிக்கு பனை வெல்ல உபகரணங்களையும் கொள்வ னவு செய்தமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

### இடப்பெயர்வும் புனர்வாழ்வும்

19.06.1991ல் தெரிவு செய்யப்பட்ட தலை வர், 16.02.1996 வரை இச்சங்கத்தின் தலைவ ராகச் செயற்பட்டுள்ளார். 1992ல் சங்கத்தின் முதலாவது இடப்பெயர்வு ஏற்பட்டது. இடப் பெயர்வு காரணமாகவும், நாட்டில் நிலவிய அசா தாரண சூழ்நிலை காரணமாகவும் சங்கம் 8 மாதங்கள் மட்டுமே முழுமையாக இயங்கியது. இவ்வாண்டு பிற்பகுதியில் ஒரு கிளையை மட் டுமே இயக்கக்கூடியதாக இருந்தது. இருப்பினும் சங்கம் இலாபகரமான இயங்கியதுடன், அங் கத்தவர் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கென ரூபா 300,000 ஒதுக்கப்பட்டது. அங்கத்தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்பனவு, பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப்படி, அபாயப்படி என்பனவும் வழங் கப்பட்டன. அங்கத்தவர் சமூகப் பாதுகாப்பு கருதி கணிசமான அங்கத்தவர்கள் கமக்காரர் ஓய்வூ திய சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்டார்கள். அங்கத்தவர் சேமம் இவ் வாண்டில் அதிகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கவையாகும். வடமராட்சி, தென்மராட்சி பகுதி களுக்கும் இடம்பெயர்ந்த நிகழ்வும் இவ்வாண் டிலேயே இடம்பெற்றது.

1993ம் ஆண்டு சங்கத் தொழிற்பாடுகள், இடப்பெயர்வாலும், கொட்டடியில் இருந்த கிளை யை மட்டுமே இயக்கக்கூடிய நிலை இருந்தமை யாலும் பெரிய அளவில் இயக்கி அதிக இலா பத்தை ஈட்டமுடியவில்லை. இருப்பினும் அங்கத் தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்

பனவு, பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப்படி, ஆப த்துப்படி என்பனவும் வழங்கப்பட்டது குறிப் பிடத்தக்க அம்சமாகும்.

1994ம் ஆண்டிலும் தொழிற்பாடு மட்டுப் படுத்தப்பட்ட அளவில் இருந்தபோதிலும், சங்கம் இலாபத்தில் இயங்கி, 2ம் தடவைக் கொடுப் பனவு, பணியாளர் ஆபத்துப்படி, ஊக்குவிப்புப்படி என்பன வழங்கப்பட்டது முக்கிய அம்சம் என்ப துடன், அங்கத்தவர்கள் சேமங்களுக்கு எதிராக நிலையான வைப்பு, சாதாரண சேமிப்பு என்பவற் றில் கணிசமான தொகைகளை வைப்பிலிட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் ரூபா 200,000 க்கு இரு சில்லு உழவு இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்ததுடன், சித்தவைத்தியக் கூட் டுறவுச் சங்கத்தில் ரூபா 55,000 செலுத்தி தன் னையும் ஓர் பங்குதாரராக இணைத்தது. மேலும் இவ்வாண்டில் ரூபா 200,000ஐ அங்கத்தவர் மீளக் குடியமர்வு, புனர்வாழ்வுக்கென ஒதுக்கியுள்ளமை கவனிக்கத்தக்கவை. அங்கத்தவர் சமூக மேம் பாட்டுத் திட்டத்துக்கென ஒரு நிதியை ஆரம்பித் ததும் இவ்வாண்டின் முக்கிய நிகழ்வாகும்.

1995ம் ஆண்டில் சங்கம் முழுமையான இடப்பெயர்வினைச் சந்தித்து, தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தது. ஐப்பசி மாதம் வரை சங்கம் இயங்கி இலாபத்தை ஈட்டி, அங்கத்தவர்கள் 2ம் தடவைக் கொள்வனவுப் பணம் வழங்கியது டன், பணியாளர் ஊக்குவிப்பு, விசேட படி, நட் டத்துக்கு எதிராக ஏற்பாடுகள் என்பவற்றை சங் கம் மேற்கொண்டுள்ளது. சுமார் 115,000 பெறுமதி யான போத்தல்களைக் கொள்வனவு செய்தது டன், கள் பரிசோதனைக் கருவி ஒன்றினை ரூபா 41,000க்குக் கொள்வனவு செய்தது. இக் காலத்தில் ரூபா 345,000 அளவில் அங்கத்தவர் இடர் உதவிப்பணம் வழங்கியமையும் குறிப் பிடத்தக்க அம்சமாகும். இடப்பெயர்வினால் சங் கச் சொத்துக்கள், இருப்புப் பொருட்களை இழ ந்து நட்டமடைந்துள்ளதும் இவ்வாண்டின் முக் கிய அம்சமாகும். மேலும் மரணமடைந்த மற்றும் நிரந்தரப் பாதிப்புக்குட்பட்ட அங்கத்தவர்களின் குடும்பப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக கல்வி உதவியாக பாடசாலை உபகரணங்கள், எழுது பொருட்கள், அப்பியாசப் புத்தகங்கள் என்பவற்றை வழங்கியமை ஒரு சமூக மேம்பாட்டு நிகழ்ச்சியாக இவ்வாண்டில் கருதவேண்டியது. 1996ம் ஆண்டு மாசி மாதம் 16ல் சங்கத் தலைவ ராக திரு மா.மகேந்திரம் தெரிவுசெய்யப்பட்டார். மாசி மாதம் வரை தென்மராட்சியில் இயங்க முடியாதிருந்தபோதிலும், அப்பகுதிச் சங்கங்க ளின் ஒத்துழைப்புடனும், இடம்பெயர்ந்து இப் பகுதியில் வாழ்ந்த அங்கத்தவர்களை ஒருங் கிணைத்து கைதடியிலும், கச்சாயிலும் கொள்வ னவுக் கிளையினை பங்குனி மாதத்தில் இருந்து நடாத்த முடிந்தது. பங்குனி, சித்திரை ஆகிய இரு மாதங்களிலும் வடிசாலைக்கு கள் வழங் கியதன்மூலம் அதிக இலாபத்தினை சங்கம் அடைந்த நிலையில், தென்மராட்சியில் இடம் பெற்ற நடவடிக்கை காரணமாக எமது அங்கத் தவர்கள் வலிகாமத்துக்கு திரும்பியதும், வன் னிக்கு இடம்பெயர்ந்ததும் இடம்பெற்றது. சங்கம் இவ் இடப்பெயர்வின்போது பாரிய நட்டங்களைச் சந்தித்தது. உரொக்கம், தளபாட உபகரணம், இருப்புப் பொருட்கள் என்பவற்றை இழந்தது. சங்கத்தின் வரலாற்றில் இது பாரிய இழப்பாகும். சங்கம் வலிகாமத்துக்குத் திரும்பி பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான் கிளைகளை குறுகிய காலம் மட்டுமே இயக்கியது. இக்காலத்தில் சங்கம் பெரிதாக இயங்கமுடியாதிருந்தபோதி லும், தென்மராட்சியில் உழைத்த இலாபம் இவ் வாண்டில் நட்டத்தைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. சங்கம் குறுகிய நட்டத்தில் இக்கால த்தில் இயங்கியது.

1997ம் ஆண்டு சங்கம் தனது தொழிற் பரப்பு முழுவதிலும் கிளைகளைத் திறந்து இயங் கியபோதிலும், முழுமையாகத் தொழிற்பட முடி யாத நிலையே இருந்து வந்தது. நாட்டு நிலை மை காரணமாகப் பாவனையாளர்கள் போதிய வருவாயற்று இருப்பதால் கூடிய அளவில் தொழி ற்பட்டு அங்கத்தவர்களின் வருவாயை மேம் படுத்த முடியாத நிலை இருந்தது. இருப்பினும் வடிசாலைக்கு கள் வழங்குவதன்மூலம் கூடிய இலாபத்தைச் சங்கம் அடைந்து வருவது குறிப்பி டத்தக்க விடயமாகும். இக்காலத்தில் இதுவரை அங்கத்தவர் சேமத்துக்கு எதிராக வைப்புக்கள் இடப்பட்டதுடன், முன்னர் மேற்கொண்ட சமூக முன்னேற்ற முயற்சிகளிலும் சங்கம் ஈடுபட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1998ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி யன்று சங்கத் தலைவராக திரு அ.பெனடிற் தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைக் காரியாலயம் பண்டத்தரிப்பு பட்டணத்தில் ஓர் கட்டடத்தில் செயற்பட்டு வந் தது. இக்காலத்தில் ஓரளவு சீரான நிலையில் கிளைகள், மதுபான நிலையம். வடிசாலை என்பன இயங்கி வந்தது. இதன்மூலம் கள்,

போத்தற் கள், மதுபானம் விற்பனை செய்து நட்டம் இல்லாமல் சங்கம் இயங்குவதற்கு வழி வகுத்தது.

1999ம் ஆண்டிலும் 1998ல் இயங்கிய நெறியாளர்குழு உறுப்பினர்களே செயற்பட்டுள்ளனர். சங்கத்தின் தலைவராக திரு அ.பெனடிற் அவர்களே செயற்பட்டார். இவ்வாண்டில் சங்கத்தின் செயற்பாட்டில் முன்னேற்றம் காணப்பட்டது. இடப்பெயர்வும் அதன் தாக்கமும் குறைந்து, சங்கச் செயற்பாடுகள் ஓரளவு சீராக காணப்பட்டது. 1998ம் ஆண்டைவிடவும் அதிகரித்த இலாபத்தை சங்கம் ஈட்டியுள்ளது. கள் கொள்வனவு விற்பனவும், போத்தற் கள் உற்பத்தி, விற்பனவும் அதிகரித்து, அப்பகுதி இலாபத்துக்கான மூலமாக இருந்தது. அங்கத்தவர் சேமத்துக்கு எதிராக வைப்புக்கள், பணிக்கொடைக்கான வைப்புக்கள் இக்காலத்தில் வைப்புச் செய்யப்பட்டது. அங்கத்தவர், பணியாளர்களுக்கான கடன் வழங்கியமை என்பன இக்காலத்தில் முன்னேற்றகரமான செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

2000ம் ஆண்டிலும் 1999ம் ஆண்டில் இயங்கிய நெறியாளர்குழு உறுப்பினர்கள் நிர்வகிப்பில் பங்குகொண்டதுடன், திரு பெனடிற்றே தொடர்ந்தும் தலைவராக செயற்பட்டார். முன்னைய ஆண்டைப்போலவே இவ்வாண்டும் செயற்பாடுகள் இடம்பெற்றன. சங்கம் இலாபத்தில் இயங்கியது. அங்கத்தவர்கள் சேமிப்புக்கு எதிராக கணிசமான தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டமையும், ஏனைய நலத்திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்தியமையும் இவ்வாண்டில் முக்கியமான விடயங்களாகும்.

07.06.2001ல் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நெறியாளர்குழுவின் தலைவராக திரு அ.அமலோற்பவநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வாண்டிலும் சங்கம் இலாபத்தில் இயங்கியபோதிலும், பணியாளர்களுக்குரிய புதிய சம்பளத்திட்டம் வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட நிர்வாகச் செலவு அதிகரிப்பு காரணமாக கூடிய இலாபத்தை ஈட்டமுடியவில்லை. போத்தற் கள் உற்பத்தி அதிகரித்திருந்த போதிலும், விற்பனை குறைவாக இருந்தமையால், இப்பகுதி இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இலாபக் குறைவுக்கு ஒரு காரணமாகும். அக்காலத்தில் கட்டாய சேமம், பணியாளர் பிணை, பணிக்கொடை, கல்வி, சுகாதார நிதி என்பவற்றுக்கு எதிராக கணிசமான தொகைகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டு, நிதியங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டமை சிறப்பு அம்சங்களாகும்.

2002ம் ஆண்டிலும் தொடர்ந்து அ.அமலோற்பவநாயகம் அவர்களே சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். 03.10.2002ல் கூடிய பொதுச்சபையில் நெறியாளர் குழு வெற்றிடத்துக்கு புதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டமையால், செயலாளர், உபதலைவர்களது பதவியில் மாற்றங்கள் ஏற்பட்டது. சங்கத்தின் செயற்பாடுகள் இவ்வாண்டிரும் அதிகரித்தமையால் சங்கம் கூடிய இலாபத்தை அடைந்தது. குறிப்பாக போத்தற் கள் உற்பத்திப் பகுதி கூடிய இலாபத்தையும், மதுபானப் பகுதி கூடிய இலாபத்தையும் பெற்றமையால் சங்கம் கூடுதலான இலாபத்தை அடைந்தது. இதன் காரணமாக 2ம் தடவைக் கொடுப்பனவுகளும், கல்வி அபிவிருத்திக்காக நிதி ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சங்கத்தால் கட்டாய சேமம், கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்காக சணிசமான தொகை வைப்புச் செய்யப்பட்டதுடன், பொது வைப்புக் கணக்குக்கு கணிசமான தொகை இவ்வாண்டில் வைப்புச் செய்யப்பட்டமை சிறப்பான அம்சமாகும்.

தொடர்ந்து 2003ம் ஆண்டிலும் திரு அ.அமலோற்பவநாயகம் அவர்களின் தலைமையிலான நெறியாளர்குழுவே செயற்பட்டது. இவ்வாண்டு சங்கம் இலாபத்தில் இயங்கியமையால், 2ம் தடவைக் கொடுப்பனவு, அங்கத்தவர்கள் கல்வி, சமூக மேம்பாட்டு நிதி ஆகியவற்றுக்கு சுமார் ரூபா 250,000 ஒதுக்கம் செய்யப்பட்டு, இந்நிதியத்தின் செயற்பாடுகள் ஸ்திரமாக்கப்பட்டன. இக்காலத்தில் ஒவ்வொரு துறைக்கும் அதிகமாக வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை சிறப்பு அம்சமாகும். சகாயபுரம் -76 கிளைக்கு 5 பரப்புக் காணியை சங்கம் கொள்வனவு செய்துள்ளமை சிறப்பான விடயங்களாகும். இவ்வாண்டில் சங்கச் செயற்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டமையும் ஓர் முக்கியமான விடயமாகும்.

தொடர்ந்து 2004ம் ஆண்டில் தை தொடக்கம் ஐப்பசி வரையான காலப்பகுதியில் திரு அ.அமலோற்பவநாயகம் அவர்களும், ஐப்பசியிலிருந்து திருஅ.பெனடிற் அவர்களும் தலைவர்களாகச் செயற்பட்டனர். அங்கத்தவர்களின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியைக் கவனத்தில் கொண்டு சங்கம் தமது தொழிற்பரப்புக்குள் பாலர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. அப் பாலர் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்

றவற்றையும் சங்கம் பொறுப்புடன் ஏற்று, நடாத்தி வருவதுடன், அயலிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் விருத்தியை கருத்திற் கொண்டு பல கல்விச் சேவைகளையும் சங்கம் ஆற்றி வந்துள்ளமை அளப்பரிய சேவை யாகும். மேலும் அங்கத்தவர்களின் சமூக, பொரு ளாதார மேம்பாடு கருதி பாதிக்கப்பட்ட, மரண மடைந்த அங்கத்தவர்களின் கல்வி பயிலும் மாணவர்களை இனங்கண்டு, பாடசாலை உபகர ணங்களை வழங்கிவருகின்றமையும், உயர்கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கருதி ஒவ்வொரு வருடமும் உதவு தொகையை வழங்கி வருகின் றது.

மேலும் அங்கத்தவர்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகை யில் ஒவ்வொரு அங்கத்தவரிடம் இருந்தும் கொள்வனவு செய்யப்படும் உற்பத்தியில் போத் தல் ஒன்றுக்கு 10 சதவீதம் ஒவ்வொரு கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மாணவர் சேமிப்பாக அறவிடப்பட்டு, பிள்ளைகளின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகின்றது. இதனால் பிள் ளைகள் தமது கல்விக்காக பெற்றோரில் தங்கி வாழவேண்டிய அவசியம் ஏற்படாது. தொடர்ந்து உயர் கல்விகளை கற்பதற்கும் இத்திட்டம் ஓர் வரப்பிரசாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து 2005ம் ஆண்டைப் பொறுத்தவரை சங்க மானது தனது உற்பத்திகளான போத்தற் கள், பனை வெல்லம் என்பவற்றை பண்டத்தரிப்பில் உள்ள வாடகை கட்டடத்தில் உற்பத்தி செய்து வந்தது. இவ்வுற்பத்தி நடவடிக்கைகளை வியா பிப்பதற்காக விளானில் உள்ள தனது சொந்தக் காணியில் உற்பத்தி நிலைய கட்டட வேலை யை ஆரம்பித்தது. இதற்கான நிதியின் ஒரு பகுதியை மாவட்ட நிவாரண புனர்வாழ்வு நல் லிணக்க அமைச்சினால் ரூபா 500,000 வழங்கப் பட்டது. மேலும் இவ்வாண்டில் அங்கத்தவர்களின் நன்மையான, தீமையான நிகழ்வுகளுக்கு வழங் குவதற்காக கதிரைகள் கொள்வனவு செய்து வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது. சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்தின் ஒரு பகுதி யில் கிராமிய வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இதுவரை காலமும் அங்கத்தவர்களின் கொள்வனவுகள் யாவும் தலைமைக் காரியால யத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன்பின் அவர்களின் நடவடிக்கைகள் யாவும் கிராமிய வங்கிக்கு மாற்றப்பட்டதன் பயனாக அங்கத்தவ ர்கள், தமக்கு தேவையான பணத்தை விரை வாகப் பெற்றுக்கொள்ளவும், சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவும், வங்கி நடைமுறைகளை அறிந்துகொள்ளவும், தொடர்பாடலை வளர்த்துக் கொள்ளவும் முடிந்துள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கெயார் நிறுவனமானது அங்கத்தவர்க ளின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் அக் கறை கொண்டும், எமது சங்கத்தின் வளர்ச்சி கருதியும் தமது நிதியினை வழங்க முன்வந்த ஆண்டாக 2006ம் ஆண்டு சிறப்பு பெறுகிறது. இதன் பயனாக வலுவூட்டல் நிதியாக ரூபா இரண்டு இலட்சமும், வாழ்வாதார நிதியாக ரூபா 840,000 ஐயும் வழங்கியுள்ளது. இதில் வலு வூட்டல் நிதிமூலம் சங்கமானது கணினி, தளபா டங்களை கொள்வனவு செய்துள்ளது. மனித வளத்தின் மூலம் செய்யப்பட்டு வந்த கணக்கு முறைகள் யாவும் கணினிமூலம் செய்யப்பட்டு. கணக்கு வைப்பு முறைகள் இலகுபடுத்தப்பட்டன. அத்துடன் அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத் தினை உயர்த்தும் நேக்கத்துடன், அவர்களது தொழில் வினைத்திறனை அதிகரிக்கும் முகமாக, தொழில் முயற்சிக்குத் தேவையான சைக்கிள் கள், கத்திகள், கயிறு என்பன வழங்கப்பட்டன. 2007ம் ஆண்டு மீண்டும் திரு அ.பெனடிற் அவர் கள் தலைவராகக் தெரிவுசெய்யப்பட்டார். இக் காலத்தில் 5 பணியாளர்களுக்கு ஆளணி அங்கீ காரம் பெறப்பட்டுள்ளது. கிளைகள் மூலம் வரு மானத்தைப் பெற்றுக்கொண்டிருந்த சங்கமானது பனை சார்ந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்கத்துக்காகவும், மகளிருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காகவும், பண்டத்தரிப்பு சந் தைக் கட்டடத்தில் கற்பக நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. மேலும் இவ்வாண்டில் கட்டட நிர்மானத் திற்கென பிரதேச செயலகத்தால் நன்கொடை யாக ரூபா 145,000 வழங்கப்பட்டது. அங்கத்தவர் களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி, பின்தங்கிய கிராமமாகிய உயரப்புலம் கிராமத் துக்கு பாலர் பாடசாலை அமைப்பதற்கென 3 பரப்பு காணியை ரூபா 120,000 க்கு கொள்வனவு செய்து வழங்கியது.

2008ம் ஆண்டு காலப் பகுதியில் தேச நிர்மான புனரமைப்பு அமைச்சின் துரித அபிவி ருத்தித் திட்டத்தின்கீழ் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 20,000,000 நிதியினைக் கொண்டு பனை வெல்ல கட்டடம் அமைக்கப் பட்டது. பனைசார் உற்பத்திகளான பனை



40வது அகவை கண்டு நிற்கும்
எமது பனை தென்னை வளச் சங்கங்களை
வாழ்த்துவதுடன், 40வது அகவை சிறப்பு மலர்
பொலிவுறவும் எமது நல்வாழ்த்துக்கள்!
உற்பத்திகள்
பனை வெல்லம்
கல்லாக்காரம்
போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர்
பனம் பாணி
ழுக்கொடியல்
கல்வி ஊக்குவிப்பு திட்டம்
முன்பள்ளிகளை நிர்வகித்தல்.
உறுப்பினர், பணியாளர், மகளிருக்கான கல்விப் பயிற்சி
கிராமிய வங்கிச் சேவை
அங்கத்தவர் கட்டாய சேமம் பேணல்.
அங்கத்தவருக்கு கடன் வழங்கல்.
வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்
மகளிருக்கான அபிவிருத்தித் திட்டம்
தையல், அழகுக்கலைப் பயிற்சி
சுயதொழில் ஊக்குவிப்பு
பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ–து)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
021 300 1952

வெல்லம், பனாட்டு, பனங்களி, ஒடியல், பாணிப்பனாட்டு, ஒடியல் மா, புழுக்கொடியல் என்பன அதிகளவில் உற்பத்தி செய்து சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மகளிருக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளது. மேலும் எமது தொழிற்பரப்புக்குட்பட்ட சாந்தை கிராமத்துக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 343,000 நிதி மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்துள்ளது.

2009ம் ஆண்டில் பதநீர் உற்பத்தித் துறையை ஊக்குவிக்கும் முகமாக UNDP நிறுவனத்தினால் ரூபா 849,000 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன்மூலம் சுண்ணாம்பு, முட்டி, கத்தி என்பவை அங்கத்தவா்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் பனை வெல்ல உற்பத்தித் துறையை வலுப்பெற்று அதிகரித்த உற்பத்தியை மேற்கொள்ள இந்நிதி உதவி வழிவகுக்கும். இவ்வாண்டு கள் உற்பத்தி தவிர்த்து ஏனைய உற்பத்திகளை அதிகரித்து சங்க வியாபாரத்தில் கணிசமான பங்கினை வகித்து வந்துள்ளது. தொடர்ந்து இவ்வாண்டிலும் சங்கம் இலாபத்தில் இயங்கி அங்கத்தவர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கியுள்ளது.

2010ம் ஆண்டிலும் அ.பெனடிற் அவர்களின் தலைமையிலான நிர்வாகமே நிர்வகிப்பு கடமைகளை செய்து வந்தது. சிறப்பாக இவ்வாண்டில் பனை வெல்ல உற்பத்தி மேம்பாட்டிற்காக வாழ்வாதார முகாமைத்துவ சேவைகளுக்கான மாகாண கூட்டுறவுச் சம்மேளனத்தினால் 1,500,000.00 ரூபா நிதி பெறப்பட்டு வெல்ல உற்பத்தி நிலையத்துக்கு ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. இதன்மூலம் இவ்வாண்டில் மேலதிகமான உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. சுமார் 6,000 கிலோ பனை வெல்லம் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டது. 77 ஆயிரம் போத்தல் பதநீர் இதன்மூலம் கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டைவிட மது சாராத உற்பத்தி அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டமை இவ்வாண்டில் முக்கிய நிகழ்வு ஆகும். இவ்வாண்டு அனைத்துப் பகுதிச் செயற்பாடுகளும் அதிகரித்து அதிக இலாபத்தை சங்கம் ஈட்டியமை குறிப்பிடத்தக்கது.

2011ம் ஆண்டைப் பொறுத்தவரையில் 2010ம் ஆண்டில் இருந்த இயக்குனர் சபை 29.04.2011ல் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டு திரு த.இந்திரசித்து அவர்களின் தலைமையில் புதிய நெறியாளர் குழு இயங்கத் தொடங்கியது.

இக்காலத்தில் ஏனைய தொழிற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றதுடன், புதிதாக ஒரு டாட்டா ரக வாகனம் சங்கத்தின் கள் மாற்றம் ஏனைய தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டமையும், ஒரு நிழற்படப் பிரதியாக்கல் இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 89வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு வறுமையிலும் வறுமையான அங்கத்தவர் ஒருவருக்கு சுமார் ரூபா 450,000.00 பெறுமதியான வீடு ஒன்று அங்கத்தவர் புனர்வாழ்வு நிதியிலிருந்து அமைத்து வழங்கப்பட்மை சிறப்பம்சமாகும்.

2012ம் ஆண்டில் தொடர்ந்தும் திரு தி.இந்திரசித்து அவர்களின் தலைமையிலான நெறியாளர் குழுவே இயங்கியது. இக்காலத்தில் வியாபார செயற்பாடுகள் அனைத்தும் முன்னேற்றகரமாக இருந்ததுடன், சிறப்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 25 மில்லியன் பெறுமதியான பனை வெல்ல உற்பத்தித் திட்டத்துக்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு இதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய பிராந்தியத்திலேயே திருந்திய முறையிலான பொறித் தொகுதியைக் கொண்ட பனை வெல்ல உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான நிதியை UNDP நிறுவனம் வழங்க ஏற்பாடு செய்து அதற்கான நிதியினை ஒதுக்கியது. அத்துடன் சகாயபுரம் பகுதியில் ஒரு கொள்வனவு நிலையம் அமைப்பதற்காகவும், குளிரூட்டப்பட்ட வாகனம் கொள்வனவு செய்வதற்காகவும் 10 மில்லியன் ரூபாவில் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## ஆரம்பமும் அபிவிருத்தியும்

ஆரம்பத்தில் காரைநகர் பிரேதசமானது சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பகுதி யாக இயங்கி வந்தது. துறைமுகம், ஊரி, மத வடி, வேரப்பிட்டி, விக்காவில் வலந்தலை போன்ற இடங்களில் கிளைகளை அமைத்து சுமார் 300 அங்கத்தவர்கள் வரையில் தொழில்புரிந்து வந் தனர். 25.04.1991ல் ஏற்பட்ட இராணுவ நடவடி க்கை காரணமாக காரைநகர் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இத னால் சீவல் தொழிலை மேற்கொண்டு வந்த அங்கத்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தனர். அங்கத்தவர்கள் உற்பத்தி செய்யும் கள் முழு வதையும் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டதுடன் வீட்டில் விற்பனை செய்வதால் பல சிக்கல்களும் ஏற்பட்டது. அத்துடன் சேமிப் புத்திட்டங்கள் விபத்து நிதி போன்ற சலுகை களையும் அங்கத்தவர்கள் இழந்து வருவதை கவனத்தில் கொண்டனர்.

1997இன் நடுப்பகுதியில் காரைநகருக் கான தரைவழிப்பாதை திறக்கப்பட்டு காரைநகர் மக்கள் யாழ்நகர் சென்றுவர அனுமதிக்கப் பட்டனர். ஆயினும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக சங்கானை பனை தென்னை வள சங்கமானது தன் சேவையை காரைநகருக்கு விஸ்தரிக்கமுடியாத நிலை காணப்பட்டது.

இதனால் இப்பகுதிக்கென தனியான ஒரு சங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண் ணம் அங்கத்தவர்கள் மத்தியில் உருவாகியது. இதற்கு முன்னோடியாக திரு.மு.கணேஸ் அவர் கள் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி இருந்தார். இதனடிப்படையில் 05.05.1997ல் ஊர் காவற்துறை அரசாங்க அதிபர் திரு.வே.செல்வ நாயகம் தலைமையில் அங்குரார்ப்பண கூட் டத்தை கூட்டி திரு.மு.கணேஸ் அவர்களை தலைவராகக் கொண்டு 7பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

இவர் சுமார் 40 அங்கத்தவர்களை பதிவு செய்துகொண்டதுடன் இரண்டு கிளைகளையும் திறந்து இரண்டு பணியாளர்களை நாளாந்த சம்பளத்தில் நியமித்து உற்பத்திகளை கொள் வனவு செய்து விற்பனை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் கொள்வனவுப் பெறுமதியில் இரண்டு ரூபாவினை சங்க செலவாக அறவிட்டு செலவி னங்களை மேற்கொண்டு வந்தனர்.

சங்கமானது தொடர்ந்து செயற்பட்டு வருகையில் கூட்டுறவு திணைக்களத்தின் சட்ட நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக செயற்படும் பொருட்டு கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு இணங்க 15.09.1999 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இக்காலத்தில் சங்கமானது மேலும் இரண்டு கிளைகளை திறந்ததுடன் 06 பணியாளர்களை நியமித்தது. இதில் சங்கத்தின் முதலாவது தற் காலிக பொதுமுகாமையாளராக சி.கிருஸ்ணர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

அங்கத்தவர்கள் பணியாளர்கள் சங் கத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆவலுடனும் விசுவாசத்துடனும் செயற்பட்ட காரணத்தினால் குறுகிய காலத்துக்குள்ளேயே குறிப்பிடத்தக்க இலாபங்களை அடைந்தது. இதனைக் கொண்டு காரியாலயத்துக்கென 1250000 ரூபா பெறுமதி யில் காரியாலயம் ஒன்றை கொள்வனவு செய் தது. மேலும் கிளை நிலையங்கள் இயங்கிய வாடகை காணிகளையும் சொந்தமாகவும் கொள் வனவு செய்தது.

சங்கத்தின் தொடர்ந்து வந்த தலை வர்கள் நித்தியானந்தம் பரமேஸ்வரன் போன்றவர் களும் தொடர்ந்துவந்த முகாமையாளர்களான கோபாலகிருஸ்ணன், ஜெகநாதன் போன்றவர் களும் இக்காலங்களில் பணியாற்றிய பணியாளர் களும் கூட்டிணைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் மிகவும் ஒற்றுமையாக நின்று செயற்பட்டு சங்க வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டனர்.

சங்கம் தற்போது 268 அங்கத்தவர்க ளைக் கொண்டு செயற்படுகிறது. கடைசியாக உருவாகிய சிறிய சங்கமாயினும் போதிய நிதி வளம் காணப்படாத போதும் இவ் அங்கத்தவர் களும் விபத்து நிதி திட்டம் மரணக்கொடைத் திட்டம்,கல்வித்திட்டம் போன்றவற்றைப் பெற வேண்டும் என்ற நோக்குடன் தற்போதைய தலை வர் மு.பரமேஸ்வரன் திட்டம் ஒன்றை முன் மொழிந்து 2013ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மேலும் கிரா மிய வழிமுறைகளும், ஏற்படுத்தப்பட்டுள்ளது. பனைவெல்லம் உற்பத்தி செய்வதற்கான முயற் சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்கத்தவர்கள் பணியாளர்கள் விசுவாசமாக செயற்படும்போது சங்கம் வளரும். இதன் மூலம் அங்கத்தவர்கள் பணியாளரின் பொருளாதாரம் உயரும்.உயர்த்துவோம். உயருவோம்.

# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுப் பதிவுகள்!



சங்கத்தின் பணியாளர்கள்




புதிய சிறிய உழவு இயந்திர வெள்ளோட்டத்தின்போது



கிராமிய வங்கித் திறப்புவிழாவின்போது



கிராமிய வங்கித் திறப்புவிழாவின்போது


கற்பகதரு
40 வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!
எமது செயற்பாடுகளும் சேவைகளும்
போத்தற் கள் உற்பத்தி
பல்பொருள் விற்பனை நிலையம்
பனைசார் பொருட்கள் விற்பனை
அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை
கிராமிய வங்கிச் சேவை
உழவு இயந்திர வாடகை சேவை
நலத்திட்ட செயற்பாடு
கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
021 321 6451

# அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வரலாறு

யாழ். குடாநாட்டின் வடக்கே ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட பனை வள உற்பத்திகளோடு ஒன்றித்து போன மக்கள் வாழ்வியல் பின்னணிகளைக் கொண்ட கிராமமாக விளங்குவது அனலைதீவு பிரதேசமாகும்.

இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பாலா னவர்கள் தமது ஜீவனோபாயத்தினை பனை தென்னை வள உற்பத்திகளைக் கொண்டே நகர்த்தி வருகின்றனர். பனை வள உற்பத்தி யாளர்கள் தனித்தனியே செயற்பட்ட வேளையில் அவ் உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து கூட் டுறவு அடிப்படையில் அவர்களின் வாழ்வாதா ரத்தினை உயர்த்துவதற்காக ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் அங்கத்தவர்களாக இணைந்து செயற்பட்டனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக எல் லைப் பரப்பினுள் அனலைதீவு இருந்தபோதும் தனித்துவமான பிரதேசமாக விளங்கியமையால் தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இய ங்கி வந்தது. இதுன் காரணமாக அனலைதீவு பிரதேசத்தினை வசிப்பிடமாகக் கொண்ட பனஞ் சாற்று உற்பத்தியாளர்கள் தமக்கும் தனியான பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினை அமைக்கவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டனர்.

இதன் பயனாக 2000ம் ஆண்டு அப்போது செயற்பட்ட 28 அங்கத்தவர்களின் விடாமுயற்சி யினால் இம் மக்களின் விருப்பத்தினை நிறை வேற்றும் முகமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் முழு முயற்சியால் இச்சங்கத்தினை தனிச் சங்கமாக பதிவதற்காக அப்போதைய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஐ.நாகேஸ்வரன் அவர் களினாலும், அப்போதைய யாழ்ப்பாணம் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இரு ந்த சு.கணேசமூர்த்தி அவர்களின் வழிகாட்டலில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு எஸ்.கே.சண்முகநாதன் அவர்களால் 2000-12-01இல் அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என பதிவுசெய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தனித்துவமான அமைப்பாக மிளிரும் இச்சங்கமானது அங்கத் தவர் நலன்சார்ந்த விடயங்களிலும் அவர்களின் நன்மைகளிலும் பங்கெடுக்கும் கிராமிய அமைப் பாக விளங்கி வருகின்றது.

தற்போது தலைமைச் செயலகம், இர ண்டு கிளைகள், ஒரு போத்தலடைப்பு நிலையம் என அங்கத்தவர்களுக்கான சேவையினை செவ் வனே ஆற்றும் ஓர் அமைப்பாக விளங்கி நிற்கும் அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகள் மேலும் விரிவு பெற்றுச்செல்லும் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் இச்சங்கத்தின் வளர்ச் சிக்காக பாடுபட்டு உழைத்த தலைவர்கள், செய லாளர்கள், பொதுமுகாமையாளர்கள் தொடர்பாக பார்ப்போமானால், இச்சங்கத்தின் முதலாவது தலைவராக (2000ம் ஆண்டு முதல்) திரு மு.ஐயன் அவர்களும், செயலாளராக திரு வே.யோகன் அவர்களும், பொதுமுகாமையாள ராக திரு க.கனகு அவர்களும், இரண்டாவது தலைவராக (2003ம் ஆண்டு முதல்) திரு வே.யோகன் அவர்களும், செயலாளராக திரு சி.பாலேந்திரன் அவர்களும், பொதுமுகாமையாள ராக திரு அ.அனுரதன் அவர்களும், 3வது தலை வராக (2006ம் ஆண்டு முதல்) திரு மு.ஐயன் அவர்களும், செயலாளராக திரு வே.சிறிகாந்தன் அவர்களும், பொதுமுகாமையாளராக திரு தெ.பிரதீஸ்வரன் அவர்களும், 4வது தலைவராக (2009ம் ஆண்டு முதல்) திரு செ.சவுந்தரராஜன் அவர்களும், செயலாளராக திரு அ.தெய்வேந் திரன் அவர்களும், பொதுமுகாமையாளராக திரு து.ஐங்கரன் அவர்களும், 5வது தலைவராக (2012ம் ஆண்டு முதல்) திரு வே.சிறிகாந்தன் அவர்களும், செயலாளராக திரு யோ.திருவருட் சீலன் அவர்களும், பொதுமுகாமையாளராக திரு து.ஐங்கரன் தொடர்ச்சியாகவும் உழைத்து வந் துள்ளனர்.

அத்துடன் சங்கத்தின் வளர்ச்சியில் நெறி யாளர்குழுவின் பங்களிப்பும் மிக முக்கியமானது. அந்த வகையில் தற்போதைய எமது சங்கத்தின் நெறியாளர்குழுவில், தலைவராக திரு வே.சிறி காந்தன், உபதலைவராக திரு ப.நித்தியானந் தன், செயலாளராக திரு யோ.திருவருட்சீலன், நிர்வாக உறுப்பினர்களாக திரு அ.ரவீந்திரன், திரு இ.தனபாலசுந்தரம், திரு ஆ.சிவபாலன், திரு மா.க.கணபதி, திரு வே.முத்துராசா ஆகி யோர் உள்ளனர்.

# துரித எழுச்சிபெறும்

# வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## ஆரம்பமும் வரலாறும்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கென தனியானதோர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமென கடந்த 2003ம் ஆண்டுக் காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட பலராலும் விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் பளை, பருத்தித்துறை ஆகிய இரு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இணைந்து இயங்கிய, வடமராட்சி கிழக்கு பகுதியினைச் சேர்ந்த சுமார் 310 பனந்தொழில் வல்லுனர்களை அங்கத்தவர்களாக ஒன்றிணைத்து இச்சங்கமானது 28.06.2004ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது திரு க.யோகராசா அவர்களினை தலைவராகக் கொண்ட 8 இயக்குனர் சபை உறுப்பினர்களால் சங்கமானது நிர்வகிக்கப்பட்டு வந்தது. தொடர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் கிளை நிலையங்களை அமைத்து, கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைவாக அங்கத்தவர்களின் சமூக, சமய, கலாச்சார, பொருளாதார வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியது.

கடந்த 26.12.2004இல் ஏற்பட்ட வருந்தத்தக்க சுனாமி இயற்கைப் பேரிடர், 11.08.2006இல் ஏற்பட்ட யுத்த நிலைமைகளினால் சங்கமானது தொடர்ச்சியாகவே இடப்பெயர்வுகளையும் அதனூடாக இழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது. யுத்த நிலை உக்கிரமடைந்த நிலையில், சங்கத்தின் தலைமை அலுவலகம், கிளை நிலையங்கள், போத்தற்கள் உற்பத்தி நிலையம், இருப்புக்கள், ஆவணங்கள் அனைத்துமே அழிக்கப்பட்டு மிகவும் சோகமான வரலாறு சங்கத்துக்கு எழுதப்பட்டது.

யுத்த நிலைமைகள் 2009 நடுப்பகுதியில் அற்றுப்போக, நலன்புரி நிலையங்களில் அங்கத்தவர்களும், பணியாளர்களும் வாழும் நிலையில் கடந்த 31.12.2009இல் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரால் அதே இயக்குனர் சபையினை இணைத்து சங்கத்தினை மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டது. தற்காலிகமாக குடத்தனைப் பகுதியில் ஓர் அலுவலகத்தினையும் ஆரம்பித்து சங்க நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானது.

பின்னர் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படும் பகுதிகளில் கிளைகளை ஆரம்பித்து 2011ம் ஆண்டு இறுதி வரை 05 கிளை நிலையங்களை ஆரம்பித்து நடத்தி வருகின்றது.

### கிடைக்கப்பெற்ற கொடைகள்

வடக்கின் துரித மீட்சித் திட்டம் 2010 நிதிமூலம் ரூபா 5 மில்லியன் பெறுமதியான தலைமை அலுவலகக் கட்டடம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்மூலம் ரூபா 1 மில்லியன் பெறுமதியான ஓர் உழவு இயந்திரம் என்பன கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் முயற்சியினாலும், அனுசரணையாலும் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கட்டடமானது கடந்த 24.04.2012இல் கௌரவ அமைச்சர் திரு கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் திரு ஜீ.ஏ.சந்திரசிறி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ,கே.அருந்தவநாதன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு ப.சீவரத்தினம் ஆகியோரால் இணைந்து திறந்துவைக்கப்பட்டது.

### இயக்குனர் சபை

கடந்த 24.03.2012இல் 11 கிளைகளுக்கான தெரிவு இடம்பெற்றதுடன், 15.05.2012இல் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்பட்டு புதிய இயக்குனர்சபைத் தெரிவும் இடம்பெற்றிருந்தது.

# வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனைக் கட்டட திறப்புவிழாவின்போது



சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனைக் கட்டடம்

# கற்பகதரு

## 40வது ஆண்டு விழா
## சிறப்பு மலர் அழகுற
## எமது நல்வாழ்த்துக்கள்





## போத்தற் கள் உற்பத்தி

சுகாதார முறைப்படி போத்தலில்
அடைக்கப்பட்ட சுவையான,
தரமான பனங்கள்.

## எதிர்காலத் திட்டங்கள்

- அங்கத்தவர்களுக்கான நலத்திட்டங்களை செயற்படுத்தல்.
- கிராமிய வங்கிச் சேவையை ஆரம்பித்து சேமிப்பு மற்றும் கடன் வழங்கல்களை மேற்கொள்ளுதல்.

## வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

(வரையறுள்ளது)



021 491 3754

இவ் இயக்குனர் சபையில், தலைவராக திரு க.அன்பழகன், உபதலைவராக திரு சு.சதீஸ்வரன், செயலாளராக திரு வ.நந்தகுமார், நிர்வாக உறுப்பினர்களாக திரு த.கோபிநாத், திரு சி.இராசரத்தினம், திரு அ.விபுலானந்தன், திரு மு.ஜெகதீஸ்வரன், திரு த.தீபன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**2013ம் ஆண்டுக்கான திட்டங்கள்**

01. மேலும் 02 கிளை நிலையங்களை ஆரம்பித்து நடத்துதல்.
02. போத்தறக்கள் உற்பத்தி நிலையத்தினை ஆரம்பித்து நடத்துதல்.
03. வெல்ல உற்பத்தி நிலையத்தினை ஆரம்பித்து நடத்துதல்.

## புழுக்கொடியல் மா பட்டர்

(செய்முறை)



**தேவையான பொருட்கள**

புழுக்கொடியல்மா- 100 கிராம்
கோதுமை மா - 400 கிராம்
சீனி - 500 கிராம்
பட்டர் - 500 கிராம்
முட்டை - 8
பேக்கிங் பவுடர் - 2 தேக்கரண்டி
வனிலா - 2 தேக்கரண்டி

**செய்முறை:** சீனியையும் பட்டரையும் நன்றாக அடிக்கவும். அதன்பின் முட்டையை ஒவ்வொன்றாகச் சேர்த்து மேலும் நன்றாக அடிக்கவும். பேக்கிங் பவுடரை கோதுமை மாவுடனும் புழுக்கொடியல் மாவுடனும் சேர்த்து மூன்றுமுறை அரிக்கவும். பின் இவற்றையும் வனிலாவையும் முன்னைய கலவையுடன் ஒன்றாகச் சேர்க்கவும். பட்டர் தடவிய (ட்றே) தட்டுக்களில் போட்டு 30 நிமிடங்களுக்குப் பேக் பண்ணவும்.வெப்பநிலை $350^0$f

## பனங்காய்ப் பலகாரம்

(செய்முறை)



**தேவையான பொருட்கள**

கோதுமை மா/அரிசிமா - 1 சுண்டு
பனம்பழம் - 3
பனம் சீனி - 1 1/2 கிலோ
உப்பு - சிறிதளவு
அப்பச்சோடா - 1 தே.கரன்டி
மஞ்சள் நிற தூள் - 1/2 தே.கரன்டி
தேங்காய் எண்ணெய் - 1/2 போத்தல்

**செய்முறை:** மாவை அரித்து ஒரு ஆழமான கோப்பைக்குள் போட்டு, அளவான உப்பைச் சேர்க்கவும். தேவையானளவு சீனியையும் பனங்களியையும் சேர்த்துக் கையினால் தூக்கினால் ஒரு தடித்த களியாக கீழே விழும் பதத்துக்கு வரும்வரை கலக்க வேண்டும். மஞ்சள் நிறத் தூளையும் அப்பச் சோடாவையும் சேர்க்கவும். ஆழமான தாச்சிச் சட்டியில் எண்ணெய் கொதித்ததும் கரண்டியினாலோ அல்லது விரல்களினாலோ கிள்ளி விரும்பிய அளவில் கொதிக்கும் எண்ணெய்க்குள் போடவும். பொன்னிறமாகும் வரை பொரிக்க வேண்டும். பின்பு வடித்து எடுத்து ஆறவைத்துப் பரிமாறலாம்.

# வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டத்தில் ஆரம்ப காலத்தில் இருபதுக்கும் அதிகமான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தபோதும் சில சங்கங்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு தற்போது பத்தொன்பது(19) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களாக செயற்பட்டு வருகின்றன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனிச் சங்கங்களாக ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்டபோதும் காலத்தின் தேவைக்கு ஏற்ப அதன் கட்டமைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டு ஆரம்பச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என பல்வேறு கட்டமைப்புக்களுடன் இன்னும் தலை நிமிர்ந்து அங்கத்தவர்களுக்கான சேவையில் முத்திரை பதித்துள்ளது எனலாம்.

இந்நிலையில் வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டி, பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும், வலிகாமம் கிழக்குப் பிரிவில் உள்ள அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தையும் உறுப்புரிமை பெற்ற சங்கங்களாகக் கொண்டு வடமராட்சிக் கொத்தணி என்ற அமைப்பு 1993இல் பதிவுசெய்யப்பட்டது.

வடமராட்சிக் கொத்தணியைப் போன்று யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் கொத்தணி, யாழ்ப்பாணம் கொத்தணி, தென்மராட்சிக் கொத்தணி என நான்கு கொத்தணிகள் பதிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வந்துள்ளன. இக்கொத்தணிகளில் வடமராட்சிக் கொத்தணியானது நாட்டின் அன்றைய சூழ்நிலைக்கு அமைவாக ஆரம்பச் செயற்பாடாக சோடா, கண்டோஸ், ஜாம் போன்றவற்றினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வந்தமையுடன், வடமராட்சிப் பகுதிச் சங்கங்களுக்கு இரண்டாம்படிச் சங்கத்துக்குரிய கடமைகளையும் மேற்கொண்டுவந்தது. இந்நிலையில் கொத்தணிகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும், யாழ்.மாவட்டம் உட்பட வெளி மாவட்டங்களிலும் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற கள்ளில் விற்பனை போக மிகுதியாகவுள்ள கள் அகற்றப்பட்டு வந்தமையால் (நிலத்தில் ஊற்றப்பட்டு) அக்கள்ளினை மாற்று உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துட னும், தொழிலாளர்களுக்கு நிலையான வருமானத்தினை ஈட்டிக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் பனஞ்சாராய வடிசாலைகள் தோற்றம்பெற்றன.

இந்நிலையில் கைதடி எனும் இடத்தில் 1984ம் ஆண்டு முதலாவது பனஞ்சாராய வடிசாலை ஒன்று அமைக்கப்பட்டது. கைதடியில் வடிசாலை அமைக்கப்பட்டமையினால் தொடர்ந்து வலிகாமப் பகுதியிலும் வலிகாமம் கொத்தணியால் வடிசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேளையில் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை போக மிகுதியான கள் ஊற்றப்பட்டு வந்தமையால் அங்கத்தவர்களின் பொருளாதாரக் கஷ்டத்துக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் வடிசாலைச் சமாசம் என்ற அமைப்பு தோற்றம் பெற்றது. இவ்வடிசாலைச் சமாசமானது அக்காலத்தில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளரும், அக்காலப் பகுதியில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் இருந்த திரு க.நடராசா அவர்களது முயற்சியினாலும், யாழ்.மாவட்டத்திலிருந்த உடுப்பிட்டி, பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர்களான திரு த.இராசலிங்கம், திரு க.துரைரத்தினம் ஆகியோராலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சிப் பகுதியிலுள்ள திக்கம் என்ற இடத்தில்

# வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி



கொத்தணியின் பணிப்பாளர் சபை



கொத்தணியின் பணியாளர்கள்

# கற்பகதரு
## 40வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்!




எமது கொத்தணியின் திக்கம் வடிசாலையின்
தயாரிப்பான தரமான

**திக்கம் ஸ்பெஷல் பனஞ்சாராயம்**

**Thikkam Special Palmyrah Arrack**

தற்போது 750ml, 375ml, 180 ml
ஆகிய அளவுகளில் கிடைக்கின்றன.

---

இனிவரும் காலங்களில் கள் மற்றும் பதநீர்
என்பன போத்தலில் அடைக்கும் தொழிற்பாட்டையும்
மேற்கொள்ளவுள்ளேம்

**வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி**

[illegible]

இராச கிராம வீதி,
நெல்லியடி.



021 321 2575

1983ம் ஆண்டு பனஞ்சாராய வடிசாலை ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வடிசாலையானது பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் யாழ். மாவட்ட வடிசாலைச் சமாசம் என்ற அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வந்தது.

வடிசாலைச் சமாசத்தினால் திக்கம் வடிசாலை செயற்படுத்தப்பட்டு வந்தபோது, 1987ம் ஆண்டில் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக திக்கம் வடிசாலையும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. வடிசாலைக்கு ஏற்பட்ட சேதம், மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வேண்டிய நிதிவளம் இல்லாத சூழ்நிலையில் அன்றைய காலச் சூழ்நிலைக்கும் பொருத்தமாக வடிசாலையினை பனை அபிவிருத்திச் சபையினூடாக திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டமைக்கு அமைய பனை அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் 1987இல் இருந்து 1990ம் ஆண்டு வரை திக்கம் வடிசாலையானது பனை அபிவிருத்திச் சபையின் நிர்வகிப்பின் கீழேயே செயற்பட்டு வந்தது.

இந்நிலையில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் செயற்பாடுகளில் கொத்தணி அமைப்பு முறை செயற்பட ஆரம்பித்தது. இவ்வேளையில் வடமராட்சி கொத்தணியினது செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன. வடமராட்சிக் கொத்தணியானது 1991களில் செயற்பட ஆரம்பித்தபோதும் 1993ம் ஆண்டிலேயே அது பதிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் 1992ம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபையானது திக்கம் வடிசாலையினை முழுமையாக வடமராட்சிக் கொத்தணியிடம் கையளித்தது. திக்கம் வடிசாலையினை 1992ல் வடமராட்சிக் கொத்தணி பெற்றுக்கொண்டதிலிருந்து வடிசாலையின் செயற்பாடுகள் வடமராட்சிக் கொத்தணியினால் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

வடமராட்சிக் கொத்தணியினால் நிர்வகிக்கப்பட்டுவந்த திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாராயம், கோல்ட்சேர்கிள், விகர், விசேட விகர், பிரண்டி ஆகிய உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்ட சாராயத்துக்கு பெரும்வரவேற்பு காணப்பட்டது. இந்நிலைமை காரணமாக சீவல் தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கள் முழுவதுமே சாராயமாக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டமையினால் தொழிலாளர்களும் சிறந்த வருமானத்தைப் பெற்று மகிழ்வுடன் வாழ்க்கையை நடாத்தி வந்தனர். இந்நிலையில் 2001ம் ஆண்டு திக்கம் வடிசாலையினை பனை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றுக்கொண்டது.

திக்கம் வடிசாலையானது ஆரம்பத்தில் வடிசாலைச் சமாசத்தினால் ஆரம்பிக்கப்பட்டமையினால் அதன் உரிமம் அங்கத்தவர்களுக்கே உரித்தானது என்ற வகையில் வடிசாலையினை மீண்டும் கொத்தணியிடம் ஒப்படைக்கவேண்டுமென தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்த கோரிக்கைகள், போராட்டங்கள் காரணமாக 10.04.2008இல் வடமராட்சிக் கொத்தணியிடம் திக்கம் வடிசாலை கையளிக்கப்பட்டது. இன்றும் வடமராட்சிக் கொத்தணியினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

வடமராட்சிக் கொத்தணியானது தனது செயற்பாடுகளில் சவுக்கு மரம் வளர்ப்புத் திட்டம், பனம் விதை நடுகைத் திட்டம் என்பவற்றினை மேற்கொண்டு வந்துள்ளது.

இக்கொத்தணியின் ஆரம்ப காலத் தலைவராக திரு மா.பரஞ்சோதி அவர்களும், பொது முகாமையாளராக திரு பொ.சத்தியமூர்த்தி அவர்களும் கடமையாற்றியுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து தலைவர்களாக திரு மா.தர்மலிங்கம், திரு தே.அந்தோனிப்பிள்ளை, திரு வ.முருகேசு, திரு கோ.குணசிங்கம், திரு க.செந்தில்வேல், திரு ச.வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற கூட்டுறவு ஆணையாளர், நியமனத் தலைவர்), திரு வி.ஸ்ரீராமச்சந்திரா, திரு கா.குணராசா, திரு த.தேவகுமார் (ஆசிரியர்), ஆகியோரும் திரு சி.சிவகுமார் அவர்கள் இன்றுவரை கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

பொதுமுகாமையாளர்களாக திரு பொ.சத்தியமூர்த்தி, திரு கி.சிவனேசன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), திரு க.பரமேஸ்வரன், திரு த.இராசரத்தினம், திரு வ.இராசலிங்கம், திரு கி.பூபாலன், திரு சு.ஸ்ரீகாந்த், திரு மு.நவநேசன் ஆகியோர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## தோற்றமும் வளர்ச்சியும்

பல்லாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக கள் உற்பத்தி தொழிலை மேற்கொண்டு வந்த பனம் தொழிலாளர்கள் சமூக பொருளாதார, கல்வி கலாச்சார நடவடிக்கைகளில் பின்தள்ளப்பட்ட நிலையில் தமது ஜீவனோபாயத்தை நடாத்தி வந்தனர். இவர்களது ஜீவனோபாயத் தொழிலாகிய சீவல் தொழில் கூடுதலான உடல் வலுவைப் பயன்படுத்தி குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற பேராபத்து மிகுந்த முயற்சியாகவும் இருந்தது. 1972க்கு முன்னர் இருந்த மரவரி முறையின்கீழ் கள் உற்பத்தி தொழிலை மேற்கொண்டுவந்த இவர்களது உழைப்பு மரச்சொந்தக்காரர்களாலும், முதலாளிகாலும், சுரண்டப்பட்டு வந்தமையாலும் இவர்கள் முன்னேற முடியாத நிலையிலும் ஒதுக்கப்பட்ட நிலையிலும் நசுக்கப்பட்டு வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் 1970ம் ஆண்டுகளில் இருந்து இடதுசாரி சிந்தனையுடைய முற்போக்காளர்களினதும் 1972ம் ஆண்டு ஆட்சியில் இருந்து ஐக்கிய முன்னணி அரசில் நிதி அமைச்சராக இருந்த டாக்கடர் என் எம் பெரேரா அவர்களின் சிந்தனையின் காரணமாக வடபகுதியில் வாழ்ந்த சீவல் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு கூட்டுறவு முறையின்கீழ் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் உதயமாகியது.

இச் சங்கங்களில் ஆரம்பத்தில் நியமனத் தலைவர்கள் நியமிக்கப்பட்டு இவற்றை வழிநடத்தி வந்தனர். சங்கங்கள் வளர்ந்து வரும் நிலையில் நியாயமான தலைமுறை மாற்றம் பெற்று அங்கத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களே தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டுமென அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக சங்கத்தின் தலைமைப் பொறுப்பு அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் சங்கங்களில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. இச் செயற்பாடுகளில் ஒன்றாகவே கூட்டுறவு வடிசாலை முறைகள் ஆரம்பமாகியது.

1987,1988, ஆண்டுகளில் வலிகாமம் பகுதிகளில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் மிதமிஞ்சிய கள்ளை விற்பனை செய்யமுடியாமல் திண்டாடிய வேளையில் சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கத்தின் அப்போதைய தலைவர் அமரர் திரு சு.நடேசு, பொதுமுகாமையாளர் க.செல்வராசா மற்றும் நெறியாளர் குழுவினரின் அயராத முயற்சியின் காரணமாக அச் சங்கம் தனது சொந்த முயற்சியாக சிறிய அளவில் கள்ளைப் பயன்படுத்தி மதுசார உற்பத்தியில் ஈடுபட்டு சாராய உற்பத்தி செய்தது. இம் முயற்சி வெற்றி அளித்ததன் காரணமாக 1988ம் ஆண்டு சித்திரை மாதம் 08ம் திகதி அமரர் திரு.சு.நடேசு அவர்களின் வழிகாட்டலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.ச.வேலாயுதம்பிள்ளை அவர்களின் ஒத்துழைப்புடன் சங்கானை, தெல்லிப்பளை, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய சங்கங்கள் இணைந்து 'சங்கானை வடிசாலை சமாசம்' என்ற பெயரில் இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு குறித்த சங்கங்களின் மித மிஞ்சிய கள் கொள்வனவு செய்து மதுசார உற்பத்தி செய்து அதிலிருந்து சாராய உற்பத்தி விற்பனை நடவடிக்கை ஆரம்பமாகியது.

இதன் முதல் தலைவராக திருவாளர் திரு சு.நடேசு அவர்களும், உபதலைவராக திரு க.இரத்தினம் அவர்களும், செயலாளராக திரு ச.வ.சின்னையா அவர்களும், இவர்களுடன் மேலும் 06 நெறியாளர் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இதன் பகுதி நேர முகாமையாளராக திரு என் ரவுடேந்திரன் என்பவர் நியமிக்கப்பட்டார். இப்பகுதிச் சங்கங்களின் பனந்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதிலும், வடிசாலையின் ஆரம்ப நடவடிக்கை

களையும் அதன் உற்பத்தி திறனையும், மேம்படுத்திய இவரது சேவை அளப்பரியதாகும். தொடர்ந்து சுன்னாகம் சங்கப் பொதுமுகாமையாளராக இருந்த திரு ஜே.பி.குணரட்ணம் அவர்கள் பகுதிநேர பொதுமுகாமையாளராக பொறுப்பேற்று வடிசாலை ஆரம்பத்தில் அதன் செயற்பாடுகளில் உரிய பகுதிகளுடன் தொடர்புகொண்டு முன் எடுப்பதிலும் இவர்களாற்றிய பணி மகத்தானதாகும்.

இந் நிறுவனம் ஆரம்பத்தில் அங்கத்துவ சங்கங்களிடமிருந்து கள், லோவைன் என்பவற்றைப் பெற்று அதனை செறிவு கூடிய மதுசாரமாக உற்பத்தி செய்து அதிலிருந்து சாராயம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் அங்கத்துவ சங்கங்களில் மீதமாகும் கள் வீணே நிலத்தில் ஊற்றப்படாது அங்கத்தவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் கள் முழுவதற்கும் உரிய பெறுமதி முழுமையாக வழங்கக்கூடிய நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டது. இதனால் அங்கத்தவர்கள் பொருளாதார ரீதியில் முன்னேறக்கூடிய நிலை ஏற்பட்டதுடன் சங்கங்களும் இலாபத்தில் இயங்கி தமது செயற்பாடுகளால் முன்னேற்றம் காணக்கூடிய நிலை ஏற்பட்டது.

இந் நிறுவனத்தின் இரண்டாவது தலைவராக திரு.ஐ.செல்வராசா அவர்களும், செயலாளராக திரு.சி.கந்தசாமி அவர்களும் 1989.09.12ல் தெரிவு செய்யப்பட்டு இந்நிறுவனத்தை திறம்பட இயக்கி வந்தனர். இக்காலப்பகுதியில் மதுசார உற்பத்தி, சாராய உற்பத்தி விற்பனையுடன் பனங்களி, பனாட்டு, புழுக்கொடியல் என்பவும் உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தது. குறித்த இக்காலப்பகுதியில் இந் நிறுவனமானது தனது செயற்பாடுகள் மூலம் பெரியளவில் தேறிய இலாபமாக ஈட்டியமை குறிப்பிடத்தக்கது.

1991.03.14 தொடக்கம் தலைவராக திரு.சி.அன்னலிங்கம் அவர்களும் உபதலைவராக திரு.மு.நாகேஸ்வரநாதன் அவர்களும் செயலாளராக திரு அ.முடியப்பு அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இக்காலப் பகுதியில் திரு க.மகேஸ்வரன் அவர்கள் சமாசப் பதில் பொது முகாமையாளராகவும் அதனைத் தொடர்ந்து 1991ம் பங்குனி மாதம் தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளரான திரு கா.சிவஞானம் அவர்கள் பகுதிநேரப் பொதுமுகாமையாளராகப் பொறுப்பேற்று 1992 புரட்டாதி வரை கடமையாற்றினார்.

இக்காலப்பகுதியில் இந்நிறுவனமானது மதுசார உற்பத்தி விற்பனையுடன் அங்கத்துவ சங்கங்களிடமிருந்து பாணி கொள்வனவு செய்து பனம் சீனி, பனங்கட்டி என்பனவும் உற்பத்தி விற்பனை செய்யப்பட்டது. இக் காலப்பகுதியில் 'சங்கானை வடிசாலை சமாசம்' என அழைக்கப்பட்ட இந் நிறுவனம் சங்கானை வடிசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என 1991ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1990,1991 ஆண்டுகளில் முறையே பண்டத்தரிப்பு, கோண்டாவில் ஆகிய ப.தெ.வ.அ.கூ.சங்கங்களும் இந் நிறுவனத்தில் அங்கத்துவ சங்கமாக இணைந்து கொண்டன. இக்காலப் பகுதியில் திரு சி.இ.இராசநாயகம் அவர்கள் 1991 புரட்டாதி மாதம் தொடக்கம் செயலாளராக கடமையாற்றினார்.

1992ம் ஆண்டு அங்கத்துவ சங்கங்களில் இருந்து 2270000 போத்தல் கள்ளும், 10000 போத்தல் கழிவு பாணியும், 88000 போத்தல் லோவைனும் கொள்வனவு செய்து மதுசார உற்பத்தியில் ஈடுபட்டதுடன் 82000 போத்தல் தரமான பாணி கொள்வனவு செய்து பனம் சீனி,பனம், வெல்லம், கல்லாக்காரம் போன்றவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டது. இந் நடவடிக்கைகளில் திரு.க.குமாரசாமி மறைந்த ஆ.பொ.செல்வராஜன் அவர்களும் சீனி தொழிற்சாலை முகாமையாளராக கடமையாற்றியமை நினைவுகூரத்தக்கது.

சங்கானை வடிசாலை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என அழைக்கப்பட்ட இந்நிறுவனம் வலிகாமம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி எனப்பெயர் மாற்றம் பெற்றுக் கொண்டது. இவ் ஆண்டிலேயே கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.வளம், வடபிராந்தியம்) ஆக இருந்த திரு.தி.சபாரத்தினம் அவர்களது வழிகாட்டலில் வைத்திய பேரறிஞர் திரு க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆலோசனையுடன் சித்த வைத்திய மருந்து உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக 'கோபாம் மருந்தகம்' என்னும் பெயரால் சித்த வைத்திய மருந்து உற்பத்தி விற்பனை நிலையம் சித்தங்கேணியில் கொத்தணியால் ஆரம்பிக்கப்பட்டு திறம்பட இயங்கி வந்தது. இக் 'கோபாம்' மருந்தகமே 1993ம் ஆண்டு அனைத்து பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் அங்கம் வகிக்கும் சித்த

மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கப்பட்டு தற்போது யாழ். மாவட்ட சித்த மருந்துக்கள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இக்காலப் பகுதியில் வடலியடைப்பு மானிப்பாய் ஆகிய இடங்களில் கொத்தணிக்கு காணி கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1992ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சுன்னாகம் சங்கப் பொதுமுகாமையாளர் திரு மு.வேலையா அவர்கள் பகுதிநேர பொதுமுகாமையாளராக கடமையாற்றினார். 1993 தை மாதம் முதல் சட்டத்தரணி திரு.நா.தம்பிமுத்து அவர்கள் பதில் பொதுமுகாமையாளராக கடமைப் பொறுப்பேற்று கடமையாற்றினார். தொடர்ந்து கொத்தணிக்கு நிரந்தர பொதுமுகாமையாளர் இல்லாத குறையை நீக்கும் பொருட்டு கோண்டாவில் சங்கப் பொதுமுகாமையாளராக இருந்த அமரர் க.சந்திரராசா அவர்கள் கொத்தணியின் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டு 1995ம் ஆண்டு ஐப்பசி மாதம் அவரது இறுதி மூச்சு ஓயும் வரை கடமையாற்றினார். இவரது கடமைக் காலத்தில் இந்நிறுவனம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் நிதி ஆண்டு மார்கழி 31 எனவும் துணை விதி மாற்றம் செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் இதுவரை காலமும் சங்கானை வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த இதன் தலைமைக் காரியாலயம் இதே ஆண்டு மார்கழி 9ம் திகதி தொடக்கம் மானிப்பாயிலுள்ள சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதுடன் அதனுடன் இணைந்த வள ஆய்வு கூடம், படிப்பகம் என்பனவும் அமைக்கப்பட்டது.

மேலும் வடிசாலையை சொந்தக் காணியில் நிர்மாணிப்பதற்கு 1993, 1995ம் ஆண்டுகளில் நவாலியில் இரு காணி கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு காணியில் வடிசாலைக்கான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வடிசாலை இயங்கி வருகின்றது. அடுத்த காணியில் 'பனம் தொழில் பல்தொழில் பேட்டை' நிறுவப்பட்டது. தற்பொழுது இவ் இடத்தில் சாராயம் போத்தலில் அடைக்கும் நிலையம் களஞ்சியம் என்பனவும் இயங்கி வருகின்றது. பொதுமுகாமையாளர் க.சந்திரராசா காலப்பகுதியில் அங்கத்தவரின் சமூக மேம்பாடு கருதி மகளீருக்கான வகுப்புக்கள் நடாத்தப்பட்டதுடன் பன்னவேலை, உற்பத்தி நிலையம், தையல் நிலையம், சித்த மருந்து விற்பனை நிலையம் என்பவற்றை அமைத்து மகளீருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. 1994ம் ஆண்டு அங்கத்துவ சங்கங்கள் சார்ந்த உறுப்பினர்களுக்கு மாவட்டக் கூட்டுறவுச்சபையுடன் இணைந்து தொடர் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றிய வர்களே இன்று கொத்தணியிலும் சங்கங்களிலும் தலைவர்களாகவும், நிர்வாக உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் 1993 வைகாசி தொடக்கம் 1995 தை வரை சி.கந்தசாமி என்பவர் தலைவராகவும் உபதலைவராக திரு.இ.இராசநாயகம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றினர். 1995 தை தொடக்கம் தலைவராக நா.கணேசன் அவர்களும் உபதலைவராக க.கந்தசாமி அவர்களும் செயலாளராக மீண்டும் நா.கணேசன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். 1994ல் க.சந்திரராசா எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியின் காரணமாகவும் பணியாளர்களின் ஒத்துழைப்புடனும் அங்கத்துவ சங்கங்களில் இருந்து 32965059 போத்தல் கள்ளும் 85560 போத்தல் லோவைனும் கொள்வனவு செய்யப்பட்டு 2084147 போத்தல் மதுசாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இதிலிருந்து 491000 போத்தல் சாரயம் உற்பத்தி செய்யபட்டு விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் இவ்வாண்டில் மிகப் பெரியளவில் தேறியலாபம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அங்கத்தவர்களின் சமூக பொருளாதார மேம்பாடு கருதி 1995ம் ஆண்டு பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களின் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் அங்கத்தவர்கள் வழங்கும் கள்ளிற்கு தாமதித்த கொடுப்பனவாக 1995ம் ஆண்டு காலப்பகுதியில் 1100000/- அங்கத்துவ சங்கங்கள் மூலம் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் எமது தமிழ் மக்களின் மனங்களை விட்டு மறக்க முடியாத நிகழ்வாக 1995 ஐப்பசி மாதம் இடப்பெயர்வின்போது கொத்தணியின் சோக நிகழ்வாக எமது பொதுமுகாமையாளர் க.சந்திரராசா அவர்கள் எம்மை விட்டு மறைந்தார். அப்போது பதில் பொதுமுகாமையாளராக க.இராசையா

அவர்கள் பொறுப்பேற்றார்.

இக்காலத்தில் எமது கொத்தணியினது தலைமைக் காரியாலயம் சரசாலையில் உள்ள சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சீனி ஆலை கட்டடத்திலும், வடிசாலை வறணியிலும் இயங்கியது. இவ் இடம் பெயர்வின்போது எமது நிறுவனத்தை இயங்குவதற்கு உதவி புரிந்த சக கூட்டுறவு நிறுவனங்களான சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம், கொடிகாமம் ப.தெ.வ. அ.கூ.சங்கம், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச கொத்தணி என்பன வலிகாமம் கொத்தணியை அரவணைத்து இடங்கள் தந்து உதவியமை குறிப்பிடத்தக்கது. இடப் பெயர்வு காரணமாக தென்மராட்சி பகுதியில் எமது நிறுவனம் இயங்கி வந்தபோது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைக ளினால் மீண்டும் சொந்த இடத்திற்கு 1996ல் நிறுவனத்தின் சொத்துக்களுடன் உடமைகளு டன் பலத்த சிரமங்களின் மத்தியில் ஓரளவிற்கு கொண்டுவரப்பட்டது. பிரதான களஞ்சியம் இரு ந்த சரசாலைப் பகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் எமது சொத்துக்களும், பொருள் இருப்புகளும் எம்மால் பாதுகாக்காத நிலை ஏற்பட்டது. இதனால் 6510036/- இழப்பு ஏற்பட்டது. இந்நிலையிலும் எமது சீவல் தொழி லாளர்களினதும், அங்கத்துவ சங்கங்களினதும் நிலையினைக் கருத்தில் கொண்டு நவாலியில் உள்ள காணி கட்டிடத்தில் மீண்டும் வடிசாலை அமைக்கப்பட்டு 1997ல் இருந்து இயங்கத் தொட ங்கியது. இதே ஆண்டில் ப.தெ.வ.அ.கூ. சங் கங்களின் வெள்ளிவிழா சேவை நிறைவு கண்ட அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 1998ம் ஆண்டு 5ம் மாதம் 27ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவராக மீண்டும் திரு நா.கணேசன் அவர்களும் உப தலைவராக மு.நாகேஸ்வரநாதன் அவர்களும் செயலாளராக திரு க.பாலராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். 1999.06.02ல் திரு செ.செல்வராசா அவர்கள் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். 2001.09.05 வரை இவரே தொட ர்ந்தும் சேவையாற்றினர். 1998ம் ஆண்டு அங் கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு அங்கத்தவர்களுக் கான ஓய்வு, மரணக் கொடுப்பனவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்துடன் அங்கத்தவர்களு க்கான சங்கங்களின் அனுசரணையுடன் நடை பெறுகின்ற முன்பள்ளிகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் உடல்வள நலனைக் கருத்தில் கொண்டு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இம்முன் னெடுப்புக்களும் தலைவர் திரு நா.கணேசன் அவர்களினதும் நெறியாளர் குழுவினதும் தனித் துவமான செயற்பாடுகள் ஆகும். இவ்வாண்டு எமது நடவடிக்கைகளுக்கு சட்டப்படியான அனு மதிப்பத்திரம் முதன் முதலாக கிடைக்கப்பெற் றதும் குறிப்பிடத்தக்கது.

1999ம் ஆண்டு எமது வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாரய வகைகள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு அதிகமாக விற் பனை செய்யப்பட்டதுடன் கொழும்பில் சாராய பாவனையாளரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண் டது. இதன் காரணமாக கொழும்பு சாராய உற் பத்தியாளர்களின் உற்பத்திகள் போட்டியை எதிர் கொண்டன. இந்நிலையில் தனியார் வடிசாலை களின் முறையற்ற செயல்கள் காரணமாக தொட ர்ந்து கொழும்பிற்குச் சாரயம் அனுப்புவதில் தடங்கல் ஏற்பட்டது. இவ்வாண்டில் முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங் கும் திட்டத்தின் கீழ் அங்கத்துவ சங்கங்களின் அனுசரனையுடன் நடாத்தப்படுகின்ற முன்பள்ளி களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவச சீரு டைத்துணி வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வு களும் நடாத்தப்பட்டன. கொத்தணிக்கான ஆள ணியை திரட்டுவதற்கான அங்கீகாரம் கூ.அ.உ. ஆணையாளர் (வ.கி) அவர்களினால் அங்கீகரிக் கப்பட்டது.

இவ்வாண்டில் இறுதிப்பகுதியில் வடிசா லைக்குத் தேவையான பொருட்கள் கொழும்பில் இருந்து 'மாகோ' கப்பலில் கொண்டுவரப்பட்ட போது கப்பல் கடலில் மூழ்கியமையால் ரூபா 2142278.42 கொத்தணிக்கு இழப்பு ஏற்பட்டது. இதனைப் பெறுவதற்கு பல தடவைகள் முயற்சி செய்தும் இன்றுவரையும் கிடைக்கவில்லை. வடி சாலையில் மதுசாரம் களஞ்சியப்படுவதற்கு கள ஞ்சியக் கட்டிடம் வசதி இல்லாத காரணத்தால் 2000ம் ஆண்டு ஆரம்பத்தில் புதிய களஞ்சியக் கட்டடம் அமைக்கப்பட்டது.

2006.06.12 தொடக்கம் திரு க.சுதாகரன் கொத்தணியின் பதில் பொதுமுகாமையாளராக கடமையேற்ற பின் கொத்தணியின் செயற்பாடு களை முன்னெடுப்பதில் பல இடையூறுக் நெருக் கடிகள் ஏற்பட்டபோதும் தலைவர் திரு நா.கணே சன் அவர்களினதும் நெறியாளர்

குழுவினதும் கடின ஒத்துழைப்புக் காரணமாக கொத்தணியின் செயற்பாடுகளும் கொத்தணி மேற்கொண்டுவரும் சமூக நலமேம்பாட்டுத் திட்டங்களும் விரிவு படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். 2000ம் ஆண்டில் மதுசாரம் களஞ்சியப் படுத்துவதற்கு வசதியான வெள்ளிரும்புக் கொள்கலன்கள் 6,000 போத்தல் கொள்ளளவில் 3உம், 12,000 போத்தல் கொள்ளளவில் 1உம் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டதுடன், ஸ்தாபகத் தலைவர் அமரர் சு.நடேசு மறைந்த பொதுமுகாமையாளர் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் சேவையைக் கௌரவித்து நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டது.

2001.09.06ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைவராக திரு க.மெய்யழன் அவர்களும் உபதலைவராக திரு க. இராசரத்தினம் அவர்களும் செயலாளாக திரு. சி. இராசமூர்த்தி அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் வடிசாலையினதும் கொத்தணியினதும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் 2000 ஆண்டில் இருந்து பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுசாரம் களஞ்சியப்படுத்துவதற்கும் மதுசாரம் பயன்படுத்துவதற்கும் 9000 லீற்றர் கொள்ளவுடைய 4 வெள்ளிரும்புக் கொள்கலன்களும் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டமையும், வடிசாலை களஞ்சியம் ஆகிய இடங்களுக்கு கலால்வரிச் சட்டத்திற்கமைய சுற்றுமதில் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். சாராய உற்பத்தி சீராக மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. அத்துடன் அங்கத்தவர் ஓய்வு மரணக் கொடுப்பனவுத் தொகைகள் அதிகரிக்கப்பட்டது. முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் தொகைகள் அதிகரிக்கப்பட்டது. முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தை எக்காலமும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திட்டத்தின் பெயரில் நிலையான வைப்பு செய்யப்பட்டமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

அத்துடன் ஆளணித் திரட்டிற்கமைய 2001ல் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பணியாளர்கள் நிரந்தர நியமனம் செய்யப்பட்டு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் ஆளணி நியமனம் அங்கீகாரம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் இயங்கி வருகின்ற கூட்டுறவு நிறுவனங்களிலே கூட்டுறவுக் கொள்கைக்கமைய அங்கத்தவர்களுக்கான சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை திறம்பட நடாத்தி வருகின்ற எமது கொத்தணியானது மேலும் பல புதிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 23.01.2003ல் நடைபெற்ற பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவையாவன.

- அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களினதும் பணியாளர்களினதும் கொத்தணிப் பணியாளர்களினதும் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கல் திட்டம்.
- அங்கத்தவர், பணியாளர் இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்.
- பணியாளர்களின் நலன்புரித் திட்டம்
- முன்பள்ளி மாணவர், ஆசிரியர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்
- முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவு வழங்கல் திட்டத்தின் கீழ் மேலும் முன்பள்ளிகள் இணைக்கப்பட்டன. (தற்போது 69 முன்பள்ளிகள் இத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.)

இவ் நிறுவனங்களை நம்பி வாழ்கின்ற அங்கத்தவர் பணியாளர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அங்கத்தவர், பணியாளர் மருத்துவ பரிசோதனைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்கென ரூபா 10 லட்சம் நிலையான வைப்பில் இத் திட்டத்தின் பேரால் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அங்கத்தவர் பணியாளர்களின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக புலமைப் பரிசில் திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கென 20 லட்சம் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டு அதன் வட்டியை பயன்படுத்தி 5ம் தரம் புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கும், க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்து உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கும், உயர்

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி



கொத்தணியின் பணிப்பாளர் சபை



கொத்தணியின் பணியாளர்கள்

## வரலாற்றுப் பதிவுகள்



சமாசம் நடத்திய 89வது சர்வதேச கூட்டுறவுதின விழா போட்டியில் சிறந்த கொத்தணித் தெரிவில் 1ம் இடம்பெற்றபோது




கொத்தணியின் ஸ்தாபகத் தலைவர்களின் நினைவுத்தூபி

கல்வியில் சித்தியடைந்து பட்டம் பெற்ற மாண வர்களுக்கும், புலமைப் பரிசில் வழங்கி வருகின் றது. இவை போன்று அங்கத்துவ சங்கங்களி னதும் கொத்தணியிலும் பணிபுரிகின்ற பணியா ளர்களின் நலனை மேம்படுத்தும் முகமாக பணி யாளர் நலன்புரித் திட்டம் உருவாக்கப்பட்டு செயற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

27.01.2005ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவராக இ.செல் வரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் உபதலைவராக திரு ப.குமாரவேலு செயலாள ராக பெ.தேவராசா ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர். இக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக எமது தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் நல்ல விலையில் முழுமையாக விற்பனை செய் யப்பட்டதால் நிறைந்த வருமானம் கிடைக்கப் பெற்று அதன் மூலம் பனம் தொழில் வல்லுனர் களுக்கு கூடுதல் கொடுப்பனவு வழங்கியதுடன் நலத்திட்டம் தொடர்பான வைப்புக்கள் செய்யப் பட்டதுடன் அங்கத்துவ சங்கங்களினால் நடாத் தப்படுகின்ற முன்பள்ளி மாணவர்களுக்கு மேலத் தேய இசைப்பயிற்சி அளிக்கும் முகமாக பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்து வழங் கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்க தாகும். கடந்த 2004,2005ம் ஆண்டுகளில் பல இடையூறுகள் காரணமாக சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோதும் அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங் களோ எவ்வித நிதி உதவியும் செய்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இடைவிடாத எமது திட்டமிட்ட செயல்பாடுகளில் நடாத்தி பெறப்படும் நிதியில் இருந்தே பல நெருக்கடிகள் இடையூறுகள் மத்தியில் சிறப்பாக நடாத்தி வரு கின்றோம்.

16.02.2008ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவராக க.மெய்ய முகன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக திரு ப.குமாரவேலு செயலாளராக பெ.தேவராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட் டனர். இக்காலப் பகுதியில் மதுசாரம் களஞ்சியப் படுத்துவதற்கு 12000 போத்தல் கொள்ளளவு டைய இரண்டு வெள்ளிரும்புக் கொள்கலன்கள் புதிதாக செய்யப்பட்டதுடன், வடிசாலை போத்தலடைப்பு நிலையம் ஆகிய இடங்களுக்கு நிரந்தர மின் இணைப்பு பெறப்பட்டது. மேலும் கடந்த காலத்திலுள்ள நலத்திட்டங்களுடன் கொத்தணியில் பணிபுரியும் பணியாளர்களின் நலன்கருதி கொத்தணிப் பணியாளர் நலத்திட் டத்திற்கென ரூபா 1000000/- ஒதுக்கம் செய்யப் பட்டு நிலையான வைப்பு செய்யப்பட்டதும் குறிப் பிடத்தக்கது. கொத்தணியின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன்,

1. எரிபொருள் நிரப்பு நிலையம்.
2. விருந்தினர் விடுதி உயர் மதுபான விற் பனை நிலையம்.

என்பன அமைப்பதற்கான முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டது. கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாவ னைக்கென குளர்சாதனப் பெட்டி வழங்கப்பட்ட துடன் துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கு நிதியும் வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் பொதுமுகாமையாளராக திரு க. சுதாகரன் அவர் கள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீ காரம் 01.01.2008ல் நிரந்தர பொதுமுகாமையாள ராக நியமிக்கப்பட்டார்.

2004,2005ம் ஆண்டுகளில் பல இடை யூறுகள் காரணமாக மந்தமாக இருந்த எமது சாராய உற்பத்தி, விற்பனை 2006, 2007ம் ஆண்டு களில் அதிகரித்த நிலையில் விற்பனை நடை பெற்றமையால் கிடைக்கப்பெற்ற மேலதிக வரு மானத்தில் இருந்து சமூக நலமேம்பாட்டுத் திட்ட ங்களுக்கு என ஒதுக்கம் செய்து அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு மர ணக் கொடுப்பனவுத் திட்டத்தின் கொடுப்பனவு காலத்திற்கு காலம் அதிகரிக்கப்பட்டு 01.01.2009ன் பின்னரும் தொழில் புரிந்து ஓய்வு பெறுகின்ற அங்கத்தவர்களுக்கு ரூபா 17000/- இயற்கை மரணம் அடைந்தவர்களுக்கு ரூபா 17000/- வீதம் விபத்து மரணம் அடைந்தவர்க ளுக்கு ரூபா 40000/- அதிகரித்த கொடுப்பனவு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் நிரந்தரப் பாதிப்படைந்த இயலாமைக்கு உட் பட்டவர்களுக்கு ரூபா 20000/- வீதம் வழங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

06.08.2011ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவராக செ.செல் வராசா அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் உபதலைவராக திரு ப.தவராசா செயலாளராக கி.உமாசுதன் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர். கடந்தகால நிர்வாகங்களின் செயற்பாடு களின் தொடர்ச்சியாக புதிய

நெறியாளர் குழுவின் ஒத்துழைப்புடன்,

1. கள் போத்தலில் அடைக்கும் தொழிற் சாலையும் களஞ்சியமும் அமைக்கப் பட்டுவருகின்றது.
2. புதிய பாரஊர்தி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
3. வடிசாலையில் மதுவரிக் கட்டளைச் சட்ட த்திற்கமைய கலால் பகுதியினருக்கான தங்குமிடம் அமைக்கப்பட்டு நிறைவடைந் துள்ளது.
4. அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்க ளுக்கான ஓய்வு மரணக் கொடுப்பனவுத் திட்டம். அங்கத்துவ சங்கங்களின் உறுப் பினர்களுக்கான ஓய்வூதிய நலத்திட்ட மாக பொதுச்சபையினால் மாற்றம் செய் யப்பட்டது.
5. கொத்தணிப் பணியாளர்களக்கான நலன் புரித்திட்ட நடைமுறைவிதி பொதுச்சபை யினால் அங்கீகரிக்கப்பட்டது.

கூட்டுறவுத் தன்மை கூட்டுறவு மத்தியில் கூட்டுறவு என்னும் அடிப்படையில் சர்வதேச கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றான கூட்டுற வுக்கு மத்தியில் கூட்டுறவு என்னும் அடிப்ப டையில் அங்கத்துவ சங்கங்களினால் உருவாக் கிய இக்கொத்தணியின் சகல செயற்பாடுகளும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து ஒன்றாக முன்னெடுப்பதும் ஏனைய கூட்டுறவு நிறுவனங் களுக்கும் முன்னுதாரணமான செயற்பாடாக அமைகின்றது. அவ்வகையில் வருடாந்தம் கூட்டு றவுதின விழாவினையும் அது தொடர்பாக அங் கத்தவர், மகளீர், பணியாளர், முன்பள்ளி ஆசிரி யர்கள், போன்றவர்களுக்கு இடையில் பேச்சு, கவிதை, கட்டுரை, போன்ற போட்டிகளையும் அங்கத்துவ சங்கங்களிடையே கயிறு இழுத்தல், வினாடிவினா, தாச்சி, சிறந்த சங்கத் தெரிவு ஆகிய போட்டிகளை நடாத்துவதுடன் அவற் றிற்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களையும் வழங்கி போட்டியாளர்களை ஊக்குவிப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வகையில் இவ்வருடமும் இவ ற்றை ஏற்பாடு செய்து நடாத்தி சர்வதேச கூட்டு றவுதின விழாவையும் ஸ்தாபகத் தலைவர் நினைவு தினத்தையும் ஒக்டோபர் 31ம் திகதியில் சிறப்புற நடாத்துவதும் சிறப்பிற்குரியதாகும்.

பானை வடிசாலை முறையில் எமது வடி சாலை இயங்குகின்ற போதும் இப்பகுதியில் பணிபுரிகின்ற பணியாளர்களின் அனுபவ ரீதியான வினைத்திறன் காரணமாக மதுசாரம், சாராயம் என்பன தரமான முறையில் உற்பத்தி செய்து ஏனைய வெளிநாட்டு மதுபானங்களுடன் போட் டியிட்டு விற்பனை செய்து வந்தோம். ஆனால் தற்போது போட்டிப் பொருளாதாரச் சந்தையில் எமது உற்பத்திகளின் தரத்தினை மேலும் உயர் த்துவதற்கு நவீன வடிசாலைப் பொறித் தொகுதி நிர்மானிக்கப்பட வேண்டியது இன்றியமையாத தாகும். இதனை நன்கு உணர்ந்து புதிய நவீன வடிசாலைப் பொறித் தொகுதி நிர்மானிப்பதற்கு தற்போதைய நெறியாளர் குழுவும், பணியாளர் களும், அங்கத்துவ சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களும், இணைந்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

அங்கத்துவ சங்கங்களின் நெருக்கடிக ளைத் தீர்க்கும் முகமாக போத்தலில் கள்ளை அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்ப தற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதும் குறிப் பிடத்தக்கது.

எமது நிறுவனத்தின் படிமுறை வளர் ச்சிக்கு தங்கள் கடமைக் காலத்தில் அயராது பாடுபட்டு உழைத்த தலைவர்கள், நெறியாளர் குழுவினர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியா ளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் வளர்ச்சி யில் பெரும் பங்கு உண்டு என்பது குறிப்பிடத் தக்கது.

# தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

ஆரம்பத்தில் தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் கூட்டு றவுச் சங்கங்களின் வடிசாலை என்ற பெயரில் 1987ம் ஆண்டில் சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இடையில் ஏற்பட்ட வன்செயல் பாதிப்புக்களால் உற்பத்தியில் செயல் இழந்துள்ளது.

பின்பு 1990ம் ஆண்டின் முற்பகுதியில் மேற்படி சமாசம் தென்மராட்சி கிழக்கு தெ.ப. பொ.கூ.சங்கத் தலைவர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம் பொருள்) ஆகி யோரின் முயற்சியால் மீளவும் புனரமைக்கப்பட்டு 05.03.1990லிருந்து தனியாக இயங்கி வருகின்றது.

**பங்கு:**

1. சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற் பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்.
2. கொடிகாமம் தெங்கு பனம்பொருள் உற் பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்
3. பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

**பொதுச்சபை:**

- சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற் பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்.
- கொடிகாமம் தெங்கு பனம்பொருள் உற் பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்.
- பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

ஆகியனவற்றின் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் இவ்வடிசாலையின் பொதுச்சபை உறுப்பினர்களாவர்.

- பொதுச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை - 27

**பணியாளர்கள்**

இக்காலத்தில் பணியாளர்கள் எவரும் நிரந்தர நியமனம் செய்யப்படவில்லை. தென்மராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, சாவகச்சேரி ஆகிய சங்கங்களின் பணியாளர்கள் தற்காலிக மாக கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

1. தற்காலிக பொதுமுகாமையாளர்- 01
2. தற்காலிக கணக்காளர்- 01
3. தற்காலிக வடிசாலை பொறுப்பாளர்- 01
4. தற்காலிக போத்தலடைப்பு பொறுபபாளர்01
5. தற்காலிக வடிகலன் இயக்குனர்- 01
6. தற்காலிக லிகிதர் - 01
7. தற்காலிக காசாளர் - 01
8. தற்காலிக காரியாலய உதவியாளர் - 01
9. தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர் - 01
10. தற்காலிக பாதுகாப்பு உத்தியோகத்தர்-03
11. தற்காலிக தொழிலாளர்கள் - 12

**உற்பத்தி விபரம்**

இக்காலப்பகுதியில் கள், லோவைன், பாணி என்பவனவற்றிலிருந்து மதுசாரம் வடிக்கப் பட்டது. அதன் செறிவு சராசரி 75% வீதமாகக் காணப்பட்டது. இவைகள் பங்குச் சங்கங்களி டமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு பெரும் சிரமத்தின் மத்தியில் கொண்டுவரும் வேளை 21.04.1991ல் ஏற்பட்ட தீ விபத்தினால் பெரும் நட்டத்தை அடையவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமை கவலைக்குரியதாகும். இத் தீ விபத்தினால் வடிசாலையின் உற்பத்தி வியாபார இலாப நட்டக்கணக்கு ரூபா 1627896.16 சதத்தினை நட்டமாக காட்டுகின்றது. வடிசாலை ஊழியர்கள் யாவரும் நாளாந்த அடிப்படைச் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டு சேவையில் ஈடுபட் டிருந்தனர். காரியாலய ஊழியர்கள் யாவரும் பதில் கடமையினையே மேற்கொண்டு குறைந் தளவு படியினையே பெற்று வந்துள்ளனர். இதன் காரணமாக ஊழியர்கள் தொடர்பான செலவீன ங்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. சாராய உற்பத்தி வியாபாரமே அதன் பிரதான

தொழிற்பாடாகும்.

அதன் பின்பு 1996ம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக எமது வரணி வடிசாலை அமைந்த பிரதேசம் இராணுவத்தின் மண் அணைக்கு வெளியே அகப்பட்டமையினால் அதன் சொத்துக்கள் எதனையும் எம்மால் மீட்டெடுக்க முடியவில்லை. ஆதலால் ரூபா 7302030.17 சதம் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதன் பின்பு அங்கிருந்து புலம்பெயர்ந்து கைதடியில் 1999ம் ஆண்டு ஓர் தொடர் வடிசாலையினை சகல வசதிகளுடனும் ஆரம்பித்து 2000ம் ஆண்டின் இராணுவ நடவடிக்கையின்போது ஏற்பட்ட அழிவினால் ஒரு சிறிய பொருட்களைக்கூட (பொறித்தொகுதியை) மீட்டெடுக்க முடியவில்லை. இதனால் எமது நிறுவனத்திற்கு ரூபா 24740004/- நஸ்டம் ஏற்பட்டுள்ளது. இது மட்டுமன்றி சாவகச்சேரியில் தற்காலிகமாக இயங்கி வந்த அலுவலகத்தின் கட்டிடமும் முழுமையாக சேதமுற்ற ரூபா 145500/- நஸ்டம் நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு புலம்பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியில் எமது வரணி வடிசாலையானது தற்போது தனது சொந்த இடமான வரணி வடக்கில் ஒரு சிறிய பானை வடிசாலை நிறுவி அதன்மூலம் பல்வேறுபட்ட அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றது.

## எமது உற்பத்தி

எமது கொத்தணியின் வரணி வடிசாலையின் தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாராயம் 750 மி.லீ, 180 மி.லீ போத்தல்களில் அடைக்கப்பட்டு இலங்கையின் தென்பகுதியில் அதிக வரவேற்பினை பெற்றுள்ளது.

## நலன்புரித் திட்டங்கள்

### 1. அங்கத்தவர் ஓய்வூதியத் திட்டம்

கொத்தணியின் பங்குச் சங்கங்களான சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய ப.தெ.வ.அ.கூ.சங்கங்களில் தொழில்புரிந்து 60 வயதை பூர்த்தி செய்த, தொழில் செய்ய முடியாது ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்

2. பணியாளர் ஓய்வூதியத்திட்டம்
3. பணியாளர் நலச்சலுகைகள்
4. வாடகை உழவுயந்திரம்
5. முன்பள்ளி அசிரியர்கள் மாணவர்களிற்கான இலவச சீருடை வழங்கல்.
6. முன்பள்ளி அசிரியர்களிற்கு வேதனம் வழங்கல்.

கொத்தணியால் நிர்வகிக்கப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களிற்கும் மாணவர்களிற்கும் இலவச சீருடை வழங்கப்படுகின்றது. எமது கொத்தணியினால் 07 முன்பள்ளிகளும் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினால் 10 முன்பள்ளிகளும், கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங் கத்தினால் 07 முன்பள்ளிகளும், பளை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினால் 01 முன்பள்ளியும் மொத்தமாக 25 முன்பள்ளி மாணவர்களிற்கும் ஆசிரியர்களிற்கும் சீருடை வழங்கப்படுகின்றது. அது மட்டுமன்றி எமது கொத்தணியினால் நிர்வகிக்கப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களிற்கு மாதாந்த வேதனமும் வழங்கப்படுகின்றது.

## தற்போதைய பணிப்பாளர் சபை

1. திரு கி. பூபாலசிங்கம் - தலைவர்
2. திரு க. இராசதுரை - உபதலைவர்
3. திரு ஆ. சாந்தகுமார் - செயலாளர்
4. திரு அ. பாலன் - நி.ச.உறுப்பினர்
5. திரு சோ. அருள்ராசா - நி.ச. உறுப்பினர்
6. திரு கி. தவராசா - நி.ச.உறுப்பினர்
7. திரு த. புஸ்பராசா - நி.ச. உறுப்பினர்
8. திரு செ. சிவகுமார் - நி.ச.உறுப்பினர்

மேலும் இவ்வடிசாலையினை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் வடிசாலைக்கு முன்பக்கமாகவுள்ள 06 பரப்பு காணியைக் கொள்வனவு செய்துள்ளது. இக்காணிக்குள் இனிவரும் காலங்களில் நவீனமுறையிலான ஒரு வடிசாலையினை அமைத்து பங்குச் சங்கங்களின் அங்கத்தவர்களிடமிருந்து கூடுதலான உற்பத்தியை பெற்று அவர்களது வருவாயை பெருக்குவதற்கான திட்டத்தினை கொத்தணியானது மேற்கொண்டு வருகிறது.

# தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## வரலாற்றுப் பதிவுகள்


சங்கத்தின் பணியாளர்கள்


முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பின்போது


2009ம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுதின நிகழ்வில்
சிறந்த கொத்தணிக்கான தெரிவில் 2ம் இடம்பெற்று
பரிசில் பெற்றபோது


கொத்தணியின் வடிசாலை


40 வது அகவையில் கால் பதிக்கும் எமது பனை
தென்னை வள சங்கங்களுக்கும், சிறப்பு மலர்
கற்பகதருவுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!
எமது கொத்தணியின் தயாரிப்பான
வறணி பனைச்சாறாயம்
தற்போது 750 மி.லீற்றருடன்,
375, 180 மி.லீற்றர் ஆகிய
அளவுகளிலும் கிடைக்கின்றன.
JAFFNA
VARANY
PALMYRAH SPECIAL
ARRACK
கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்
பாலர் பாடசாலை
மாணவர், ஆசிரியர்
களுக்கு இலவச
சீருடைத்துணி
வழங்கல்
வாடகை உழவு இயந்திர
சேவை
நலன்புரித் திட்டங்கள்
அங்கத்துவ சங்கங்களின் அங்கத்
தவர், பணியாளர்களுக்கான பல்வேறு
நலத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
(வரையுள்ளது)
பருத்தித்துறை வீதி,
வரணி
021 321 1653



# யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாற்றுச் சுவடுகள்

தமிழரின் பாரம்பரிய மருத்துவ முறையாகத் தமிழரின் தனித்துவத்தை நிலைநாட்டிச் சான்று பகிர்வது சித்த வைத்தியம் ஆகும். தமிழ் மொழியில் எழுதப்பட்டதும், உலகின் மூத்த வைத்திய முறையாகவும் பூரணத்துவமானதாகவும் விளங்குவது சித்த வைத்தியமேயாகும். சித்தர்களினால் ஆரம்பிக்கப்பட்டு தெய்வீக முறைகளோடு கூடிய இத்துறை பலரும் போற்றத் தக்கதாக இருந்தது எம் நாட்டிலுள்ள சூழ்நிலைகளால் இத்துறைக்கு வந்த இடரைப் போக்குவது எமது பாரிய கடமையாகவுள்ளது.

இந்த மருத்துவத்துறையினரின் சலியாத முயற்சியினால் அரசாங்கம் இன்று தனது போக்கில் சிறிய மாறுதல்களைக் கொண்டுள்ளது. ஆயுர்வேதம் மற்றும் மருத்துவத்துறை ஒன்றை ஸ்தாபித்து இந்நாட்டில் பாரம்பரிய வைத்திய முறைகளை குறிப்பாக சித்த வைத்தியத்துறையை உள்ளடக்கியதாக இருப்பது நல்ல அறிகுறியாகும். மரபுவழி சித்த வைத்தியத் துறையை வளர்க்கவும் இந்த மருந்துகளைத் தயாரிப்பதற்கும் ஒரு பொது நிறுவனம் அமைக்க வேண்டும் என்ற சிந்தனை 1992 ஆம் ஆண்டு உதயமானது.

### அமைப்பு

பாரம்பரிய வைத்தியர்களினால் ஆராய்ந்து உணர்ந்து வெற்றியளித்த மருந்துகளை எல்லோர்க்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற ரீதியில் எமது பிரதேசத்தில் கிடைக்கும் மூலிகைகளையும், இங்கு பெற்றுக்கொள்ள முடியாத மூலிகைகள் இந்தியா போன்ற நாடு களில் இருந்து இறக்குமதி செய்தும் சித்த மருந்துகளைத் தயாரிப்பதற்குப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் முதலீட்டில் கூட்டுறவுத் திணைக்களம் சித்த வைத்திய நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கப்பட்டதே இவ் 'யாழ் மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்' ஆகும்.

### ஆரம்பமும் வளர்ச்சியும்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சித்தர்கள் வாழ்ந்த புனித இடமான சித்தன்கேணியில் 15.06.1992இல் வைத்திய கலாநிதி கந்தசாமி பாலசுப்பிரமணியம் அவர்களால் மருந்து உற்பத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம்முயற்சிக்கு பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன முதலீடு செய்துள்ளன. மேலும் இச்சங்கங்கள் அங்கத்தவர்களைச் சேர்த்து உருவாக்கப்பட்ட இரண்டாம்படிச் சங்கமே எமது கூட்டுறவுச் சங்கமாகும்.

இச்சங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (யாழ்ப்பாணம்) அவர்களால் ஜே/பி/2159 இலக்கத்தில் 1993.12.18 ஆந் திகதியில் பதிவு செய்யப்பட்டது. அடுத்து கடந்த 2004.01.24 இல் AY/MF/JA/296 ஆம் இலக்கம் கொண்ட ஆயுர்வேத திணைக்கள மருந்தகமாய் பதிவும் கிடைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் 1992ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தனது செயற்பாட்டினை அங்கத்துவ சங்கங்கள் மூலமாகவும், உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுசரணையுடன் பிரதேச வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகள் மற்றும் அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும்

ஏனைய நிறுவனங்கள் ஊடாகவும் சித்த மருந் துகளை விநியோகித்து வந்துள்ளது. போர்க் காலச் சூழ்நிலையில் எமது பிரதேசம் பெரிதும் பாதிப்படைந்த காலப்பகுதியில் அரச வைத்திய சாலையில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்ட போதிலும், கொழும்பில் இருந்து மருந் துகள் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப் பட்ட வேளையிலும் எமது சங்கத்தினால் செய்ய ப்பட்ட சேவைகள் பெரும் பாராட்டிற்குரியது.

கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் சேவை, மருந்துக் கலவையாளர் சேவை, நடமாடும் சேவை என்பன குறிப்பிடத்தக்கது. கடந்த 30.10.1995 இல் ஏற் பட்ட இடப்பெயர்வு காரணமாக தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து,மீளவும் வலிகாமம் 1996 - மே மாதம் மீளக்குடியமர்ந்து கே.கே.எஸ்.ரோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது.

இவ் இடப்பெயர்வு காரணமாக எமது சங்கத்தின் பல இலட்சம் பெறுமதியான சொத் துகளை நாம் இழக்கவேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. இருந்தும் எமது சங்க நிர்வாகத்தினரின் அயராத முயற்சியினால் சங்கம் சீரமைக்கப்பட்டு மருந்துகளின் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபடத் தொடங்கியது. இவ்வேளையில் எமது மாவட்டத்தில் உள்ள தனியார் வியாபாரிகள் கொழும்பில் இருந்தும் சித்த மருந்துகளை இறக் குமதி செய்து விற்பனை செய்யப்பட்டது. இப் போட்டி நிலை காரணமாக எமது உற்பத்தியில் சிறந்த தொழில்நுட்பத்ததைப் பயன்படுத்தி சிறந்த வைத்திய அதிகாரிகளின் ஆலோசனை யைப் பெற்றும், நல்ல தரமான சித்த மருந்து களை உற்பத்தி செய்தும் விநியோகித்து வருகி ன்றோம்.இத்துடன் எமது வைத்திய அதிகாரிக ளைப் பயன்படுத்தி தலைமை அலுவலகத்தில் வைத்தியசேவைகளையும், ஆலோசனைகளை யும் வழங்கி வருகின்றோம்.

## மருந்துகள் உற்பத்தி

யாழ் மாவட்டத்தில் சித்த வைத்திய மருந்துகளை உற்பத்தி செய்து விநியோகித்து வரும் தனித்துவமான ஒரு பொது அமைப்பாக எமது சங்கம் இயங்குகின்றது. சித்த மருந்துக ளின் உற்பத்தியில் அனுபவமும், தேர்ச்சியும் வாய்ந்த வைத்தியர்களின் மேற்பார்வையில் உற் பத்திக்குப் பொறுப்பாக டாக்டர் கே.ஸ்ரீகண நாதன் அவர்கள் முகாமைப் பணிப் பாளராகப் பணியாற்றி வருகின்றார். உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகளில் பெரும்பாலா னவை பிரதேச சபை நிர்வாகத்தினால் நடாத்தப் பட்டு வரும் பிரதேச வைத்திசாலைகளுக்கும், தனியார் வைத்தியசாலைகளுக்கும் விநியோகிக் கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மூலிகைகளின் பாவனை அதிகரிக்கப் பட்டு அவற்றின் தீயவிளைவுகள், பின்விளைவு கள் இல்லாத தன்மையாலும் எமது மருந்து களின் பாவனை அதிகரித்துள்ளமை அறிய முடி கின்றது. எமது உற்பத்திப் பொருட்களான குளி சைகள், சூரணம், லேகியம், பாணி வகை, எண் ணெய் வகை, களிம்பு, மூலிகைச்சத்து, மூலி கைச்சாரம், பஸ்பம், செந்தூரம், அஷ்வ, அரிஸ் டங்கள், காடிகள் என்பன சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு தரமானவையாக விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

## தர நிர்ணய சபையின் பிரதிநிதிகள்

1. டாக்டர் பூரணபசுபதிப்பிள்ளை உரோ மகேஸ்வரன் (DIMS BSC) முன்னைநாள் வடக்கு, கிழக்கு மாகாண சுதேச மருத் துவப் பணிப்பாளர்.

2. டாக்கடர் எஸ்.ரீ புவிராசா (DIMS.RAMP) யாழ் மாநகரசபை வைத்திய அதிகாரி.

3. டாக்டர் எஸ்.பரமசிவம்பிள்ளை (DAM. RAMP) முன்னைநாள் கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியும், தற்போது வலிமேற்குப் பிர தேச சபையின் பிரதம வைத்திய அதி காரியும்.

4. டாக்டர் வீ.சின்னப்பு (DAM. RAMP) பரம் பரை வைத்தியர்.

5. டாக்டர் ஆர்.சுந்தரேஸ்வரன் (DAM. RAMP) பரம்பரை வைத்தியர்

மேற்குறிப்பிடப்பட்ட இவர்கள் தரநிர்ணய சபையில் அங்கத்துவம் வகித்து எமது சங் கத்திற்கு பெரும்பெரும் பாடுபடுகின்றனர்.

தற்போது எமது நிறுவனத்தில் தயாரிக் கப்படுகின்ற மருந்துகளின் பட்டியல் பின்வருமாறு:

# யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்













1. எண்ணெய் வகை

பொன்னாங்காணி எண்ணை, சிரங்கு எண்ணை, பிருங்காழில் தைலம், கிரந்தி எண்ணை, பீனிசம் தைலம், மெழுகு எண்ணை, இயங்கும் எண்ணை, கரப்பன் எண்ணை, வெற்றிலைத் தைலம், தாளங்காய் எண்ணை, வேலம் பட்டை எண்ணை, மிளகு சந்தனாதி தைலம், நயனவிதி எண்ணை, அமிர்த சந்தனாதி எண்ணை, நோவு எண்ணை, வாத விசேடம், சரசபாதி, கற்பூராதி, நாராயண தைலம் என்பவையாகும்.







2. பாணி வகை

ஆடாதோடைப் பாணி, அதிமதுரம் பாணி, சித்தஜீவாமிர்தம் பாணி, சுரஹரப்பாணி, கற்பூர வள்ளிப் பாணி என்பனவும்.

3. லேகிய வகை

நீற்றுக்காய் நெல்லிக்காய், அமுக்குராய், உள்ளி, கருணை, பித்தசமான லேகியம் போன்றவையும்.

4. குளிசை வகை

இராமபாணம், வாதராட்சதன், சிவன், கிருமி, சுவாசகு டோரி, உள்ளி, பால சஞ்சீவி கபாட, பாலகோரோசணை, பெரிய கோரோசணை, புன்னைவேர், சின்னசிவப்பு, திரிபு வன கிரத்திரசம் என்பனவும்.

5. சூரண வகை

சுக்கு, கந்தக இரசாயனம், சாராய ஊறல், கொத்தமல்லி, தாளிசாதி, தாளிசபத்திரி, அமுக்கிராய், சிவகரந்தை, பறங்கி, பதுமேகம், புஸ்யானகா, நிலபாவல், பெருங்காயம், முடக்கு, பாஸ்கரலவனம், மாணிபத்திரி, நிலவேம்ப, அட்ட சுகபேதி, அமுது சக்கரை, திரிபலாதி சிந்தாமணி போன்றவை.

6. செந்தூரங்கள் வகை

ஆயசெந்தூரம், அயகாந்த செந்தூரம், பூங்காவி செந்தூரம், காந்த செந்தூரம், அன்ன பேதி செந்தூரம், படிகலிங்க செந்தூரம், ஆறுமுக செந்தூரம், இலிங்க செந்தூரம் என்பனவும்.

7. பஸ்ப வகை

சலாச்சத்து பஸ்பம், சங்கு பஸ்பம், சிங்கி பஸ்பம், ஆமையோட்டு பஸ்பம், மஞ்சள் பஸ்பம், பலரை பஸ்பம் போன்றவை.

8. ஆசவ அரிஸ்ட வகை

லோகாசவம், பிப்பிலியயாசவம், பலாரிஸ்டம், சந்தனாசவம், மண்டுராரிஸ்டமி நிம்பா அர்ச்சனா, தசமூலா ரிஸ்டம், அஸ்வகெந்தாரிஸ்டம், அரவிந்தாசவம், கனகாசவம், அபயாரிஸ்டம், அமிர்தாரிஸஸ்டம், முஸ்தகாரிஸ்டம், திராட்சா அரவிந்தாபலம், கனகாசலம், திராட்சா அரிஸ்டம், அசோகாரிஸ்டம், சரிபாதியாசவம்,கதிராரிஸ்டம், கற்பூரா என்பனவாகும்.







# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் 40 ஆண்டு கால வளர்ச்சிப் பாதையில்

## சமாசத்தின் வழித்தடங்கள்



### பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் தோற்றம்

1972ம் ஆண்டில் வடமாகாணத்தில் சீவல் தொழிலாளர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் எங்கினும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இத் தொழிலாளர்கள் வாழ்வில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம். ஆரம்பத்தில் இச் சங்கங்கள் கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்கள் என்ற பெயரிலும் பின்னர் 1978ம் ஆண்டு காலப்பகுதியில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்கள் என்ற பெயரிலும், 1992ம் ஆண்டில் இருந்து பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் என்ற பெயருடனும் இயங்கி வருகின்றன. அங்கத்தவர்களின் சமூக பொருளாதார கல்வி கலாச்சார மேம்பாட்டுக்கு உழைப்பதே இக் கூட்டுறவு சங்கங்களின் நோக்கமாக இருந்ததால் இவ் அமைப்புக்களில் இத் தொழிலாளர்கள் அங்கத்துவம் பெற்ற பின்னர் அவர்கள் வாழ்க்கையில் பின்வரும் அனுகூலங்கள் ஏற்பட்டன.

- உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொண்டனர்.
- மரவரி முறையில் இருந்து தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டனர்.
- தனிப்பட்ட முதலாளிகளால் இவர்களின் உழைப்பு உறிஞ்சப்படாது தடுக்கப்பட்டது.
- கள்ளை வீடுகளில் வைத்து விற்பனை செய்து வந்ததால் ஏற்பட்ட கலாச்சார சீர்கேடுகளில் இருந்து அங்கத்தவர் குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன.
- சட்ட விரோத விற்பனை கட்டுப்படுத்தப்பட்டது.
- கூட்டுறவுச் சட்டம், கலால் சட்டம், துணை விதி, நடைமுறைவிதி என்ற ஒழுங்கமைப்புடன் கூடிய கட்டமைப்பிற்குள் தமது தொழிலைச் செய்யப் பழகிக்கொண்டார்கள்,
- உழைப்பில் ஒரு பகுதியை தமது எதிர் காலத்திற்கென சேமிக்கக் கற்றுக்கொண்டார்கள்.
- இதன் மூலம் தொழிலாளர்கள் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர்.
- தமக்கென ஓர் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது அவர்களது தன்னம்பிக்கையை வளர்த்து தொழிலில் உற்சாகமாக ஈடுபட வாய்ப்பளித்தது.
- நிறுவன ரீதியாக ஒரு கட்டுக்கோப்பிற்குள் இயங்கியதால் சமூகத்தின் அங்கீகாரத்தை பெறக்கூடியதாகவிருந்தது.
- அவர்களது தொழிலுக்கான பாதுகாப்பும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையும் ஏற்பட்டது.

### சமாசத்தின் தோற்றம்

ஆரம்பத்தில் வடமாகாணத்தில் 18 பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வந்தன.

அவையாவன,

சுன்னாகம், பூநகரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, கோப்பாய், இணுவில், பருத்தித்துறை, பளை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், அச்சுவேலி, சாவகச்சேரி, கிளிநொச்சி, சங்கானை, கொடிகாமம், வேலணை, அரியாலை, கட்டைவேலி ஆகிய சங்கங்களாகும். இவ்வாறு ஒவ்வொரு பிரதேசத்திலும் தனித்தனி சங்கங்களாக இயங்கிய இவ் அமைப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அவற்றைப் பலப்படுத்தவும், இச் சங்கங்களின் தேவைகளை இனம் கண்டு நிறைவேற்றவும், அனைத்து அங்கத்தவர்களுக்குமான ஒரே சீரான நலத்திட்டங்களை முன்னெடுக்கவும், இக் கூட்டுறவு சங்கங்களின் கோரிக்கைகளை, கூட்டுறவு அமைச்சு, கலால் திணைக்களம், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஆகிய உயர் மட்டங்களுக்கு ஒரே குரலில் கொண்டு சென்று தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும் ஒரு தலைமை நிறுவனம் அமைவதன் அவசியம் சங்கங்களாலும், அங்கத்தவர்களாலும், சீவல் தொழிலாளர் சமூகத்தின் முன்னோடிகளாலும், குறிப்பாக


திரு எஸ்.வேலாயுதம்பிள்ளை

திரு.க.நடராசா ஆசிரியர் அவர்களாலும் உணரப்பட்டு அதற்கான அவர்களது அயராத முயற்சியின் பயனாக 20.07.1979ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அப்போதைய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்தவரும் இக் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டவருமான திரு.எஸ்.வேலாயுதம்பிள்ளை அவர்கள் தலைமையில் இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்று, 12.10.1979இல் பதிவிற்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விசேட பிரதிநிதியாக அக்காலப்பகுதியில் கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்த திரு.ஆர்.பி.பி.ராஜபக்ஷ அவர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கூட்டத்தில் மேற்படி 18 கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர். அன்றைய தினமே அதாவது 12.10.1979ம் திகதியில் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் என்ற பெயரில் இத்தலைமை நிறுவனம் பதிவு செய்யப்பட்டது.

### சமாசக் காரியாலயம்

சமாசம் பதிவுசெய்யப்பட்ட அன்றைய தினமே சமாசத்தின் காரியாலயம், 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிய யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் காரியாலய மேல்மாடியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.எஸ்.வேலாயுதம்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### சமாசத்தின் முதலாவது தலைவர், செயலாளர்





சமாசத்தின் முதலாவது தலைவராக செனட்டர் திரு.ஜி.நல்லையா அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். சமாசத்தின் செயலாளராக திரு.க.நடராசா ஆசிரியர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 1980ம் ஆண்டு பங்குனி மாதம் சமாசத் தலைவர் திரு.ஜி.நல்லையா அவர்கள் காலமாகியதால் சமாசத்தின் உப தலைவராக பதவி வகித்து வந்த திரு.சு.நடேசு அவர்கள் 17.10.1980இல் இருந்து சமாசத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அதன் பின் தற்போது வரை சமாசத்தின் தலைவர் பதவியை வகித்தவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு

#### சமாசத்தின் தலைவர்களும் பதவிக்காலமும்

- செனட்டர் திரு.ஜி.நல்லையா
  10.10.1979 - 16.10.1980
- திரு.சு.நடேசு
  17.10.1980 - 24.09.1983
- திரு.தி.அமிர்தநாதன்
  25.09.1983 - 11.06.1985
- திரு.த.சிவலிங்கம்
  02.06.1985 - 31.07.1988

- திரு.கி.சிவப்பிரகாசம்
01.08.1988 - 27.06.1989
- திரு.தி.அமிர்தநாதன்
28.06.1989 - 31.07.1990
- திரு.ஐ.செல்வராசா
01.08.1990 - 28.02.1991
- திரு.இ.செல்வரத்தினம்
01.03.1991 - 22.09.1991
- திரு.சா.செல்வரத்தினம்
23.09.1991 - 13.02.1998
- திரு.சி.க.பொன்னுத்துரை
14.02.1998 - 08.12.1999
- திரு.கி.பூபாலசிங்கம்
09.12.1999 - 31.08.2001
- திரு.க.மெய்யழகன்
01.09.2001 - 16.01.2002
- திரு.கி.தவராசா
17.01.2002 - 30.06.2005
- திரு.பி.விமல்ராஜ்
01.07.2005 - 18.07.2005
- திரு.சி.சந்திரலிங்கம்
19.07.2005 - 27.11.2008
- திரு.த.சிவலிங்கம்
28.11.2008 - 17.01.2012
- திரு.நா.கணேசன்
18.01.2012 தொடக்கம் இன்றுவரை

சமாசத்தின் தலைவர்களில் திரு.தி.அமிர்த நாதன் அவர்கள் இரண்டு தடவைகள் தலைவர் பதவியை வகித்திருந்தபோதும் தமக்கான தலை வர் படியினை பெற்றுக்கொள்ளாது தமது சேவையை வழங்கி ஏனையோருக்கு முன்னு தாரணமாக செயற்பட்டுள்ளமை குறிப்பிட வேண் டிய விடயமாகும். இவரது தலைவர் படி கணக்கி டப்பட்டு சமாசக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

## சமாசத்தின் பங்குதாரர்

ஆரம்பத்தில் 18 ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் தலா 1000 ரூபா பங்குப் பணத்தினை செலுத்தி சமாசத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தன. காலப் போக்கில் கூ.அ.உ.ஆணையாளராக திரு.தி.சபா ரத்தினம் அவர்கள் பதவி வகித்த காலப்பகுதி யில் உருவாக்கப்பட்ட 04 கொத்தணிகள், 01 சித்தவைத்திய கூட்டுறவு சங்கம் என்பன உள் ளிட்ட 23 அமைப்புக்கள் அங்கத்துவம் பெற்றுள் ளன. பங்குப் பணம் ரூபா, பத்தாயிரமாக மாற்றப் பட்டது தற்போது 23 கூட்டுறவு அமைப்புக்கள் ரூபா, 10,000.00 (பத்தாயிரம்)ஐ செலுத்தி தமது பங்கினைப் பூரணப்படுத்தி யுள்ளன.

ஆரம்பத்தில் சமாசத்தின் நெறியாளர் குழு உறுப்பினர்கள் பின்வரும் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

**முல்லைத்தீவு மாவட்டம்** - 01 பிரதிநிதி
புதுக்குடியிருப்பு
பாண்டியன்குளம்

**கிளிநொச்சி மாவட்டம்** - 01 பிரதிநிதி
பளை
பூநகரி

**வடமராட்சி** - 01 பிரதிநிதி
பருத்தித்துறை
கட்டைவேலி

**தென்மராட்சி** - 01 பிரதிநிதி
சாவகச்சேரி
கொடிகாமம்

**வலிகாமம் மேற்கு/தென்மேற்கு** - 01 பிரதிநிதி
பண்டத்தரிப்பு
சங்கானை
மானிப்பாய்

**வலி கிழக்கு** - 01 பிரதிநிதி
அச்சுவேலி
கோப்பாய்

**வலி வடக்கு/வலிதெற்கு** - 01 பிரதிநிதி
தெல்லிப்பழை
சுன்னாகம்

**தீவுப்பகுதி** - 01 பிரதிநிதி
ஊர்காவற்றுறை
வேலணை

**நகரமும் நகர்ப்புறமும்** - 01 பிரதிநிதி
யாழ்ப்பாணம்
அரியாலை
கோண்டாவில்

## சமாசத்தின் சேவைகள்

### காகிதாதி விநியோகம்

சமாசத்தின் சேவைகளில் முதன் முதலாக சங்கங்களின் செயற்பாடுகளுக்கான காகிதாதி விநியோக சேவை நடைமுறைப்படுத்தப்பட்டது. அரியாலை சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த காகிதாதி விற்பனைப் பகுதியை 01.11.1979ல் சமாசம் பொறுப்பேற்று காகிதாதி விநியோ

கத்தை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் சமாசத்தி னால் தனியார் அச்சகங்கள் மூலமே காகிதாதி கள் அச்சிடப்பட்டது. இதனால் அச்சிடல் தேவை களுக்காக பல இலட்சம் ரூபா தனியாருக்கு செலவிடப்பட்டது. இதனால் இவ் விநியோகத் தால் சமாசத்திற்கு சிறிய அளவான இலாபமே கிடைத்து வந்தது.

## சமாசத்திற்கான அச்சு இயந்திர கொள்வனவு

காகிதாதி அச்சிடலுக்காக பெருமளவு நிதி தனியார் அச்சகங்களுக்கு செலவிடப்படு



வதை கவனத்தில் கொண்ட சமாசத்தின் 1991ல் பதவிவகித்த நெறியாளர் சபையினரின் பெரும் முயற்சியின் பலனாக சமாசத்திற்கென ஓர் அச்சகம் அமைப்பதற்கான அச்சியந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அச்சகம் இயங்கத் தொடங்கியது. 1991ல் இருந்து 2005ம் ஆண்டு வரை காலால் மிதித்து இயக்கும் இவ் அச்சியந்திரம் மூலமே சங்கங்களுக்கான படிவங்கள், லேபல்கள் என்பன அச்சிட்டு வழங்கப்பட்டன. வருடம் தோறும் பஞ்சாங்க கலண்டர்களும் இவ் அச்சகம் மூலமே அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

## ஒவ்செற் அச்சியந்திர கொள்வனவு



2005ம் ஆண்டு காலப்பகுதியில் தனியார் அச்சகங்களில் நவீன கணணி வடிவமைப்பிலான அச்சக இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அச்சிடல் வேலைகள் நடைபெற்றதால் தனியாருடன் போட்டியிட்டு வேலை செய்ய வேண்டிய நிலை இருந்ததாலும் காலத்தின் தேவை கருதியும் சமாசத்திற்கும் ஒவ்செற் அச்சியந்திரம் கொள்வனவு செய்யவேண்டியதன் அவசியம் சமாச நிர்வாகத்தினால் உணரப்பட்டு 01.07.2005ல் கொழும்பில் இருந்து ஒவ்செற் அச்சியந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது நவீன கணணிமயப்படுத்தப்பட்ட அச்சகம் மூலம் அழகான முறையில் படிவங்கள், சாராய லேபல்கள், போத்தற்கள் லேபல்கள், சித்தவைத்திய கூட்டுறவு சங்கத்திற்கான பற்பொடி லேபல்கள், மருந்துகளுக்கான லேபல்கள் என்பன அச்சிட்டு வழங்கி வருவதோடு, வருடாவருடம் அங்கத்துவ சங்கங்கள் மற்றும் தனியாருக்கான பஞ்சாங்க கலண்டர்கள், டயறிகள், திருமண அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள், வரலாற்று மற்றும் பொதுவான நூல்கள் என்பனவும் தரமான முறையில் அச்சிட்டு வழங்கி வருகின்றோம்.

## விபத்துநலத்திட்ட சேவை

எமது அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களான பனம் தொழில் வல்லுனர்கள் இவ் அபாயகரமான தொழிலினால் விபத்துக்களையும், மரணங்களையும் அதிகம் எதிர்நோக்கியதால் இப் பாதிப்புகளிற்கு ஒருங்கிணைந்த மட்டத்தில் நிதி வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டதன் விளைவாக சமாசத்தால் 01.01.1980ல் விபத்துநலத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1981ல் முதன் முதலில் விபத்தினால் பாதிக்கப்பட்ட வேலணை சங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்கு அப்போது நாட்டின் பிரதம மந்திரியாக பதவி வகித்த மதிப்பிற்குரிய திரு.ஆர் பிறேமதாசா அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அவரது கையால் பாதிக்கப்பட்டவருக்கு விபத்து நிதிக் காசோலை வழங்கி இத்திட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டமை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இந்த அரிய கைங்கரியத்திற்கு தோள் தந்த பெரியார்களில் சமாசத்தின் செயலாளர் திரு.க.நடராசா அவர்களதும் சமாசத்தின் தலைவர் திரு.சு.நடேசு அவர்களதும் பங்கு அளப்பரியது. "ஒருவர் பலருக்காகவும், பலர்



சேர்ந்து ஒருவருக்காகவும்" என்ற கூட்டுறவுத் தத்து வத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விபத்துநலத்திட்டம் இன்று ஆல்போல் கிளை பரப்பி ஓர் பாரிய திட்டமாக வியாபித்து நிற் கின்றது. இத்திட்டத்தின்கீழ் தொழிற்படும் கால த்தில் அங்கத்தவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக ளிற்கு அதாவது மத்தியகாலம், நீண்ட காலம், நிரந்தரம், விபத்து மரணம், இயற்கை மரணங்களுக்கு அங்கத்தவர்களின் விபத்து சந்தா பங்க ளிப்பிற்கேற்ப கொடுப்பன வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்

01.07.2006ம் ஆண்டில் இருந்து அங்கத்தவர் களின் பாதிப்புகளுக்கான நலக்கொடுப்பனவு களுடன் சேர்த்து 60வயதை பூர்த்தி செய்து ஓய்வுபெறும் அங்கத்தவர்களிற்கு மதாந்தம் ஓய் வூதியம் வழங்கப்படவேண்டும் என்ற நெறியாளர் சபை, பொதுச்சபைத் தீர்மானங்களுக்கமைய அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடை



முறைவிதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய அனுமதிகள் பெறப்பட்டு 23.05.2008ல் அப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையா ளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராகவும் இருந்த திரு. எஸ்.சுப்பிரமணியசர்மா அவர்களி னால் இம்மாதாந்த ஓய்வூதியத் திட்டம் ஆரம் பித்து வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படு கின்றது. இவ் ஓய்வூதியத்தைப் பெறும் அங்கத் தவர் மரணமடைந்தால் அதன்பின் அவரது மனை விக்கும் மனைவி இல்லாதவிடத்து 18 வயதிற் குட்பட்ட பிள்ளைக்கும் ஓய்வூதியம் கிடைக்கக் கூடியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாதாந்த ஓய்வூதியம்,

- 01.01.2008ல் இருந்து 30.09.2010 வரை அங் கத்தவர் பங்களிப்பு மீதியில் 10% உம்,
- 01.10.2010ல் இருந்து 30.06.2011 வரை அங் கத்தவர் பங்களிப்பு மீதியில் 11% உம்,
- 01.07.2011ல் இருந்து அங்கத்தவர் பங்களிப்பு மீதியில் 12% உம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று வடமாகாணத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நிறுவனங்களில் தமது அங்கத்தவர் களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட் டத்தை அறிமுகப்படுத்தி அதனை தமது சொந்த முயற்சியின் மூலம் கிடைத்த நிதியில் இருந்து வெற்றிகரமாக செயற்படுத்தி வருவது எமது பனை தென்னை வள அமைப்புக்களே என்பதில் நாம் மிகவும் பெருமிதம் கொள்கின்றோம். இத் திட்டத்தின் மூலம் இத் தொழிலையே நம்பி வாழும், பனம் தொழில்வல்லுனர்களான எமது அங்கத்தவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்சிமிக்க தாக அமையவும், அவர்களது குடும்பத்தின் வாழ்வாதாரம் உயரவும் கைகொடுப்பதில் சமா சம் திருப்திகொள்கின்றது.

## விபத்து சந்தா அறவீடு

ஆரம்பத்தில் இவ் விபத்து திட்டத்திற்கு அங்கத்தவர்களிடம் இருந்து விபத்து சந்தா பங்களிப்பாக 3/= அறவிட்டு, சங்கம் 1/= சேர்த்து மொத்தம் 4/= சமாசத்திற்கு செலுத் தப்பட்டு வந்தது. பின்னர் அங்கத்தவர்களிடம் இருந்து 6/=வும் சங்கம் 4/=வுமாக மொத்தம்

10/= சமாசத்திற்கு செலுத்தப்பட்டது. அதன் பின்னர் 01.05.1995ல் இருந்து அங்கத்தவர் கொள்வனவில் 1% உம் சங்கம் 1% உம் சேர்த்து 2% ஆக சமாசத்திற்கு அனுப்பப்பட்டு வந்தது. 01.01.2010ல் இருந்து அங்கத்தவர் களிடம் இருந்து 2% உம், சங்கம் 1 % உம் ஆக 3% உம், தற்போது 01.02.2012ல் இருந்து அங்கத்தவர்களிடம் இருந்து 3% உம் சங்கம் 1% உம் ஆக 4% உம் சங்கங்களால் சமாசத் திற்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றது.

**1981ல் இருந்து 2011 வரை அங்கத்தவர் களுக்கு சமாசத்தால் வழங்கப்பட்ட விபத்துநிதி மற்றும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான தரவுகள் பின்னிணைப்பாக தரப் பட்டுள்ளன.**

### சங்கங்களிற்கான வரிக்குறைப்பு

1980ம் ஆண்டு காலப்பகுதியில் சங்கங் களால் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டு வந்த விற்பனை வரியினால் சங்கங்கள் அதிக பளுவை சந்தித்து தொடர்ந்து இலாபத்தில் இயங்க முடி யாத நிலையில் இருந்தபோது சமாச செயலாளர் திரு.க.நடராசா அவர்கள் எடுத்த பெரும் முயற்சி காரணமாக அவரது தலைமையில் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் 16.01.1980ல் அப்போதைய நிதி அமைச்சர் திரு.றொணிடீமெல் அவர்களையும், 21.01.1980ல் பிராந்திய அபி விருத்தி அமைச்சர் திரு.செ.இராசதுரை அவர் களையும் சந்தித்து கலந்துரையாடல் நடாத்திய தன் பயனாக 15% ஆக இருந்த விற்பனை வரி 10% ஆகக் குறைக்கப்பட்டது. இவ்வரிக் குறைப்பானது சங்கங்கள் தமது செயற்பாட்டை இலாபகரமாக முன்னெடுக்க உறுதுணையாக அமைந்தது.

### கற்பகம் பத்திரிகை வெளியீடு

அங்கத்தவர்களின் குரலை மக்கள் மத் தியில் ஒலிக்கச்செய்யும் நோக்குடனும், அங் கத்தவர்களுக்கான சங்கங்களின் சேவைகளை தெரியப்படுத்தவும், சங்கங்களின் தேவைகள் என்ன என்பதை வெளிக்கொணரவும், எமது நிறு வனங்களின் செயற்பாட்டை சமுதாயமட்டத்தில் விளங்க வைக்கவும் ஓர் பத்திரிகை வெளியிடப் படவேண்டியதன் அவசியம் சமாச நிர்வாகத் தால் உணரப்பட்டு 09.05.1980ம் திகதிய நெறி யாளர் சபைத் தீர்மானத்திற்கமைய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு **'கற்பகம்'** என்ற பெயரில் மாதாந்த பத்திரிகை சமாசத்தால் வெளியீடு செய்யப்பட்டது. அன்றைய காலகட்டத்திலேயே 3000 பத்திரிகைகள் அச்சிட்டு விநியோ கிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகையின் ஆசிரியராக திரு.கே.வி.நடராஜன் என்பவர் கடமையாற்றினார். பத்திரிகை வடிவில் வெளி வந்த கற்பகம் காலப்போக்கில் சஞ்சிகை வடி வில் மாற்றம் கண்டது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக காகிதாதிகள் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், சமாசம் காலத்திற்கு காலம் பலப்பல இடப்பெயர்வுகளை சந்தித்து வந்ததாலும் சில வருடங்கள் கற்பகம் சஞ்சிகை வெளியீடு தடைப்பட்டது. மீளவும் 2007ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் இருந்து பத்திரிகை வடிவில் கற்பகம் வெளியிடப்பட்டது. தற்போது கணணி மயப்படுத்தப்பட்ட அச்சிடலில் அழகான முறையில் தரமான ஆக்கங்களை தாங்கி கற் பகம் பத்திரிகை வெளிவந்துகொண்டிருக்கின் றது. தற்போது மாதாந்தம் 2,000 பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றது. இப் பத்திரிகைக்கு சங் கங்கள் மாதா மாதம் தத்தமது சங்கங்களின் விளம்பரங்களை வழங்கி பூரணமான ஆதரவளி த்து ஊக்கப்படுத்தி வருகின்றமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

### பனை அபிவிருத்தி சபையின் தலைவர்

1982ம் ஆண்டு சமாசத்தின் செயலாளராக இருந்த திரு.க.நடராசா (ஆசிரியர்) அவர்கள் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நிய மிக்கப்பட்டார். இந்நிகழ்வு எமது அங்கத்துவ சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களால் பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. இவரது இந் நியமனமானது பனை அபிவிருத்திச் சபையின் உதவிகளையும், ஆலோசனைகளையும், வழி காட்டல்களையும், பயிற்சிகளையும் எமது அங் கத்தவர்கள் மற்றும் சங்கங்கள் பெற்றுக்கொள்ள பேருதவி புரிந்தது.

### 10வது ஆண்டு மலர்

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங் கள் தோற்றம்பெற்ற 10வது ஆண்டினை கொண் டாடும் முகமாக 10வது ஆண்டு மலர் **"கற்பகம்"** என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவ்வாண்டு மலர், சமயப் பெரியார்கள்,

பல்கலைக்கழக பேராசிரியர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் ஆகியோரது ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆய்வுக்கட்டுரைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற தரமான ஆக்கங்களை தாங்கி சிறப்பான மலராக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### வெள்ளிவிழா மலர் வெளியீடு

அங்கத்துவ சங்கங்களின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதனை நினைவுகூரும் முகமாக சங்கங்களின் ஆதரவுடன் சமாசத்தால் வெள்ளிவிழா மலர் வெளியீடு செய்யப்பட்டது.

இம்மலர், சமயப் பெரியார்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றைத் தாங்கி சிறப்பான மலராக சிறந்த அட்டைப் படத்துடன் வெளியிடப்பட்டது.

### கொழும்பில் கருத்தரங்கு

20.01.1989ல் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.க.நடராசா அவர்களின் ஏற்பாட்டில் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள், வடக்கு கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், பனை அபிவிருத்திச் சபையின் சிறப்பாலோசகர்கள், உயர்மட்டப்பணியாளர்கள் அனைவரையும் கொழும்பிற்கு அழைத்து கொழும்பு விவசாய ஆராய்ச்சி மண்டபத்தில் இரு நாட்கள் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் அப்போது சமாசத்தின் பொதுமுகாமையாளராக கடமையாற்றிய கி.சிவநேசன் அவர்களால் எமது நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இக் கருத்தரங்கில் அப்போது வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த திரு வரதராஜப்பெருமாள், கூட்டுறவு அமைச்சர் திரு.அபுயூசுப், செயலாளர் திரு.வாமதேவன், திரு.பஞசாச்சரவேல், திரு. பத்மநாதன் போன்ற அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கிற்கான சகல செலவுகளையும் பனை அபிவிருத்திச் சபையே மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### கல்விச் சேவை

சமாசத்தின் கல்வி விரிவாக்கல் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் கல்விப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. சமாசம் இப் பயிற்சிகளை மாவட்ட கூட்டுறவுசபை விரிவுரையாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கலால் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை அழைத்து சமாசக் கல்வி உத்தியோகத்தர் மூலம் நடாத்தி வருகின்றது. அங்கத்துவ சங்கங்களின் பொதுச்சபை உறுப்பினர்கள், நெறியாளர்குழு உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர் களிற்கான பயிற்சியும், மற்றும் பணி யாளர்க ளுக்கான பயிற்சியில் கிளை முகாமையாளர்கள் கிளை மேற்பார்வையாளர்கள், உற்பத்தி முகாமையாளர்கள், கணக்காளர்கள், கிராமிய வங்கி முகாமையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளும் சமாச மட்டத்திலும், சங்கங்கள் கொத்தணிகள் மட்டத்திலும் வழங்கப்படுகின்றது. அத்துடன் சங்கங்களில் பணியாற்றும் கல்வி உத்தியோகத்தர்கள் மாதா மாதம் சமாசத்திற்கு அழைக்கப்பட்டு சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது.

### புதிய கூ.அ.உ.ஆணையாளர் நியமனம்

01.08.1989ல் எமது பனை தென்னை வள பகுதிக்கென புதிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக திரு.தி.சபாரத்தினம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரது பதவிக் காலத்தில் எமது கூட்டுறவு அமைப்புக்கள் பல வெற்றிகரமான செயற்திட்டங்களை முன்னெடுத்து இலாபகரமாக இயங்கி சங்கங்களுக்கான சொத்துக் கொள்வனவுகள் மற்றும் நிலையான வைப்புக்களை செய்து வளர்ச்சிப்பாதையில் செல்ல இவர் ஆற்றிய பணிகள் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவை.

### விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் நியமனம்

1990 ஆண்டு காலப்பகுதியில் கூ.அ.உ. ஆணையாளரின் ஆலோசனைக்கமைய சமாசத்தினால் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களிற்கான விண்ணப்பம் கோரப்பட்டு பணியாளர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு சங்கங்களிற்கும் மேற்படி பணிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். 1995 வரை இப் பணியாளர்களின் சேவையை சங்கங்கள் பெற்றுக்கொண்டன. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினாலான பாரிய இடப்பெயர்வுகளால் சங்கங்கள் சரியாக

இயங்கமுடியாத சூழ்நிலைகளாலும், இப்பணியாளர்கள் தமக்கான சம்பளக் கொடுப்பனவுகள் போதுமானதாக இல்லை எனக் கருதி பணியில் இருந்து விலகிய காரணத்தாலும், எஞ்சியிருந்த ஒரு சில பணியாளர்களை சங்கங்கள் நிரந்தர நியமனம் கொடுத்து வேறு பதவிகளில் அமர்த்தியதாலும் இப்பதவி இல்லாது போனது.

### சாராய விநியோக முகவர் சேவை

1993ம் ஆண்டு காலப்பகுதியில் சமாசம் வடிசாலைகளில் இருந்து மொத்தமாக சாரயத்தைப்பெற்று சங்கங்கள் மற்றும் தனியார் மது பானசாலைகளுக்கு விற்பனை செய்யும் சேவையை நடாத்தியது. பின்னர் நாட்டின் இடப்பெயர்வு சூழ்நிலைகளால் இச்சேவையை தொடர்ந்து செய்யமுடியாத நிலையில் கைவிடப்பட்டது.

### சமாசத்திற்கான லொறி கொள்வனவு

மேற்படி சாராய விநியோக சேவையின் பொருட்டு 1994ல் சமாசத்திற்கு சொந்தமாக லொறி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. சாராய விநியோகம் நிறுத்தப்பட்டதன் பின்னர் A9 பாதை மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் யாழ் செயலகத்தில் பதிவு செய்து பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து (வாகன தொடரணி) உலர் உணவுப் பொருட்கள் ஏற்றியிறக்கும் சேவையில் சமாச லொறி ஈடுபடுத்தப்பட்டது பின்னர் செயற்பாடுகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், இவ் லொறியினைத் திருத்தம் செய்து பாவிப்பதற்கு பாரிய நிதிச் செலவு ஏற்படும் என்ற நிலையிலும் பொதுச் சபையின் அனுமதியுடன் இவ் லொறி விற்பனை செய்யப்பட்டது.

### திருநெல்வேலியில் காணி கட்டடம் கொள்வனவு

1994ம் ஆண்டில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பல்கலைக்கழக சுற்றாடலில் சமாசத்தினால் ஓர் காணி கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டது. அக் கட்டடத்தில் பனைசார் உற்பத்திப் பொருட்களின் ஆய்வு நிலையம் சில காலம் நடாத்தப்பட்டது. பின்னர் இடம் பெயர்வுகளின்போது 2001ம் ஆண்டில் சில மாதங்கள் சமாசக் காரியாலயம் அக்கட்டடத்தில் இயங்கியது. பின்னர் அக்காணியை பராமரிப்பதில் இருந்த சிரமங்கள் காரணமாக இக்கட்டடம் விற்பனை செய்யப்பட்டது.

### சமாசப் பெயர் மாற்றம்

இதுவரை வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் என்ற பெயருடன் இயங்கிய சமாசம் அங்கத்துவ சங்கங்கள் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் எனப் பெயர் மாற்றம்பெற்று இயங்கியதால் 18.02.1995ல் சமாசத்தின் பெயரும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### யாழ். சுண்டுக்குழியில் காணி கட்டடக் கொள்வனவு

30.08.1995ம் திகதியில் இல 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சமாசத்தினால் சொந்தமாக காணி கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டது.

### தென்மராட்சிக்கான பாரிய இடப்பெயர்வு

1995ல் இக் கட்டடம் கொள்வனவு செய்த ஒரு மாதத்தின் பின் யாழ் குடாநாடே பாரிய இடப்பெயர்வை சந்தித்தமையால் சமாசத்தின் அலுவலக கோவைகள், தளபாடங்கள் அனைத்தும் தென்மராட்சிக்கு கொண்டு செல்லப்பட்டு சமாச அலுவலகம் வரணி வடிசாலையில் தற்காலிகமாக இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது நாட்டில் ஸ்திரமற்ற நிலை காணப்பட்டதால் வன்னிப்பகுதியில் சமாசத்தின் உப அலுவலகம் ஒன்றை அமைப்பது என நெறியாளர் சபையில் தீர்மானிக்கப்பட்டு கிளிநொச்சியில் உப அலுவலகம் அமைக்கப்பட்டது. சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களான வன்னிப்பகுதி சங்கங்களின் விபத்துப் பேரேடுகளும், தளபாடங்கள் சிலவும் கிளிநொச்சி உப அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன. சமாசத்தின் அப்போதைய பொதுமுகாமையாளர் திரு.கி.சிவநேசன் கிளிநொச்சி உப அலுவலகத்தில் கடமையாற்றினார். இதன் பின் போர் சூழல் ஏற்பட்டு யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் இப்பகுதிகளில் இயங்கிய எமது

அங்கத்துவ சங்கங்களுடனான சமாசத்தின் தொடர்புகளும் இடை நிறுத்தப்பட்டது.

### மீண்டும் யாழ்ப்பாணம் வருகை

1996 சித்திரையின் பின் மீண்டும் யாழ்ப் பாணத்திற்கு வரக்கூடிய சூழ்நிலை தோன்றிய தால் சமாச அலுவலகம் மீண்டும் யாழ்ப்பாணத் தில் யாழ் சுண்டுக்குழி சமாசத்தின் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது. அதன் பின் 2000 ஆண்டு ஆனி மாதம் மீண்டும் உள்ளூர் இடம்பெயர்வு ஏற்பட்டு வலிகாமம் கொத்தணி மானிப்பாயில் சமாசம் சுமார் மூன்று மாதங்கள் இயங்கியது. பின்னர் 17.08.2000ல் இருந்து சமா சத்தால் திருநெல்வேலியில் கொள்வனவு செய் யப்பட்ட கட்டடத்தில் இயங்கியது. அதன் பின்னர் நாட்டு நிலைமை சீராகிய பின்னர் 01.05.2001ல் இருந்து மீண்டும் சுண்டுக்குழி கட்டடத்தில் சமாச அலுவலகம் இயங்கத் தொடங்கியது.

### சமாசத்தால் திக்கம் வடிசாலை கையேற்பு

2004ம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபை யால் நிர்வகிக்கப்பட்டு வந்த திக்கம் வடி சாலையை சமாசம் பொறுப்பேற்று நடாத்தியது. சமாசம் பொறுப்பேற்று நடாத்திய காலத்தில் திக்கம் வடிசாலை இலாபகரமாக செயற்பட்டது. சங்கங்களுக்கும், திக்கம் வடிசாலைக்கும் இடை யிலான செல்மதி மீதிகள் பெருமளவு இக் காலப் பகுதியில் சமாசத்தால் செலுத்தி சீர்செய்யப் பட்டதுடன், பனை அபிவிருத்திச் சபையின் நிர் வாக காலத்தில் 2வருடங்களாக செலுத்தப் படாது நிலுவையாகவிருந்த பணியாளர்களுக் கான ஊழியர் சேமலாநிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவுகளும் சமாசத்தினால் இக் காலப்பகுதியில் உரிய பகுதிகளுக்கு செலுத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்பில் இருந்து காகிதாதி உபகரணங்கள் கொள்வனவு

2007ம் ஆண்டு கொழும்பிற்கும் வடபகுதிக் குமான தரை வழிப்பாதை மூடப்பட்டிருந்த காலப் பகுதியில் காகிதாதிகள் உபகரணங்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டு உள்ளூரில் இவற்றின் விலைகள் அதிகரித்திருந்த சந்தர்ப்பத்தில் அர சாங்க அதிபர் ஊடாக சமாசம் இப்பொருட் களை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொள் வனவு செய்து அங்கத்துவ சங்கங்களுக்கான விநியோகத்தை செய்தது. இக்கொள்வனவு விற் பனவின் மூலம் சமாசம் கணிசமான இலாபத்தை பெற்றுக்கொண்டது.

### திக்கம் வடிசாலை கையளிப்பு

சமாசத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளால் திக்கம் வடிசாலை இலாபகரமாக இயங்கிய போதும் இவ்வடிசாலையை தம்மிடமே ஒப்படை க்கவேண்டும் என வடமராட்சிக் கொத்தணி நிர் வாகம் கோரியதால் கொத்தணியின் கோரிக் கையை ஏற்று, 2008ம் ஆண்டு கொத்தணியிடம் இவ் வடிசாலை கையளிக்கப்பட்டது.

### நூல் வெளியீடு




கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கு துணை நிற்கும் செயற்பாடாக, கூட்டுறவு வலயக் கல்லூ ரியின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.இ.சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட **"சமூக அறிவியலும் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத் தியும்"** என்ற நூல் சமாசத்தின் அனுசரணை யுடன் 22.10.2008ல் சமாச மண்டபத்தில் வெளி யீடு செய்யப்பட்டது.

### சமாசத்திற்கான கணணிகள் அன்பளிப்பு



சமாச அலுவலக பணிகளை கணணிமயப் படுத்தும் செயற்பாடுகளுக்காக முதன் முதலில் 2003ம் ஆண்டு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் 125,000.00 ரூபா பெறுமதியான கணணி உப கரணங்கள் வழங்கப்பட்டன. அதன்பின் கூட்

டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களால் 80,000.00 பெறுமதியான கணணி உபகரணங் களும், பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவாஜி லிங்கம் அவர்களால் ரூபா 100,000.00 பெறுமதி யான கணணி உபகரணங்களும் வழங்கப்பட்டன. மொத்தமாக மூன்று கணணிகள் சமாசத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு இரு கணணிகள் சமாச அலுவலக பயன்பாட்டிலும், ஒரு கணணி அச்சக பயன்பாட்டிலும் உள்ளன.

## பாராளுமன்ற உறுப்பினர்களின் அன்பளிப்புகள்

சமாச நடவடிக்கைகளுக்கான யாழ் மாவட் டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களால் பின் வரும் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட் டுள்ளன.

- திரு. கஜேந்திரன்-சமாசக் கூட்ட மண்டப பாவனைக்கான மல்ரிமீடியா புறொஜெக்டர்
- அமரர் கி.சிவநேசன் - பக்ஸ் இயந்திரம், ஒலிபெருக்கி சாதனங்கள்
- திரு . குமரன் தங்கராஜா- பக்ஸ் இயந்திரம்

## சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலத்திட்டங்கள்

சமாசத்தின் சமூக அபிவிருத்தித் திட்டத் தின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு

2002ம் ஆண்டில் இருந்து வருடாவருடம் அங்கத்துவ சங்கங்களில் தொழிற்படும் உறுப் பினர்களில் சிறந்த அங்கத்தவர்கள் சங்க ரீதி யாக தெரிவுசெய்யப்பட்டு சமாச மட்டத்தில் தங் கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின் றார்கள். இச் சிறந்த அங்கத்தவர் தெரிவின்போது அங்கத்தவரால் வழங்கப்படும் உற்பத்தியின் தரம், உற்பத்தியின் தொகை, அங்கத்தவரின் தொழிலின் நேர்மைத் தன்மை, சங்கத்துடனான ஈடுபாடு, என்பனவற்றிற்கு முக்கியத்துவம் வழங் கப்படுவதால் இவ்விடயங்களை தொழிலாளர்கள் கடைப்பிடிக்க தூண்டுவதோடு, அவர்களின் மன தில் புது உற்சாகத்தையும் தொழிலில் அக்கறை யுடன் ஈடுபடும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதாக இந்நிகழ்வு அமைகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த அங்கத் தவர் கௌரவிப்பிற்காக தங்கப்பதக்கம் வழங்கு வதற்காக செலவிட்ட விபரம் வருமாறு:-

| ஆண்டு | அங்கத்தவர் எண் | மொத்தப்பெறுமதி |
|---|---|---|
| 2003 | 19 | 90000.00 |
| 2004 | 19 | 90000.00 |
| 2005 | 19 | 90000.00 |
| 2006 | 19 | 90000.00 |
| 2007 | 19 | 90000.00 |
| 2008 | 19 | 90000.00 |
| 2009 | 19 | 95000.00 |
| 2010 | 19 | 100000.00 |
| 2011 | 19 | 100000.00 |
| மொத்தம் | 190 | 835000.00 |

**5ம் ஆண்டு புலமைப்பரிசில் நிதி வழங்கல்**



சமாசத்தினால் அங்கத்துவ நிறுவனங்க ளில் தொழிற்படும் உறுப்பினர்கள் மற்றும் பணி யாளர்களின் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த பிள்ளைகளிற்கு வருடந் தோறும் 5000.00 ரூபா புலமைப்பரிசில் நிதி வழங்கி பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நடாத் தப்படுகின்றது. 2002ம் ஆண்டில் இருந்து இச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. சித்தி பெறும் மாணவர்களுக்கான நிதி ரூபா,5000.00 சமாசத்தினால் வங்கியில் வைப்பு செய்யப்பட்டு குறிப்பிட்ட மாணவர் 18 வயதை பூர்த்தி செய்த தும், அவ் வைப்பு நிதி 5000.00 மும், அதனுடன் சேர்ந்த வட்டியுமாக மீள வழங்கப்பட்டு வருகின் றது. இச் செயற்பாட்டின் மூலம் அங்கத்தவர் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் சமாசமும் தன் னாலான பங்களிப்பை செய்து வருகின்றது.

2002ல் இருந்து 2011 வரை வழங்கப்பட்ட 5ம் ஆண்டு புலமைப் பரிசில் நிதி விபரம்

| ஆண்டு | அங்கத்தவர் எண் | தொகை | மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| 2002 | 08 | 5000.00 | 40000.00 |
| 2003 | 08 | 5000.00 | 40000.00 |
| 2004 | 09 | 5000.00 | 45000.00 |
| 2005 | 08 | 5000.00 | 40000.00 |
| 2006 | 09 | 5000.00 | 45000.00 |
| 2007 | 03 | 5000.00 | 15000.00 |
| 2008 | 19 | 5000.00 | 95000.00 |
| 2009 | 19 | 5000.00 | 95000.00 |
| 2010 | 11 | 5000.00 | 55000.00 |
| 2011 | 22 | 5000.00 | 110000.00 |
| மொத்தம் | 116 | 5000.00 | 580,000.00 |

#### பாடசாலை உபகரணம் வழங்கல்

அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி சமாசம் 2002ம் ஆண்டில் இருந்து வருடந்தோறும் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் சமாசம் 2002ல் இருந்து 2011 வரையான காலப்பகுதியில் 7,839,000.00 ரூபாவை இதற்காக செலவிட்டுள்ளது. விபரம் வருமாறு,

| ஆண்டு | மாணவர் எண். | தொகை | மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| 2002 | 3000 | 150.00 | 450000.00 |
| 2003 | 3173 | 150.00 | 476000.00 |
| 2004 | 4000 | 218.00 | 872000.00 |
| 2005 | 3240 | 225.00 | 729000.00 |
| 2006 | 3755 | 225.00 | 845000.00 |
| 2007 | 3000 | 200.00 | 600000.00 |
| 2008 | 3460 | 200.00 | 692000.00 |
| 2009 | 2500 | 200.00 | 500000.00 |
| 2010 | 1863 | 300.00 | 559000.00 |
| 2011 | 3666 | 300.00 | 1100000.00 |
| மொத்தம் | | 35278 | 6,823,000.00 |

#### மானியம் வழங்கல்

அங்கத்துவ சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லம் மற்றும் தும்புப் பொருள் உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டும், சித்த வைத்திய கூட்டுறவு சங்கத்தினால் நடாத்தப்படும் நடமாடும் மருத்துவ சேவைகளுக்கும் சமாசம் மானியம் வழங்கி இச் செயற்பாடுகளுக்கு தனது ஊக்குவிப்பை வழங்கி வருகின்றது.

#### சர்வதேச கூட்டுறவு தின விழா



சமாசத்தினால் சர்வதேச கூட்டுறவுதின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2010ம் ஆண்டில் 88வது சர்வசே கூட்டுறவு தின விழாவும், 2011ம் ஆண்டில் 89, 90வது சர்வதேச கூட்டுறவுதின விழாவும், அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள், முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனனம், குழுநடனப் போட்டிகள் நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்கள் வழங்கி மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்காக சமாசம் ரூபா 150,000.00ஐ செலவிட்டுள்ளது.

### சமாசத்திற்கு புதிய மாடிக் கட்டடம் அமைப்பு

#### *துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டிடத்திற்கான நிதி உதவி-1ம் கட்டம்*

2005ம் ஆண்டு சமாச தலைமை காரியாலயம் அமைந்த காணியின் பின் பக்கத்தில் மாடிக்கட்டடம் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு கட்டடத்திற்கான மாதிரிப் படங்கள் வரையப்பட்டு இக் கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவியை அரசாங்க அதிபரிடம் சமாச நிர்வாகம் கோரிய தற்கமைய அரசாங்க அதிபர் அவர்களால் துரித அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பத்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. இந் நிதி பெறுவதற்கான ஒப்பந்தத்தில் அப்போது சமாசத் தலைவராகவிருந்த திரு.பி.விமல்ராஜ் அவர்கள் கையொப்பமிட்டிருந்தார். பின்னர் திரு.பி.விமல்ராஜ் அவர்கள்

தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததால் திரு.கி.தவராசா அவர்கள் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு அவரது நிர்வாக காலத்திலேயே மாடிக் கட்டடத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன

***மகிந்த சிந்தனை திட்டத்தில் இரண்டாம் கட்ட கொடுப்பனவு***

இரண்டாம் கட்டமாக 2006ம் ஆண்டு மகிந்த சிந்தனை திட்டத்தின்கீழ் 18இலட்சம் ரூபா நிதி உதவி கிடைக்கப்பெற்றது. இந் நிதி திரு.சி.சந்திரலிங்கம் அவர்கள் தலைவராக கடமையாற்றிய காலத்தில் கிடைக்கப்பெற்றது. இந் நிதி 2,800,000.00 மூலம் மாடிக் கட்டடத்தின் கீழ்தள வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு 23.05.2008ல் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.க.கணேஸ் அவர்களால் சமாசத்தின் புதிய மாடிக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. இது ஓர் முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வாகும்.

**புதிய கட்டடத்திற்கு சமாச அலுவலகம் இடமாற்றம்**

28.11.2008ல் திரு.த.சிவலிங்கம் அவர்கள் சமாசத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். சமாசம் இதுவரை இயங்கிய கட்டடத்தை வாடகைக்கு வழங்கும் நோக்கத்தில் சமாச அலுவலகம் 01.12.2010ல் புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் சமாசத்தின் பழைய தலைமை காரியாலய கட்டடம் பனை அபிவிருத்திச் சபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டது. புதிய கட்டிடத்தின் மேல் மாடியில் கூட்ட மண்டபம் அமைப்பதென சமாச நெறியாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டு, உரிய ஒழுங்குகளுக்கமைய சமாச நிதி 2,840,000.00 பயன்படுத்தப்



பட்டு கூட்ட மண்டப அமைப்பு வேலைகள், வர்ணப்பூச்சு வேலைகள், கீழ்த்தள வர்ணப்பூச்சு வேலைகள், மின் இணைப்பு வேலைகள், நீர் விநியோக வேலைகள் சுற்றுமதில் வேலைகள், கீழ்த்தள காரியாலய அமைப்பு அலுமினிய பிற்றிங் வேலைகள் என்பன செய்யப்பட்டு புதிய மாடி கட்டட வேலைகள் மொத் தம் 5,640,000.00 (ஐம்பத்தாறு இலட்சத்து நாற்பதினாயிரம்) செலவில் பூரணப்படுத்தப்பட்டு சமாசத்தின் புதிய மாடிக் கட்டடம் மிகவும் கம்பீரமாக காட்சிதருகின்றமை எமக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். இக்கூட்ட மண்டப அமைப்பு வேலைகள் சகலவற்றையும் மிக அழகாக, நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய அழகான மண்டபமாக அனைவராலும் பாராட்டும்படியாக அமைக்கப்பட்டுள்ளது.

**வாகனத் தரிப்பிடம்**

சமாச அலுவலகத்தில் ஓர் வாகன தரிப்பிடக் கொட்டகை அமைப்பதற்கு சமாச நிர்வாகம் தீர்மானித்தவேளை இக்கொட்டகை அமைப்பிற்கான செலவை தாம் அன்பளிப்பாக வழங்குவதாக சமாசத்தின் முன்னாள் செயலாளரும் பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவருமான திரு.க.நடராசா அவுஸ்திரேலியாவில் இருந்து தெரிவித்தமைக்கமைய கொட்டகை அமைப்பு வேலைகள் உரிய அனுமதிகள் பெற்று அமைக்கப்பட்டது. இதற்காக திரு.க.நடராசா அவர்களால் ரூபா 75,000.00 (எழுபத்தையாயிரம்) அன்பளிப்பாக சமாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மீதிப் பணம் சமாச நிதியில் இருந்து செலவிடப்பட்டு மொத்தம் ரூபா,117000.00 (ஒரு இலட்சத்துப் பதினேழாயிரம்) செலவில் சமாசப் பாவனைக்காக வாகன தரிப்பிடக் கொட்டகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**சமாசத்திற்கு காணி அன்பளிப்பு**

சமாசத்தின் முன்னாள் செயலாளரும் பனை அபிவிருத்திச்சபையின் முன்னாள் தலைவருமான திரு.க.நடராசா ஆசிரியர் அவர்களால் மந்துவில் பகுதியில் 07 பரப்புக் காணி சமாசத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. சமாசத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அன்று முதல் இன்றுவரை காரணமாக இருந்த திரு.க.நடராசா அவர்கள் தற்போது தூரதேசத்தில் வசித்தபோதும் அவர் எமது நிறுவனங்களின் மீதும் , அங்கத்தவர்கள் மீதும் காட்டிவரும் அன்பும் அக்கறையும் காலத்தால் மறக்கப்பட முடியாததாகும்.

### சமாசத்தின் கூட்டமண்டபத்திற்கு பொருட்கள் அன்பளிப்பு செய்த சங்கங்கள்

சமாசத்தின் புதிய கூட்ட மண்டபத்திற்கு தேவையான பொருட்களை அன்பளிப்பாக வழங்கி உதவுமாறு சமாசம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, பின்வரும் பொருட்களை எமது அங்கத்துவ சங்கங்கள் சமாசத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

- கரவெட்டி ப.தெ.வ.அ.கூசங்கம் பிளாஸ்ரிக் கதிரைகள்
- அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்கம் கூட்ட மேசை-1
- அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் சோடி பெரிய குத்துவிளக்கு-1
- வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம் குசன் கதிரைகள்
- கோப்பாய் ப.தெவ.அ.கூ.சங்கம் குசன் கதிரைகள்
- சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் பேச்சு மேடை
- கோண்டாவில் ப.வெ.வ.அ.கூ.சங்கம் ஒலிபெருக்கி சாதனங்கள்
- யாழ்மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறுவன பணியாளர் நலன்புரி கூ.சங்கம் மின்விசிறிகள்
- திரு.இ.விஜயமோகனராசா கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் முதலுதவிப்பெட்டி

### சமாச செயற்பாடுகளுக்கு கிடைத்த வெற்றிக் கேடயம்

2010ம் ஆண்டு கூட்டுறவு அமைச்சினால் மாகாண மட்டம் மற்றும் மாவட்ட மட்டங்களில் கூட்டுறவு சங்கங்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாம் படிக் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளில் திறமையாக செயற்பட்டமைக்கான முதலாவது பரிசினை சமாசம் பெற்றுக்கொண்டது. இப் போட்டிக்கான வெற்றிக் கேடயம் 2011ல் யாழ் கைதடி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் நடைபெற்ற கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வின்போது வடக்கு மாகாண ஆளுனர் திரு.ஜி.ஏ. சந்திரசிறி அவர்களால் சமாசத்தின் தலைவர் திரு.த.சிவலிங்கம், சமாசத்தின் பதில்பொதுமுகாமையாளர் திரு.வ.சிவகுமார் ஆகியோரிடம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

17.01.2012ல் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நெறியாளர் சபை தெரிவு இடம்பெற்று சமாசத்தின் தலைவராக திரு.நா.கணேசன் தெரிவுசெய்யப்பட்டார் தற்போது திரு.நா. கணேசன் அவர்களது தலைமையிலான நிர்வாக சபையே செயற்பட்டு வருகின்றது.

### நன்றிக்குரியோர்

எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்து தக்கதருணங்களில் நல்ல வழிகாட்டிகளாக, ஆலோசகர்களாக எம்மை வழி நடாத்திய, வழி நடாத்திக்கொண்டிருக்கின்ற, எமது மதிப்பிற்குரிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலால் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, அரசாங்க அதிபர், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பனை அபிவிருத்திச் சபை, யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை, இன்னும் எமது கூட்டுறவு அமைப்புக்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெருந்தகைகள் யாவருக்கும் எமது நிறுவனங்களின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

### முடிவுரை

கடந்த 40 ஆண்டுகளில் எமது அங்கத்துவ சங்கங்கள் எத்தனையோ இடையூறுகளை அதாவது கிளை நிலையங்களை இயக்க முடியாத நிலை, கிளை நிலையங்களுக்கான காணியினை சொந்தமாக கொள்வனவு செய்வதில் உள்ள இடர்பாடுகள், மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை, உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத நிலை போன்ற பல்வேறுபட்ட கஸ்டங்களை சந்தித்து அத்தனைக்கும் முகம் கொடுத்து தாக்குப்பிடித்து நின்று நிலைத்து, இன்று தமக்கென கிராமிய வங்கிகளை அமைத்து அங்கத்தவர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதுடன், சர்வதேச கூட்டுறவு தின

# வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்



சமாசத்தின் பணியாளர்கள்



சமாசத்தின் பணிப்பாளர்கள்





சமாசப் பணிமனை



பனந்தொழில் வல்லுநர் மாநாட்டின்போது - 2009



அங்கத்தவர்களுக்கான ஓய்வூதிய அங்குரார்ப்பண நிகழ்வின்போது..



அங்கத்தவர்களுக்கான ஓய்வூதிய அங்குரார்ப்பண நிகழ்வின்போது..



40 வது அகவையை கொண்டாடும்
எமது அங்கத்துவ சங்கங்களை
நாமும் வாழ்த்துகின்றோம்
சமாசப் பதிப்பகம்
சகலவிதமான வருடாந்த நாட்காட்டிகள், நினைவு, வரலாற்று நூல்கள், அழைப்பிதழ்கள், விளம்பர பிரசுரங்கள், லேபிள்கள், மற்றும் அனைத்து விதமான தனி வர்ண, பலவர்ண அச்சு வேலைகளையும் அழகாக கணினியில் வடிவமைப்பு செய்து, கோர்ட் மற்றும் ஹைடா ஓவ்செற் இயந்திரங்கள் மூலம் தரமான முறையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
டிஜிற்றல் நிழற்படப் பிரதி
நலன்புரித் திட்டங்கள்
ஓய்வூதியம் வழங்கல்.
விபத்து நிதி வழங்கல்.
கல்வி ஊக்குவிப்பு
கணினிப் பயிற்சியளிப்பு
விரைவில் ...
பாம் கோப் சிற்றி
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
இலக்கம் 52,
சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி.
T.P/FAX
021 222 5072

நிகழ்வுகளின்போது வறுமைக்கோட்டுக்குட்பட்ட தமது அங்கத்தவர் குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு வீடுகள், மலசலகூடங்கள், குழாய்கிணறுகள் என்பவற்றை அமைத்துக் கொடுக்கும் சேவைகளையும் செய்யும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளன. இந்த உன்னதமான வளர்ச்சிக்கு அங்கத்தவர்கள், நிர்வாகம் என்ற கட்டமைப்பிற்குள் நின்று செயற்பட்ட பணியாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடுகளே காரணம் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இந்நிறுவனங்களின் பணியாளர்களுக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன். அத்துடன் 40 ஆண்டுகளை பூர்த்திசெய்து அதற்கான விழாவினைக் கொண்டாடும் எமது அங்கத்துவ நிறுவனங்கள் மென்மேலும் வளர்ச்சியடைந்து தமது இலக்கினை நோக்கி முன்னேற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பனை தென்னை வள சங்கங்களின் 40 ஆண்டுகால வளர்ச்சிப் பாதையில் சமாசம் பதித்த வழித்தடங்கள் என்ற தலைப்பில் சமாசத்தின் 33 ஆண்டு கால வரலாற்றை, 1972ம் ஆண்டுகளில் இருந்து பனை தென்னை வள சங்கங்களில் பணியாற்றிய காலத்தில் நான் அறிந்தவற்றையும், தற்போது சமாசத்தின் பொது முகாமையாளர் என்ற வகையில் சமாச ஆவணங்களில் இருந்து வாசித்தறிந்தவற்றையும் தகவல் தொகுப்பாக தந்ததில் மனம் நிறைவடைகின்றேன்.

சுபம்.

நன்றி,

**ஜே.பி.குணரத்தினம்**
**பொதுமுகாமையாளர்**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்,**
**யாழ்ப்பாணம்.**

## பின்னிணைப்பு

### அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பில் நோக்கும்போது, கடந்த 01.07.2006ம் ஆண்டு தொடக்கம் 31.12.2012ம் ஆண்டு வரையிலும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை ஆண்டு ரீதியாக பார்ப்போமானால்,

2006ம் ஆண்டு டிசெம்பர் வரையில் 127 பேருக்கு ரூபா 421,189.00உம், 2007ம் ஆண்டு டிசெம்பர் வரையில் 172 பேருக்கு ரூபா 1,091,783.00உம், 2008ம் ஆண்டு டிசெம்பர் வரை யில் 221 பேருக்கு ரூபா 1,523,150.00உம், 2009ம் ஆண்டு டிசெம்பர் வரையில் 231 பேருக்கு ரூபா 2,286,920.00உம், 2010ம் ஆண்டு டிசெம்பர் வரை யில் ரூபா 282 பேருக்கு ரூபா 2,611,655.00உம், 2011ம் ஆண்டு டிசெம்பர் வரையில் 385 பேருக்கு ரூபா 4,369,928.00உம், 2012ம் ஆண்டு டிசெம்பர் வரையில் 475 பேருக்கு ரூபா 6,412,608.00உம் வழங்கப்பட்டுள்ளன.

## 1981 - 2012ம் ஆண்டுவரை வழங்கப்பட்ட விபத்து, மரண, ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

| | பாதிப்புக்கள் | | | | | | | | | | | | ஓய்வூதியம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குறுகியகாலம் | | மத்தியகாலம் | | நீண்டகாலம் | | நிரந்தரம் | | விபத்துமரணம் | | இயற்கைமரணம் | | | |
| வரு. | எண். | கொடுப். | எண். | கொடுப். | எண். | கொடுப். | எண். | கொடுப். | எண். | கொடுப். | எண். | கொடுப். | எண். | கொடுப். |
| 1981 | 48 | 35,900 | 10 | 20,500 | 02 | 5,500 | 01 | 6,000 | 03 | 30,000 | 01 | 5,000 | 0 | 0 |
| 1982 | 92 | 46,750 | 06 | 11,200 | 02 | 9,000 | 03 | 15,000 | 05 | 51,000 | 0 | 0 | 0 | 0 |
| 1983 | 71 | 38,200 | 06 | 16,750 | 05 | 21,000 | 03 | 24,000 | 10 | 97,000 | 0 | 0 | 0 | 0 |
| 1984 | 58 | 36,050 | 01 | 2,000 | 02 | 5,000 | 0 | 0 | 04 | 30,000 | 0 | 0 | 0 | 0 |
| 1985 | 62 | 36,150 | 07 | 17,500 | 03 | 12,000 | 02 | 15,000 | 11 | 104,500 | 0 | 0 | 0 | 0 |
| 1986 | 120 | 99,800 | 06 | 18,500 | 10 | 44,500 | 0 | 0 | 06 | 55,000 | 0 | 0 | 03 | 1,500 |
| 1987 | 94 | 71,300 | 10 | 20,400 | 00 | 0 | 0 | 0 | 07 | 58,000 | 0 | 0 | 20 | 20,700 |
| 1988 | 63 | 44,450 | 10 | 22,500 | 04 | 20,000 | 01 | 5,000 | 07 | 78,000 | 0 | 0 | 23 | 19,440 |
| 1989 | 138 | 91,500 | 02 | 8,000 | 02 | 15,000 | 0 | 0 | 03 | 39,000 | 0 | 0 | 16 | 22,100 |
| 1990 | 92 | 69,500 | 01 | 3,000 | 00 | 0 | 0 | 0 | 05 | 51,000 | 0 | 0 | 0 | 0 |
| 1991 | 239 | 204,800 | 09 | 40,000 | 06 | 34,000 | 01 | 3,000 | 12 | 153,000 | 0 | 0 | 0 | 0 |
| 1992 | 156 | 199,100 | 18 | 73,000 | 03 | 18,500 | 0 | 0 | 08 | 147,000 | 0 | 0 | 26 | 23,300 |
| 1993 | 350 | 330,650 | 25 | 120,000 | 03 | 20,000 | 02 | 50,000 | 19 | 460,000 | 0 | 0 | 12 | 13,200 |
| 1994 | 405 | 501,500 | 30 | 108,000 | 05 | 40,000 | 02 | 20,000 | 16 | 428,000 | 16 | 0 | 09 | 11,700 |
| 1995 | 487 | 652,150 | 30 | 117,500 | 01 | 15,000 | 03 | 30,000 | 27 | 687,000 | 27 | 0 | 13 | 18,800 |
| 1996 | 174 | 261,350 | 13 | 50,500 | 01 | 10,000 | 03 | 20,000 | 05 | 165,000 | 05 | 70,000 | 26 | 38,600 |
| 1997 | 226 | 312,200 | 22 | 80,500 | 04 | 35,000 | 07 | 165,000 | 26 | 585,000 | 26 | 30,000 | 22 | 30,220 |
| 1998 | 422 | 644,400 | 20 | 70,500 | 06 | 39,000 | 07 | 109,000 | 25 | 605,000 | 25 | 75,000 | 49 | 98,700 |
| 1999 | 420 | 475,750 | 15 | 60,000 | 05 | 51,500 | 05 | 128,000 | 36 | 1,037,000 | 36 | 215,000 | 12 | 23,200 |
| 2000 | 271 | 247,400 | 41 | 101,500 | 10 | 87,500 | 11 | 169,000 | 32 | 1,032,500 | 32 | 0 | 179 | 336,300 |
| 2001 | 314 | 302,100 | 22 | 57,250 | 03 | 33,500 | 05. | 148,000 | 17 | 644,000 | 17 | 0 | 166 | 350,700 |
| 2002 | 299 | 263,150 | 35 | 87,250 | 00 | 0 | 12 | 250,000 | 24 | 810,000 | 24 | 120,000 | 205 | 466,300 |
| 2003 | 219 | 200,950 | 23 | 46,740 | 06 | 45,900 | 13 | 327,860 | 23 | 625,625 | 23 | 49,500 | 104 | 426,400 |
| 2004 | 142 | 126,870 | 26 | 46,500 | 09 | 38,680 | 11 | 294,782 | 17 | 509,125 | 17 | 31,500 | 127 | 346,800 |
| 2005 | 127 | 115,800 | 30 | 49,020 | 07 | 49,820 | 10 | 309,430 | 04 | 203,875 | 04 | 161,755 | 60 | 137,900 |
| 2006 | 105 | 101,250 | 21 | 38,380 | 08 | 99,220 | 02 | 113,000 | 08 | 405,875 | 08 | 104,500 | 127 | 338,700 |
| 2007 | 10 | 10,140 | 31 | 59,520 | 05 | 61,300 | 01 | 51,000 | 02 | 56,750 | 02 | 387,975 | 102 | 284,200 |
| 2008 | 0 | 0 | 44 | 93,220 | 00 | 0 | 0 | - | 01 | 56,125 | 01 | 0 | 50 | 96,700 |
| 2009 | 0 | 0 | 47 | 79,166 | 00 | 0 | 0 | 0 | 01 | 69,625 | 0 | 0 | 44 | 174,469 |
| 2010 | 0 | 0 | 24 | 54,460 | 00 | - | - | - | 02 | 141,400 | 0 | 0 | 62 | 237,886 |
| 2011 | 0 | 0 | 13 | 25,720 | 07 | 45,619 | 02 | 29,375 | 0 | 0 | 0 | 0 | 50 | 126,129 |
| 2012 | 0 | 0 | 19 | 41,500 | 03 | 17,250 | 01 | 17,000 | 01 | 72,500 | 0 | 0 | 33 | 158,547 |

மேற்படி விபரப்படி கடந்த 1981ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரையில், குறுகிய காலப் பாதிப்பாக **5,204** பேருக்கு ரூபா **5,519,160**உம், மத்தியகாலப் பாதிப்பாக **617** பேருக்கு ரூபா **1,640,576**உம், நீண்டகாலப் பாதிப்பாக **122** பேருக்கு ரூபா **873,789**உம், நிரந்தரப் பாதிப்பாக **108** பேருக்கு ரூபா **2,299,447**உம், விபத்து மரணத்துக்காக **367** பேருக்கு ரூபா **9,487,900**உம், இயற்கை மரணத்துக்காக **70** பேருக்கு ரூபா **1,250,230**உம், ஓய்வூதியமாக **1,610** பேருக்கு ரூபா **3,802,491**உம் என மொத்தமாக **8,098** பேருக்கு ரூபா **24,873,593** வழங்கப்பட்டுள்ளன.

# யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

## வரலாறும் வளர்ச்சியும்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாவட்ட ரீதியில் ஒரு சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்ற நீண்ட நாள் முயற்சியின் பயனாக 28.01.2005ல் சமாச மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு சி.ஜயாத்துரை அவர்களின் தலைமையில் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றின் பொது முகாமையாளர்கள், பணியாளர்கள் சமாசத் தலைவர் திரு கி.தவராசா, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு கி.சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்ட கலந்துரையாடல் நடைபெற்று இக்கலந்துரையாடலில் பணியாளர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு அமைவாக சங்கத்தினை செயற்படுத்துவதற்கான 9பேர் கொண்ட செயற்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டது.

**தலைவர்:** திரு கா.சிவஞானம்(பொ.முகாமையாளர்,தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூசங்கம்)
**உபதலைவர்:** திரு க.பரமேஸ்வரன் (பொது முகாமையாளர், கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)
**செயலாளர்:** வ.சிவகுமார் (சமாச கல்வி உத்தியோகத்தர்)
**பொருளாளர்:** ம.ஞானரத்தினம் (பொதுமுகாமையாளர், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்)
**செயற்குழு உறுப்பினர்கள்:-**
திரு ஐ.இராமச்சந்திரன (அச்சுவேலி சங்கம்)
திரு க.சுதாகரன் (பொதுமுகாமையாளர், வலிகாமம் கொத்தணி)
திரு வே.கிருஷ்னன் (பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)
திரு க.நித்தியகுமார் (மருதங்கேணி ப.தெ.வ.அ.கூ.சங்கம)
திரு ந.சசீகரன் (வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்)

மேற்படி செயற்குழு தனக்கு வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக முறையாக தயாரிக்கப்பட்ட துணைவிதி நடைமுறைவிதி என்பவற்றை 10.03.2005ம் திகதிய பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்து இவ்விதிகளில் உள்ளடக்கிய விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் சங்கத்தினை கூட்டுறவு சட்டங்களுக்கு அமைவாக பதிவுசெய்யப்படவேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏற்கனவே இருந்த செயற்குழுவே தொடர்ந்தும் பதவி வகிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 18.03.2012ம் திகதி நடைபெற்ற நெறியாளர் சபைக் கூட்டத்தில் சங்க கணக்கு வைப்புக்களை கூட்டுறவு சட்ட நடைமுறைக்கு அமைவாக மேற்கொள்வதற்கு சமாசத்தின் கணக்காளர் திரு ந.துளசிதாஸ் என்பவரை தற்காலிகமாக பகுதிநேரக் கணக்காளராக நியமிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் 600ற்கு மேற்பட்ட பணியாளர்களையும் உறுப்பினர்களாக இணைப்பதுடன் அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்தும் நடைமுறை விதிக்கு அமைவாக பங்குப் பணமாக ரூபா 100.00 மாதாந்தம் உறுப்பினர் சேமமாக ரூபா 75.00 உம், சந்தாவாக ரூபா 25.00 உம் 2005 தை மாதத்தில் இருந்து அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அமைவாக இன்றுவரை இச்சங்கத்தின் 603 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

சங்க நடவடிக்கைகள் அனைத்தையும் காசோலைமூலம் மேற்கொள்வதற்கு வசதியாக சங்கத்தின் பெயரில் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது, சங்கத்தின்

பெயரில் படிவம் 110, கடிதத்தலைப்பு, சங்க இலட்சினை வடிவமைப்பும் செய்யப்பட்டது.

### தலைவர், செயலாளர்கள்

2005ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 5 நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் திரு கா.சிவஞானம், திரு க.சுதாகரன் திரு கி.குணரத்தினம் ஆகியோர் தலைவர்களாகவும், திரு வ.சிவகுமார், திரு ஜே.பி.குணரத்தினம் ஆகியோர் செயலாளர்களாகவும் சிறப்பாக செயற்பட்டுள்ளனர்.

### நன்கொடைகள்

சங்க ஆரம்பச் செயற்பாடுகளுக்காக அங்கத்துவ தாய் நிறுவனங்களிடம் தலா ரூபா 5,000.00 முற்பண நிதி உதவி கோரிக்கை விடப்பட்டு 20 நிறுவனங்களிடம் இருந்து ரூபா 100,000.00 நிதி திரட்டப்பட்டது. இம் முற்பணம், மாதாந்த மாநாட்டு தீர்மானங்களுக்கு அமைவாகவும் சங்கங்களின் சம்மதங்களை பெற்று சங்க நன்கொடையாகக் கணக்கு காட்டப்பட்டுள்ளது. மேலும் நலத்திட்ட கொடுப்பனவாக எமது அங்கத்தவர் திரு தங்கவேல் அச்சுவேலி ப.தெ.வ. அ.கூ.சங்கம் அவர்களின் இருதய சத்திர சிகிச்சைக்காக வழங்கப்பட்ட தொகையில் ரூபா 1,000.00 ஐ அவர் சங்க நன்கொடையாக வழங்கினார்.

### அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை மூலம் திரட்டிய நிதி

சங்கத்தின் ஆரம்ப செலவுகளை ஈடுசெய்வதுடன் சங்க வளர்ச்சி கருதியும் 2006ம் ஆண்டு காலப் பகுதியில் அதிஸ்டலாபச் சீட்டு விற்பனை அங்கத்துவ தாய் நிறுவனங்களின் ஊடாக விநியோகம் செய்யப்பட்டு பரிசில் பொருட்கள் கொள்வனவுச் செலவு போக மிகுதி ரூபா 68,415.00 திரட்டப்பட்டு நிதியமாக காணப்படுகின்றது.

### சங்கத்தின் நலத்திட்டக் கொடுப்பனவுகள்

பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைவிதிக்கு அமைவாக பின்வரும் நலத்திட்ட கொடுப்பனவுகள் எமது சங்க உறுப்பினர்களுக்கு 2005ம் ஆண்டில் இருந்து இன்றுவரை வழங்கப்பட்டு வருகின்றது.

- நடைமுறைவிதிக்கு அமைவாக மருத்துவ பாதிப்புக் கொடுப்பனவுகள் பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப ரூபா 1,000.00 தொடக்கம் 10,000.00 வரை வழங்கப்படுகின்றது. இது வரை 40 உறுப்பினர்களுக்கு ரூபா 70,000.00 மருத்துவ பாதிப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது.
- நடைமுறைவிதிக்கு அமைவாக உறுப்பினர் மரணத்துக்கு ரூபா 20,000.00 - 25,000.00 வரையும், உறுப்பினரின் தாய், தந்தை, கணவன், மனைவி மரணத்துக்கு ரூபா 3,000.00 உம், வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 07 உறுப்பினர் மரணத்துக்கு ரூபா 150,000.00 உம், உறுப்பினர் உறவினரின் 20 மரணத்துக்கு ரூபா 60,000.00உம் சேர்த்து மொத்தமாக ரூபா 210,000.00 அமங்கள நிதி வழங்கப்பட்டுள்ளது.
- நடைமுறை விதிக்கு அமைவாக உறுப்பினர் ஒருவரின் வீட்டில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகள் அதாவது உறுப்பினர் திருமணம், பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, புதுமனைப் புகுவிழா போன்றவற்றுக்கு ரூபா 3,000.00 மங்கள நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 98 உறுப்பினர்களுக்கு ரூபா 294,000.00 மங்கள நிதியாக வழங்கப்பட்டுள்ளது.
- நடைமுறை விதிக்கு அமைவாக உறுப்பினர் பிள்ளைகள் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் ரூபா 2,000.00 உம், உயர் கல்விக்கு தெரிவானால் ரூபா 3,000.00உம் கல்வி ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 37 உறுப்பினர்களின் பிள்ளைகள் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் ரூபா 74,000.00உம், 27 உறுப்பினர்களின் பிள்ளைகள் உயர்கல்விக்கு தெரிவாகியமையால் ரூபா 81,000.00உம் சேர்த்து மொத்தமாக ரூபா 155,000.00 கல்வி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- நடைமுறை விதிக்கு அமைவாக உறுப்பினர் ஒருவர் எமது சங்கத்தைவிட்டு வயது மூப்பு, சுகயீனம், வேறு அரச சேவை காரணமாக ஓய்வுபெற்றுச் சென்றால் அவர்களை வருட முடிவில் அழைத்து கௌரவித்து பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இது வரை 112 உறுப்பினர்களை அழைத்து கௌரவித்து ரூபா 75,000.00 பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

## சங்கத்தின் சுயமுயற்சிக் கடன் கொடுப்பனவுகள்

பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைவிதிக்கு அமைவாக இச்சங்கத்தில் உறுப்பினராக இணைந்து தொடர்ச்சியாக பங்களிப்பு செய்கின்றவர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கடனின் உச்சத் தொகை ஆரம்பத்தில் ரூபா 10,000.00 ஆகவும், பின்னர் ரூபா 25,000.00 ஆகவும், தற்போது ரூபா 50,000.00 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இக்கடன் தொகை 12-36 மாதங்களில் உறுப்பினரின் மாதாந்த சம்பளத்தில் இருந்து நடைமுறையில் உள்ள நடைமுறை நிலையான வைப்பு வங்கி வட்டி வீதத்துடன் மீள அறவிடப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்மூலம் 225 உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர்.

## மாதாந்த ஓய்வூதியத்திட்டம்

இத்திட்டமானது பணியாளர்களின் நீண்ட கால எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்வதற்காக 01.07.2010ம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பல தடைகள், சிரமங்கள் ஏற்பட்டன. இருந்தபோதும் 2009-2010ம் ஆண்டு காலப் பகுதியில் திரு க.சுதாகரன், திரு கி.குணரத்தினம் அவர்கள் தலைமையில் இருந்த நிர்வாக சபையின் அயராத முயற்சியாலும் கூ.அ.உ.ஆணையாளர், சங்கங்களின் இயக்குனர் சபையின் பூரண ஒத்துழைப்பாலுமே இத்திட்டம் வெற்றிகரமாக செயற்பட ஆரம்பித்தது.

எமது நெறியாளர் சபை முதலில் இவ் ஓய்வூதிய திட்டத்தை சமாசத்தால் நடத்தப்படும் அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்துடன் இணைத்து நடத்த தீர்மானித்து சமாசத்திடம் கோரிக்கை முன்வைத்தது. துரதிஷ்டமாக பணியாளர்களையும் இணைப்பதற்கு சமாசப் பொதுச் சபை மறுத்தது. இருந்தபோதிலும் மேற்படி திட்டத்தை பணியாளர் நலன்புரிச் சங்கம் தனித்து நடத்துவதற்கு சமாசத்தின் நிதிப் பங்களிப்பாக ரூபா 20 இலட்சத்தை வழங்கி உதவியது. மேலும் ஆணையாளரின் ஆலோசனைகளுக்கு அமைவாக அங்கத்துவ சங்கங்களிடம் இருந்து அவர்களின் சொந்த நிதியில் இருந்து தலா 2 இலட்சம் ரூபாவும் கொத்தணிகளின் நிதியில் இருந்து தலா 3 இலட்சம் ரூபாவும் என மொத்தமாக 58 இலட்சம் ரூபா நிதி இத் திட்டத்திற்காக திரட்டப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் இணைந்த 427 உறுப்பினர்களிடம் இருந்து அவர்களின் சேவைக் காலத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூபா 600.00உம், 2009ம் ஆண்டில் இருந்து மேற்படி உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் மாதாந்த சம்பளத்தில் ரூபா 250.00உம் என்ற அடிப்படையில் இன்றுவரை ரூபா 71.8 இலட்சம் நிதி திரட்டப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் இன்றுவரை 48 உறுப்பினர்கள், அவர்கள் இத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்த தொகையில் 5 வீதக் கொடுப்பனவை மாதாந்தம் ஓய்வூதியமாகப் பெற்று வருகின்றனர். இவர்களின் ஒரு மாத ஓய்வூதியம் ரூபா 1,000.00 தொடக்கம் 1,600.00 வரை காணப்படுகிறது. எதிர்வரும் காலத்தில் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியத்தை அதிகரித்து வழங்குவதற்கு நிர்வாக சபையில் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருகின்றது.

நன்றி.

**"கூடிவாழ்ந்தால் கோடி நன்மை"**

**"கூடி உழைத்து மகிழ்வோடு வாழ்வோம்"**

## இலங்கையின் மொத்தப் பனை மரங்களும் அழிக்கப்பட்ட பனை மரங்களும் (2002 வரை)

| மாவட்டம் | மொத்த பனைகள் | அழிக்கப்பட்ட பனைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 3,500,000 | 1,500.000 |
| கிளிநொச்சி | 3,500,000 | 1,000,000 |
| மன்னார் | 3,000,000 | 700,000 |
| திருகோணமலை | 210,000 | 50,000 |
| முல்லைத்தீவு | 500,000 | 200,000 |
| வவுனியா | 8,000 | - |
| அனுராதபுரம் | 40,000 | - |
| மட்டுநகர் | 200,000 | 50,000 |
| அம்பாறை | 40,000 | - |
| புத்தளம் | 120,000 | - |
| அம்பாந்தோட்டை | 2,000 | - |
| **மொத்தம்** | **11,120,000** | **3,500,000** |
| (11 மாவட்டங்களில்) | | |
| **வட-கிழக்கில்** | **11,078,000** | |



சிறுகதை

# பகட்டு உறவுகள்

மடத்துக்கடவையான்

"அப்பம்மா அப்பம்மா சித்தப்பா லையினிலை நிற்கின்றார் கெதியா வாங்கோ"

அடுப்படியிலேயே காலம் முழுவதையும் செலவழிச்சுக் கொண்டிருக்கின்ற பாக்கியம் உடனடியாக எழுந்து நடக்க இயலாமையிலும் இளையவனுடன் கதைக்கிறதிற்காக முதுகு நிமிர முடியாதவளாக ரெலிபோன் இருக்குமிடத்துக்கு போனாள்.

"ராசா! அம்மா கதைக்கிறன், சுகமாய் இருக்கிறாயோ? வேளாவேளைக்கு சாப்பிடு, குளிப்பு முழுக்கு ஒழுங்காய் நடக்குதுதானே, கடைச் சாப்பாட்டை சாப்பிடாதே, உடம்பைக் கவனித்துக்கொள். என்ன விசயத்துக்காக எடுத்தனி?"

"ஐயா எங்கையம்மா?"

"கொய்யா வாழைக்குத் தண்ணி மாறிக்கொண்டிருக்கிறார்"

"இவ்வளவு காலமும் தான் கஸ்ரப்பட்டு உழைச்சவர், இப்ப அவர் கஸ்ரப்பட வேண்டிய தேவை யில்லைத்தானே"

"இதை நான் எத்தனையோ முறை சொல்லியும் கேட்கிறாரில்லை. கஸ்ரப்பட்டு தொழில் செய்த உடம்பு வேலை வில்லட்டியில்லாமல் இருந்திட்டால் அது உடம்புக்கு கெடுதலாக்கிப்போடும். அதுதான் தோட்டத்தில வேலைசெய்து தேகத்தைக் கவனிக்கிறன் எண்டு சொல்லுறார். நீ சொல்லிப்பார். உன்ரை சொல்லாதல் கேக்கிறாரோ பாப்பம்"

"அம்மா வாற மாதம் முதலாம் திகதியிலிருந்து எங்கட கச்சேரிக்கு மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வோடை இடமாற்றம் கிடைச்சிருக்கு. இதைச் சொல்லுறதுக்குத்தான் ரெலிபோன் எடுத்தனான். அம்மா எமக்கு அடுப்பழக்கை வைச்சு சோறு சமைக்கேக்கையும் புட்டுக் குத்தேக்கையும் படிப்பிச்சுப் படிப்பிச்சுத்தான் இண்டைக்கு இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கு. இதுக்கு மேலாக ஐயா கோடேக்கையும் மாரிக்கையும் வெய்யில் மழையெண்டு பாராமல் தொழில் செய்து எங்களை படிப்பிச்சதையெல்லாம் நாங்கள் மறக்கேல்லை. அண்ணாவும் அண்டைக்கு கதைக்கேக்கை பல விசயங்களை என்னுடன் கதைத்துக்கொண்டவர்."

"இஞ்சாருங்கோ! சின்னவன் கதைக்க வரட்டுமாம். அவன் வாற முதலாம் திகதியிலிருந்து எங்கடை கச்சேரிக்கு மேலதிக அரசாங்க அதிபராக வாறானாம். இந்தாங்கோ கதையுங்கோ."

"ராசா! ஐயா கதைக்கிறன். சந்தோசமான நல்ல செய்திதான். இருந்தாலும் நீ உங்கை வேலை செய்யேக்கை எனக்கு எந்த யோசனையுமில்லை. ஆனால் இங்கை வந்து வேலை செய்யப்போறாய் எண்டாப்போல இனம்புரியாத ஒரு தயக்கம் என்ரை அடிமனதிலை ஏதோ செய்யுது. எதுக்கும் எங்கடை பிள்ளையார் விட்டவழி. அவர் எப்போதும் எங்களுடனேயே இருக்கிறார்."

"இஞ்சாரப்பா நான் ஒருக்கால் சட்டம்பியார் ஐயாவிடம் போகப் போறன். கெதியாய் சாப்பாட்டைத்தா"

பாக்கியம் 45 வருடமாக இதம் பதமாக சமைத்துப் போடுகின்ற சாப்பாட்டை ஒரு பிடி பிடிச்சுப்போட்டு பழக்கப்பட்ட பாதையில் அவரது கால்கள் சட்டம்பியார் வளவை நோக்கின.

கணவனை வழியனுப்பிவிட்டு முன் விறாந்தை நிலத்தில் காலை நீட்டி வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த அவளுக்கு கடந்தகால நிகழ்வுகள் மனதில் வந்து ஊசலாடியது.

"எங்களிலை ஆறுபேர். அதிலை மூன்று ஆம்பிளைகளும் மூன்று பொம்பிளைகளும். அம்மா கனகாலமாக நொய்வு நோய்க்காரி. நான் மூத்ததாகவிருந்ததாலை என்மீதே குடும்ப பாரம் விழுந்தது. ஐயா ஒரு தொழிலாளி, தொழில் செய்தவைகளை விக்கமுடியாது அல்லல்பட்டிருந்தார். எங்கடை குடும்பத்துக்கு வருவாய் இல்லாதிருந்ததாலே எங்கடை வீட்டிலை ஒவ்வொரு நாளும் ஏதோ விதத்தில் சண்டையும், சச்சரவுகளும் வந்துகொண்டேயிருந்தன.

எங்கடை குடும்பத்தின்ரை நிலைமையை அறிந்த சண்முகம் சட்டம்பியார் ஐயா இவரின்ரை வீட்டுக்காரரோடை கதைச்சுப்பேசி சம்பந்தம் ஒப்பேத்தி வைச்சவர். இவர் முந்தி படு குழப்படி. உறவுக்கை பல முறைப் பெண்களிருந்தும் ஒருத்தரும் இவரை மாப்பிள்ளையாக்க முன்வரவில்லை எண்டதிலை நியாயமில்லாமலில்லை.

இவர் தொழில்செய்து இறக்கியதையெல்லாம் கூட்டாளிமாருடன் சேர்ந்து குடிச்சு கும்மாளமடிச்சு கூழ்காச்சி வீண்விரயம் செய்து பொழுதைப் போக்கினவர்.

எனக்குச் சம்பந்தம் பேசேக்கைகூட கனபேர் வந்து லட்சுமிகரமான சாந்தமான பொம்புளைப் பிள்ளையை கொண்டுபோய் குடிகாரனிட்டை குடுக்கப்போறியள். குரங்கின்ரை கையில குடுத்த பூமாலைபோல அமையப் போகுது எண்டு ஐயாவின்ரை சகோதரி சொன்னவ. ஆனால் தன்ரை மகனிலை ஒருத்தனை எங்களிலை ஒருத்திக்கு செய்துவைச்சு தன்ரை அண்ணையின்ரை குடும்ப பாரத்தை குறைப்பமெண்ட எண்ணம் துளி யளவுமில்லை கனகி மாமிக்கு. ஆனால் மாமியின்ரை கதை மட்டும் மொத்தம்.

என்னை இவர்கட்டினதிலையிருந்து சண்முகம் சட்டம்பியார் ஐயாவின்ரை புத்திமதியைக் கேட்டு குழப்படியொன்றையும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால் உற்பத்தி செய்தவைகளை விற்க முடியாமல் கஸ்ரப்பட்டு இறக்கியதையெல்லாம் நிலத்திலை ஊத்தேக்கை மனதுக்குக் கஸ்ரமாகவிருக்கும். என்னதான் செய்வது வேறை வழியில்லாமல் ஊத்துறதுதான்.

எங்களுக்க பிள்ளைகளும் பிறந்து அவர்கள் படிக்க வெளிக்கிட்டதும் செலவுகள் பல மடங்காயிற்று. அப்பத்தான் 1972ம் ஆண்டு தொழிலாளருக்கென சங்கமொண்டு அமைச்சவை. அது அமைக்கிறதுக்கு சட்டம்பியார் முன்னின்று உழைத்தவர்.

என்ரை இவர் உதிலை சேரவில்லை ஐயா எண்டு சொல்லியும் சட்டம்பியார் வலுக்கட்டாயமாக சேர்த்தது மட்டுமில்லாமல் சங்கத்துக்கு தலைவருமாக்கிவிட்டார்.

தலைவராக்கிவிட்டதுடன் ஐயாவின்ரை பொறுப்பு முடியவில்லை. தலைவருக்குரிய எல்லா திறன்களையும் படிப்படியாகச் சொல்லிக் கொடுத்து இவரை சிறந்த தலைவராக்கினார்.

பலபேர் சங்க விசயமாகவும் வேறை விசயமாகவும் இவரைத் தேடி வரத்தொடங்கினர். அவர்கள் வரும்போது இருக்க வைக்க கதிரையோ வைத்து எழுதுவதற்கு மேசையோ இருக்கவில்லை. வீடுகூட ஆன மேச்சலில்லாமல் வீட்டுக்கையிருந்து கொண்டே வானத்தைப் பார்க்கலாம். நிலாவும் மழைத் தண்ணியும் யாரையும் கேட்காமல் வந்துபோகும்.

முந்தியிதையெல்லாம் சீராக்க வேணுமெண்டு நினைத்ததில்லை. தலைவரானதிலிருந்து தன் மனநிலையையும் மாற்றிக்கொண்டார். தன் நிலைகளையும் மாற்றிக்கொண்டார்.

சங்கத்தை நிர்வகிப்பதற்கு முன்னம் எங்கடை வீட்டை செம்மையாக நடத்த வேண்டும், அப்பத்தான் எங்கடை தலைமைத்துவத்தை மற்றவர்களினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதிலை இவர் குறியாகவிருந்ததாலைதான் எங்கடை குடும்பமும் விளங்கியது.

சங்கம் ஒன்றை நிர்வகிப்பது என்பது சாதாரண காரியமல்ல. பக்கம்சாராமல், முகமன் பார்க்காமல், நீதி நியாயத்துக்கு கட்டுப்பட்டு நடந்ததாலைதான் இன்றைக்கும் அவரைக் காணுகிறவையெல்லாம் தலைவரென மரியாதையுடன் பழகிக்கொள்கின்றனர்.

பிள்ளைகளையும் படிப்பிச்சு அவர்களையும் உயர்ந்த தொழில் கிடைக்கவும், வீடு வாசல், தோட்டம், துரவு என எல்லா வசதிகளையும் கஸ்ரப்பட்டு தொழில்செய்து சங்கத்துக்கு கொடுத்ததாலேயும் சட்டம்பியார் ஐயாவின் வழிகாட்டலிலேயும் இவற்றுக்கெல்லாம் மேலாக எங்கடை பிள்ளையாரின்ரை அருளினாலையும் எமக்கெல்லாம் விழவு காலம் வந்திட்டுது என பழையவைகளை தன்னை மறந்து மீட்டுக்கொண்டிருந்தாள் பாக்கியம்.

மணிச்சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தவளிடம் தபால்காரன் பெருமளவு கடிதங்களைக் கொடுத்தான்.

சட்டம்பியார் வீட்டுப் படலையைத் திறந்துகொண்டு தலைவர் துரைசிங்கம் உள்ளே போனார்.

"பொடியா வா! வா! தங்கம் கற்கண்டை கொண்டு வந்து துரைக்குக் கொடு"

"அம்மா என்ன கற்கண்டோடை?"

"பொடியா எனக்கும் தம்பி அறிவித்தவன். அந்த நேரத்திலையிருந்து உதாலை போகிறவைக்கெல்லாம் கற்கண்டு குடுத்துக்கொண்டிருக்கிறன். எங்கடை தேக்கம் காட்டிலேயும் உயர்மட்ட நிர்வாக சேவையாளர் இருக்கிறார் எண்டது மற்றவைக்கும் தெரியத்தானே வேணும்"

"ஐயா எங்கடை இந்த நிலைமைக்கு நீங்கள்தானே காரணம். அதையெல்லாம் நான் மறந்தால் நன்றிகெட்டவன் ஆகிவிடுவேன். ஐயா பிள்ளையாரை நினைக்கிற கணமெல்லாம் உங்களையும் நினைக் கிறனான். என்னுடைய கண்கண்ட தெய்வம் நீங்கள்தான்"

"ஐயா! தம்பி இங்கை மாற்றலாகி வாறதாலே பிரச்சினையில்லையோ?"

"பொடியா முந்தியைப்போல இப்ப இல்லை. முந்தித்தான் தேக்கம்காட்டிலையுள்ளவையை அயலிலையுள்ள சொந்தக்காரர்கூட மதிப்பதில்லை. இப்ப இங்கை என்னதான் இல்லை. இவையெல்லாம் வந்தமையிறதுக்கு இறைவன்தான் துணைபுரிந்தான் **பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்** என்ற வழிவிலை.

நாங்கள் உயிரள்ள வரையும் இறைவனை நினைப்பதுபோலை சங்கத்தையும் நினைவில் கொள்ளவேணும்"

"பொடியா, நீயுமொரு பெரிய சங்கத்தை இருபது வருஷத்துக்குமேலை தலைமைப் பொறுப்பு எடுத்து நடத்தினாய்தானே| உன்ரை மகனோ பல மடங்கு கல்வி கற்று தொழில் தகைமைகள்பெற்றுக்கொண்ட ஒருவர். அதுமட்டுமில்லை, தலைநகரத்திலை பல வருஷமாய் தொழில்புரிந்ததாலே அனைவுகளுமிருக்கு என்று கேள்விப்பட்டனான். அதனாலை உன்ரை மோன் இஞ்சை வந்து நிர்வகிப்பது பெரிய காரியமில்லை. அதுக்காக நீ மனம் சஞ்சலப்பட வேண்டியதில்லை. மேலையிருக்கிறவன் எப்போதும் துணையிருக்கிறான். பயப்பட வேண்டாம். சந்தோசமாயிரு" எனக்கூறி துரையை தெம்பேற்றிய சட்டம்பியாரிடமிருந்து விடைபெற்று வீடு வந்துசேர்ந்தபோது பாக்கியம் ஒரு கட்டுக் கடிதங்களை கொடுத்தாள்.

கடிதங்கள் எல்லாம் அவரது பெயருக்கே வந்திருந்தன. அவற்றை பிரித்து நிதானமாகப் படித்தார். அவரது மகன் மேலதிக அரசாங்க அதிபராக நியமனம்பெற்று வருவதை வாழ்த்துபவையாக அமைந்தன. அவற்றில் அவரை என்றும் மனதார நேசிப்பவர்களும் அவரால் நேசிக்கப்படுபவர்களும் வாழ்த்தியிருந்ததைவிட, தேக்கங்காட்டில் வாழ்கின்றவர்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக கணித்து அருவருக்கத்தக்கவர்களாக நோக்கியவர்களுக்கு தலைமை வகித்துக்கொண்டவர்களின் வாழ்த்துக்களே அதிகமாயிருந்தன.

துரைசிங்கம் என்கின்ற பெயரை உச்சரிப்பதை விரும்பாமல் "துரையன் துரையன்" என நாக்குத் தெறிக்க கூறியவர்களின் எழுத்துக்களில் "துரைசிங்கம் அண்ணை", "துரைசிங்கம் ஐயா", "துரையண்ணை", "துரைஐயா" என எழுதப்பட்டிருந்தன.

ஊழியக் காலத்தில் பலதரப்பட்டவர்களைச் சந்தித்தபொழுதில் கபடமும் போலித்தனமும் கொண்டவர்களையும் தரிசித்தவருக்கு இவை மழைக்கால ஈசல்களாக புற்றிலிருந்து புறப்பட்ட உறவுகூறல்களான "பகட்டு உறவுகளே" என்பதை அறியாதவரல்ல தலைவர் துரைசிங்கம்.



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் 40 ஆண்டுகால வளர்ச்சிக்காக
பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச்
சங்கத்தின் நல்வாழ்த்துக்கள்
மக்களுக்கான எமது சேவைகள்
கிளைகளினூடாக பல்பொருள் விற்பனை
பல்வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய
கோப் சிற்றி
பண்டத்தரிப்பு
மினி கோப் சிற்றி
மாதகல் – 01
மாதகல் மத்தி – 02
பெரியவிளான் – 06
சில்லாலை – 10
இளவாலை – 12
சேமிப்புக்கும் சுயதொழில் கடன் வழங்கலுக்கும்
கிராமிய வங்கி
பண்டத்தரிப்பு
மாதகல்
இளவாலை
மிகச் சிறந்த தரமான மலிவான ஆடைகளுக்கு
பண்கோப் புடைவையகம்
தரமான நாட்டரிசி, தீட்டல் பச்சை, உடைபச்சை வகைகளுக்கு
பண்கோப் அரிசி ஆலை.
சுவையான பாண், பணிஸ், பிஸ்கட், கல்பணிஸ், றஸ்க், கச்சான் பிஸ்கட், உற்பத்திக்கு
பண் கோப் வெதுப்பகம்.
PAR CO-OP
அரிசி மா, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள் வகைகளை குறைந்த விலையில் அரைப்பதற்கு
பண்கோப்
அரைக்கும் ஆலை.
உணவுக்கு சுவையூட்டும் தரமான
பண்கோப் நல்லெண்ணெய்.
rice
எரிபொருள் நிரப்பு நிலையம்.
படங்கு, உழவு இயந்திர சேவை.
தொலைபேசி, போட்டோ பிரதி சேவை.
பண்டத்தரிப்பு பரிஷ்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்


பனை தென்னை வளச் சங்கங்களின் 40வது ஆண்டு
சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்
எமது சேவைகள்
கூட்டுறவுநகர் விற்பனை நிலையம்
நுகர்ச்சி சேவை
பாரவூர்திச் சேவை
விவசாய சேவை
கூட்டுறவுக் கல்வி
அபிவிருத்தி
இரும்பு விற்பனை நிலையம்
வாகன சுத்திகரிப்பு
வாடகை சேவை
[கதிரை, கோப்பை,
தண்ணீர் தவளை]
கிராமிய வங்கி
வெதுப்பகம்
எரிபொருள் நிரப்பு நிலையம்
புடவை
விற்பனை
நிழற்படப்
பிரதியாக்கல்
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
பதிவு இல: J/1560/29.03.1971
T.P:021 226 3275


கற்பகதரு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்
உங்கள் வீட்டுக்குத் தேவையான
சகலவிதமான மரத்தளபாடங்களும்
உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு
அழகிய முறையில் வடிவமைப்பு செய்து
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் சகலவிதமான பலகைகள்,
தீராந்திகளையும் எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்
இது அரச அங்கீகாரம்பெற்ற ஒரு மரக்காலை
சிவகுரு மரக்காலை SIVAKURU TIMBER DEPOT
இந்துக்கல்லூரி அருகாமை,
பலாலி வீதி, உரும்பிராய்
021 720 0525
077 261 8399
Near Hindu College,
Palaly Road, Urumpirai


கற்பகதரு
40வது ஆண்டு
சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்
சகலவிதமான
உள்நாட்டு, வெளிநாட்டு
மதுபான வகைகளையும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
செல்வாஸ் வைன் ஸ்ரோர்ஸ்
SELVA'S WINE STORES
உரிமையாளர்
திருமதி செ.சாந்தலக்ஷ்மி
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

# நன்றிதனை நவில்கின்றோம்



உங்கள் கைகளில் தவழுகின்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு சிறப்பு மலர் வெளியீடாக "கற்பகதரு" எனும் இம்மலரானது நறுமணம் வீசுவதற்காக ஆசி வழங்கிய இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய துறை சார் வளவாளர்களுக்கும், மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரிய பெருந்தகைகளுக்கும், துறைசார்ந்த பெரியவர்களுக்கும், கவிதை, சிறுகதை என்பன வழங்கிய கூட்டுறவாளர்களுக்கும், வரலாற்று தொகுப்புக்கள், படங்கள், மற்றும் தேவையான விபரங்களை தந்துதவிய சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியவற்றின் பணிப்பாளர்கள், பணியாளர்களுக்கும், மலரினை அழகுற வடிவமைப்பதில் கருத்துடன் உழைத்த சமாச அச்சகப் பணியாளர்களுக்கும், கணினி வடிவமைப்பாளர் திரு சி.சுகிர்தன் அவர்களுக்கும், அட்டைப்பட வடிவமைப்பாளர் ஓவியர் திரு ஆ.இராசையா அவர்களுக்கும், மலர்த் தொகுப்பாசிரியர் திரு கி.வரதராசன் அவர்களுக்கும்,

காலத்தால் அழியாத வரலாற்றுப் பொக்கிஷமாகிய இம்மலருக்காக நிதியுதவி புரிந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், மற்றும் விளம்பரங்கள் வழங்கிய ஏனைய நிறுவனங்களுக்கும் மற்றும் இம்மலருக்கான ஆலோசனைகள் வழங்கிய கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றோம்.

-மலர்க்குழு-

40[illegible]


40வது ஆண்டில் வீறுநடைபோடும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அங்கத்தவர், பணியாளர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
எமது தொழிற்பாடுகள்
பனம் மதுசார உற்பத்தி
பனம் சாராய உற்பத்தி, விற்பனை
கள் போத்தலில் அடைத்தல், விற்பனை
வாடகை வாகன சேவை
எமது சேவைகள்
அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஒய்வு நலக் கொடுப்பனவு.
அங்கத்தவர், பணியாளர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்.
பணியாளர்களுக்கான நலன்புரித் திட்டம்.
முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்.
முன்பள்ளி மாணவர், ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.
மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்.
அங்கத்தவர், பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள்.
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள்
கொத்தணிப் பணியாளர்களுக்கான நலன்புரித் திட்டங்கள்.
Very Special Value
VSV 99
PALMYRAH ARRACK
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)
சங்கானை வீதி,
மானிப்பாய்.
021 225 5045
021 320 5159




சமாசப் பதிப்பகம், யாழ்ப்பாணம்